# இலண்டனில் நாரதர்

(குறு நாடகங்கள்)

எம்.ரி. செல்வராஜா



மணிமேகலைப் பிரசுரம்

அன்புக்குரிய

திரு சௌந்தரராஜன் அவர்கட்கு

எனது அன்பளிப்பு.

என்றும் அன்புடன்

கே.ஜீ. செல்வராஜா

09.08.2006.

# இலண்டனில் நாரதர்

(குறு நாடகங்கள்)

எம்.ரி.செல்வராஜா

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447,
4, தணிகாசலம் சாலை,
தியாகராயா நகர்,
சென்னை - 600 017.
தொலைபேசி : 4342926.
தொலை நகல் : 044 - 4346082.
மின் அஞ்சல்: e-mail : tambhi@md2.vsnl.net.in (MANIMEKALAI)

## நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | ☞ இலண்டனில் நாரதர் |
| ஆசிரியர் | ☞ எம்.ரி. செல்வராஜா |
| மொழி | ☞ தமிழ் |
| பதிப்பு ஆண்டு | ☞ 1999 |
| பதிப்பு விபரம் | ☞ முதல் பதிப்பு |
| உரிமை | ☞ ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | ☞ 11.6 கி.கி |
| நூலின் அளவு | ☞ கிரௌன் சைஸ் (12½ x18½ செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | ☞ 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | ☞ **16+254=270** |
| **நூலின் விலை** | ☞ ரூ. **50.00** |
| அட்டைப்பட ஓவியம் | ☞ திரு.ராமு |
| லேசர் வடிவமைப்பு | ☞ **லேசர் சிஸ்டம்ஸ்**, சென்னை-17. |
| அச்சிட்டோர் | ☞ எம்.கே. என்டர்பிரைசஸ் |
| நூல் கட்டுமானம் | ☞ தையல் |
| வெளியிட்டோர் | ☞ **மணிமேகலைப் பிரசுரம்,** சென்னை - 17. |

# பொருளடக்கம்!


| தலைப்பு | பக்க எண் |
|---|---|
| கனவுலகத்திலே ஒரு காட்சி | 1 |
| சங்கிலி மன்னன் | 19 |
| இலண்டனிலே கலியாணம் | 40 |
| இலண்டனிலே பலசரக்கு மளிகை | 75 |
| காலம் போகிற போக்கு | 96 |
| எளது தமிழ்ப் பாடசாலை | 108 |
| இலண்டனில் நாரதர் | 117 |
| ஞானசம்பந்தர் | 131 |
| அப்பு இலண்டனிலே | 145 |

இந்த "இலண்டனில் நாரதர்" நாடகத் தொகுதியை, எனக்கு முதன்முதல் நாடகம் சொல்லிக் கொடுத்தவரும், உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியராகவும் இருந்து, அமரர் ஆகிவிட்ட உரும்பராய் வடக்கு

**திரு.செ. ஐயாத்துரை**

*ஆசிரியர் அவர்களுக்கு சமர்ப்பணம் ஆக்குகின்றேன்.*

# ஆசியுரை

திருமிகு. செல்வராஜா முறையாகப் பயின்று ஒரு பொறியியலாளராகத் திறம்படப் பணியாற்றி வருபவர். பொறியியலாளர் பணி செய்வதோடு நின்றுவிடாமல், தாய்மொழியாகிய தமிழுக்கும் தம் பெரும்பான்மையான நேரத்தைச் செலவிட்டு வரும் தமிழ்மொழி-தமிழினத் தொண்டர் அவர்.

காரி(சனி)க் கிழமைகளில் இயங்கிவரும் மேற்கு இலண்டன் தமிழ்ப்பள்ளியின் தலைமையாசிரியராக இலங்குவதோடு, ஞாயிற்றுக் கிழமைகளில் கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலையில் பிள்ளைகளுக்குப் பள்ளியிறுதி நிலைத் தமிழ்ப்பாடம் பயிற்றுவிப்பதோடு துணைத் தலைமையாசிரியராகவும் செயற்பட்டு வருகின்றார்.

வாரத்தின் இரு பணி ஓய்வு நாட்களான காரி, ஞாயிற்றுக் கிழமைகளைத் தமிழ்த் தொண்டூழியத்துக்காகச் செலவிடுவதோடு மட்டும் மன அமைதியுறாமல், தாம் செய்துவரும் பொறியியலாளர் பணி நேரம் போக எஞ்சிய நேரத்தையெல்லாம் தமிழ் இலக்கியம் தொண்டுக்காகப் பயன்படுத்தி மகிழ்கிறார். கதை, கவிதை, கட்டுரைகள் எழுதுகின்றார்.

திரு செல்வராஜா எழுதிய சிறுகதைகள் தொகுக்கப்பெற்று ஒரு நூலாக விரைவில் வெளிவரவுள்ளது. அவர் எழுதிய நெடுங்கதை விரைவில் தொடர்ந்து இதழ் ஒன்றில் வெளிவரவுள்ளது. அவரது கதைகளில் மக்களின் வாழ்க்கை நடைமுறை யதார்த்த நிலைப்பாடுகளையும், மாந்த மன உணர்வுகளையும் திறம்படச் சித்திரித்துள்ளார்.

கவிதை இயற்றுவது திரு. செல்வராஜாவுக்குக் கைவந்த கலை. தமிழ்மொழி, தமிழர், சமயம், வாழ்க்கை போன்ற பல்வேறு தலைப்புக்களைக் கொண்ட பல சுவையான கவிதைகளை இயற்றியுள்ளார். முத்தமிழுள் இடையாயது இசைத்தமிழ். செய்யுள்கள் அனைத்தும் இசையோடு ஒன்றிக் கலந்தவை. திரு. செல்வராஜா தாமியற்றிய பல பாடல்களுக்கு அவரே பண்ணமைத்து இசை கூட்டிப் பாடிப் பல்லோரின் பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் பெற்றுள்ளார்.

இந்நாட்டில் வெளியிடப்படும் "மோகம்" எனும் தமிழிதழின் துணையாசிரியராகவும் திரு. செல்வராஜா திகழ்கிறார். தமிழில் உரைநடையும் (கட்டுரை, சிறுகதை, புதினம் - நெடுங்கதை), கவிதையும் வளர்ச்சியுற்றுள்ள அளவுக்கு தமிழின் மூன்றாவது கூறான நாடகம் வளரவில்லை என்று கூறப்படுகின்றது. கட்டுரை, கதை, கவிதை நூல்கள் வெளிவந்த அளவுக்குத் தமிழில் நாடக நூல்கள் வெளிவரவில்லை. இவ்வளவுக்கும் இளந்தலை முறையினரில் பெரும்பாலானோரைக் கவர்ந்துள்ள திரைப்படத் துறையை வளர்த்ததும், அத்துறைக்கு முன்னோடியானது நாடகத் துறையே என்றால் மிகையாகாது. அந்தக் குறையை அறிந்து அதற்கு ஈடு செய்வதைப் போலத் திரு. செல்வராஜா மிகுந்த விருப்பத்தோடு பற்பல நாடகங்களை எழுதியுள்ளார். அவர் எழுதிய பல நாடகங்கள் வானொலியில் நடிக்கப் பெற்றுத் தமிழ் மக்களின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெற்றுள்ளன. மற்றும் பல நாடகங்கள் பள்ளி மாணவர்களால் நடிக்கப் பெற்றன. இன்னுஞ் சில, மக்கள் கூடும் பொது அரங்கங்களில் மேடையேறின.

மக்களின் மன உணர்வுகளையும், யதார்த்த வாழ்க்கையில் எதிர்ப்படும் முட்டுப்பாடுகளையும், மாந்தருக்கிடையேயான உறவுகளையும் திரு. செல்வராஜா திறம்பட வெளிப்படுத்தி

வருகிறார். வரலாற்று முகாமை வாய்ந்த நிகழ்ச்சிகளையும் அவர் நாடகங்களில் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை. நயமாகப் பல நாடக உறுப்பினர்கள் வாயிலாக நாட்டு நடப்புகளையும், தமிழன மக்கள் செய்யத் தவறியவை, மற்றும் ஏதோதோ காரணங்களால் தவறாகச் செய்து வருவன பற்றியும் நகைச்சுவை இழையோடச் சித்திரித்துப் பற்பலரின் பாராட்டைப் பெற்றுள்ளார்.

திருமிகு. செல்வராஜா எழுதிய நாடகங்கள் தொகுக்கப் பெற்று நூலாக வெளிவருவதறிந்து பெரு மகிழ்வெய்துகிறேன்.

திருமிகு. செல்வராஜா மேலும் பற்பல எழுத்தோவியங்களைப் படைத்துத் தமிழன்னைக்கு அணிகலன்களாக்கியும், தமிழர்க்கும், தமிழுக்கும் தொடர்ந்து தொண்டாற்றி, எழுத்துப் பணியில் மேலும் சிறந்து உலகமெங்கும் வாழும் தமிழர்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்றுச் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

**"தமிழை வளர்ப்போம், தரணியில் உயர்வோம்"**

**நற்றமிழ்க்காவலர் தமிழ்மணி**
அரங்க முருகையன்
27.07.99

"அறிவகம்"
ஈலிங்கு, இலண்டன் மேற்கு 13.



# வாழ்த்துரை

அன்பு நண்பன் செல்வாவிற்கு,

உனது நாடகப் படைப்புக்களைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுகின்ற உனது முயற்சி வெற்றிபெற எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உனது படைப்புக்களில் ஓர் உயர்ந்த தமிழ்ச் சமுதாயத்தைப் படைக்க வேண்டுமென்ற ஆதங்கமும், ஆவேசமும் முட்டி மோதிக் கொண்டு நிற்பதை நான் பூரணமாக உணர்கிறேன்! இது "மேலான ஓர் இலக்குடன் மலர்வதே உயர்ந்த இலக்கியம்" என்ற நம்பிக்கை கொண்ட எனக்கு மிகவும் தெம்பையும் நம்பிக்கையையும் தருகின்றது.

புலம் பெயர் வாழ்வில், பொய், களவு, பித்தலாட்டம், பகற் கொள்ளை, ஏமாற்ற நிறைந்த ஒரு சூழல், நயவஞ்சகம், சூழ்ச்சி, பொறாமை, போட்டிகள் கொண்ட ஒரு சமுதாயத்தைப் படைப்பதற்கு தனது சொந்த வருமானத்தையும், சுயமுன்னேற்றத்தையும் மட்டுமே இலக்காகக் கொண்டு இயங்கும் ஒரு சில பணக்கார முதலைகளும், அவர்களுக்குப் பட்டாடை விரிக்கும் சமுதாயப் பொறுப்பற்றவர்களும், முழுமூச்சாக இயங்கி வருவது நாமெல்லோரும் அறந்தொரு விடயமாகும்.

தர்மம், நீதி, சத்தியம், அன்பு இவற்றின் தாற்பரியம் தெரியாத பலர், இன்று ஆன்மீகத்திற்குள் அடைக்கடம் புகுந்துள்ளனர். ஆணவமும், அதிகாரமூச்சும், பேராசையும நிறைந்த பலர், கர்ப்பக் கிரகங்களுக்குள் பதுங்கிவிட முயல்கின்றனர். தேசம், தேசிய அடையாளம், தெய்வ அனுபவம் என்ற தகமைகளைத் தூசிப்பவர்கள். இன்று சமுதாய அரங்குகளில் வாய்

வெடியர்களாகவும். இலக்கிய வாந்தியெடுக்கும். "மனைமந்தைகளாகவும்" உலா வருவது கண்கூடு.

இலக்கிய மனனமும். இதிகாச புராண ஒப்புவிப்புகளும், இதய சுத்தியற்றவர்களாலும். உயர்ந்த சிந்தனையற்றவர்களாலும். தரிசனமற்றவர்களாலும் "சில்லறை வாங்குவதே சிவநோக்கு" என்று அலையும் சந்தர்ப்பவாதிகளாலும் நிகழ்த்தப் பெற்றுவருவதன் மூலம். எமது முன்னோர் எமக்குத் தந்த "உளத்தூய்மை" என்ற ஆத்ம ஓசை, தொலைக்கப்பட்டுவிடுமோ என்ற ஓர் அச்சம் அடிக்கடி எழத்தான் செய்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்திற்றான், எனது பேனாவிற்கு ஓர் ஆத்ம விசையும், வேகமும், தேவைப்படுகிறது! உன்போன்றவர்களின் இலக்கு நிறைந்த படைப்புகள், நமது மக்களுக்கு அவசியமாகின்றன!

அஞ்சா நெஞ்சும். உண்மையை உரைக்கும் நாவும், உயர்வினைப் பதிக்கும் பேனாவும். தன்னை நம்பும் பலமும் கொண்டோரின் "இலக்கிய உலகம்" உருவாகுதல். இன்றைய காலத்தின் வலுக்கட்டாயமான தேவையாகும்!

எமது மண்ணையும், மக்களையும், உலகு சார்ந்த எமது விழுமியங்களையும், ஆத்மீக முத்துக்களையும் எமது நாளைய சந்ததியின் உயர்மூலத்தில் கருவைத்தல் எமது கடமையாகும். "தமிழ்-ஆத்ம-ஓசை" ஆர்ப்பரித்து எழுதல் வேண்டும்! அன்பு செய்வோரும், ஆத்மீக ஓசை எழுப்புவோரும் உலக அரங்கில் வலம் வருதல் வேண்டும்! அப்போதுதான் இருள் நெஞ்சங் கொண்டோரும். ஈரமிழந்தோரும், எமது எதிர்காலச் சந்ததியின் அண்மையில் வரமாட்டார்கள்!

நண்பனே! நாடகம், ஓர் அரங்க இலக்கியம்; சமுதாயச் சித்தரிப்பு; தனிமனித உருவகம்; உணர்ச்சி ஓட்டங்களின் சங்கமிப்பு!

ஒரு தனிமனிதன் தன்னைத்தானே உள்ளும் புறமுமாக ஒருமித்த நிலையில் பார்த்துக் கொள்ள உதவும் ஓர் ஒப்பற்ற கண்ணாடி! சமுதாயம் தனது பழமை, புதுமைகளைக் கண்டு, தன்னைத்தானே சரிபார்த்துக் கொள்ளக்கூடிய ஒரு பளிங்குக்கல்! ஒரு சமுதாயம் "நாடும் அகம்" நாடகம்! ஒரு நாட்டின் அகமும் நாடகமெனலாம்!

மனித வாழ்க்கைகளின் சந்திப்புக்களையும், சிந்திப்புக்களையும், பிரச்சனைகளையும், பின்னல்களையும் உற்று அவதானித்து, அனுபவிப்பனாலேயே, அவற்றோடு இரண்டறக் கலப்பவனாலேயே ஒரு நாடகத்தைப் படைக்க முடியும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்!

நமது மொழி ஆழமானது; ஆத்மீக வலிமை பெற்றது! பரம்பரிய வரலாறு கொண்டது! பாரினைத் தழுவி அணைக்கும் பரந்த அகவெளி கொண்டது! நாடகத்துக்கான கருவும், கருத்தும், சிந்தனை ஓட்டமும், பாத்திரங்களும், பிரச்சினைகளும், காட்சிகளும் நம்மிடம் ஏராளமாக உள்ளன! "தழுவல்கள்" தான் நமக்குத் தஞ்சமாகிவிடக் கூடாது!

செல்வா! எமது குழந்தைச் செல்வங்களுக்கு எதையெதை நாம் சொல்லி, அவர்களை வழிகாட்ட வேண்டுமோ, அவற்றிற் பலவற்றை உனது படைப்புக்கள் கூறுகின்றன! தமிழ்மீதும், தாயகத்தின் மீதும் நீ வைத்திருக்கும் பற்றினையும், நம்பிக்கையினையும் உன் படைப்புக்கள் தெளிவாய்ப் புலப்படுத்துகின்றன!

தர்மத்திலும், நீதியிலும், தண்மையிலும், அன்பிலும், நம்பிக்கை உள்ளவர்களாலேயே, தமிழையும், தெய்வத்தையும் ஆழமாக, ஆத்மார்த்தமாக நேசிக்க முடியுமென்பது எனது திடமான நம்பிக்கையாகும். இதனாலேயே நான் பல சமயங்களில் "சில்லறைகளால்" அணைக்கப் படுவதில்லை! இது இறைவன் எனக்குத் தந்த பெருவரமென்பேன். எமது தாயக விடுதலைக்கும், எமது மக்களின் சுதந்திரத்திற்கும், நமது மொழியின் சுபீட்சத்திற்கும் எமது படைப்புக்கள் உதவவேண்டும் என்பதே எனது பேரவாவாகும்!

உனது படைப்புக்கள் நிச்சயம் இக்குறிக்கோளுடன் எமது மக்கள் மத்தியில் மலர்ந்து மணம் வீசுமென்ற உறுதியான எண்ணத்துடன் உன்னை அன்பு பொங்க வாழ்த்துகிறேன்!

அகத்தூய்மை கொண்ட, ஒரு நாளைய சந்ததியை நாம் படைக்க, எம்மை அந்த இறைப் பொருள் வழிகாட்டிப் பயன்படுத்தட்டும்!

அன்புடன், உனது நண்பன்
புலவர் ந.சிவநாதன்

இலண்டன்
30.09.99

# என்னுரை

அன்னைத் தமிழுக்கு அணிகலனாக எழுத்துலகில் எத்தனையோ அருமையான படைப்புக்களைப் பலர் படைத்துவிட்டார்கள். இறைவனது அனுக்கிரகத்தால் இந்தச் சிறிய அணிகலனை, ஒன்பது நாடகங்கள் அடங்கிய இந்த நாடகத் தொகுதியை தமிழ் உலகத்தில் தவழவிடுகின்றேன். ஆம்; தவழ்ந்த பின்புதான் எழுந்து நடக்க வேண்டும்.

இது எழுத்துலகில் எனது கன்னிப் பிரவேசம். தினசரி மனித வாழ்க்கையிலே, நேரில் கண்டு, அனுபவித்த சம்பவங்களோடு, கருவோடு கலந்த கற்பனையையும் நன்றாகக் கலந்து, சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பதற்காக எழுதிய நாடகங்களோடு, தமிழ் மண்ணையும், தமிழையும் தமது உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்த யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியனது வரலாற்று நாடகமும், ஒரு சமய நாடகமும் இத்தொகுதியில் அடங்குகின்றன.

இளவயதிலிருந்தே இதயத்தில் இணைந்து முறைவிட்ட நாடக அனுபவங்கள், இலண்டன் வந்த பின்பு சிறிது காலம் தேங்கியிருந்து, தற்போது தளிர்விட்டு வளர ஆரம்பித்துவிட்டது. தாயகத்தில் இருந்தபோது நடிப்புச் சொல்லித்தந்த மதிப்புக்குரிய உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு.செ.ஐயாத்துரை, இணைந்து பல நாடகங்களில் நடித்த இணுவிலைச் சேர்ந்தவர்களான திரு.வ.லோகநாதன், திரு.இ.பஞ்சலிங்கம், எமது ஊரான உரும்பராயைச் சேர்ந்த திரு. குமரேஸ்வரராஜா, திரு.துரை மனோகரன் ஆகியோர் மனக்கண்முன் வந்து வாழ்த்தி முகம் மலருவதை உணர்கிறேன்.

ஈழத்தின் நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் ஒருமுறை எமது உரும்பராய் கலை வளர்ச்சிக் கழகம் வழங்கிய துரை மனோகரனின் "நெஞ்சைக்கேள்" என்ற நாடகத்தைப் பார்த்துவிட்டு, பங்குபற்றிய எல்லோரையும் தனது வீட்டிற்கு அழைத்து, என்னை அன்பாகப் பாராட்டியதை என் வாழ்நாளில் என்றும் மறக்க முடியாது.

இலண்டனில் இயன்றளவு எம்மிளம் சிறார்களுக்கு, எம்மினிய தமிழ்மொழியையும், அரிய தமிழ்க் கலைகளையும் புகட்டி வருகின்றோம். நாடகத்துறையில் அவர்கள் காட்டிவரும் அக்கறை மேலும் மேலும் பலவகையான நாடகப் படைப்புக்களைப் படைக்கவே தூண்டுகின்றது. குறிப்பாக கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் அவர்கள் தந்து கொண்டிருக்கும் ஆக்கமும், ஊக்கமும் அளவற்றவை.

இலண்டன் தமிழ் வானொலியில், முதன் முதல் தொடர் நாடகமாக 1994 ஆம் ஆண்டு ஒலிப்பரப்புச் செய்யப்பட்டது "இலண்டனிலே கலியாணம்" என்ற நாடகம். முதன் முதலில் இதனை ஒலிபரப்புவதற்கு ஒத்தாசை புரிந்து ஊக்கமளித்த, முன்னைநாள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்பாளராக இருந்து, தற்போது இலண்டனில் ஒலிபரப்பாளராக இருக்கும் திருமதி யோகா தில்லைநாதனுக்கு எனது மனமார்ந்த நன்றி. அதன் பிறகுதான் எனது படைப்புக்களையும் மக்கள் முழுமனத்துடன் ஏற்கின்றார்கள் என்ற நம்பிக்கை வலுப்பெற்றது. அது மேலும் பல ஊக்கமளித்து, உயிர் கொடுத்துவரும் ஒலிபரப்பாளர் திரு நடா மோகன், திரு.சி.பேரின்பநாதன் ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

அண்மைக் காலமாக, அளவுக்கு அதிகமான நேரம் எழுதுவதிலேயேதான் செலவிடுகின்றேன் என்ற அன்புத்

தொல்லைகளையும் சகித்து, அறிவுரைகளையும் தந்து, ஆங்காங்கே தெரிந்தும், தெரியாமலும் சில கருக்களையும் சொல்லித்தரும் என் மனைவி கலா, மகன் செந்தீஸ், மகள் செந்திலா ஆகியோர்களுக்கும் என் இலக்கிய வளர்ச்சியிலே முக்கிய பங்குண்டு.

இந்த நாடகத் தொகுதி எம் தமிழ் உறவுகளுக்கும், ஏனையோருக்கும் நன்மை பயக்குமென்றால் மனம் மிக மகிழ்வேன். இந்த நாடகத் தொகுதி வெளிவர தனது பூரண ஆதரவுகளைத் தந்ததோடு மட்டுமல்லாமல், இதற்காக வாழ்த்துரைகள் வழங்கிய மேகம் பிரதம ஆசிரியர் எழுத்தாளர் டாக்டர் க.இந்திரகுமார் அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி. அவரோடுகூட வாழ்த்துரை வழங்கிய அருமை நண்பர் புலவர் சிவநாதன், ஆசியுரை வழங்கி சொற்குற்றம், பொருட் குற்றம் களைந்து உதவிய மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலை தமிழ்மொழிப் பொறுப்பாளர், ஆசிரியர், எனது தமிழ்க்குரு, நற்றமிழ்க் காவலர் தமிழ்மணி அரங்க முருகையன் அவர்களுக்கும், இதனை அழகாக அச்சிட்டு வெளியிட்ட மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றி.

"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"

இலண்டன்
15.10.99

அன்புடன்
எம்.ரி.செல்வராஜா

# வாழ்த்துரை

திரு.எம்.ரி.செல்வராஜா அவர்களை லண்டனில் உள்ள ஒரு வார இறுதித் தமிழ்ப் பாடசாலையின் 'தலைமை ஆசிரியராக எனக்குப் பல காலமாகத் தெரியும்.

இந்த ஆண்டின் முற்பகுதியில் செல்வராஜா தான் கதை-வசனம் எழுதிய வானொலி நாடகமொன்றில் பிரதம பாத்திரத்தில் நடிக்கும்படி கேட்டுக் கொண்டார். "லண்டனில் பலசரக்கு மளிகை" என்ற அந்த நாடகப் பிரதியையும் என்னிடம் தந்தார்.

புலம் பெயர்ந்த நாடுகளில் ஈழத்தவரின் குறும்புகளையும் குசும்புகளையும் பற்றி சிரிக்கவும், சிந்திக்கவும் கூடிய வகையில் சமூகப் பிரக்ஞையுடன் எழுதியிருந்தார். அந்த நாடகம் முற்று முழுதாக "வீரபாண்டியக் கட்டபொம்மன்" திரைப்பட வசனங்களை அடியொற்றி எழுதப்பட்டிருந்தது. லண்டன் பல சரக்குக் கடையின் "நீலக்கால் நண்டுகளையும்" "புடலங்காய்களையும்" கட்டபொம்மன் வசனங்களுக்குள் அர்த்தபுஷ்டியாகப் புகுத்துவது எளிதான காரியமில்லை.

அதை செல்வராஜா செய்திருந்தார். அவரது எழுத்துத் திறனையும் நகைச்சுவை உணர்வையும், சமூகப் பிரக்ஞையும் கண்டு வியந்தேன்.

சிறுகதைகளும் எழுதியிருப்பதாக அவர் சொன்னார். அப்போதுதான் "மேகம்" சஞ்சிகையை லண்டனிலிருந்து வெளியிடுவதற்கு நாம் தயாராக இருந்த வேளை. சஞ்சிகையில் பிரசுரிக்க ஒரு சிறுகதை தருமாறு கேட்டேன். தந்தார்.

செல்வராஜா எழுதிய நாடகத்தின் பாணியிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, உள்ளத்தை உருக்கும், சமூகப் பிரக்ஞை உள்ள சிறுகதை.

இலக்கியத்தில் அவரது பல்சுவைத் திறமையை உணர்ந்துகொண்டேன். "மேகம்" சஞ்சிகையின் துணை ஆசிரியராக என்னோடு இணையுமாறு கேட்டுக்கொண்டேன். அவரும் ஒப்புக்கொண்டார்.

இன்று "மேகம்" சஞ்சிகையில் அறிவியல் செய்திகள் - கட்டுரைகள் கூட அவர் எழுதி வருகிறார். அவரது சிறுகதைகளைப் பாராட்டி வாசகர்களிடமிருந்து நிறையக் கடிதங்கள் வருகின்றன.

நல்ல மரபுக் கவிதைகள் எழுதுவதிலும் செல்வராஜா வல்லுநர்.

எனவே - இயல், இசை, நாடகத் துறைகளில் மட்டுமல்ல, அறிவியல் துறையிலும் செல்வராஜா எழுதி வருகிறார். புத்தாயிரத்துக்குத் தேவையான நாலு தமிழிலும் அவர் அழகுற எழுதி வருகிறார். அவர் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல, நல்ல ஒரு பத்திரிகையாளரும் கூட.

"லண்டனில் நாரதர்" என்ற குறுநாடகத் தொகுப்பு அவரது முதலாவது நூல். இந்தத் தொகுப்பில் வரும் பல நாடகங்கள் ஏற்கெனவே ஐரோப்பிய வானொலிகளிலும் மேடைகளிலும் அரங்கேறிப் புகழ்பெற்றவை.

செல்வராஜாவின் இந்த முதலாவது நூலை வெளியிடுவதற்கு, அவரை மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும் அதன் அதிபர் ரவி தமிழ்வாணனுக்கும் அறிமுகம் செய்து வைத்ததற்காக நான் பெருமைப்படுகிறேன்.

இன்னும் பல பயனுள்ள ஆக்கங்களை அவர் தொடர்ந்து படைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**டாக்டர் க. இந்திரகுமார்**
மனநோய் மருத்துவர் (லண்டன்)
பிரதம ஆசிரியர் - "மேகம்",
தமிழக - இலங்கை அரசுகளின் பரிசு பெற்ற எழுத்தாளர்.

# இலண்டனில் நாரதர்

(குறு நாடகங்கள்)

---

## கனவுலகத்திலே ஒரு காட்சி

நாடகம்

பாத்திரங்கள் :- தமிழ்த்தாய், அரசன், அரசி, மந்திரி, நான்கு பாடசாலைப்பிள்ளைகள், திருவள்ளுவர், பாரதியார், ஆறுமுக நாவலர், ஒளவைப்பாட்டி, இரண்டு காவலர்கள், இரு நடன மாதர்கள்.

பின்னணி :- ஆண், பெண் பாடகர்கள் இரண்டு. மிருதங்கம், வயலின், Key Board

அறிமுகம்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்தது எமது தமிழ்மொழி. மூவேந்தர்களாலும், முன்வாழ்ந்த முடிசூடிய மன்னர்களாலும் முச்சங்கம் அமைத்து, வளர்ந்தது எமது இனிய தமிழ்மொழி, ஆனால் காலத்திற்குக் காலம் கயவர்களாலும், சுயநலவாதிகளாலும் சோதனைகளுக்கும், வேதனைகளுக்கும் உள்ளாகிக் கலங்கி, அல்லல் படுவதைக் கண்டு கலக்கமுற்ற ஓர் உள்ளத்திலே ஒருநாள் ஒரு கனவு.

காவலர் : அமைதி! அமைதி! அன்னை வருகின்றார். தமிழன்னை வருகின்றார். அன்னை வருகின்றார். தமிழன்னை வருகின்றார்.

தமிழ்த்தாய் : (வந்து அமர்ந்ததும்) எங்கே! நடனம் ஆரம்பமாகட்டும்.

(அரம்பையரின் நடனம், நடனம் முடிந்ததும்)

தாய் : தேவ உலகைக் கட்டிக்காக்கும் மன்னா! இன்று நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றேன். உமது முகம் வாடியிருக்கக் காரணம் என்னவோ?

அரசர் : தாயே! இன்று பூவுலகிலே மொழிப்பற்று, மதப்பற்று, இனப்பற்று இன்றி அதிகமான மக்கள் எல்லாம் மதம் பிடித்து, அகம்பாவம் நிறைந்து, பணப்பற்று, பொருட்பற்று, பதவிப்பற்று, என்று பலவற்றைப் பற்றியபடியே வாழ்கின்றார்கள். ஏனையோர்களும் அதேபோன்று ஒரு வித நோயால் பீடிக்கப்பட்டு மாய்கிறார்கள். இவர்களை இப்படியே விட்டுவைத்தால், நல்லகுணம் கொண்டவர்களை நசுக்கி விடுவார்கள். பொதுநலம் கொண்டவர்களைப் பொசுக்கி விடுவார்கள். பூவுலகம் பொலிவுற, நானிலம் நலம்பெற, நல்லதொரு வழி கூற வேண்டும் அன்னையே!..

மந்திரி : ஆமாம்! உண்மைதான். எல்லோருக்கும் எல்லாம் தெரியும் என்றொரு நோய் பீடித்துள்ளது. நோய்களைக் குணப்படுத்தவென்று பட்டம் பெற்ற சில டாக்டர்கள் கூட இந்த நோயினால்

பாதிக்கப்பட்டுப் பரிதவிப்பதை நான் காண்கிறேன்.

அரசி : ஆம் அன்னையே! வெள்ளை உடையுடுத்தி, குள்ள நரிகள்போல் குணம்கொண்ட ஒருசாரார் பல பொது இடங்களில் புகுந்துள்ளனர். கள்ளமற்ற சேவைமனம் கொண்டவர்களை யெல்லாம் தள்ளிநிற்கச் சொல்கிறார்கள்.

அரசர்: இவர்களை இப்படியே விட்டுவிட்டால் தமிழர் இருக்குமிடமெல்லாம் கொடிய நாய்களும், நரிகளுமே நலிந்துநிற்கும். எமது சமுதாயம் தழைத்தோங்க, தமிழன் என்று தரணியிலே தலைநிமிர்ந்து வாழ, இந்தப் போலிப் பதர்களை எமது சமுதாயத்திலிருந்து அகற்றியே ஆகவேண்டும்.

தாய் : ஆமாம் உண்மைதான். நானும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றேன். இன்று எம் ஈழத் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பம் கொள்கிறார்கள். ஆனால் அவர்கள் இளிச்சவாயர்கள் அல்லர். இது ஒரு சோதனைக் காலம். அதில் வெற்றி நிச்சயம் எம் ஈழத் தமிழர்களுக்குத்தான். எல்லாம் நன்மையிலேதான் முடியும். இன்றே எமது அறிவுக்களஞ்சியத்திலிருந்து சகல மொழிகளிலும் வல்லவரான ஒருவரைத்

தேர்ந்தெடுத்து எமது ஈழத்திற்கு அனுப்பிவையுங்கள்.

அரசி : அன்னையே!, எதுவும் புரியவில்லையே சற்றுவிளக்கமாகக் கூறுங்கள்.

தாய் : அங்கு சென்று, சில இளம் குழந்தைகளை இங்கு அழைத்துவர வேண்டும். அவர்களை நான் நேரே பார்த்து சில உண்மைகளைத் தெரிந்து கொண்டு, நல்ல அறிவுரை வழங்கி, ஆசி கூறி அனுப்ப வேண்டும்.

மந்திரி : தாயே! குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். ஈழத்திலே, சிங்கள அரசின் சதியால் எம் மக்கள் எல்லாம் இப்போது உலகின் பல பாகங்களிலும் சிதறி வாழ்கின்றனர். அதுவும் ஒருவழிக்கு நன்மையே. அங்கெல்லாம் எமது ஆட்களை அனுப்பி தங்கள் விருப்பம் போல குழந்தைகளை அழைத்து வந்து அறிவுரை புகட்டி அனுப்புங்கள்.

தாய் : அப்படியே ஆகட்டும். புத்திசாலிகளாக ஒரு பத்துப் பேரைத் தேர்ந்தெடுத்து, உலகின் பல பாகங்களுக்கும் அனுப்பிவையுங்கள்.

அரசர் : மீண்டும் குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். படித்தவர்களை அனுப்பினால் அவர்கள் அங்கே ஏதாவது "Part time" வேலைகளை எடுத்துக் கொண்டு அங்கேயே நின்று விடுவார்கள். ஆகையால் ஆங்கிலம்

தெரியாதவர்களை இங்கிலாந்திற்கும், 'German" தெரியாதவர்களை ஜெர்மனிக்கும், "French" தெரியாதவர்களை "France" ற்கும் அனுப்ப வேண்டும்.

தாய் : இது உங்கள் சொந்த அனுபவம் போல் இருக்கிறது. பரவாயில்லை, இதனையும் உங்கள் விருப்படியே செய்துவிடுங்கள்.

அரசர் : ஆகட்டும் தாயே.

மந்திரி : தாயே! அங்கு சென்றவர்கள் நின்றுவிட்டால் ஒன்று செய்யலாம். இங்கு கஷ்டம் வந்தால் அங்கிருந்து பணம் அனுப்பி உங்கள் சேவகர்களுக்கு ஊதியம் வழங்கலாம் தானே.

அரசர்: வெளி நாட்டுக்கு சென்று படித்துவிட்டு வந்த புத்தியைக் காட்டுகிறார் தாயே. இவரை மன்னித்து விடுங்கள்.

தாய் : அசல் தமிழன் என்ன கஷ்டங்கள் வந்தாலும் எம்மை மறக்க மாட்டான். போய் விரைவில் அழைத்து வாருங்கள்.

❖❖❖

காட்சி - 2

(சபையில் தமிழ்த்தாய், அரசன், அரசி, மந்திரி ஆகியோர் அமர்ந்திருக்கின்றார்கள். பாடசாலைப்பிள்ளைகள் நான்கு பேரும், ஆசிரியர் ஒருவரும் நிற்கின்றார்கள்)

அரசர் : தாயே! தங்கள் விருப்பப்படியே தரணியெல்லாம் சென்று, தமிழ்ச் செல்வங்கள் சிலரை அழைத்து வந்துள்ளோம். சொல்லிக் கொடுப்பதைச் சொல்லிக் கொடுத்துவிட்டு, விரைவில் திருப்பி அனுப்பி விடுங்கள்.

அரசி : இங்கே தமிழ்க் குழந்தைகளோடு ஒரு தமிழ் ஆசிரியரையும் அழைத்து வந்துள்ளோம். எல்லோரும் தமிழ்த்தாய்க்கு வணக்கம் சொல்லுங்கள்.

எல்லோரும் : (கும்பிட்டபடியே) வணக்கம்.

அரசி : என்னது? கல்விகற்பிக்கும் ஆசிரியரை விட குழந்தைகள் உயரமாக உள்ளார்களே?. இது எப்படி?

மந்திரி : அதையேன் கேட்கிறீர்கள்? இப்போது குளிர் நாடுகளில் உள்ள பிள்ளைகள் எல்லாம் பெற்றோரைவிட உயரத்தில் மிகவும் பெரியவர்கள். அதற்கு அங்குள்ள ஆப்பிள் தான் காரணமென்று என்னுடைய மனைவி சொன்னார்.

அரசர் : நல்லவேளை அவர் என் அரண்மனையில் மந்திரியாக இல்லை. புதிய உடுப்புக்களணிந்தால் புகைதல்; புதிய

நகைகள் அணிந்தால் புறுபுறுத்தல்; புதியவாகனம் வாங்கினால் பொறாமை கொள்ளுதல்; இப்படி எல்லாவற்றிற்குமே பொல்லாத எண்ணங்கொள்ளும் பல பெரியவர்கள் பூவுலகிலே வாழ்கின்றார்கள். எம் குழந்தைகளும் அவர்களைப்போல் வளரக்கூடாது தாயே. அதற்கும் நீங்கள்தான் அறிவுரை சொல்ல வேண்டும்.

தாய் : எதிரே எமது இளைய தலைமுறையினரை வைத்துக் கொண்டு பேசும் பேச்சுக்களா இவை? (ஒரு குழந்தையைப் பார்த்து) குழந்தாய். உன் பெயர் என்ன? உன் வயதென்ன? உனது குடும்பத்தைப்பற்றி சில வார்த்தைகள் கூறு பார்க்கலாம்..

சிறுமி 1 : எனது பெயர் மாங்கேஷ். பயத்தங்காய் போல எனக்கு ஒரு தம்பி உண்டு. ஒரேஞ் (Orange) நிறத்திலே பூசணிக்காய்போல ஓர் அம்மா உண்டு. புடலங்காயைப்போல ஓர் அப்பா உண்டு.

மந்திரி : உன் அப்பா என்ன மரக்கறிக் கடை வியாபாரம் செய்பவரா?

சிறுமி 1 : (கண்களைக் கசக்கியபடியே ஓ! வென்று அழுதல்)

தாய் : குழந்தைகளுடன் இப்படியா பேசுவது? (இன்னொரு சிறுமியைப் பார்த்து) ஒரு இனிய தமிழ்ப் பாட்டுப் பாடு குழந்தாய்.

சிறுவர்கள் : (எல்லோரும் ஆடியபடியே) "முஸ்த்தப்பா முஸ்த்தப்பா Dont worry முஸ்த்தப்பா, காலம் நம் தோழன் முஸ்த்தப்பா...."

தாய் : என்ன சோதனை? இதுவா இனிய தமிழ்ப்பாட்டு? என் செல்வங்களே! இதுவா உங்கள் தமிழ் அறிவு? இதுவா உங்கள் கலை உணர்வு? காலத்தால் முதிர்ந்த தமிழ்க் கலைகளெல்லாம் கவனிப்பாரில்லாமல் போய் விட்டனவா?

அரசர் : தமிழை வளர்க்கவென்றும், கலைகளை வளர்க்கவென்றும், சமுதாயத்தை வளர்க்கவென்றும் பல பள்ளிக்கூடங்களும் கோவில்களும் இருக்கின்றன. ஆனால் தமிழ்த் தொண்டு என்று சொல்லிக் கொண்டு அங்கே சிலர் தங்களின் பைகளை மட்டும்தான் நிரப்பிக் கொண்டு இருக்கின்றார்கள். அவர்களையும் விட்டுவிடக் கூடாது.

அரசி : அதுதான் தாயே எனது கவலை. இப்படியே விட்டுவைத்தால் எமது இளம் சந்ததியினரின் எதிர்காலம் என்ன ஆவது? எமது மொழி, கலை, கலாச்சாரம் என்ன ஆவது? அதற்காகத்தான் இவர்களை இங்கே அழைத்து வந்தோம்.

மந்திரி : தங்களுடைய வயிறு மட்டும் நிரம்பினால் போதும் என்றிருப்போர் பலர். தங்களுடைய பிள்ளைகள் மட்டும்

படித்தால் போதும் என்றிருப்போர் இன்னுஞ் சிலர். யார் செத்து மடிந்தால் என்ன? என் குடும்பம் மட்டும் வாழ்ந்தால் போதும் என்றிருப்போரை நடுச்சந்தியிலே நிறுத்தி, மொட்டையான என் வாளால் மொட்டையடிக்க என்கைகள் துடிக்கின்றன மகாராஜா, என்கைகள் துடிக்கின்றன!

தாய் : கவலை வேண்டாம். தமிழ்த்தொண்டு செய்வோர் சாவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? எல்லோரும் அமருங்கள். (எல்லோரும் அமருகின்றார்கள்) ஆண்டாண்டு காலமாக தமிழைவளர்த்த சிலரை இங்கே வரவழைத்துள்ளேன். அவர்கள் கூறுவதைக் கேளுங்கள். இப்போது உலகத்தமிழ்மறையாம் திருக்குறளை இயற்றிய வள்ளுவப் பெருந்தகையை இங்கே அழைக்கின்றேன்.

(திருவள்ளுவர் சபையில் வருகிறார் - பாடல் - அகர முதல எழுத்தெல்லாம்...)

திருவள்ளுவர் : (கையில் ஓலையுடனும், எழுத்தாணியுடனும் பாடிக்கொண்டே வருகிறார்)

எல்லோருக்கும் வணக்கம்.

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு".

(பின்பு குழந்தைகளைப் பார்த்து) குழந்தைகளே இவை உங்களுக்குத் தெரியுமா?

சிறுவன் 2 : ஆமாம் இதனை நாங்கள் கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலையில் படித்திருக்கின்றோம்.

திருவள்ளுவர் : அப்படியா? அங்கு வேறென்ன படித்தீர்கள்?

சிறுமி 2 : ''கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்றும் படித்திருக்கின்றோம்.

சிறுவன் 3 : ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது" என்றும் படித்திருக்கின்றோம்.

சிறுமி 1 : "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றும் படித்திருக்கின்றோம்.

திருவள்ளுவர் : மிகவும் நல்லது. எங்கே எல்லோரும் சொல்லுங்கள்

திருவள்ளுவர் : ''கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத்தக"

எல்லோரும் : "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக".

திருவள்ளுவர் : ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.".

எல்லோரும் : ''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.".

திருவள்ளுவர் : "என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு".

எல்லோரும் : "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு".

(பாடல் முடிந்ததும் தமிழ்த்தாயைப் பார்த்து)

சொற்சுவை சுருதி, கூட்டி கற்றவை நவிலக்கண்டேன். மற்றவர் மறந்திட்டாலும், மாசிலா மாணிக்கங்கள். எம்தமிழ் மறவார். தாயே!... தக்கதோர் வேளை வந்தால் அக்கணம் சென்று யானும், இப்புவி மேலுயர்ந்த ஒண்தமிழ் ஓதிநிற்பேன். அப்புறம் சென்று மீண்டும் இப்புறம் வருவேன் தாயே! (தலை தாழ்த்தி வணங்கி விட்டுப் போகிறார்.

தாய் : பார்த்தீர்களா? வள்ளுவரைக் கண்டதும் குறள் தானாகவே வருகின்றது. தமிழின் பெருமையைப் பறை சாற்றும் உலகப் பொதுமறை தந்த வள்ளலே! நீர் வாழ்க!. உங்கள் புகழ் வாழ்க! சென்று வாருங்கள். அடுத்து இங்கே வருகின்றார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

பாரதியார் : (வந்துகொண்ட பாடுகின்றார். பின்னணியும் சேர்ந்து இசைக்கிறது)

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
இச்சகத்து ளோரெல்லாம் எதிர்த்து நின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
துச்சமாக எண்ணி நம்மைத் தூறு செய்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை
அச்சமில்லை அச்சமென்பதில்லையே"

பாரதியார் : (பாடல் முடிந்ததும் குழந்தைகளைப் பார்த்து) குழந்தைகளே, என்னை உங்களுக்குத் தெரியுமா?

சிறுமி 2: நீங்கள்தானே பாரதியார். உங்கள் பாட்டுக்களை நாங்கள் எமது தமிழ்ப்பாடசாலையில் படித்துள்ளோம். பாட்டுக்கொரு புலவன் பாரதி என்றும், நாட்டுக்கு உழைத்த நல்லவரென்றும் படித்துள்ளோம்.

பாரதியார் : மழலைகள் வாயிலிருந்து அழகு தமிழைக் கேட்க எவ்வளவு இனிமையாக இருக்கிறது. எங்கே நீங்கள் படித்த ஒரு பாட்டைக் பாடுங்கள் பார்ப்போம்.

சிறுவர்கள் : (எல்லோரும்) ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.

பின்னணி : ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.

சிறுவர்கள் : ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா.

பின்னணி : கூடி விளையாடு பாப்பா - ஒரு குழந்தையை வையாதே பாப்பா.

சிறுவர்கள் : கூடி விளையாடு பாப்பா - ஒரு குழந்தையை வையாதே பாப்பா

பின்னணி : காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு

சிறுவர்கள் : காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு

பின்னணி : மாலை முழுதும் விளையாட்டு - என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.

ஓடி விளையாடு பாப்பா".

சிறுவர்கள் : மாலை முழுதும் விளையாட்டு - என்று வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

ஓடி விளையாடு பாப்பா".

பாரதி : அருமையான பாட்டு. அழகான பாட்டு. இனிமையான பாட்டு. இதமான பாட்டு.

சிறுவன் 2 : ஐயா! பாரதியார் அவர்களே! எமது தமிழ் ஈழத்திலே சண்டையோ ஓயுதில்லை. தமிழர்களாய் நாம் எவ்வளவு கஷ்டப்படுகின்றோம். இதற்கு ஒரு முடிவே இல்லையா?

பாரதி : நிச்சயமாக உண்டு. வெற்றி ஈழத்தமிழர்களுக்குத்தான். எமது போராட்டக் காலத்திலே நான் பாடியபாட்டைப் பாடுகின்றேன் கேளுங்கள்.

(பாடுகிறார்) என்று தணியும் இந்த சுதந்திர தாகம்? என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்?

பின்னணி : என்று தணியும் இந்த சுதந்திர தாகம் என்று மடியும் எங்கள் அடிமையில் மோகம்?

பாரதி : என்றெம தன்னை கை விலங்குகள் போகும்? என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்

பின்னணி : என்றெம தன்னை கை விலங்குகள் போகும்? என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?

பாரதி : **பஞ்சமும் நோயும் உன் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?**

பின்னணி : **பஞ்சமும் நோயும் உன் மெய்யடியார்க்கோ
பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ**

பாரதி : **தஞ்ச மடைந்தபின் கைவிடலாமோ தாயும்தன்
குழந்தையைத் தள்ளிடப் போமோ**

பின்னணி : **தஞ்சமடைந்தபின் கைவிடலாமோ? தாயும்தன்
குழந்தையைத் தள்ளிடப்போமோ?**

(பாடல் முடிந்ததும்)

பாரதியார் : குழந்தைகளே! நான் முன்பு எழுதிவைத்த பாடல்களைப் படியுங்கள். வீட்டிலே தமிழில் பேசுங்கள். செல்லுமிடமெல்லாம் தமிழைப் பேணுங்கள். தமிழை உங்கள் உயிர் போலப் பேணுங்கள். வெற்றி நமக்குத்தான். நான் வருகிறேன்.

(சென்று கொண்டே)

**"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை
அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"**

தாய் : தமிழ் வளர்த்த ஈழத்தமிழர்கள் வரிசையிலே நல்லை நாவலரை இங்கு அழைக்கின்றேன். சொல்லில் வல்லவர், சமயத் தொண்டர்; அந்த நல்லவரை அவைக்கு வரும்படி அழைக்கின்றேன்.

ஆறுமுகநாவலர் : (சபையில் வந்து வணங்குகிறார்) வணக்கம் தாயே! நான் தமிழ்

ஈழத்திலுள்ள யாழ்ப்பாண நல்லூரில் பிறந்தேன். என்பெயர் ஆறுமுகம். எனது நாவன்மையால் நான் ஆறுமுகநாவலர் ஆனேன். பன்னெடுங் காலமாக இருந்த செய்யுள் நடையுடன், உரைநடையை முதன்முதலில் தமிழுக்கு அறிமுகம் செய்தேன். அந்நிய மொழி ஆதிக்கத்தால் அழிந்த உன் நூல்களை மீட்டு, அச்சேற்றி அழியாது காத்தேன்.

சிறுமி 1 : தாயே! எமது தமிழ் ஈழத்திலிருந்த எமது தமிழ்ப் பொக்கிஷமான யாழ்ப்பாண நூல்நிலையத்தை சிங்கள அரசு திட்டமிட்டு திவைத்து எரித்து அழித்துவிட்டதே. நாம் யாரிடம் போய் முறையிடுவது?

சிறுவன் 2 : ஐயா! தாங்கள் எழுதிய பல நூல்கள் அழிந்து விட்டனவே. நாம் என்ன செய்வது? கேட்பதற்கு யாருமே இல்லையா?

ஆறுமுகநாவலர் : குழந்தைகளே! கவலை வேண்டாம். அறிவிலிகள் செய்யும் அக்கிரமங்கள் அதிக நாள் நிலைக்காது. ஆண்டவன் அருளால் எமது தமிழ் ஈழம் விரைவில் விடுதலை அடையும் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. எதிர்காலத்திலே உங்களைப்போன்ற பல குழந்தைகள் வளர்ந்து, தமிழ் அறிஞர்களாகி பல வழிகளில் தமிழை வளர்ப்பார்கள். உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் ஒற்றுமையாக, ஒன்றாக வாழுங்கள்.

நன்றாக வாழுங்கள். நான் சென்று வருகின்றேன். (போகின்றார்)

தாய் : இதோ! தமிழ் மூதாட்டி என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் ஔவைப் பாட்டி வருகின்றார். தமிழ்க் கடவுள் முருகனோடு தமிழ்வாதம் செய்த மூதாட்டியார் ஔவையார் வருகின்றார்.

ஔவையார் : (பாடிக் கொண்டே வருகின்றார்)

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று (பாடல் முடிந்ததும்)

எல்லோருக்கும் வணக்கம் குழந்தைகளே. எங்கே சொல்லுங்கள்.

எல்லோரும் : (ஔவையார் சொல்லிக் கொடுக்க பிள்ளைகள் பின்னணியுடன் பாடுதல்)

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறமல்லது நல்லறமன்று
ஈயார் தேட்டை தீயார் கொள்வர்
உரவோர் என்கை இரவாது ஈதல்
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து
அஃகமும் காசும் சிக்கெனத்தேடு (அன்னையும் பிதாவும்...)

(பாடல் முடிந்ததும்)

சிறுமி 1 : பாட்டி பாட்டி, நீங்கள் ஏன் எங்களுடன் பூவுலகிற்கு வந்து தமிழை வளர்க்க பாடுபடக்கூடாது?

சிறுவன் 1 : எங்களுக்கு உங்கள் தமிழ்ப் பாடல்களைக் கேட்க எவ்வளவு ஆசையாக இருக்கிறது தெரியுமா?

ஔவையார் : அப்படியா இப்போதே இன்னும் ஒரு பாட்டு சொல்லித் தருகின்றேன். எங்கே பாடுங்கள்.

(ஔவையார் சொல்லிக் கொடுக்க பிள்ளைகள் பின்னணியுடன் பாடுதல்)

**அறம் செய்ய விரும்பு. ஆறுவது சினம்**
**இயல்வது கரவேல். ஈவது விலக்கேல்**
**உடையது விளம்பேல். ஊக்கமது கைவிடேல்**
**எண்ணெழுத் திகழேல். ஏற்பது இகழ்ச்சி**

(பாடல் முடிந்ததும்) இப்படி ஏராளமாக இருக்கின்றன.

இலக்கணத்தோடு, தூயதமிழ் பேசும் என்னருமைக் குழந்தைகளே! எங்கே எமது தமிழ் எதிர்காலத்தில், இருந்த இடம் தெரியாது மறைந்து விடுமோ என்று எண்ணி ஏங்கினேன். உங்களைக் கண்டேன். உவகை கொண்டேன். உயர்தமிழ் வாழும் என்று எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நல்வழி நடந்து, நற்பயன் பெறுங்கள். நான் வருகிறேன். (போகிறார்)

அரசன் : (தமிழ்த்தாயை நோக்கி!) தாயே!, தமிழே!, தங்கள் செயல் கண்டு மனம் மிக மகிழ்ந்திருக்கின்றோம். சங்கம் வளர்த்த

தமிழே! வங்கம் போல் பரந்த தமிழே! தங்கம்போல் மிளிர்வதும் தமிழே!... உயிர்களைப் பறிக்கலாம், உடமைகளை அழிக்கலாம், ஆனால் உணர்வுகளைப் பொசுக்கிவிட முடியாது. உங்களைப் போன்ற சிறுவர்களால் நாடு விடுதலை அடையும். நம் தமிழ் வாழும்! தாயே உளம் குளிர்ந்தோம்! மனம் மகிழ்ந்தோம்! உங்கள் காட்சிக்கு எமது நன்றி!

இறுதியில் பாடல் : (எல்லோரும் எழுந்து நின்று பாடுதல். அப்போது மற்றையோர் ஒவ்வொருவராக வந்து வணக்கம் சொல்லுதல்)

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து வளர்மொழி வாழியவே!

நன்றி

வணக்கம்

குறிப்பு : இந்த நாடகம் 5 தடவைகள் இலண்டனிலே மேடையேற்றப்பட்டது. SUNRISE, TRT வானொலிகளிலும் ஒலிபரப்பு செய்யப்பட்டது.

# "சங்கிலி மன்னன்"

(கற்பனையோடு, உண்மைச் சம்பவங்கள்
நிறைந்த சரித்திரக்கதை)

*அறிமுகம் : எமது தமிழ் ஈழத்திலே அந்நியர் ஆதிக்கம் ஆரம்பமாவதற்கு முன், அழியாத புகழுடைய பல தமிழ் மன்னர்கள் எம் மண்ணை ஆண்டுவந்தார்கள். அந்த வரிசையிலே, யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னனாகவிருந்து ஆட்சி செய்த சங்கிலி மன்னன் சரித்திரத்திலிருந்து, கற்பனையோடு கலந்த சில காட்சிகளே இந்த நாடகம்.*

*நல்லூர் முருகனைத் தரிசித்துவிட்டு வரும் மன்னரின் அரண்மனையிலே ஒருநாள்...*

காட்சி - 1

*இடம் - சங்கிலியன் அரண்மனை.*

*பாத்திரங்கள் - சங்கிலி மன்னன், அரசி, தோழி, மந்திரி, புலவர், மாயா துன்னை, மற்றவர், காவலர்கள்.*

(அரசன் நல்லூர் முருகனைத் தரிசித்துவிட்டு வருகிறார். ஆலய மணி ஓசையும், அந்தணர்களின் மந்திர ஒலிகளோடு, மங்கள வாத்திய ஒலிகளும் சேர்ந்து ஒலிக்கின்றன)

புலவர் : ஆழிசூழ் ஈழத்தமிழ் மண்ணின் வாழையடி
வாழையே, வாழ்க!

வேழத்தின் வைரமும் வேங்கையின்
வீரமும் விளைந்த எம் வேந்தனே வாழ்க!

புகழோடு செல்வமும் பொலிவோடு
சீர்களும் பொழியவே என்றும் வாழ்க!

வழுவாத நீதியும் நழுவாத நேர்மையும்
நிறைந்து நீ நீடு வாழ்க!

மன்னர் மன்னவா!, அன்னைத் தமிழைப் பொன்போல போற்றும் மன்னவா!, தென்னகம் முதல் தென்னிலங்கை வரை ஈழத்தமிழர் புகழ் பறைசாற்றும் மன்னவா!,

நீவீர் வாழ்க! நின் குலம் வாழ்க! நின் குடிகள் வாழ்க!

மந்திரி : அழகு தமிழ்க் கடவுள் முருகனின் அருளை வேண்டி, அவன் ஆலயம் சென்று வந்திருக்கும் அரசே! நாம் மனம் மகிழ்ந்திருக்கின்றோம். எல்லாம் நலமாக இருக்க அந்த ஆண்டவன் ஆசி அருள்வாராக.

சங்கிலி : அருள் கொடுக்கும் ஆலயங்கள் ஆங்காங்கே அமைந்திருக்க, அழகுடைய என் தேவி அருகினிலே அமர்ந்திருக்க, அறிவுடையோர் என் அவையில் ஆயிரம் ஆயிரமாய் அமர்ந்திருக்க, அரசாளும் அதிகாரம் எந்நாளும் என் கையிலே அமைந்திருக்கும். அதில் இன்பமே எந்நாளும் நிறைந்திருக்கும்.

புலவர் : ஆமாம்! அருகினிலே நல்லூரும், பரிசுத்த நீரருவி கீரிமலையும் இங்கிருக்க, செல்வம் பொங்கி வழியும் முனீஸ்வரமும், மாதோட்ட நன்னகரிலே திருக்கேதீச்சரமும், கோணமாமலையில் அலங்காரமான கோணேஸ்வரரும் அங்கிருக்க, தென் கரையில்

கதிரமலையினிலே கதிர்காமக் கந்தனும் அமர்ந்திருக்க, அருளுக்கு ஏது பஞ்சம்?

மந்திரி : அஞ்சாத நெஞ்சனே!, அழகு தமிழையும், ஆதியான சைவத்தையும் உன்னிரு கண்கள் போலப் பாதுகாக்கும் காவலனே! பாரெல்லாம் உன் புகழ் பரவ வேண்டும். அது இந்த உலகம் உள்ளவரை நிலைக்கவும் வேண்டும்.

சங்கிலி : வங்கக் கடலிலே முத்தெடுப்போம், தங்கச் சுரங்கங்களைத் தோண்டி பொன் எடுப்போம். எங்கள் நடோ எல்லா வளமும் படைத்த நாடு. நாம் யாருக்குமே கையேந்தத் தேவையில்லை.

தோழி : அரசே! தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பது கண்டு எல்லோரும் மகிழ்ந்திருக்கின்றோம். ஆனால் அரசியாரைத் தனிமை வாட்டுகின்றதே!

சங்கிலி : இது என்ன புதிய கதை. நான் யாருக்கும் இதுவரை எதுவிதக் குறைகளும் விட்டதாக எனக்கு ஞாபகமில்லை.

அரசி : நீங்கள்தான் நாடென்றும், மக்கள் என்றும் இரவு பகலாக அலைகின்றீர்களே! நான். இங்கே அரண்மனையிலே தோழிகளுடன் தனியே எத்தனை நாள் கழிப்பது?

சங்கிலி : மன்னன் என்று முடிசூடிவிட்டால் நாடும், மக்களும்தான் முதலில். நாடு நலமாக இருந்தால்தான் நாமும் நலமாக வாழலாம். இல்லையா, தேவி!

புலவர் : மன்னா! மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே தமிழ்விழா. உலகின் பல பாகங்களிலும் இருந்து ஆயிரம் ஆயிரம் பாவலர்களும் காவலர்களும் அங்கே வருவார்களா. எமது யாழ்ப்பாண நல்லூரிலிருந்தும் ஈழத் தமிழ் அறிஞர்களை வரும்படி அழைப்பு வந்திருக்கின்றது மன்னவா!

மந்திரி : அரசே! சோழ நாட்டிலிருந்து மன்னரும், மந்திரியாரும் இங்கு வருவதாகவும் செய்தி வந்திருக்கின்றது. அது மட்டுமல்லாமல் இப்போது கரையோரப் பகுதிகளில் எல்லாம் பறங்கியரின் கப்பல்களின் நடமாட்டமும் அதிகரித்து வருகின்றது. அதனை உடனுக்குடன் அவதானித்து ஆவன செய்யவும் வேண்டும். இந்த வேளையில் நீங்கள் இங்கே இருப்பதுதான் நல்லது.

புலவர் : தாங்கள் தமிழின்மேல் வைத்திருக்கும் அளவில்லாத பற்றைப்போல் அரசியாரும் வைத்திருக்கின்றார்தானே. இருவரில் ஒருவர் சென்றால் போதும் அல்லவா

தோழி : மன்னா! புலவர் பெருமானோடு, பட்டத்தரசியையும், இளவரசரையும் மதுரைக்கு அனுப்பி விடுங்கள். நானும் அவர்களோடு. அங்கே சென்று வருகின்றேன்.

சங்கிலி : அதுதான் சரியான யோசனை. சங்கம் வளர்க்கும் மதுரைத் தமிழ் விழாவிலே சங்கிலியன் தேவியும், மகனும் கலந்துகொண்டார்கள் என்ற பெருமையும் கிடைக்கும். சென்று வாருங்கள்.

அரசி : நன்றி அரசே! நான் எமது இளவரசனையும் அழைத்துக் கொண்டு அங்குள்ள புண்ணிய தலங்களுக்கெல்லாம் சென்று தரிசித்து வரவும், புனித நீரோடைகளிலே சென்று நீராடி வரவும் ஆர்வம் கொண்டுள்ளேன். உத்தரவு வேண்டும் மகாராஜா.

சங்கிலி : உங்களுக்காகத் தானே என் தந்தையார் யமுனா நதியின் திவ்விய தீர்த்தத்தைக் காவடிகளிலே கொண்டுவந்து நல்லூர்க் கந்தன் அருகேயுள்ள யமுனா ஏரியிலே நிரப்பி வைத்துள்ளார். பரவாயில்லை. சென்று நலமாக வாருங்கள்.

(அப்போது காவலன் வந்து வணங்கிவிட்டு)

காவலன் : மன்னா! கோட்டை மன்னனின் மகன் மாயாதுன்னை தங்களை அவசரமாகக் காணவேண்டுமாம். தன் ஆட்களுடன் வெளியே காத்திருக்கின்றார். அழைத்துவர உத்தரவு வேண்டும் அரசே!

சங்கிலி : யாரது? மாயாதுன்னையா? ஏது இந்த நேரத்தில்? உள்ளே அழைத்து வாருங்கள்!

(மாயாதுன்னையும் வேறு இருவரும் வருதல்)

மாயாதுன்னை : சங்கிலி மன்னா!, தூது அனுப்பாது திடீரென இங்கே வந்ததற்கு முதலில் மன்னிப்புக் கோருகின்றேன்.

சங்கிலி : ம்! பரவாயில்லை! வந்தோரை வரவேற்று, விருந்தோம்பல் செய்து, வழியனுப்பும் பண்பும் தமிழர்களின் உயர்ந்த பண்புகளில் ஒன்று. நீங்கள் இங்கு வந்த விஷயத்தைக் கூறுங்கள்.

மாயாதுன்னை : என்னவென்று கூறுவேன்? என் தந்தையும் ஏனையோரும் எங்கிருந்தோ வந்து எம் நாட்டில் புகுந்து, தம் எண்ணம்போல் நடக்கும் பறங்கியரின் பேச்சுக்குத் தலையாட்டுவதையே பெரிதாக எண்ணுகிறார்கள். அவர்கள் போடும் தாளத்திற்கே ஆடுகின்றார்கள். அதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. என் இரத்தம் கொதிக்கின்றது மன்னா! என் இரத்தம் கொதிக்கின்றது!

மற்றவர் : அதுமட்டுமல்ல, முடிக்குரிய மாயாதுன்னையின் அண்ணன் இருக்க, இவரது சிற்றன்னையின் மகனுக்கு முடிசூட்டவும் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவாம்.

மந்திரி : அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்?

மாயாதுன்னை : உங்கள் வீரத்தையும், படை பலத்தையும் பாரெங்கும் கேட்டு வந்தேன். அகன்ற தேரோடும் வீதி கண்டேன், ஆயிரமாயிரம் யானைகளும், சேனைகள் இருப்பிடமும் கண்டேன். நீதி வழுவாது கோல் செய்யும் குலமகனென்றும் கேட்டு வந்தேன்.

மற்றவர் : அந்நிய நாட்டார் எமது நாட்டில் இருப்பதையெல்லாம் சுரண்ட ஆரம்பித்துவிட்டார்கள். அதனை முளையிலேயே கிள்ளி விடவேண்டும்.

புலவர் : ஆமாம், தமிழரின் வீரம் சரித்திரம் படைத்தது. "வாரணம் பொருத மார்பும் வரையினையடுத்த தோளும்" தமிழ் மன்னருடையது என்று காரணம் இல்லாமலா கூறினார்கள்?

சங்கிலி : எம் மண்ணிலும், மதத்திலும் பற்றுக் கொண்டவர்கள் நாங்கள். தமிழ் மண்ணை எவனாவது தொட்டால் அவர்களைத் தூள் தூள் ஆக்கிவிடுவோம்.

அரசி : போர்க்களத்திலே புறமுதுகு காட்டாத பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள். போரிலே, மார்பிலே வேலேந்தி தன் மகனிறந்தான் என்ற பெருமைப்படுபவள் தமிழ்ப்பெண்.

புலவர் : எதிரியை எம் தமிழால் அறம்பாடியே அழித்துவிட வல்லவர்கள் எம் தமிழ்ப் புலவர்கள்.

மாயாதுன்னை : உலகம் புகழும் உங்கள் படைகளின் திறனைக் கேள்வியுற்றே உங்கள் உதவியை நாடி இங்கே வந்தேன்.

மற்றவர் : வளமிக்க இத்தமிழ்மண்ணைப்போல் எம்மண்ணும் இருக்கவேண்டும் என்பதே எமது ஆசை. அதற்கு நீங்கள்தான் எமக்கு இப்போது உதவவேண்டும்.

சங்கிலி : எதிர்காலத்திலே, எம்மினத்திற்கு இன்னல் விளைவிக்க எவராவது எண்ணினால், அவர்களை எதிர்கொண்டு, பூண்டோடு அழிக்க வல்ல "சிறுத்தைப் படை" யொன்றை தற்போது உருவாக்கி வருகின்றேன். அவர்களில் ஒரு பகுதியை உமக்கு உதவ அனுப்புகின்றேன். போதுமா?

மாயாதுன்னை : நன்றி மன்னா! நன்றி! இந்த உதவியை நாம் எந்நாளும் மறக்க மாட்டோம். நாம் சென்று வருகின்றோம்.

மற்றவர் : எதிர்காலத்தில் உங்களுக்கு ஏதாவது உதவிகள் தேவைப்பட்டால் நாம் நிச்சயம் உதவி செய்வோம். நாங்கள் சென்று வருகின்றோம்.

(மாயாதுன்னையும் மற்றையவர்களும் போகின்றார்கள்)

காட்சி - 2

(சங்கிலி மன்னனின் சகோதரன் பரநிருபசிங்கனும், காக்கை வன்னியனும் பேசிக் கொண்டிருக்கின்றார்கள்)

பர : வன்னியரே, எனக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது. மன்னனாக இருக்க வேண்டிய நான் மந்திரியாக இருக்கின்றேன். மயக்கு மொழி பேசி, என் தம்பி சங்கிலியன் என்னை ஏமாற்றிவிட்டான். அவனை எப்படியாவது அரச பதவியிலிருந்து நீக்க ஒரு வழி சொல்ல வேண்டும்.

வன்னி : சங்கிலியனை நேரில் சென்று போரிட்டு வெல்வது மிகவும் கடினமானது. அவன் ஒரு சிறந்த போர் வீரன். அவனைத் தந்திரத்தால்தான் வெல்லவேண்டும்.

பர : அதற்காகத்தானே உங்கள் உதவியை நாடி வந்தேன்.

வன்னி : பெரும் பீரங்கிகள் உள்ள பறங்கியர்கள் கூட அவனை அணுக முடியாமல் அல்லல் படுகின்றார்கள். சங்கிலியனின் எதிரிகளுடன் நாம் நட்புறவு கொண்டால் அவனை இலகுவாக ஒழித்துவிடலாம்.

பர : போரில் பல புதிய தந்திரங்களை தனது மதிநுட்பத்தால் உருவாக்கியிருக்கின்றான். அவன் தமிழின் மேலும், சமயத்தின்

மேலும் வைத்திருக்கும் பாசம் என்னைச் சில வேளைகளில் மெய் சிலிர்க்கவும் வைக்கின்றது.

வன்னி : அவன் கோட்டை அரசனுக்கும் உதவி செய்ததாகக் கேள்விப் பட்டேன். இப்படியே விட்டுவைத்தால் இன்னும் சிறிது காலத்தில் அவன் பெரிய சக்கரவர்த்தி ஆகிவிடுவான்.

பர : அப்படி வர விடவே கூடாது! எப்படியாவது அவனை அழித்தே தீரவேண்டும். பறங்கியரின் குருமார் ஒருவரிடமிருந்தும் எனக்குக் கடிதம் ஒன்று வந்திருக்கின்றது.

வன்னி : எல்லையோரத்திலே பறங்கியர்களை வியாபாரம் செய்ய அனுமதிக்கும்படி கேட்போம். காலம் செல்லச் செல்ல அவர்களுக்கு இவனின் கொட்டத்தை அடக்கப் பல புத்திமதிகளையும் சொல்லிக் கொடுப்போம்.

பர : எனக்கு இனிமேல் இராச்சியம் கிடைக்காது என்பது நிச்சயமாகிவிட்டது. அந்நியர் ஆண்டாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் சங்கிலியன் ஆளக்கூடாது! எவன் எப்படியானாலும் எனக்குக் கவலையில்லை. நான் அவனைப் பழிவாங்கியே தீருவேன்.

வன்னி : வளமாக இருக்கும் நாட்டை எமது சுயநலத்திற்காகப் பகைவனுக்குக் காட்டிக்கொடுத்து அழிப்பது சரிதானா? என்றும் என் மனம் அடிக்கடி உறுத்துகின்றது.

பர : நெஞ்சத்தைக் கல்லாக்கிக் கொள்ளும். இளகிய நெஞ்சிருந்தால் இவனை ஒழிக்க முடியாது. நாம் அவன் இனத்தவர்கள். அவனுக்கு உதவுவதாக நடிக்க வேண்டும். அப்போதுதான் அவனை எங்கள் வலையில் வீழ்த்தலாம்.

வன்னி : நான் இன்றே பறங்கித் தலைவனிடம் சென்று பேசி ஒரு முடிவுக்கு வருகிறேன். கோட்டையின் மேற்கு வாசலின் பக்கமாக அவர்களின் படையை அழைத்து வருகின்றேன். ஆனால் இது சங்கிலி யனுக்குத் தெரியக்கூடாது.

வன்னி : நல்ல யோசனைதான். நானும் படையோடு படையாக அங்கே வந்து சேருகிறேன்.

(இருவரும் வேறுவேறு இருபக்கங்களாகப் போகின்றார்கள்)

❖❖❖

காட்சி : 3

இடம் - போர்க்களம்

(படைவீரர்கள் அணிவகுத்து நிற்கின்றார்கள். சங்கிலி மன்னன் அங்குமிங்கும் நடந்து திரிகின்றான்)

சங்கிலி : இரவோடு இரவாகப் பறங்கிப்படை என் கோட்டைக்குள் நுழைந்துவிட்டது. இது நேர்மையான போராக எனக்குத் தெரியவில்லை. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கின்றது.

தளபதி : நெஞ்சிலே வீரமுண்டு. உடலிலே வலிமையுண்டு. எதற்கு நாம் பயப்பட வேண்டும்? வரட்டும்! இன்றே எதிரியை ஒருகை பார்த்து விடுகின்றேன்.

சங்கிலி : பதினொரு நாட்கள் போரிட்டு எதிரியைத் தோற்கடித்தோம். எதுவும் சொல்லாமல் இன்று இவர்கள் படைகள் கொண்டுவரக் காரணம் எதுவாக இருக்கலாம்?

தளபதி : எதுவாக இருந்தாலும் நாங்கள் எப்போதும் விழிப்புடன் இருக்கவேண்டும் அரசே! அதோ உங்கள் அண்ணன் வருகின்றார். அவரைச் சென்று பார்ப்போம்.

(அவரின் அருகே சென்றவுடன் மாறுவேடத்தில் இருந்த காக்கை வன்னியன் பேசுகிறார்)

வன்னி : அஞ்சா நெஞ்சனே!, அன்று நீர் பெற்ற வெற்றியை அகிலமெல்லாம் புகழ்கிறதே! ஆயிரமாயிரமாய் குண்டுகள் பொழிந்த பறங்கியர் கூட்டம் ஓர் அடி நிலத்தைக்கூட

உங்களிடமிருந்து கைப்பற்ற முடியவில்லையே! மாமன்னர்கள் எல்லாம் உம் வெற்றியைக் கண்டு மலைத்துப்போய் நிற்கின்றார்கள். பாவலர்கள் எல்லாம் பரணி பாடக் காத்திருக்கின்றார்கள். உங்கள் தோள் வலிமையும், படை வலிமையும் இருக்கும் வரை எவரும் இந்த யாழ்ப்பாண நல்லூரை வெல்லமுடியாது என்றே மக்கள் எல்லாம் பேசிக்கொள்கிறார்கள்.

தளபதி : யார் இவன்? தேனின் சுவையைவிட இவன் பேச்சு இனிப்பாக இருக்கின்றதே!

(வன்னியன் தனது மாறுவேடத்தைக் கலைத்துவிட்டவுடன்)

சங்கிலி : காக்கை வன்னியனா இப்படிக் காதினிக்கப் பேசுவது! ம்... இப்போதுதான் என்மேல் தயவுபிறந்து எனக்கு உதவி செய்ய வந்திரோ? நல்லது! மிகவும் நல்லது!

(என்று கூறியபடி கட்டியணைக்கின்றார். வன்னியன் கட்டியணைப்பதுபோல் அவனை விடாது இறுகக் கட்டிப்பிடித்துக்கொள்ள பறங்கித்தலைவர்கள் அவனைக் கைது செய்ய வருகின்றார்கள். போர்வீரர்கள் ஆரவாரிக்கின்றார்கள். சண்டைக்கு ஆயத்தமாகின்றார்கள்.)

பர : சேனாதிபதியின் உத்தரவின்றி யாரும் சண்டையிடக்கூடாது.

(அப்போது சங்கிலியின் கைகளில் சங்கிலிபோட்டுக் கட்டி விடுகின்றார்கள். சங்கிலி மன்னன் வீராவேசத்துடன் திணறுகின்றான். மற்றைய எல்லோரும் ஓடிவிடுகின்றார்கள்)

❖❖❖

காட்சி - 4

*இடம் - அரண்மனை.*

*பாத்திரங்கள் - அரசி, தோழி, காக்கை வன்னியன், காவலர்கள்.*

*(காக்கை வன்னியன் அரண்மனைக்கு வந்து அரசியாரிடம் பேசுதல்)*

வன்னி : தாயே! என்னை மன்னித்து விடுங்கள். நயவஞ்சகர்களின் போதனையால் நான் மன்னருக்குத் துரோகம் செய்துவிட்டேன். சங்கிலி மன்னனைக் கைது செய்து இரும்புச் சங்கிலியால்கட்டி இழுத்துக் கொண்டு போகிறது பறங்கியர் கூட்டம்.

அரசி : வன்னியரே! என்ன கூறுகின்றீர்.

வன்னி : ஆசை வார்த்தைகளுக்கு அடிமைப் பட்டேன், அநியாயம் செய்யவும் ஆமோதித்தேன். சங்கிலி மன்னனின் அண்ணன் தனக்குள்ள கோபத்தால் தம்பி என்றும் பாராது, மாவீரன் சங்கிலியை மாற்றானிடம் காட்டிக் கொடுத்தான். நானும் அதற்குத் துணைபோனேன். மன்னித்து விடுங்கள் தாயே!

அரசி : ஐயகோ! என்ன அநியாயம்! இரவென்றும் பகலென்றும் பாராது நாடும், நாட்டு மக்களுமே தனது வாழ்வென்று வாழ்ந்த உத்தம வீரனையா உங்கள் சூழ்ச்சிக்கு இரையாக்கினீர்கள்? உங்களுக்கு மானம், மரியாதை, நாணயம், நன்றி என்று எதுவுமே கிடையாதா? ஒரே குடும்பத்தில்

பிறந்த உங்களுக்குள்ளா இப்படி ஒரு வேண்டாத விரோதம்?

வன்னி : ஆசையினால் அறிவிழந்தேன். அகந்தையினால் நட்பிழந்தேன். ஆத்திரத்தினால் கண்ணிழந்தேன். பொன்னும், பொருளுமே பெரிதென்று எண்ணிப் போலிக்கு அடிமையானேன். என்னை மன்னித்துவிடுங்கள் மகாராணி, என்னை மன்னித்து விடுங்கள்!

அரசி : ஓர் தாய் வயிற்றில் பிறந்து, ஒன்றாக வளர்ந்து, ஒன்றாக ஓடி விளையாடிய குழந்தைகள் அண்ணனும் தம்பியும். அரண் ஏறிய தம்பியைப் பார்க்கப் பொறுக்கமுடியாத அண்ணன். பெரும் புகழுடன் வாழ்வதைப் பார்க்கப் பொறுக்க முடியாத குணம் கொண்ட சிற்றப்பா. இவர்கள் எல்லாம் மனிதர்கள் என்று கூறிக்கொள்வது எப்படி முறையாகும்?

வன்னி : ஐயோ! நான் மனிதனே இல்லை! பேராசை கொண்ட பேய்! குடிகளைக் கெடுக்கப் பிறந்த சண்டாளன்! கொற்றவனைக் காட்டிக் கொடுத்த கொடியவன்!

அரசி : எமக்குள் பகையென்றால் அது எமது வீட்டுப் பிரச்சனை. அதற்காக எதிரியை வீட்டிற்கழைத்து விருந்துவைத்து, அவனுக்கு நாம் அடிமையென்று சாசனம் எழுதிக் கொடுக்கலாமா? நம்மை நாமே காட்டிக் கொடுக்கலாமா? நாமாகத்

திருந்தாவிட்டால் நமக்கு எப்படி விமோசனம் கிடைக்கும்?

வன்னி : சங்கிலியின் குரல்கேட்டு கர்ச்சிக்கும் சிங்கம் கூட அடங்கிப்போகும். அத்தகைய மாவீரன் அவன்! இந்த இழப்பை ஈடு செய்யவே முடியாது. நான் இனிமேலும் இங்கு நின்று பேசுவதில் அர்த்தமேயில்லை. என்னை மன்னித்து விடுங்கள் தாயே! (போகிறான்)

அரசி : ஆம்! உண்மைதான்! எவருக்குமே அடிபணியாத வீரர் என் கணவர். அவரைப் பறங்கியர்கள் விட்டுவைக்க மாட்டார்கள். அவரில்லாமல் நான் மட்டும் தனியே வாழ்வதா? சீ! கூடாது! கூடவே கூடாது! கணவனை இழந்தவள் என்று உலகம் பழிக்கும். பறங்கியர் கூட்டமோ என் பெண்மையைப் பார்த்துப் பரிகாசம் செய்யும். என்ன குற்றம் செய்தார் என் கொற்றவன்? தமிழனின் வீரத்தை உலகெங்கும் பறை சாற்றினார். இது குற்றமா? செந்தமிழ் மண்வாசனையை உலகெங்கும் பரவச் செய்தார். இது குற்றமா? ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் தமிழன் என்றோர் உணர்வை உதிக்கச் செய்தார். இவைகள் குற்றமா? இல்லை! இல்லை! என் கணவன் இவை எல்லாவற்றிலும் இறவாத பாசம் வைத்ததுதான் குற்றம்! இந்த அரியாசனத்தில் என் மன்னன் இல்லையே

என்று எண்ணி, எண்ணி நெஞ்சு வெடிக்கின்றதே! நான் என்ன செய்வேன்? நான் இனி என்ன செய்வேன்?.

என் மன்னனைப் பிரிந்து இனி என்னால் ஒரு கணம் கூட வாழ முடியாது. என் தமிழ் மண்ணே! உன்னை விட்டுப்போக முடியவில்லையே! எப்பிறப்பிலும் நான் தமிழ்ப் பெண்ணாகவே பிறக்க வேண்டும்! மண்ணானாலும் தமிழ் மண்ணாகவே வேண்டும். எதிர்காலத்திலே எம்மண்ணை எதிரிகள் எவருமே அணுகாவண்ணம் காக்க நல்லவர்கள் தோன்ற வேண்டும்! ஆ!....

(கிழே விழுகின்றாள்)

❖❖❖

காட்சி - 5

*இடம் - பறங்கியர்கள் இடம்.*

*பாத்திரங்கள் - சங்கிலியன், பறங்கித்தலைவன், காவலர்கள்.*

*(சங்கலி மன்னனைச் சங்கிலியால் கட்டி, இரு காவலர்கள் பிடித்துக்கொண்டு நிற்கின்றார்கள்)*

பறங்கித்தலைவன்: ம்! இவனா சங்கிலி மன்னன்? இவனா. அடங்காத சிங்கம்? நான் அடக்கிக் காட்டுகிறேன். (அறையில் இருந்த சவுக்கை எடுத்தல்)

சங்கிலி : நீ எமது நாட்டிலே ஓர் அழையா விருந்தாளி. முதலில் நாவை அடக்கிப்

பேசப் பழகிக்கொள். உனக்குத் தைரியமிருந்தால் விலங்கு கொண்டு கட்டப்பட்ட என் கைகளைக் கழற்றிவிட்டுப் பேசு, பார்க்கலாம்.

பறங்கித் தலைவன் : சும்மா உளறாதே! இப்போது நீயும் உன் நாடும் எமக்கு அடிமை. என் உத்தரவின்றி ஓர் அணுகூட இனிமேல் இங்கு அசையக் கூடாது.

சங்கிலி : நேர்மையற்றவன் நீ! வாய்ப்பேச்சிலே வீரம் காட்டாதே! நயவஞ்சகன் நீ! நல்லவனாக நடிக்காதே! நரி வேஷம்போட்டு, நல்லவர்களை மயக்கி, நாட்டைப்பிடிக்கத் திட்டம் போட்டாய். எத்தனை நாளைக்கு இந்த நாடகம்?

பறங்கித்தலைவன் : அதிகம் பேசினால், உங்கள் அத்தனை பேரையும் அரை நொடியிலேயே அழித்துவிடுவேன்.

சங்கிலி : அண்ணா! காக்கை வன்னியா! எங்கே போய்விட்டீர்கள்?

பறங்கித்தலைவன் : (ஏளனமான சிரிப்புடன்) உன்னை எங்கள் வலைக்குள் வீழ்த்த உதவிபுரிந்த உன் அண்ணனுக்கும், காக்கை வன்னியனுக்கும் எனது நன்றி.

சங்கிலி : என்ன கூறுகின்றாய்? சும்மா உளறாதே!

பறங்கித்தலைவன் : நானா உளறுகிறேன்? எங்கே உன் அண்ணனும், வன்னியரும்? உன்னைக்

காட்டிக் கொடுத்ததற்காக, தங்களுக்குச் சேரவேண்டிய பரிசில்களை பெற்றுக்கொள்ள அப்போதே அவர்கள் சென்றுவிட்டார்கள்.

சங்கிலி : உடன் இருந்தே உயிரைப் பிரிப்பது உறவென்று இப்போதுதான் புரிந்துகொண்டேன். தான் மட்டும் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டோரின் சதியாலும், சுயநலத்தாலும், ஆண்டாண்டுக் காலமாய் கட்டிக்காத்த எம் மண்ணை அந்நியனுக்கு அடிமையாக்கலாமா? பாண்டவருக்கு ஒரு சகுனி போல், இராமருக்கு ஒரு மந்தரைபோல், எனக்கு ஒரு காக்கை வன்னியன்! எமது நாடோ எல்லா வளமும் நிறைந்த நாடு. பல்லை இளித்துக் கொண்டு வந்த பறங்கிக் கூட்டம், கொள்ளை அடிப்பதிலும், குருமாரைக் கொண்டு வருவதிலுமே காலத்தைக் கழிக்கின்றார்கள். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். இது நாம் பிறந்த நாடு. நாம் வளர்ந்தநாடு. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக எம் முந்தையர் ஆண்டுவந்த நாடு. இவர்களோ எம்மைச் சுரண்ட வந்த போக்கிரிகள். சுரண்டி முடிந்ததும் போய்விடுவார்கள். முதுகெலும் பில்லாதவர்கள். நேருக்குநேர் நின்று போர் செய்யமுடியாதவர்கள். இப்போது வீரியம் பேசுகின்றார்கள். என் தமிழினமே!

வல்லவர்களை இவர்கள் விட்டு வைக்க மாட்டார்கள். நல்லவர்கள்போல் நடிக்கும் சுயநலவாதிகளையும், நயவஞ்சகர்களையும் நம் சமுதாயத்திலிருந்து அகற்றுங்கள். அப்போதுதான் எம் தமிழினத்துக்கு விமோசனம் கிடைக்கும்.

எமது தாய் நாட்டுமண் எங்கேயும் போய்விடாது. இங்கேதான் இருக்கும். ஆனால் நாய்களும் பேய்களும் நம் மண்ணை ஆள்வதா? கூடாது! தமிழ் மண்ணை உங்கள் கண்கள் போலக் காத்துக்கொள்ளுங்கள். எம் அருமைத் தமிழ்மொழியை உங்கள் உயிர் போலக் காத்துக்கொள்ளுங்கள்! என்னருமைத் தமிழினமே! கலங்காதீர்கள்! காலம் மாறும். எம் கவலைகள் எல்லாம் தீரும்! துரோகிகளின் பிடியிலிருந்து எம்நாடு விடுதலை அடையும் வரை யாரும் ஓயவே கூடாது!

❖❖❖

---

குறிப்பு : இந்த நாடகம் இலண்டனில் மூன்று தடவைகள் மேடையேற்றப்பட்டது. TRT வானொலியிலும் ஒலிபரப்புச் செய்யப்பட்டது.



“சங்கிலி மன்னன்” நாடகத்தில் நடித்த கிங்ஸ்பரி தமிழ்ப்பாடசாலை மாணவர்கள்.
<u>இடமிருந்துவலம்:-</u> சர்மினி பாலசுப்பிரமணியம், சுகந்தி தர்மசீலன், டயானி பாலசுப்பிரமணியம், தாமிரா தங்கராஜா, ஹஜீனா சரவணபவன், வைதேகி தம்பிராஜா, வாகீசன் தம்பிராஜா, தாமிரா தங்கராஜா, கிர்ஷ்ணி ரமேஷ், உகந்தா தங்கராஜா, கார்த்திகா சிவராஜா, அபிராமி கோணேஸ்வரன், வேல்ராஜன் தர்மசீலன்.

# "இலண்டனிலே கலியாணம்"

*பாத்திரங்கள் : சுப்பையா, தங்கம்மா - சுப்பையாவின் மனைவி, தினேஸ் - சுப்பையாவின் மகன், தில்லையம்பலம், பரிமளம் - தில்லையம்பலத்தின் மனைவி, கஜன் - தில்லை - பரிமளம் இவர்களின் மகன், வேலு - சுப்பையா, தில்லையம்பலத்தின் நண்பர்.*

காட்சி - 1

*இடம் : சுப்பையா வீடு*

*பாத்திரங்கள் : சுப்பையா, மனைவி தங்கம்மா, மகன் தினேஸ், தில்லையம்பலம். (சுப்பையா பத்திரிகை படித்துக்கொண்டு இருக்கின்றார். வாயில்மணி இருமுறைகள் ஒலிக்கின்றது)*

தங்கம் : (உள்ளே இருந்துகொண்டே) யாரோ மணி அடிக்கினம். யாரென்று பாருங்கோ.

சுப்பையா : யாரப்பா இந்த நேரத்திலை? கொஞ்ச நேரம் கூட ஆறுதலாக காலை நீட்டிக்கொண்டு இருக்கமுடியாது... யாரோ சாமான் விக்கிற ஆட்களாகத்தான் இருக்கும். நல்லா அடிச்சுப்போட்டுப் போகட்டும்.

தங்கம் : யாரோ எங்கடை ஆட்கள் போலை இருக்கு. எழும்பிப் பாருங்கோ. (இதற்கிடையில் மகன் தினேஸ் கதவைத் திறந்து விடுகிறார்). வாருங்கோ, வாருங்கோ, எப்ப இலண்டனுக்கு வந்தனீங்கள்? (சுப்பையாவை நோக்கி) இங்கே யார் வந்திருக்கிறதென்று பாருங்கோ! உங்கடை பழைய கூட்டாளி வந்திருக்கிறார்.

(தில்லையம்பலம் வருகிறார். அவர் ஒரு தமிழ் ஆசிரியர், அண்மையில்தான் இலண்டனுக்கு மனைவியுடன் வந்திருக்கின்றார்)

சுப்பையா : என்னது?... எப்ப இங்கை வந்தது?... போன் பண்ணக்கூட இல்லை... கள்ளனைப் பிடிக்க வந்த மாதிரி வாறீர்... என்ன, ஆளை அடையாளம் காணக் கூடமுடியேல்லை.. தனியாவோ வாறீர்?

தில்லை : வந்து ஒரு கிழமைதான் ஆகுது. மனுஷி குளிர் எண்டு பஞ்சிப்பட்டுது, அதுதான் தனிய வாறன். அப்ப... எப்படி எல்லாம் இருக்கிறியள்?

தங்கம் : போன் பண்ணக்கூட இல்லை. நாங்கள் யாரோ என்று கதவைத் திறக்காமல் விடப் பார்த்தோம்.

தில்லை : நான் இங்கை வந்து ஒருத்தருக்கும் போன் பண்ண இல்லை. எல்லாரும் எடுத்த உடனே இங்கிலீசிலை தான் பேசுகினம். அதிலும் இந்த சின்னஞ் சிறிசுகள் எடுத்து தெண்டா ஒரு துரும்பும் விளங்காது. நாங்கள் அந்த நாளேலை படிச்ச இங்கிலீசுக்கும் இங்கத்தே இங்கிலீசுக்கும் ஏணி வைச்சாக்கூட எட்டாது. தம்பி கஜன் ஒரு சில பேருக்கு போன் பண்ணினான்.

தங்கம் : பகல் நேரத்திலை வந்திருந்தா, நிண்டு சாப்பிட்டுக்கொண்டு போயிருக்கலாம். இந்த நேரத்திலை வந்திருக்கிறீங்கள்.

தில்லை : நல்லா இருளட்டும் என்றுதான் இருந்தனன். ஏனெண்டால், நான் என்ரை சிவியகாலத்திலை இந்த லோங்ஸ் கால்சட்டை போட்டது இல்லை. என்னெண்டு அதைப் போட்டுக் கொண்டு இங்கை பட்டப் பகல் நேரத்திலை வர்றது? யாரேனும் தெரிஞ்ச ஆட்கள் கண்டாலும் எண்டுதான் இப்ப வாறன்.

சுப்பையா : உந்த பழைய சம்பிரதாயங்களை விட்டிட்டு மற்றைவை மாதிரி இருங்கோ. இல்லையெண்டால், குளிர் ஆளைக் கொண்டு போயிடும் பாரும்.

தங்கம் : ஏன், பரிமளா அக்காவுக்கு குளிர் இன்னும் ஒத்துவர இல்லைப்போலை இருக்கு. (பரிமளம் - தில்லையம்பலத்தின் மனைவி)

தில்லை : தம்பி சொன்னவன்தான் தன்ரை அந்த "ஓவர் கோட்டை" போட்டுக்கொண்டு போ அம்மா எண்டு, மனுஷி அடியோடை மறுத்துப் போட்டுது. என்னதான் இருந்தாலும் பாருங்கோ, எங்கடை சொந்த நாடுபோலை வராது. சும்மா ஒரு நாலுமுழ வேட்டியைக் கட்டிக்கொண்டு, தோளிலை ஒரு துவாய்த்துண்டையும் போட்டுக்கொண்டு, சைக்கில்லை ஒரு சுற்று சுற்றிப்போட்டு வர, உடம்புக்கு என்ன ஒரு இதமாக இருக்கும். இங்கை என்னடாண்டா, எத்தினை தான் உடுப்புக்கு மேலே உடுப்பைப் போட்டாலும், விறைக்காத

இடமெல்லாம் விறைச்சுப் போகுது பாருங்கோ.

சுப்பையா : சரியாகச் சொன்னீங்கள். இங்கை அடுத்த வீட்டிலை யார் இருக்கிறது? என்ன நடக்கிறது? என்று பக்கத்து வீட்டுக்காரனுக்குத் தெரியாது பாரும். எங்கடை ஊரிலை எண்டால், அடுத்த வீட்டிலை அன்னம்மா, முன் வீட்டிலை முத்தம்மா, பின்வீட்டிலை பொன்னம்மா எண்டு, கண்ணை மூடிக்கொண்டு சொல்லுவன் பாரும். அது அந்தக்காலம். இங்கை என்னடாண்டா, றோட்டாலை போற ஆம்பிளைக்கும் பொம்பிளைக்கும் வித்தியாசம் கண்டு பிடிக்கிறதெண்டா... கொஞ்சம் அனுபவம் வேணும்.

தங்கம் : இங்கை பாருங்கோ, இப்ப அடுத்த வீட்டிலை யார் இருக்கிறது. என்ன நடக்கிறது என்று பார்க்கிறதை விட்டிட்டு, வீட்டுக்கு வந்த ஆட்களைக் கவனியுங்கோ, எப்படி ஊரிலை எல்லாம் இருக்கினம் எண்டு சொல்லுங்கோவன் கேட்பம்.

தில்லை : ஊரிலை எல்லாம் அங்கங்கை இருக்கினம். என்ன இருந்தாலும் பழைய சந்தோஷமில்லை. மகன் இலண்டனிலை. மகள் கனடாவிலை, மாமா பிரான்சிலை, மாமி இந்தியாவிலை என்று குடும்பங்கள் எல்லாம் பிரிஞ்சு, பிரிஞ்சு இருக்குதுகள். எப்படி முடியுமோ கடவுளுக்குத்தான்

தெரியும். நீங்கள் அந்த நாளேலை வந்தபடியால் தப்பிவிட்டியள்.

சுப்பையா : அப்பிடியில்லை பாரும், ஊரிலை பச்சைத்தண்ணியை குடிச்சுக்கொண்டு இருந்தாலும் சாதி சனத்தோடை இருக்கமாப்போலை வராது. இங்கை வந்து நாலு காசு சம்பாதிச்ச உடனே, எங்கடை ஆட்களுக்கிடையே போட்டியும் பொறாமையும்தான். நான் பெரிசோ, நீ பெரிசோ, நான் கதைக்கிற இங்கிலீசு பெரிசோ, நீ கதைக்கிற இங்கிலீசு பெரிசோ என்று. அதை ஏன்கேட்கிறியள்? ஊருக்கு திரும்பிப்போனால் என்ன எண்டு இடைக்கிடை மனம் தாவுது பாரும்.

தங்கம் : ஊரிலை போய் என்ன செய்யப் போறியள்? அந்தக் காலத்திலை, நானும் நீங்கள் ஒரு எஞ்சினியர் எண்டு தானே நம்பி இங்கே வந்தனான். இங்கை வந்தாப்பிறகுதானே தெரிஞ்சுது எஞ்சினியரோ, எஞ்சின் டிரைவரோ எண்டு. பழசுகளைக் கிளறி, எனக்குக் கவலையை உண்டாக்காதையுங்கோ.

சுப்பையா : இலண்டனுக்கு வந்த எல்லாரும், அந்த நாளேலை அனேகமா ஊருக்கு கலியாணம் செய்ய வந்தபோது எஞ்சினியர்தான். இப்ப உமக்கு என்ன குறை வைச்சிட்டன்? ம்! எதுக்கு இப்ப மூக்காலை அழுகிறீர்?

தங்கம் : அந்த நேரத்திலை அப்பு, ஆச்சியிட்டைக் காசில்லாமல் போச்சு, அதாலைதான் இவருக்கு கழுத்தை நீட்டினான். அந்த நேரம் நான் இருந்த வடிவுக்கு நீங்களோ எனக்கு மாப்பிள்ளை?

சுப்பையா : அட, என்ன செய்யிறதெண்டு, நானும் அப்பு ஆச்சியின்ரை சொல்லுக்குக் கட்டுப்பட்டு, தாலியைக்கட்டினேன். அந்தநேரம் நான் இருந்த இரைக்கு, நீயேணை எனக்குப் பொம்பிளை?

தில்லை : சரி... சரி... பழசுகளை விடுங்கோ. ஏதோ உங்களைப் போலை ஆட்கள் இங்கே இருக்கிறபடியால்தான் அங்கை இருக்கிற ஆட்களும் கொஞ்சமாவது சந்தோஷமாக இருக்கினம்.

சுப்பையா : தங்கமடி தங்கம், இது ஒரு சிங்கமடி சிங்கம். எத்தனை வருஷத்துக்குப் பிறகு சந்திக்கிறம். எவ்வளவோ கதைக்க இருக்குது. நீர் போய் கோப்பி போட்டுக்கொண்டு வாரும்.

தில்லை : என்ன? இலண்டனுக்கு வந்தும் தமிழ்க் கவிதையிலை தான் பதில் சொல்லுகிறீர்? "ஹலோ, மை டியர் டார்லிங்" என்று சொல்லாமல்?

தங்கம் : அதை ஏன் கேட்கிறியள்? இவருக்கு தமிழ் என்றால் உயிர். தன்னைப்போல மகன் தினேசையும் தமிழ் படிக்க

வேண்டுமென்று, படாத பாடு படுத்துகிறார்.

சுப்பையா : என்ன படாத பாடு படுத்துகிறன்? ம்! நாங்கள் தமிழர், எங்கே இருந்தாலும் எங்கடை தமிழ்ப் பாஷையை, பண்பாட்டை மறக்கக்கூடாது. அதைத்தான் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கிறன். இங்கை பாரும், இவ்வளவு வயது போயும், நீர் ஏன் கமலகாஸன்ரை படமென்றால் முந்திக்கொண்டு நிற்கிறீர்?

தங்கம் : அது என்ரை விருப்பம். தில்லை அண்ணை! நீங்களே சொல்லுங்கோ பாப்பம், அவர்மட்டும் சிலுக்குவின்ரை படம் பாக்கலாம், நான் கமலின்ரை படம் பாத்தா என்ன?

தில்லை : என்ன இருந்தாலும் இனம் இனத்தைச் சேரும். அது போலத்தான் தமிழ் தமிழைச் சேருது.

தங்கம் : சரி... இருந்து கதையுங்கோ. நான் கோப்பி போட்டுக்கொண்டு வாறன். (உள்ளே போகிறார்.)

தில்லை : (எழுந்து சுற்றும் முற்றும் பர்த்துவிட்டு) இங்கை பாரும் சுப்பையா, நானும் நல்லா பாத்திட்டுத்தான் சொல்கிறன். ஆனால் நான் சொல்கிறன் என்று குறை நினைக்காதையும், மனிசியை வைத்திருக்கு மாப்போலை வைத்திருக்கவேணும். நான்

இருக்கிறன் எண்டுமில்லாமல், உம்மோடை வாய் காட்டுது. என்னரை வீட்டை ஒருக்கால் வந்து பாரும். இரு எண்டால் இரு, எழும்பு எண்டால் எழும்பு. கிறினகோட்டை தாண்ட மாட்டுது காணும் என்ரை மனிசி.

சுப்பையா : இல்லையப்பா, நானும் மனிசியும் சண்டை பிடிச்சாலும் உள்ளுக்குள்ளை சரியான அன்பு. இடைக்கிடை ஒரு உலுப்பு உலுப்பி விட்டா, ஒரு ஒண்டரை மாதத்திற்கு மனிசி ஊரிலை இல்லாத கடை எல்லாம் ஏறி, இறங்கி, பெயர் தெரியாத பலகாரம் எல்லாம் செய்துகொண்டு, ஒட்டி ஒட்டி வரும். நாங்கள் என்ன வெள்ளைக்காரன் மாதிரி கோவிச்ச உடனே விட்டிட்டு, வேறை கலியாணம் முடிக்க முடியுமோ? எங்கடை தமிழ்ச்சாதி... இரத்தத்தோடை ஊறினது பாரும்.

தங்கம் : (கோபியுடன் வருகிறார்) இந்தாங்கோ கோப்பி குடியுங்கோ.

தில்லை : (சிறிது தடுமாற்றத்துடன்) என்ன... அதுக்கிடையிலை வந்துவிட்டியள்?

தங்கம் : எங்கடை மகள் சாந்தி, பள்ளிக்கூட விடுதலையிலை வந்து நிற்கிறாள். நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று தெரிஞ்ச உடனே, கோப்பி போட்டு வைச்சிட்டா.

தில்லை : மகளை ஒருக்கால் கூப்பிடுங்கோ பாப்பம்.

தங்கம் : (உள்ளே எட்டிப்பார்த்து) சாந்தி இங்கை வாம்மா. தில்லை மாமா ஒருக்கால் பார்க்கப் போகிறாராம்.

சுப்பையா : அவள் சரியான வெக்கறை பிடிச்சவள்... அப்பா மாதிரி... பையன் எல்லாத்துக்கும் முந்திக்கொண்டு நிற்பான்... அம்மா மாதிரி.

தில்லை : சரி மகனையாவது கூப்பிடுங்கோ பாப்பம்.

தினேஸ் : (வருகிறார்) ஹலோ அங்கிள்.

தில்லை : தம்பிக்குத் தமிழ் தெரியும் என்று அப்பா சொன்னார்.

தங்கம் : இவருக்குத் தமிழ்க் கவிதை, திருக்குறள் எல்லாம் தெரியும்.

தில்லை : அப்ப ஒரு நல்ல திருக்குறளா சொல்லும் கேட்பம்.

தினேஸ் : Which one Daddy?

சுப்பையா : அந்த நேற்று சொல்லித் தந்ததைச் சொல்லு... அடிசிற்கினியாளே...

தினேஸ் : அடி "சிக்" கினியாளே... அம்புடைய மாடே.. படி சுற்றிவராத பாவி...

தில்லை : தம்பி... நிற்பாட்டும். இது என்ன புதுக்குறளாக இருக்கு...?

சுப்பையா : அது பாருங்கோ... அவன் இங்கிலீஸ்லை எழுதிப் பாடமாக்கியது. அதுதான் பாரும்...

தில்லை : தம்பி இது திருக்குறள் இல்லை. எங்கடை திருவள்ளுவர், தன் மனைவிக்காகப் பாடின பாட்டு. "அடிசிற்கினியாளே, அன்புடையாளே, படி சொற்தவறாத பாவாய்"…. என்று பாடிக்கொண்டு போகிறார். அதை நீங்கள் இப்படி மாத்திப்பாடினால், ஊரிலை உள்ள மனைவிமார் எல்லாம் உலக்கையாலைதான் அடிக்க வருவினம்.

தங்கம் : இது தகப்பனும் மகனுமாகச் சேர்ந்து, எனக்காகத்தான் மாத்தி வைச்சிருக்கினமோ எண்டு சந்தேகமாய் இருக்குது.

தில்லை : சரி.. விடுங்கோ… நான் இண்டைக்கு இங்கை வந்த அலுவல் வேறை. எங்கடை மகன் கஜனுக்கும் வயது வந்திட்டுது. எங்கையாவது வசதியாக பொம்பிளை இருந்தால் சொல்லுங்கோ. உங்களைக் கண்ட உடனே இது எல்லாம் மறந்து போச்சுது. கொஞ்சம் கண்ணுக்கு அழகா, இலட்சணமா, படிச்ச பொம்பிளையா இல்லாட்டிலும், குடும்பத்தோடை ஒத்துப்போகக் கூடியதாக இருக்க வேணும்.

சுப்பையா : (சிரித்துக்கொண்டே) உங்களுக்கு எந்த நாட்டுப்பொம்பிளை வேணும்? என்ன நிறத்திலை வேணும்? வெள்ளையோ, கறுப்போ… இந்தியனோ, சீனாக்காரியோ?

தங்கம் : சும்மா இருங்கோ... அண்ணை நீங்கள் சொல்லுங்கோ.

தில்லை : கொஞ்சம் அடக்க ஒடுக்கமா இருக்க வேணும். ஏனெண்டா... இந்த வெள்ளைக்காரர் மாதிரி, "மிஸ்டர் தில்லை" என்று கூப்பிடாமல். மற்றவைக்கு முன்னாலை, கொஞ்சம் மரியாதையாக, மாமா மாமி என்று ஆசையா கூப்பிடவேணும்.

தங்கம் : ஏன் இப்ப எங்கடை ஆட்கள் சிலபேர், புருஷன்மாரை இப்ப அப்படித்தானே கூப்பிடுகினம்.

சுப்பையா : இப்ப் பாக்கிற சாடையைப் பாத்தால், நீரும் அப்படித்தான் கூப்பிடுவீர் போலை இருக்குது.

தங்கம் : இனி அப்பிடிக் கூப்பிட்டால்தான் என்னேடை இனிமேல் தனகாமல் இருப்பியள்.

தில்லை : இங்கை பாருங்கோ... உங்கடை சண்டையளைப் பிறகு வையுங்கோ. எனக்கும் நேரமாகுது. தம்பி வந்திடப் போறான். (வாயில் மணி அடிக்கிறது) தம்பி வந்திட்டாப் போலை. நான் போயிட்டு வாறன். நான் சொன்னதை மறக்காதையுங்கோ. (போகிறார்)

தங்கம் : (சிறிது பொறுத்து) எப்ப எழும்பிப்போவார் என்று பார்த்திருந்தனான்.. நான் அங்காலை போக, நீங்கள் இரண்டுபேரும் கதைச்சதைக் கேட்டுக்கொண்டுதான் இருந்தனான். என்ன? மனிசியை வைச்சிருக்குமாப்போலை வைச்சிருக்க வேணுமாமோ? நான் இப்பவே பரிமளக்காவுக்கு போன் பண்ணி இதைச் சொல்லாட்டி என்ரை பேர் தங்கம் இல்லை. (போகிறார்)

சுப்பையா : தங்கம்... சொல்கிறதைக் கேளப்பா... போனைக் கீழை வையும்.

❖❖❖

காட்சி - 2

*(இடம் தெரு. தில்லையம்பலம் கடையில் சில பொருட்கள் வாங்கியபடி வருகிறார். தற்செயலாக பழைய நண்பர் வேலுவைச் சந்திக்கின்றார்)*

வேலு : (மேலும் கீழும் பார்க்கிறார். தில்லையம்பலம் பல்லெல்லாம் தெரிய, சத்தமில்லாமல் சிரிக்கிறார்) you must be Mr. Thillaiampalam.

தில்லை : "யெஸ், யெஸ்" ....தம்பி... வந்து...

வேலு : நான் தான் வேலு. அங்கை யாழ்ப்பாணத்திலை......

தில்லை : (நன்றாகப் பார்த்துவிட்டு) அட... எங்கடை கந்தர்மடத்தடி வேலுவோ நீ! இந்த

"கோட்டு, சூட்டோடை" நிற்கிறதிலை ஆளையே அடையாளந் தெரியுது இல்லை. இங்கை வந்த நாள் தொட்டு எனக்கு ஒரே "shock" எங்கை போனாலும் தமிழ் ஆட்களைக் காணலாம். பஸ்சிலையோ, கடையிலையோ, வெளியிலையோ, எங்கையும் எங்கட ஆட்களைக் காணலாம். பார்க்கப்போனா, ஊரிலை இருக்கிற ஆட்களைவிட, இங்கை கூட இருக்கினம் போலை இருக்குது.

வேலு : நீங்கள் சொல்லுகிறதும் ஒருவழியிலை சரிதான். இங்கை "அல்பேட்டன்" ஒரு சின்ன அரியாலை, "ஈலிங்" ஒரு சின்ன உரும்பிராய்... இந்த ஈஸ்ட்காம்" ஒரு சின்ன யாழ்ப்பாணம் எண்டே சொல்லலாம்.

தில்லை ; அது சரி... இங்கை எப்ப நீ வந்தனீர்?

வேலு : நான் வந்து இந்த 85ம் ஆண்டு எல்லாரும் வரயுக்கை நானும் வந்தனான். ஊரிலை சந்திக்குச் சந்தி "கொம்மிற்றி" வைத்துக் கொண்டிருந்தனான். இங்கை, இப்ப வந்து ஒரு இந்தியன் கடையிலை வேலை செய்யிறன். அந்த நேரம் இங்கிலிஸ் கொஞ்சம் கூடப்படிச்சிருந்தால் நல்ல வேலை செய்யலாம். யாருக்குத் தெரியும் நாங்களெல்லாம் இங்கை வந்து இப்படிக் குளிர் காயப்போகிறம் என்று. இந்த நாளையிலை வேலையில்லை, வேலையில்லை, என்று அலையிற இந்த

நேரத்திலை, ஒரு வேலை எடுக்கிற தெண்டா, லேசான வேலையில்லை.

தில்லை : எப்பிடி? இங்கிலீஸ் எல்லாம் இப்ப நல்லாப் பேசுவீரா...?

வேலு : என்ன எங்கடை ஆட்கள்தானே கடைக்கு கூடுதலா வாறது. "யேசும் நோ" வும்தான் கூட பாவிக்கிறது. கதைக்கிறது விளங்காட்டி, கைப்பாஷைதான். கதைக்கேக்கை விளங்காட்டிலும், பாருங்கோ சிரிக்கேக்கை விளங்கும். ஏதோ அவை கதைக்கிறது இங்கிலீஸ் என்றாலும், அவை சிரிக்கிறது தமிழிலே தானே. அதுதான் கூட விளங்குது.

தில்லை : நீ நல்லாத்தான் தமிழ் படிச்சு வைத்திருக்கிறாய்.

வேலு : அந்த நாளேலை அம்மா அப்பாவின்ரை ஆய்க்கினை தாங்க மாட்டாமல் பள்ளிக்கூடம் போனேன். முதலாம் வகுப்பிலை மூன்று வருஷம், இரண்டாம் வகுப்பிலை இரண்டு வருஷம் இருந்தனான். எதுக்கும் பாருங்கோ அத்திவாரம் பெலமாக இருந்தால்தான், கட்டிடமும் நல்லாக வரும்.

தில்லை : அப்ப கட்டிடம் எப்படி?

வேலு : அது அத்திவாரத்தோடையே நின்று விட்டுது.

தில்லை : நான் ஒரு தமிழ் வாத்தியார். இங்கை இங்கிலீஸ் கட்டாயம் படிக்க வேணும் போலை இருக்கு. எங்கடை ஆட்கள் எங்கை போனாலும் இங்கிலீஸ்லைதான் கதைக்கினம். வீட்டிலை பிள்ளைகளும் இங்கிலீஸ்லைதான்; றோட்டிலை புருஷன் பெண்சாதியும் இங்கிலீஸ்தான். இந்த தமிழ் கூட்டங்களுக்குப் போனால்கூட, இங்கிலீஸ்லை தானே கதைக்கினம்.

வேலு : அண்ணை, என்ரை பெயர் வேலு. இந்த வெள்ளைக்காரங்கள் எல்லாரும் என்னை வால், வாலு எண்டுதான் கூப்பிடுகினம். என்கென்ன வால் எண்டால் என்ன, தலை எண்டால் என்ன. "ஐ டோன்ட் கெயர்" நீங்கள் இங்கிலீஸ் "இம்புறூவ்" பண்ண வேணுமெண்டால், கண்ட கண்ட தமிழ் வசனங்களை எல்லாம் இங்கிலீஸ்லை மாத்திப்பழகுங்கோ. பிறகு கொஞ்ச நாளேலை எல்லாம் சரிவந்துவிடும்.

தில்லை : சரியாகச் சொன்னீர். அண்டைக்கொருநாள் பரிமளமும் உதேபோலத்தான் சொல்லி, என்னைச் சொல்லச் சொன்னா. என்னாலை முடியேல்லை. சரியான கஸ்டமாயிருந்திது.

வேலு : அப்பிடி என்ன வசனம்? ஒருக்கால் சொல்லுங்கோ பார்ப்பம். நான் "றை" பண்ணிப் பார்க்கிறன்.

தில்லை : (சிறிது தாமதித்துவிட்டு, திடீரென்று) "வளவுக்கை கால் வைக்காதை" "காலடிச்சு

முறிப்பன்'', ''நெத்திக்கு நேரே சொல்லிப்போடுவன்".

வேலு : (திடுக்கிட்டபடி) என்ன தில்லை அண்ணை, நீங்கள் என்னோடை கோபிக்கிறீங்கள் என்று பயந்திட்டன். அது சரி, இதென்ன பொல்லாத வசனங்களாக இருக்குது. ஏன் இது எல்லாம்?

தில்லை : இல்லையப்பா... பரிமளம் ஊரிலை இப்படியான வசனங்கள்தானே அதிகமாகப் பாவிச்சது. அது தான்.. தற்செயலாக ஊருக்குத் திரும்பி போனால், முந்தி தமிழ்மை பேசின வசனங்களை, இங்கிலீஸ்லை பேசலாம் என்று ஒரு ஆசை.

வேலு : அப்ப பரிமளக்கா இன்னும் பழைய மாதிரித்தான் என்று சொல்லுங்கோவன். ஒருக்கால் வந்து சந்திக்க வேணும்.

தில்லை : அதை ஏன் கேட்கிறாய்? மனிசி இங்கை எல்லாக் கிழவியளும் "hair style' பண்ணுகினமாம். தானும் பண்ண வேணுமாம். அரைப் பாவாடை போடவேணுமாம். இதுகளை நான் என்னெண்டு வெளியிலை சொல்கிறது. இப்ப இங்கை நின்று கதைக்கிறது தெரிஞ்சால், வரிஞ்சு கட்டிக்கொண்டு வந்திடும். தம்பியாணை இதுகளை யாருக்கும் சொல்லிப்போடாதையும். இங்கை எல்லாருக்கும் மனிசி எனக்குப் பயந்தது எண்டுதான் சொல்லி இருக்கிறன். அது சரி நீர் இங்கை புறோக்கர் வேலை

பார்க்கிறது என்று கேள்விப்பட்டன். இவன் எங்கடை தம்பி கஜனுக்கு ஒரு சம்பந்தம் பேசவேணும்.

வேலு : நான் என்ன பரம்பரைப் புறோக்கரே? இலண்டனிலை புறோக்கர் வேலை பார்க்கிறது என்றால், எல்லாரும் ஆச்சிரியப் படுவினம்.எட, எங்கடை தமிழன் இலண்டனிலை புறோக்கர் வேலை பார்க்கிறார் எண்டு சொல்லுவினம் நீங்களே சொல்லுங்கோ பாப்பம், இங்கை ஏன் புறோக்கர்மார்? இன்றைக்கு காதல்... நாளைக்குக் கலியாணம்.. அடுத்த நாள் "டைவோர்ஸ்" மூன்றே மூன்று நாள். புறோக்கர் காசு வாங்கிறதற்கிடையிலை, கலியாணம் முடிஞ்சிடும். நான்... இடைக்கடை பொழுது போகாட்டில், இப்பிடி சிலபேருக்கு ஒரு "தொண்டு" செய்கிறனான்.

தில்லை : சரி, சரி எனக்கும் நேரமாகுது யாராவது வசதியாக இருந்தால் சொல்லுங்கோ. நான் போயிட்டு வாறேன். (போகிறார்)

வேலு : (தனிமையில்) ஆமா... கொஞ்ச நாளா ஒருத்தரைப் பற்றி இன்னொருத்தருக்குச் சொல்லாமல், எனக்கு வாயும் வயிறும் வறண்டு போச்சு. தில்லை அண்ணையையும், பரிமளக்காவையையும் பற்றி, இன்னும் கொஞ்ச நேரத்திலை இந்த இலண்டன் முழுக்க சொல்லிவிடுவன். நான் ஒரு சின்ன 'நியூஸ் பேப்பர்"

எண்டு தில்லை அண்ணைக்குத் தெரியாது....(மறுபக்கம் திரும்பி) இது யார் சுப்பையா அண்ணை வாறார் போலை இருக்கு. என்ன சுப்பையா அண்ணை... தனிய வாறியள்? எங்கை அவசரமாகப் போறீங்கள்?

சுப்பையா : தங்கம் அக்கா காருக்குள்ளை இருக்கிறார். கார் "Yellow Line" லை நிக்குது. மனிசி கமலகாசன்ரை ஏதோ புதுப்படம் வீடியோவிலை வந்திருக்குதாம். அதை எடுத்துக்கொண்டு வரச்சொல்லி பெரிய கரைச்சலாக் கிடக்குது. அதுதான் கடைக்குப் போறன்.

வேலு : அது சரி இண்டைக்கு இங்கை எல்லாரும் மனிசிமாருக்குப் பயந்தவையாகத்தான் இருக்குது. இப்பதான் தில்லை அண்ணரும் பரிமளம் அக்கா நெருப்பு எடுக்கப் போறா எண்டு சொல்லிக்கொண்டு ஓடுகிறார்.

சுப்பு : என்ன? என்ன? அண்டைக்கு வீட்டுக்கு வந்த இடத்திலை என்னவோ சொன்னார்.

வேலு : அண்ணை! இதுகளை யாருக்கும் சொல்லிப் போடவேண்டாம். பரிமளக்கா கேள்விப்பட்டாப் போச்சு.

சுப்பு : நான் பிறகு “போன்” பண்ணுகிறன். நானும் நீரும் ஒருநாளைக்கு அங்கை போகவேணும். நேரே போய், என்ன நடக்குது எண்டு பார்க்க வேணும். இன்னொரு விஷயம்... என்னெண்டால்,

தில்லையம்பலத்தாருடைய மகன் கஜனுக்கு, எங்கடை மகள் சாந்தியைக் கலியாணம் பேசலாம் எண்டு ஒரு விருப்பம்.

வேலு : இப்பதான் என்னட்டையும் இதைப் பற்றி சொன்னார். சரி... நீங்கள் போங்கோ அண்ணை, நான் எல்லாம் செய்து வைக்கிறன்.

சுப்பு : சரி, நான் பிறகு "போன்" பண்ணுகிறன். (போகிறார்)

வேலு : (தனக்குள்) என்னப்பா இது?. "ஊழி நாயும் வர, உறியும் அறுந்த" கதையா இருக்குது. இவையள் என்ன செய்தாலும், கடைசியா பரிமளக்காவின்ரை "பார்ளிமென்ரிலை தான் பாஸ்" பண்ண வேணும். இவை யாருக்கும் தெரியாமல் இப்பவே நான் போய், பரிமளக்காவுக்கு ஒரு "போன் கால்" எடுத்து விஷயத்தை அவிழ்த்து விடுவம். பிறகு இன்னொரு நாளைக்கு தில்லை அண்ணையைப் பார்க்கப் போவம். தில்லை அண்ணார் எத்தினை நாளைக்குப் பட்டினியோ தெரியாது. அவருடைய தலைவிதி, பரிமளக்காவை கலியாணம் முடிச்சது, என்னுடைய தலைவிதி, இன்னும் யாரையுமே முடிக்க இல்லை. (போகிறார்.)

ஃ திரை ஃ

காட்சி - 3

*(இடம் : தில்லையம்பலம் வீடு. தில்லையம்பலமும், மனைவி பரிமளமும் வாய்ச்சண்டை போடுகிறார்கள். பரிமளம் உள்ளே இருக்கின்றார்)*

பரிமளம் : உங்கை என்ன செய்யிறியள்? அடுப்பிலை வைச்ச அரிசி அவிஞ்சு அஞ்சு நிமிஷமாச்சுது. இன்னும் கஞ்சி வடிக்கேல்லை. புடலங்காயை வெட்டித்தரச் சொல்லி, பத்து நிமிஷமாச்சுது, வெளியிலை போட்ட உடுப்புகளை எடுக்கச் சொல்லி இரண்டு மணித்தியாலமாச்சு. ஏன் இலண்டனுக்கு வந்தேன் எண்டு இருக்குது.

தில்லை : உம்மைக் கலியாணம் செய்த நாள்தொட்டு, கஞ்சி வடிக்கிறதிலும், கத்தரிக்காய் நறுக்கிறலும், என்ரை நேரம் போகுது. நீர் உந்த வீடியோவை நிப்பாட்டிப்போட்டு, வாரும் இங்கை.

பரிமளம் : நேற்று எங்கை எல்லாம் உலாத்திப் போட்டு வந்தனீர்? நான் வீட்டுக்கை இருந்தாலும், வெளியிலை என்ன நடக்கிற தென்று ஒன்றும் விடாமல் சொல்லுவன். இலண்டனுக்கு வந்த உடனே கூட்டாளிமார் எல்லாம் கூடிப்போச்சுது. சமையல் வேலை முழுக்க இப்ப என்னோடையே விட்டாச்சு. சாப்பிட மட்டும் அந்த, அந்த “றைட் டைமுக்கு” வந்து நில்லுங்கோ.

தில்லை : இப்ப ஏனப்பா இந்த ஊரே கேட்குமாப்போலை சத்தம் போடுறீர்? சமைக்க விட்டால் விடும், நான் போய் பீசா வாங்கிக் கொண்டு வாறன். (தனக்குள்) என்னர இவாவின்ரை வசனங்களுக்கை இப்ப இடைக்கிடை கொஞ்ச இங்கிலீசும் வருகுது. கஷ்ட காலத்துக்கோ, நல்ல காலத்துக்கோ தெரியாது.

(வேலுயுவும், சுப்பையாவும் வருகிறார்கள்)

வேலு : (வந்து கொண்டே) தில்லை அண்ணை! கதவு திறந்து கிடந்திது, அப்பிடியே வந்திட்டோம். பரிமளக்காவின்ரை குரல், அந்த சந்தியிலை வரயுக்கை கேட்குது. எப்பிடி இருக்கிறீங்கள்? சொல்லுங்கோ. புதினங்களைக் கேட்பம்.

தில்லை : (சமாளித்தபடி) அது... வந்து... நானும் பரிமளமும் இன்றைக்கு என்ன சமைக்கிறது என்று கதைக்கிறம். நான் எப்பவும் கதவைத் திறந்துபோட்டுத்தான் மனிசியோடை கதைக்கிறனான்.

சுப்பையா : ஏன்?... ஏதேனும் வில்லங்கம் எண்டால் ஓடித் தப்ப வசதியாக இருக்கும் எண்டோ?

பரிமளம் : உங்கை என்ன தனியாக் கதைக்கிறயள்? இங்கை வந்து இந்த வெங்காயத்தை உரியுங்கோ.

வேலு : தில்லை அண்ணை, பரிமளக்காவிட்டை, நாங்கள் வந்திருக்கிறம் எண்டு சொல்லுங்கோ. இல்லை எண்டால் நாங்களும் வந்து வெங்காயம் உரிக்க வேண்டி வந்தாலும் வரும்.

தங்கம் : நீங்கள் இங்கே இருந்து கதையுங்கோ, நான் உள்ளே போய் பரிமளக்காவைப் பார்த்து, கதைச்சுப்போட்டு வாறன். (உள்ளே போகிறார்)

சுப்பையா : அண்டைக்கு என்னவோ சொன்னீர்? இங்கை என்னவோ நடக்குது. மற்றவையைத் திருத்த முதல், தங்களைத் தாங்களே திருத்த வேணும் பாரும்.

தில்லை : அண்டைக்கு உம்மடை மனிசி ஆட்களுக்கு முன்னாலை உம்மைப் பேசிச்சுது. இப்ப என்னர மனிசி, குசினியுக்கை இருந்துகொண்டுதான் பேசுது. அதிலை வித்தியாசம் இருக்குப் பாரும்.

சுப்பு : அது சரி இலண்டனுக்கு வந்தாப்போலை, பரிமளம் தங்கம்மாவா மாறமுடியுமோ? "எதுக்கும் பானையிலை இருந்தால்தானே அகப்பையிலை வரும்".

வேலு ; அண்ணை! "வீட்டுக்கு வீடு வாசல்படிதான்". எங்கடை ஆட்களுக்கு சண்டை பிடிக்காவிட்டா, ஒரு பத்தியமாய் இராது. அதிலும் சிலபேருக்கு நித்திரையே வராது. (தில்லையம்பலத்தை நெருங்கி)

அண்டைக்கு நீங்கள் சொன்னதை நானும் நல்லா யோசித்துப் பார்த்தேன். இருந்து யோசித்துப் பார்த்தேன், நடந்தும் யோசித்துப் பார்த்தேன், உங்கடை மகன் கஜனுக்கு, கையுக்கை பொம்பிளை இருக்குது.

தில்லை : என்ன வேலு சொல்லுகிறீர்?

வேலு : அண்ணை.... வந்து... உங்கடை மகன் கஜனுக்கு, சுப்பையா அண்ணையின்ரை மகள் சாந்தியை கலியாணம் செய்யலாம் எண்டு....

தில்லை : என்ரை...மகனுக்கு... உவற்ரை மகளையோ..? இந்த யென்மத்திலை நடக்காது.

சுப்பையா : ஏன் என்ரை மகளுக்கு என்ன குறை?

வேலு : தில்லை அண்ணை, சாந்தியைப் பார்த்தா, சொக்கிப் போவீங்கள். நிறத்திலை, ஊரிலை பழுத்த கறுத்தைக் கொழும்பான் மாம்பழம் மாதிரி. சிரிச்சா, முத்தையா அண்ணை வீட்டிலை முந்தி நின்ட மாதுளம் பழம் மாதிரி. மொத்தத்திலை, சரோஜாதேவி மாதிரி எண்டு சொல்லலாம்.

தில்லை : அப்ப வாயிலை? தங்கம் மாதிரி இருக்குமோ? அதில்லைப்பாரும் வேலு, இவர் இலண்டனுக்கு வந்ததுதான்,

உவரிட்டை என்ன "qualification" இருக்கு? நாளைக்கு உம்மடை சம்பந்தி யாரெண்டு கேட்டால், நாங்கள் என்னத்தைச் சொல்கிறது? ஒரு "Doctor" அல்லது "Engineer" எண்டால் எவ்வளவு நல்லா இருக்கும்.

வேலு : நாங்கள் தில்லை அண்ணையின்ரை மகளுக்குத்தான் கலியாணம் பேசுகிறம். இப்ப நீங்கள் சொல்கிறதைப் பார்த்தா, மருமகளும் "Doctor" ஆகவேணும், சம்பந்தியும் "Doctor" ஆக வேணும் போலை இருக்குது. எங்கடை தமிழ்ச் சாதிக்கு என்னதான் தலைவிதியோ?

சுப்பையா : தம்பி வேலு, இவர் இவ்வளவும் கதைச்ச பிறகு, நான் சும்மா இருக்க முடியாது. நான் இலண்டனுக்கு வந்து 25 வருஷமாகுது. இங்கை எனக்கு மூன்று வீடுகள் இருக்குது. இரண்டு கார்கள் நிற்குது. நேற்று வந்த உவரிட்டை என்ன இருக்குது? நாளைக்கு அவசரத்துக்கு "Minicab" பிடிக்கிறதெண்டாக்கூட, எங்களிட்டைத் தான் வந்து வசனம் கேட்க வேணும்.

பரிமளம் : (வந்துகொண்டே) நானும் உள்ளே இருந்து எல்லாம் கேட்டுக் கொண்டுதான் இருந்தனான். (தங்கம்மாவும் வருகிறார்)

வேலு : கேட்கட்டும் எண்டு தானே நாங்களும் உரத்துக் கதைச்சனாங்கள்.

பரிமளம் : நாங்கள் தம்பி கஜனுக்கு கலியாணம்

பேசிறம் எண்டு தெரிஞ்ச நாள்தொட்டு, எங்கடை "டெலிபோன்" ஓயேல்லை!. சாதகத்தைத் தரச்சொல்லி எத்தினை ஆயிரம் பேர் கேட்கினம்?

சுப்பையா : இங்கை பாருங்கோ, நான் பிறந்தது சண்டிலிப்பாய், வளர்ந்தது மானிப்பாய், படிச்சது கோப்பாய், கலியாணம் முடிச்சது உரும்பராய்.

தில்லை : அதுதான் உம்மடை மனிசி ஆட்களைக்கண்ட உடனை பாயுது போல இருக்குது. எங்கடை மகன் கஜன் எங்களை மிஞ்சி ஏதும் செய்ய மாட்டான். நாங்கள் இந்தப் பொம்பிளையை முடி எண்டால் முடிப்பான், விடு என்றால் விடுவான். கிறின கோட்டைத் தாண்ட மாட்டான் பாருங்கோ.

சுப்பையா : எத்தினை கோடுகள் வீட்டுக்குள்ளே கிறி வைத்திருக்கிறீரோ தெரியேலை. தம்பி... இது கலியாணவிஷயம், ஆற, அமரப் பேச வேணும். சும்மா அடித்தா... பிடித்தா...ம்!....ம்!... ஒண்டும் நடக்காது. எங்கடை பிள்ளை சாந்திக்கு யாரை, எப்பிடிக் கலியாணம் செய்யிற தென்று எனக்குத் தெரியும்.

தங்கம் : எல்லாத்துக்கும் பொம்பிளையள் வேணும், கலியாணம் பேசமட்டும் எங்களைத் தேவையில்லையோ? வேலு! நீர் என்ன சொல்லுகிறீர்?

வேலு : நான் என்ரை இந்தியன் கடை "ஓவர்டைமையும்" விட்டுட்டுத்தான் இங்கை வந்தனான். புறோக்கர் காசு கிடைக்கும் எண்ட நம்பிக்கையிலை. இங்கை பாத்தா, "அரசனை நம்பி, புருசனைக் கைவிட்ட" கதையாய் போச்சு.

பரிமளம் : தம்பி கஜனும் வெளியிலை போயிட்டான். இருந்திருந்தால் ஒரு சொல்லு கேட்டிருக்கலாம். எதுக்கும் சாதகம் பொருந்தினால்தானே மிச்சம் எல்லாம்?

வேலு : அக்கா... நான் உங்களை ஒண்டு கேட்கிறன். குறை நினைக்காதையுங்கோ. எதுக்கு உந்த சாதகம் எல்லாம்? மனதுக்குப் பிடிச்சிருந்தால் சரிதான். உங்களுக்கும், தில்லை அண்ணருக்கும் என்னெண்டுதான் சாதகம் பொருந்திச்சுதோ தெரியாது. இந்த இடத்திலை நான் ஒண்டுமட்டும் சொல்கிறன். எங்கடை ஆட்களுக்கு விஷயம் தெரிஞ்சுதோ தெரியேல்லையோ, மற்றைவைக்கு முன்னாலை சத்தம் போட்டு, "இங்கிலீசிலை" கதைக்கிறதும், மற்றவன் செய்யிற நல்ல காரியங்களைக் குழப்பிறதும், ஒரு வழக்கமாப் போச்சுது: சும்மா நான் பெரிசோ, நீ பெரிசோ, நான் கதைக்கிற "இங்கிலீஸ்" பெரிசோ, நீ கதைக்கிற "இங்கிலீஸ்" பெரிசோ எங்கிறதை விட்டுட்டு, எங்கடை தமிழ்ச் சாதியின்ரை இன்றைய நிலையையாலும் ஒருக்கால்

யோசித்து, இந்தக் கலியாணத்தை ஒற்றுமையா செய்து வையுங்கோ.

தில்லை : முடியாதெண்டா முடியாது பாரும்!

வேலு : (சுப்பையாவை நெருங்கி) அண்ணை... அதுதான் சொன்னான் உதிலை வாற வழியிலே எங்கடை இந்தியன் கடையிலே, பழம், பூ, வெத்திலை எல்லாம் வாங்கிக் கொண்டு வரச்சொல்லி. ஒரு "chocolate" பெட்டியாவது வாங்கிக்கொண்டு வந்திருந்தால், நான் பரிமளக்காவிட்டைக் கொடுத்து, விசயத்தை முடிச்சிருப்பன்.

சுப்பையா : வேலு நீர் அதுக்குள்ளை உம்மடை இந்தியன் கடைக்கும் ஒரு உழைப்பாக்காப் பார்க்கிறீரோ?

வேலு : (தில்லையை நெருங்கி) தில்லை அண்ணை, நான் சொல்கிறன் எண்டு குறை நினைக்காதையுங்கோ, அண்டைக் கொருநாள் உங்கடைமகன் கஜனோடை கதைச்சனான். அவருக்கு சாந்தியிலை நல்ல விருப்பமாம். கலியாணம் செய்தா, சாந்தியைத்தான் செய்யிறதாம்.

தில்லை : இல்லை எண்டால்...?

வேலு : வேறையாரை எண்டாலும் செய்யிறதாம். சும்மா சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாக இந்தக் கலியாணத்தைச் செய்து வையுங்கோ. (மெதுவாக தில்லையை நோக்கி) மூன்று வீடுகள் இருக்கெண்டு

சொன்னார், அதிலை ஒண்டைப் பரிமளக்காவுக்கு கேட்டுப் பார்க்கட்டுமே?

தில்லை : சும்மா இரப்பா வேலு. போயும்போயும் உம்மட்டைச் சொன்னன் பாரும் இந்தக் கலியாணத்தைச் செய்யச் சொல்லி. உங்களுக்கு நான் ஒரு உண்மையைச் சொல்லப் போறன். கஜனுக்கு யாரைக் கலியாணம் செய்யிறதென்று நான் எப்பவோ முடிவு செய்திட்டேன்.

பரிமளம் : (ஆச்சரியத்துடன்) நீங்கள் என்ன சொல்லி றியள்? யார் உங்களுக்கு அந்தப் "பெர்மிஷன்" தந்தது?

தில்லை : நேற்று இராத்திரி கஜனின்ரை அறையிலை ஒரு "போட்டோ" பார்த்தன். செவ்வந்திப்பூக் கலரிலே ஒரு பொம்பிளை. பெயர் சாந்தியாம். அதுதான் எங்கடை மருமகள் எண்டு நான் அப்பவே முடிவு செய்திட்டேன்.

சுப்பையா : எங்கடை மகளுக்கும் பெயர் சாந்தி தானே!

தில்லை : சும்மா இரும், உலகத்திலை எத்தினையோ சாந்தி இருக்குதுகள். அந்தப்பிள்ளை "City University" யிலை "Acountant" ஆகப் படிக்குது.

தங்கம் : எங்கடை மகள் சாந்தியும் அங்கைதானே படிக்கிறாள்!

தில்லை : அந்தப் பிள்ளையின்ரை அழகை வர்ணிக்க, என்ரை ஒரு நாக்குப் போதாது.

வேலு : அப்ப என்ரை நாக்கையும் தரட்டே?

தில்லை : கஜன் வரட்டும், இண்டைக்கே பேசி ஒரு முடிவு எடுத்திடவேணும். வாற தையிலை கலியாணம் வைக்கப் போறன். சொல்லி அனுப்பிறம் வந்து சாப்பிட்டு போங்கோ.

வேலு : நான் இப்பவே போய், என்ரை நாலு முழ வேட்டியை தோய்ச்சுக் காயப்போட வேணும். வாங்கோ சுப்பையா அண்ணை போவோம்.

பரிமளம் : என்ன சொல்லிறியள்? என்ரை பிள்ளைக்கு, எனக்குத் தெரியாமல் பொம்பிளை பார்த்திட்டு, கலியாணத்துக்கு நாளும் வைச்சிட்டியளோ? நான் பார்த்து ஒரு முடிவு சொன்னால் ஒழிய, உங்கை ஒரு தம்பி கலியாணம் செய்ய முடியாது.

வேலு : அக்கா, எனக்கு புறோக்கர் காசு தராட்டிலும் பரவாயில்லை, கலியாணச் சாப்பாடாவது சாப்பிட விடுங்கோ.

சுப்பையா : வேலு., சும்மா "ஆடு அறுக்க முன்னம்...." அந்தப் பழமொழி எல்லாம் இப்ப எதுக்கு? வாற மார்கழிக் கடைசி நாளுக்கு எங்கடை மகளுக்கு நான் கலியாணம் செய்து வைக்காட்டா, என் பெயர் சுப்பையா இல்லை.

வேலு : எங்கடை ஆட்கள் சில பேருக்கு இலண்டனுக்கு வந்த உடனே, தலை கால்

தெரியுதில்லை, எல்லாருக்கும் எல்லாம் தெரியும் எண்டொரு நினைப்பு. இந்தக் குணத்தாலை தான் எத்தினையோ நல்ல காரியங்கள் எல்லாம் குழம்பிப் போகுது. இங்கேயே பாருங்கோவன், ஐந்து நிமிடத்துக்கு முன்னாலை ஒரு கலியாண வீடுமில்லை. திடீரென்று இரண்டு கலியாண வீடுகள் வந்திட்டுது. இன்னும் ஐந்து நிமிடத்திலே என்னென்ன நடக்குமோ தெரியாது.

(இந்நேரம் கஜன் வீட்டுக்குள் வருகிறார்)

பரிமளம் : இங்கை தம்பி கஜன் வந்திட்டான். இங்கை வாடா தம்பி கஜன். நான் கேட்கிற கேள்விக்கு நீ சரியான மறுமொழி சொல்ல வேணும். நீ எங்கடை ஒரே ஒரு பிள்ளை தானே?

கஜன் : எண்டு தான் நானும் நினைக்கிறன்.

பரிமளம் : உனக்கொரு கலியாணம் செய்து வைக்க, எங்களுக்கு ஆசை இருக்குமோ இல்லையோ?

கஜன் : ஆசை யாரைத்தான் விட்டுது. எனக்கு எத்தினை நாளா அந்த ஆசை இருக்குது எண்டு உங்களுக்குத் தெரியுமே?

வேலு : என்னைக் கேட்டிருந்தாலும் இந்த மறுமொழியைத்தான் சொல்லியிருப்பேன். என்னை யார் கேட்கப் போகினம்?

பரிமளம் : நீ யாரையாவது மனசுக்குள்ளை வைச்சிருக்கிறாய் எண்டால் சொல்லு.

கஜன் : வந்து...வந்து..

வேலு : மனதுக்குள்ளை எத்தினையோ பேர் இருக்கும். எல்லாரையும் இப்ப எதுக்குக் கேட்கிறியள்? சாந்தியைப் பற்றிக் கேளுங்கோ.

தில்லை : உனக்கு சாந்தியைத் தெரியுமோ? அவவைப் பற்றி சொல்லு பார்ப்பம்.

கஜன் : எந்தச் சாந்தியைப் பற்றிச் சொல்கிறது?

வேலு : தம்பி கஜன், ஒரு கேள்வி கேட்டா, திருப்பி நீரும் கேள்வியைக் கேட்காமல், பதிலைச் சொல்லும். சுப்பையா அண்ணையின்ரை மகள் சாந்தியைப் பற்றி கொஞ்சம் சொல்லும் கேட்பம்.

கஜன் : சாந்திக்கு யாழ்ப்பாணத்து பனங்காயைப் போல ஒரு உருண்ட தலை இருக்குது. "Golden delicious" ஆப்பிளைப் போல இரண்டு கன்னம் இருக்குது. கோவைப்பழம் போல உதடுகள் இருக்குது. "Italian" தக்காளிப்பழம் போல அழகான உடம்பு இருக்குது.

வேலு : அப்ப அவ ஒரு "International fruit" என்று சொல்லும். தம்பி நான் இன்னும் காலமைச் சாப்பாடு சாப்பிடேல்லை. நீர் சொல்கிறதைக் கேட்க, எனக்குப் பசிக்குது.

உமக்கு சாந்தியைப் பிடிச்சிருக்கோ எண்டு சொல்லும்.

கஜன் : எனக்குப் பிடிக்காட்டா, உரிக்காத தேங்காய் போலத்தலை, அழுகிய "Southall" மாம்பழம் போலக்கன்னம், பூசணிகாய் போல உடம்பு போல எண்டெல்லோ சொல்லியிருப்பேன்.

வேலு : (மெதுவாக) பரிமளக்காவின்ரை தமிழ் வசனங்கள் அப்பிடியே தம்பியிட்டை வந்திருக்குது இவை எல்லாரத்தையும் கேட்க, எனக்குத் தெரிஞ்ச ஒரு ஆளை வர்ணிக்குமாப் போலை இருக்குது. அப்ப உமக்குப் பிடிச்சிருக்குது எண்டு சொல்லும்.

பரிமளம் : கஜன்னர கதையைக் கேட்க, ஊர்ஞாபகம் வந்திட்டுது. இப்ப பன்ம் பழக்காலம், என்ன செய்யுதுகளோ தெரியாது.

தங்கம் : பரிமளக்கா, தம்பி கஜன் என்ரை சிதணக்காணி ஏழு பரப்பு தென்னந் தோட்டைத்தை ஞாபகப்படுத்தி விட்டுட்டார். எப்பிடி இருக்குதோ?

சுப்பையா : இப்ப நீர் எதுக்கு மூக்காலை அழுகிறீர்?.ம்!. எங்கடை சாந்தியை வர்ணிக்க பனங்கொட்டையும், தேங்காய்ச்சிரட்டையும் தான் கிடைச்சுதோ? நான் அதைப்பற்றி யோசிக்கிறன்.

வேலு : சுப்பையா அண்ணை, சும்மா இதுகளை விடுங்கோ. (பரிமளத்தை நெருங்கி) தில்லை அண்ணை, இப்ப என்ன சொல்லப் போறியள்? (பரிமளத்தை நெருங்கி) சாந்தியை எனக்குப் பிடிச்சிருக்குது எண்டால், அது உங்களுக்குப் பிடிக்காது. அவா மட்டும் உங்களுக்கு மருமகளா வந்திட்டா, நீங்கள் பிறகு எங்களோடை தமிழ்மை கதைக்கவே மாட்டீங்கள்.

பரிமளம் : வேலு சும்மா இரப்பா. (தில்லை நெருங்கி) என்ன பாருங்கோ, இவ்வளவு நாளும் நீங்கள்தான். என்னட்டை வந்து பெமிஷன் கேட்பீங்கள். இண்டைக்கு நான் உங்களிட்டை வந்து "பெமிஷன்" தாறன். கஜன்ரை சந்தோஷம் தான் என்ரை சந்தோஷம். என்ரை சந்தோஷம்தான், உங்கடை சந்தோஷம். நாளைக்கே சுப்பையா அண்ணை வீட்டை போய், சாந்தியைப் பார்த்து எல்லாம் பேசவேணும்.

தில்லை : நான் எதுக்கு உம்மோடை மறுத்துப் பேசின்னான். உமக்கு சம்மதம் எண்டால், எனக்கும் சம்மதம் தான்.

வேலும் : என்ன தங்கம்மாக்கா உங்களுக்கும் சம்மதம் தானே?

தங்கம்மா : (சுப்பையாவை நெருங்கி) என்ன பேசாமல் நிற்கிறீங்கள்? நீங்கள் கேட்காமலே நாங்கள்

உங்களுக்கு "பெமிஷன்" தந்துவிட்டன். சும்மா யோசிக்காமல் ஓம் எண்டு சொல்லுங்கோ.

சுப்பையா : அதில்லையப்பா, நான் எங்கை கலியாணவீடு வைக்கிறது, யார் யாருக்குச் சொல்கிறது, அரிசி சாமான் எல்லாம் எங்கை வாங்கிறது எண்டு யோசிக்கிறன்.

வேலு : அது எங்கடை இந்தியன் கடையிலை.....

சுப்பையா : சும்மா இரப்பா, எதுக்கெடுத்தாலும் எங்கடை இந்தியன் கடை எண்டு... ஒரு சொல்லு.

வேலு : தில்லை அண்ணை, உங்களை ஒண்டு கேட்க வேணும். ஏன் முதலிலை இந்தக் கலியாணத்துக்கு மாட்டன் எண்டு சொன்னனீங்கள்?

தில்லை : இல்லையப்பா, நாங்கள் இப்பதான் இலண்டனுக்கு வந்தனாங்கள். இந்த சாந்திதான் சுப்பையா அண்ணையின்ரை மகள் என்றும் முன்னமே எனக்குத் தெரியும். எடுத்த உடனேயே ஓம் எண்டு சொன்னா, சிலவேளை சரியான மதிப்புக் கொடுக்கமாட்டினம் எண்டுதான்... குறை நினைக்காதையுங்கோ.

வேலு : அண்ணையவை அக்காமார் எல்லோருக்கும் ஒண்டு சொல்கிறன், நான் உங்களைவிட வயதிலை குறைஞ்ச நான்தான், ஒரு நல்லகாரியம் நடக்க

வேண்டுமெண்டா, உங்களுக்கு விருப்பம் இல்லாட்டிலும், அதுகளைக் குழப்பாதையுங்கோ. ஏன் இதைச் சொல்கிறன் எண்டா, நாங்கள் செய்யிற ஒவ்வொரு காரியமும் எங்கடை இளம் சமுதாயத்திற்குத்தான் செய்யிறம், அதுகளின்ரை முன்னேற்றத்துக்குத்தான் செய்யிறம் என்று நினைச்சுக் கொண்டு செய்யுங்கோ. எல்லாம் நல்லா வரும். சரி இனி நீங்கள் எல்லாம் ஒண்டு. நான் பழைய மாதிரித்தான். இல்லாத பொய் எல்லாம் சொல்லி, இருக்கிற பெண்பிள்ளைகளை எல்லாம் கலியாணம் செய்துவைக்கிறன். இனி இந்த "Part-time" புறோக்கர் வேலையை விட்டால்தான், எனக்கு புறோக்கரைப் பிடித்து, ஒரு கலியாணம் பேசி செய்யலாம்... எங்கேயேன் வசதியாக இருந்தால் சொல்லுங்கோ... எல்லோரும் இருங்கோ, "I am going" நான் போயிட்டு வாறன்"

சுப்பையா : மார்கழிக் கடைசி நாளுக்கு கலியாணவீடு வைக்கப் போகிறோம். எல்லோரும் வரவேணும், வந்து சிறப்பியுங்கோ.

ஃ திரை ஃ

---

குறிப்பு : **1994**ம் ஆண்டு இலண்டன் Sunrise வானொலியில் முதல்முதலாக வெளிவந்த தொடர்நாடகம் இது.

# இலண்டனிலே பலசரக்கு மளிகை

*பாத்திரங்கள் : சுப்பிரமணியம், சுப்ரமணியத்தின் மனைவி -வள்ளி, சுப்ரமணியத்தின் தம்பி - விக்கினேஸ்வரன், விக்கினேஸ்வரனின் மைத்துனன் - பாலு*

*இடம் : கடையில் ஓர் பகுதி*

*பாத்திரங்கள் : - சுப்பிரமணியம், மனைவி - வள்ளி, பாலு (சுப்பிரமணியம் முருகனை வணங்குகிறார்).*

சுப் : முருகா!, உயர்வாசல் குன்றினிலே அமர்ந்திருந்து கொண்டு எமையெல்லாம் ஆண்டருளும் அழகா! அருகிலே என் தம்பியின் கடையில், ஆயிரம் ஆயிரமாய் வியாபாரம் நடப்பதைப் பார்க்கப் பொறுக்காத எனது மனைவியின் தூண்டுதலால் தான் நான் இன்று எத்தனையோ கஷ்டப்பட்டு வங்கியிலே கடன் எடுத்து, எனது இந்தக் கடையைத் திறந்திருக்கிறேன். நானும் இந்த தெரியாத தொழிலுக்கு இன்று முதல் என் தலையைக் கொடுக்கின்றேன். இதுவரை சுரேஷ் என்று இருந்த என் பெயரை சுப்பிரமணியம் என்றும், வனஜா என்றிருந்த என் மனைவியின் பெயரை வள்ளியம்மை என்றும், V.A.T. க்கு வசதியாக இருக்கும் என்ற நம்பிக்கையிலேயே மாற்றி வைத்துள்ளோம். இன்று தொட்டு, இலண்டனிலுள்ள எல்லோரும் எமது கடையில் தான் பொருட்கள் வாங்க வேண்டும். தமிழை வளர்க்கவென்றும்,

பக்தியைப் பரப்பவென்றும், கழகங்களையும், கோவில்களையும் உருவாக்கி, உறவினர், நண்பர்கள் என்றும் பாராமல், கோபங்கொண்டு உறவின்றி இருக்கும் பெரிய மனது படைத்தவர்கள் எல்லோரையும், என் கடைக்கு ஒன்றாக வந்து பொருட்களை வாங்கும்படி அருள் புரிவாய் அப்பனே!...

வள்ளி : (மனைவி கூப்பிடுகின்றார்) இஞ்சேருங்கோ! இங்கை உங்கடை தம்பியின்ரை மனிசியின்ரை தம்பி வந்திருக்கிறார். இங்கடை ஒருக்கா வாருங்கோ.

சுப் : பார்த்தாயா முருகா! எனக்கு ஏன் இந்தச் சோதனை எல்லாம்? இவ்வளவு நாளும் உங்களின் மச்சாளின் தம்பி வந்திருக்கிறார் என்றார். ஆனால் இன்றோ, தம்பியின் மனைவியின் தம்பி என்கிறாளே என் மனைவி. (சிறிது பொறுத்து) என்ன விசேஷம் திடீரென்று?

பாலு : மணியண்ணை! சுப்பிரமணியண்ணை! மச்சானின்ரை கடையிலை, பெரிய பெரிய புடலங்காய் எல்லாம் "சிறீலங்காவிலே" இருந்து வந்திருக்கு. பயத்தங்காய் எல்லாம் பத்தடி நீளம். புதுப்புது "C.D."க்கள் எல்லாம் பெட்டி பெட்டியா வந்திறங்கி இருக்குது அங்கே.

சுப் : அதாவது?

பாலு : நீலக்கால் நண்டுக்கு ஒரு "கியூ". நேற்று வந்திறங்கிய விளைமீனுக்கு இன்னொரு "கியூ", அதாவது நல்லூர் திருவிழா மாதிரி இருக்குது அங்கே.

சுப் :- அதாவது! நாலு முழத்திலே புடலங்காய். மூண்டு முழத்திலே பயத்தங்காய்.

யாழ்ப் பண்ணையிலே பிடித்த நீலக்கால் நண்டு. பெட்டி பெட்டியாய் "C.D."க்கள். இவையெல்லாம் அங்கே இருக்கின்றன. ஆனால் இங்கே அதுவெல்லாம் இல்லை என்று சொல்லத் தானே இங்கே வந்திருக்கின்றாய் இளிச்சவாய் பாலு. அல்லவா? உனக்கு பாலு என்ற பெயரை விட வாலு என்ற பெயர்தான் மிகவும் பொருத்தம். எம் கடையிலே புடலங்காய் சிறிதாக இருந்தாலும் அதிலே "புரதச்சத்தும், விட்டமின்களும்" அதிகம். பயத்தங்காய் சிறிதாக இருந்தாலும், பால் கறி வைத்தால், மீன் கறியை விட ருசிக்கும். எம்மிடம் உள்ள "C.D." பழையது என்றாலும் இங்கத்தே இளசுகளுக்கு அதுதான் பிடிக்கும். ஏதோ நீலக்கால் நண்டு இருக்கிறதாம் நீலக்கால் நண்டு, ஏலக்காய் போட்டு, இஞ்சியும் தட்டி வைத்தால். எமது சிவப்புக்கால் நண்டுதான் ருசிக்கும். உங்கள் நீலக்கால் நண்டுக்கு வயித்தாலே அடிக்கும் என்பதை, என் தம்பியிடம் போய் சொல்லு. இனியும் இங்கே நின்று ஏதும் பேசினால்

கொட்டிவிடும் உன் முன் வாயிற் பல்லு. என்முன் நில்லாதே. அங்கே போய் நில்லு.

வள்ளி : உங்களுடைய தம்பியின் மனிசியின் தம்பி என்றதால், இவரை விடுப்புப் பார்க்க வந்த ''பரதேசி'' என்று என்னால் ஏச முடியவில்லை. இவரை உங்கள் சொந்தக்காரரர் என்று பார்த்தால், நாங்கள் போட்டிருக்கிற விலைகளைப் பார்த்துக் கொண்டுபோய், அங்கேயும் அதே விலைகள் போட்டு விடுவாரோ என்று சந்தேகமாக இருக்கிறது. விடுக்கு விடுக்கு என்று வருகிறது எனக்கு கோபம். படக்கு, படக்கு என்று இடிக்கிறது எனது நெஞ்சு. ஏன்? ஏன்? இவை தான், இன்னும் நான் எனது "Blood Pressure'' குளிசைகள் எடுக்கவில்லை என்பதையே நினைவு படுத்துகின்றன.

சுப் : பார்த்தாயா பாலு நீ செய்த வேலையை. எட்டப்பன் உனக்கு என்ன மாமனா? உங்கள் ஊரான, கொட்டடிக் குணத்தைக் காட்டி விட்டாயே.!..... போ!.....

வள்ளி : நீங்களும் அந்த ஊரைச் சேர்ந்தவர்தானே. எட்டப்பன் ஒரு இந்தியரல்லவா?

சுப் : வள்ளியம்மையே! பார்த்தாயா. ஆத்திரத்தில் நான் பிறந்த ஊரைக் கூட மறந்து விட்டேன்.

பாலு : உள்ளதைச் சொல்லப்போனால், உடனே உசார் வந்திட்டுது. உங்களிடம் பிழைகளை

வைத்துக் கொண்டு ஊரிலை ஏன் பழியைப் போடுகிறீர்கள். நல்லாயிருங்கோ. நான் வருகிறேன்.

வள்ளி : அத்தான்! அவர் போய்விட்டார். எங்களுக்கு அவர்கள் போட்டு வைக்கின்ற விலைகளை, ஒவ்வொரு நாளும் பார்த்துக் கொண்டு வந்து சொல்ல, சரியான ஒரு ஆள் வேண்டும். யாரை அனுப்பலாம்?

சுப் : வள்ளி! என்னை ஆட்டிப் படைக்க வந்த அமாவாசை நிலவே! இன்னும் ஏன் வீனாண செலவுகள்? இங்கு 20,000 பவுண்ஸ்கள் உழைப்பதற்காக எனது 30,000 பவுண்ஸ் வேலையை விட்டது போதாதா? "தனக்குத் தெரியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்" என்பதைனை நீ இன்னமும் கேள்விப்படவில்லையா?

இதுவரையில் இங்கு ஒரு இனிப்புப் கூட விற்கவில்லை. எனக்குப் பசிக்குதே. இவ்வளவு நாளும் வாங்கியதுபோல் என் தம்பியின் கடையிலே போய், இடியாப்பமும், தோசையும் வாங்கி வருவாயா? ஏன் அப்படிப் பார்க்கிறாய்? ஓகோ! நான் பழைய மாதிரி அவர்களோடு உறவு என்று எண்ணி உளறி விட்டேன். மன்னித்துக் கொள். எல்லாம் என் தலை விதி.

காட்சி - 2

இடம் : கடையில் ஓர் பகுதி

பாத்திரங்கள் :- சுப்பிரமணியம், மனைவி - வள்ளி, தம்பி - விக்னேஸ்வரன்

வள்ளி : அத்தான்! உங்கள் தம்பியும், பாலுவும் வருகிறார்கள். கடையிற்குள்ளை கூப்பிடாமல், வெளியிலை வைத்து கதைத்து அனுப்பி விடுங்கள்.

விக் : அண்ணா, கடையினுள் வரலாமா?

சுப் : கண்களை மூடிக்கொண்டு உள்ளே வருவதானால் எனக்கு ஆட்சேபனையில்லை.

விக் : அண்ணா! நான் உங்களுக்கு சில வியாபார நுட்பங்களை சொல்லித் தரலாம் என்ற நோக்குடனேதான் இங்கே வந்துள்ளேன். நாங்கள் எமக்குள் சண்டை போடுவதால் எம்மிடம் வரும் எமது வாடிக்கைக்காரர்கள் எல்லாம் அடுத்த "ரோட்டில்" இருக்கும் பெரிய மாமாவின் கடைக்கு போக ஆரம்பித்து விடுவார்கள்.

சுப் : உன்னையும், உனது மனைவியையும் எனது மனைவி தடுக்கத் தடுக்க, நான் "Security guard" ஆக இருந்த போதே "Civil Engineer" என்று "Sponsor letter" எடுத்து இலண்டனுக்கு அழைத்துப் படிக்க வைத்தேன்.

வள்ளி : இப்பத்தான் எல்லாம் வெளியிலே வருகிறது.

விக் : அந்த நன்றிக்காகத்தான் இன்று என் மனைவி தடுக்கத் தடுக்க உங்களுக்குப் புத்தி சொல்ல இங்கு வந்துள்ளேன் அண்ணா!

வள் : அப்டியா சங்கதி? இனிமேல் அவர் இந்தப் பக்கம் வருவாவா? அண்ணா எண்டு சொல்லத் தேன் ஒழுகுது. ஆனால் எங்களுக்குத் தெரியாமல் இந்தியாவிலும், இலங்கையிலுமிருந்து சாமான்கள் எடுத்து விற்று காசுகளை எண்ணும்போது இந்த அண்ணா என்ற பாசம் எங்கே போய்விட்டது? இங்கை எங்களுக்கு ஒரு வியாபாரமுமில்லை. வட்டிக்காசு கட்டக் கூட வழியில்லாமல் வந்துவிட்டது.

விக் : அண்ணா, அண்ணி! நாங்கள் சிறு பிள்ளைகளாக இருந்த போது, மாமரத்தின் கீழிருந்து கிரைக்கடை போட்டு விளையாடினோம். ஆனால் இங்கே, இப்போ நாங்கள் பக்கத்துப் பக்கத்திலே கடைகள் போட்டு "C.D.'யும் - பலசரக்கும், பயத்தங்காய் புடலங்காயும்தான் விற்கின்றோம். இருவருக்கும் நஷ்டம்தான் வருகிறது. நாம் உடன் பிறந்த சகோதரங்கள் தானே. ஏன் நாங்கள் எமது இரண்டு கடைகளையும் ஒன்றாக்கி, பெரிதாக, ஒற்றுமையாக வியாபாரம் செய்து, வரும் வருமானத்தை சரிபாதியாகப் பிரித்து இன்பமாக வாழக் கூடாது?

சுப் : "C.D.", கிரை, கடை, வட்டி, வங்கி தருகிறது கடன். நாங்கள் கட்டுகிறோம் வட்டி. அதைப் பார்க்க உனக்கேன் எரிகிறது வயிறு? என்னைப் போல் பழைய "Van"ல் பயணம் செய்தாயா? வங்கிப் படிகளெல்லாம் ஏறி கடன் வேண்டும் என்று சொல்லி பல்லிளித்தாயா? கிழிந்த கால்சட்டை போட்டாயா? இரவு மூன்று மணிக்கெல்லாம் எழும்பி, முகம் கூடக்கழுவாமல் மரக்கறிகள் வாங்க "Market"க்குப் போனாயா? அங்கே மூட்டை தூக்க ஒருவருமில்லாமல் நானும் வள்ளியும் சுமந்து போட்டு, நாரிப்பிடிப்பில் படுத்தபோது உள்ளி அரைச்சுக் குழம்பு வைத்துத் தந்தாயா? அல்லது போட்டியா? பொறாமையா? நாளைக்கே நான் எங்களுடைய வீட்டை இரண்டாம் 'Mortgatge" வைத்து இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், கனடா எல்லாம் சென்று பலவிதமான சேலைகளும், துணிகளும் வாங்கி வந்து இங்கே புடவைக் கடையும் ஒன்று போட்டு, வியாபாரம் செய்து உந்தக் கடன்கள் எல்லாம் கொடுக்கவில்லை என்றால், நான் சுரேஷ் இல்லை.

வள்ளி : (திடீரென்று) சுப்பிரமணியம் இல்லை.

சுப் : விக்னேஸ்வரா ! பார்த்தாயா நீ செய்த வேலையை? தம்பியார் முருகனின் பெயர் எனக்கு, அண்ணனான பிள்ளையாரின் பெயர் உனக்கு. எனக்கு இப்போ சொந்தப்

பெயரும் ஞாபகம் இல்லை. பிறந்த ஊரும் ஞாபகம் இலலை.

விக் : அண்ணா, வியாபாரத்தில் அனுபவம் இல்லாத நீங்கள், நீங்கள் இப்போது இருக்கும் இந்த "Four bed room house"ஐயும் விற்று, கடனாளி ஆகி நடுத் தெருவில் நிற்கப்படாது என்பதற்காகவே இதனைச் சொல்கிறேன். இனி உங்கள் இஷ்டம்.

❖❖❖

காட்சி-3

*இடம் கடையில் ஓர் பகுதி*

*பாத்திரங்கள் : சுப்பிரமணியம், மனைவி வள்ளி.*

சுப் : (தனியே) எடியேய், வள்ளியம்மையே! என்று என் ஆத்திரம் தீரும் வரை ஏச வேண்டும். கத்தவேண்டும் போல் இருக்கிறது. கடை என்று திறந்த நாள் தொடக்கம் ஒரு கலியாண வீட்டுக்கோ, கோவில்களுக்கோ என்னால் போகமுடியவில்லையே,. "பேராசை கோடி தரித்திரம்" என்பது தெரிந்திருந்தும் என் மனைவியைக் கண்டவ்டன் கெடிக்கலக்கமாக இருக்கிறதே. தான் மட்டும் இன்று தனியே கலியாண வீட்டிற்குச் சென்றிருக்கின்றாள். இனிமேல் தனியே எங்கெல்லாம் செல்வாளோ. நான் இங்கேயிருந்து தனியே இலையான் கலைக்கின்றேன்.

வள் : (வருகிறார். உள்ளே இருந்து கொண்டே) கதவைத் திறந்து போட்டு உள்ளே என்ன செய்கிறீர்கள்? யாரோடு பேசுகிறீர்கள்?

சுப் : வந்துவிட்டாயா வள்ளியம்மையே! உனது ஆய்க்கினைகளும், ஓதிய போதனைகளும் தாங்க மாட்டாது இரண்டாம் "Mortgage" எடுத்த நாள் தொடக்கம் எனக்கு நித்திரையே இல்லை. வட்டியை நினைக்க, நினைக்க வயித்தைக் கலக்குது. வாணாள் போகுது. எல்லோரும் பலசரக்குக் கடைகள் வைத்து வியாபாரம் செய்து "BMW" "Benz" கார்கள், எல்லாம் வாங்கிவிட்டார்கள். பிள்ளைகளை 'Private School"களில் படிக்கவும் விட்டுவிட்டார்கள். நாங்களும் ஒரு மொக்குப் பிள்ளையாவது பெற்று, எப்படி என்றாலும் "Private School"ல் படிக்கவிட்டு, பட்டதாரி ஆக்கி, ஒரு "டாக்டர்" பெண்பிள்ளைக்கு கலியாணம் செய்து கொடுக்க வேண்டும்.

எங்களுடைய வீட்டுக்கு "Mortgage" கட்டமுடியாமல் போய், தற்செயலாக விலைப்பட்டாலும், எங்கள் பிள்ளைக்கு இலண்டனிலே ஒரு வீடு சீதனமாக வாங்கி அதிலே நாங்கள் மட்டுமே இருக்க வேண்டும். இதுதானே உன் ஆசை வள்ளியம்மை? இதுதானே உன் "Ambition" வள்ளியம்மை.

வள்ளி : ஆம்! என் அத்தான் சுப்பு. இலங்கை-இந்தியா-சிங்கப்பூருக்குச் சென்று திரும்பி வரும்போது, எத்தனையோ விதம் விதமான காஞ்சிபுரம் சேலைகளும், கருகமணி மாலைகளும், அதற்குத் தோதாக தோடுகளும், காப்புகளும் கொண்டுவர வேண்டும். அவற்றையெல்லாம் நான் போட்டுக் கொண்டு, கலியாண வீடுகளிலே முதல் வரிசையிலே அமர வேண்டும். கைகளிலே இருக்கும் காப்புகளையும், மோதிரங்களையும் காட்டுவதற்காக முன்பக்கமாகக் கையை ஊன்றியவண்ணம் அமரவேண்டும். மணவறையிலே இருக்கும் மணமக்களைப் பார்க்காது, எல்லோரும் என்னையே பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் நீங்களும் பார்த்துக் கொடுப்புக்குள்ளே சிரிக்க வேண்டும். இவைதான் என் ஆசை.

சுப் : வள்ளி! என்னை மட்டுமல்லாமல், எங்கள் குடும்பத்தையே ஆட்டிப் படைக்கும் கள்ளி! உனது ஆசைகள் எம்மையெல்லாம் பரதேசி ஆக்கி, காசிக்குப் போகப் பண்ணக் கூடியவை. உனது ஆசைகள் என்னவோ, எனது ஆசைகள் என்னவோ?

வள்ளி : சுப்பத்தான், நான் இப்போது என்னவெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறேன் தெரியுமா?

சுப் : எத்தனை நிறங்களிலே சேலைகள் வாங்குவது. எத்தனை கோடி காப்புகள் வாங்குவது? எப்போது 'Mobile phone' வாங்குவது?

வள்ளி : அதெப்படி உங்களுக்குத் தெரியும்?

சுப் : "எள்ளோடு சேர்ந்த எலிப் புழுக்கையாக காய்கிறேனே'' இதுகூடவா எனக்குத் தெரியாது?

வள்ளி : பொல்லாத குறும்பு உங்களுக்கு! இன்றைக்கு உங்களுக்கு பொரித்த மீனும், நீலக்கால் நண்டுக் குழம்பும், வைத்துத் தருகிறேன்.

சுப் : பொரித்த மீனே போதும்ப்பா. ஏன் வீணான செலவுகள் எல்லாம்?

வள்ளி : காதலன் பாட்டுக்களையும், பம்பாய் பாட்டுக்களையும் சேர்த்தே போடுங்கள். அத்தான். நான் உங்களுக்கு கணவாய்க் கறியும் செய்கிறேன்.

சுப் : செத்தேன்!. கடன் எடுத்து வாங்கிய கணவாய், களவாய் அடித்த "C.D." "Mortgage" எடுத்து வாங்கிய விளைமீன். ம்! ''இரவல் புடவையிலே இதுவும் ஒரு கொய்யகம்'' என்பதுபோல அப்படித்தானே?

வள்ளி : எனக்காக நீங்கள் இதுகூடவா செய்யக் கூடாது? கடையை இழுத்து மூடி

விடுங்கள்.இன்றைக்கு இனி வியாபாரம் போதும்.

சுப் : எவை எவையெல்லாம் செய்யக் கூடாதோ, அவைகளையெல்லாம் செய்து கொண்டிருக்கின்றேன். எனக்காகவோ செய்கிறேன்? செய்ய வைத்ததும் நீ. செய்ய வைக்கப் போவதும் நீ. காதல் கண்மணியே கத்தரிக்காயும் வேண்டுமா?

❖❖❖

காட்சி - 4

*இடம் : கடையில் ஓர் பகுதி*

*பாத்திரங்கள் : விக்கினேஸ்வரன், சுப்பிரமணியம், மனைவி வள்ளி.*

விக் : (ஓடி வருகிறார்) அண்ணா, இன்றிரவு நான் ஒரு கூடாத கனவு கண்டேன். ஊரிலே முன்னர் எமது வீட்டிற்குப் பின்னால் இருந்த முருங்கை மரம் முறிந்து விழவும், அவற்றைப் பார்த்து, பக்கத்து வீட்டு அண்ணாவியாரின் ஆடு மாடுகள் எல்லாம் அண்ணா என்று அலறவும் கனவு கண்டேன். இப்பொழுது கூட எதுவும் கெட்டுவிடவில்லை. நீங்கள் எடுத்த இரண்டாவது 'Mortgage" ஐத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். இரண்டுபேரும் சேர்ந்தே வியாபாரம் செய்வோம்.

சுப் : முருங்கை மரம் முறிய, ஆடுகளும் மாடுகளும் அண்ணா என்று அலற, இவையெல்லாம் ஆபத்துக்கு அறிகுறி

என்கிறாய். இவையெல்லாம் கனவல்ல. உண்மையிலேயே முன்னர் ஊரிலே நடந்தவை. நீ நேற்று சென்ற கலியாண வீட்டிலே ஊர்ப் பூசணிக்காய் கறியுடன், பாகற்காய் கறியும் சாப்பிட்டதனால் தான் உனக்கு ஏதோ கனவு வந்திருக்கிறது.

வள்ளி : தனது மனைவியை விட எனக்கு அதிகம் சேலைகளும், நகைநட்டுகளும் வரப் போகின்றன. நாங்கள் புதிய கார் வாங்கப் போகிறோம் என்ற பொறாமையில் தான் இப்படி ஒரு புழுகை கிளப்பி விட்டிருக்கின்றார்.

விக் : அண்ணா! இங்கே புதிதாக கடைகள் நாளுக்குநாள் திறக்கப்படுகின்றதை நீங்கள் அறியவில்லையா? இங்கே புதிதாகக் கடை திறப்பவர்கள் பொருள் வாங்கவென்று பிறநாடுகளுக்குச் சென்று, பிறரால் ஏமாற்றப்படுவதையும் நீங்கள் பார்க்கவில்லையா? அதனால்தான் எச்சரிக்கின்றேன். பொல்லாத வேளை இது.

சுப் : எது பொல்லாத வேளை? உங்களைப் போல். அழகாக "Lable"களை அடித்து, களவாக மிளகாய்த் தூள், அரிசிமா, எல்லாம் இங்கே செய்துவிட்டு, இலங்கையிலிருந்து வந்தவை. இந்தியாவிலிருந்து வந்தவை என்று வாய்கூசாமல் சொல்லி விற்கிறாளே உனது மனைவி, அப்போது நான் எச்சரித்திருக்க வேண்டும்.

விக் : அண்ணா, இனியும் நான் இங்கு நின்று வாதாடப் போவதில்லை. "கெடுகிறேன் பந்தையம் பிடி என்று நிற்கிறீர்கள்". ஆனால் ஒன்று மட்டும் சொல்கிறேன். எங்காவது எக்கச்சக்கமாக மாட்டிவிட்டு, என்னை வந்து பிணை எடுத்து விடடா தம்பி என்று "Reverse charge" எடுதது எனது "Mobile phone'' ற்குப் போன் பண்ணக் கூடாது. நான் வருகிறேன்.

வள்ளி : அத்தான். நெத்தலிக் கருவாடும், நீண்ட முருக்கங்காய்களும், பத்தியம் வைக்க நல்ல பாறைக்கருவாடும், கைகுத்தலரிசியும், கத்தரிக்காயும், முத்தின வெண்டிக்காயும், செத்தல் தேங்காய்களும், நீங்கள் நிச்சயம் வாங்கி வரவேண்டும்.

சுப் : பத்தினிப் பெண்ணே! இத்தனைக்கும் காரணம் நீ. அத்தான் அத்தான் என்று அடிக்கடி சொல்லிச் சொல்லி பித்தனாக்கி விட்டாயே. முன்னர் ஒருவன் அழுகிய முலாம்பழம் விற்ற கதையை மறந்து விட்டாயா? எதற்கு முத்தின வெண்டிக்காயும் செத்தல் தேங்கா:ய்களும்? உன் "pressure" குளிசைகளை இனி எனக்கும் தா. இன்றிலிருந்து அவைகளை நானும் போட்டுக் கொள்கிறேன்.

❖❖❖

காட்சி - 5

*இடம் : கடையின் ஒரு பகுதி*

*பாத்திரங்கள் விக்கினேஸ்வரன், பாலு, சுப்பிரமணியம்.*

பாலு : மணியண்ணை, சுப்பிரமணியண்ணை, சுரேஷ் அண்ணை, ஆகா! இங்கு வளரும் கடைகள்போல உங்களுக்கும் அளவில்லாத பெயர்கள். உங்கள் தம்பியும் நானும் உள்ளே வரலாமா?

சுப் : உளவறிய வந்தவர்களே! உட்காருங்கள். வெளியே போ என்றாலும், வளைய வளைய வரும் பிறப்புக்களே உட்காருங்கள்.

பாலு : (விக்னேஸ்வரனைப் பார்த்து) அண்ணார் அழுதுகொண்டிருந்தாலும், தமிழுக்குக் குறைவில்லை.

சுப் : எனது தமிழ் பழைய தமிழ், அழகிய தமிழ். பழைய சோறு போல் மற்றயவர்களுடன் சேராத அழகிய மனைவியையும் கொண்டிருந்தவன் நான். உனது அக்கா, அதாவது எனது தம்பியாகிய உனது மைத்துனனின் மனைவியைப் போல் மௌனமாக இருந்து கொண்டு கணவனை முடுக்கி விட்டு கூத்துப் பார்க்கத் தெரியாதவள்.

பாலு : இவர் பேசத் தெரிந்தவர், அதுவும் வீரபாண்டிய கட்டபொம்மன்போல் பேசத் தெரிந்தவர். ஆனால் தனது மனைவியை சாடாமல், என் அக்காவைச் சாடுவதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

சுப் : பேச்சென்ன, மூச்சும் விடத் தெரிந்தவன். இல்லையென்றால் எனது கடன்களால் எனது உடமைகளையெல்லாம் இழந்து நின்றபோது எனது மூச்சு நின்றிருக்க வேண்டும் அல்லது என்னிடம் எதுவித பணமும் இல்லையென்று தெரிந்தவுடன், இருந்த பணம் எல்லாவற்றையும் சுருட்டிக் கொண்டு எனது நண்பனோடு இரவோடு இரவாக என் மனைவி வள்ளி வீட்டைவிட்டு ஓடியபோது எனது மூச்சு நின்றிருக்க வேண்டும்.

விக் : ஏனைய கடைக்காரர்கள் எல்லாம் எட்டு மணிக்கே பூட்டிவிட்டார்கள். விட்டிற்கும் போய் விட்டர்கள். இன்னமும் திறந்திருப்பதால் உங்களுக்கு லாபமா?

சுப் : எல்லாரும் பூட்டிய பின்பும் நான் மட்டும் திறந்து வைத்திருப்பதால் உங்களுக்கு நஷ்டமா?

பாலு : கடையினுள் எதுவித பொருட்களும் இல்லை. இன்னமும் இலையான்கள் இங்கே அதிகம் வந்து விடும் என்றுதான் கவலைப் படுகின்றேன்.

சுப் : எனக்கு “விறைச்ச மண்டையன்” என்று பெயர்.

பாலு : அது "Freezer"க்குள் இருக்க வேண்டிய பொருள். அதனை வெளியில் விட்டது தவறுதான்.

சுப் : டேய்! பாலு, இதுவரைக்காலமும் ஊமையாக நடித்து, உளவறிந்து சென்று, எமது கடையை மூடவைத்தாய். தம்பி! இவனோ இன்றிருப்பான். நாளை எனது மனைவியைப் போல் இருப்பதை எல்லாம் சுருட்டிக் கொண்டு ஓடிப்போவான். இங்கு என்னைப் போல் கடைகள் திறந்து வியாபார நுட்பங்கள் தெரியாமல் நஷ்டப்பட்டுக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் அத்தனை பேருக்கும் கூறுகின்றேன். கூறுவதென்ன குழறி ஓலமிட்டு அலறுகிறேன். ஓ! ஐயகோ! சொந்தக்காரரோடு ஒருநாளும் வியாபாரங்களைத் தொடங்க வேண்டாம்.

விக் : "Inland Revenue"வின் சட்டப்படி ஏன் "Tax ம் V.A.T." யும் கட்டவில்லை?

சுப் : உன்னுடைய இந்தப் பாலுதான் சொன்னான். எனது மச்சான் இப்படிச் செய்கிறார் அப்படிச் செய்கிறார். நீங்களும் அப்படிச் செய்யுங்கள் என்று புத்திமதி கூறுவதாகக் கூறி, என்னிடம் மாதா மாதம் £300 இரகசியமாக வாங்கினான். ஆனால் இப்பொழுது தான் தெரிகிறது அவன் இங்கு வருவதெல்லாம் உனக்காக உளவறிந்து சொல்லத்தான் என்று.

விக் : இங்கு இருக்கும் கடைக்காரர்கள் எல்லோரும் எனக்குப் பயந்தவர்கள் என்பதைனை நீங்கள் அறிந்திருந்தும், நான்

உங்கள் தம்பி என்பதை வைத்துக் கொண்டு என்னை அடக்கி ஆளப் பார்த்திர்கள். உங்களுக்கு ஆரம்பத்தில் அறிவு கூற முற்பட்டேன். ஆனால் நீங்களோ என் கடையை விட பெரிய கடைபோட்டு பெரிய ஆட்களாக வரவேண்டும் என்ற உங்கள் மனைவியின் கைப்பொம்மையாக செயல்பட்டீர்கள். அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.

சுப் : எமது ஊரிலே, ஒரு ஆண் அல்ல, ஒரு பெண் சுண்டல் கடை வைத்து, சின்ன வடைகளும் செய்து விற்று, பிள்ளைகளை இலண்டனுக்கு அனுப்பியதை மறந்துவிட்டாயா?

விக் : அருகே கள்ளுக் கடையும் இருந்ததால்தான் அப்படி அங்கே நல்ல வியாபாரம் நடந்தது என்பதை மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது?

சுப் : எமது கடையோ எல்லாப் பொருட்களும் உடைய கடையாயிருந்தது. அது உங்கள் சதியால், நாளுக்கு நாள் தேய்ந்து சிறு உளி போல் ஆகிவிட்டது. காலைப் பிடித்து, நரி வேஷம் போட்டு, உடன்பிறந்தவர்களுக்கே உலை வைப்பவர்கள் இருக்கும் போது, மலசலத்திறகுப் போனால் கூட நிம்மதியாக இருக்க முடியாது.

விக் : நீங்கள் எனது கடைக்கு வந்து, என் மனைவியையும், என்னையும் பார்த்து ஒரு

முறை மன்னிப்பு கேட்டால், மறுபடியும் உங்களுக்கு உங்கள் வங்கியிலேயே கடன் எடுப்பதற்கு உதவி செய்வேன்.

சுப் : அடே தம்பி விக்கினேஷ்வரா! எனது மாமனார் இதனைக் கேட்டிருந்தால், இந்நேரம் உனது கடைக்கு மண்ணெண்ணை ஊற்றிக் கொளுத்தியிருப்பார். எனது மனைவியின் தம்பி கேட்டிருந்தால், இந்நேரம் உனது மனைவியின் தம்பியின் மண்டை சுக்கு நூறாகப் போயிருக்கும். எனது மனைவியின் நண்பன் கேட்டிருந்தால், யாரையாவது கொண்டு உனது கடையைக் காட்டிக் கொடுத்திருப்பான். எனது மனைவி கேட்டிருந்தால், உனது மனைவியைச் சீலை கிழியக் கிழியத் திட்டியிருப்பாள். என்ன செய்வேன்? அவளோ என்னை விட்டு விட்டு அவனோடு ஓடிவிட்டாளே!

பாலு : எல்லாம் உங்கள் பிழைகள்தானே. நீங்கள் சரியாக நடந்திருந்தால் இவையெல்லாம் வந்திருக்குமா?

விக் : சொந்த மூளையெல்லாம் அப்போது எங்கே போய் விட்டது? இப்பொழுது, "அறப் படிச்சுக் கூழ்பானைக்குள் விழுந்த'' கதையாக ஆகிவிட்டதே?

சுப் : எல்லாம் எனக்கு வேண்டும். இன்னமும் வேண்டும். "BMW" வும், "Benz" கார்களும்

வாங்க ஆசைப்பட்டேன். இப்போது ஒரு பழைய "Bicycle" கூட என்னால் வாங்க முடியவில்லையே. பிள்ளை பெற்று "Private School" இல் விட்டுப் படிப்பிப்பதற்கு ஆசை கொண்டேனே. இப்போது ஒரு பிள்ளை பெறக்கூட வழியில்லாமல் போய்விட்டதே. என்ன செய்வேன்? "என் இலண்டன் பலசரக்கு மளிகையே'' உன்னை விட்டுப போவதொன்றே எனக்கு வருத்தம். அன்று என் மூத்த அண்ணனோடு நானும் "Canada"விற்குப் போயிருக்க வேண்டும். அதனை மீறிய எனக்கு இது ஒரு நல்ல பாடம். தம்பி! இப்போது நீ என்னை மட்டம் தட்டிக் கதைக்கலாம், கெட்டித்தனமாகப் பேசலாம். கடையை மூடப் பண்ணலாம். எதிர்காலத்தில் ஆயிரம், ஆயிரம் தமிழ்க்கடைகள் இலண்டனிலே வரவேண்டும். உனது கடையை இழுத்துமூட வழிசெய்ய வேண்டும். இதுவே என் நிரந்தர ஆசை.

- வணக்கம் -

ஃ திரை ஃ

குறிப்பு : இந்த நாடகம் TRT வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

# காலம் போகிற போக்கு

காட்சி - 1

(மாணவர்கள் இருவரும் கதைத்தபடியே மேடையில் வருகின்றார்கள்)

மாணவர் 1 : Hello முரளி! how are you?

மாணவர் 2 : பரவாயில்லை. நீர் எப்படி இருக்கிறீர்? என்ன கண்ணெல்லாம் ஒரு மாதிரி இருக்கு? நேற்று எங்கையாவது பார்ட்டிக்குப் போனீரோ?

மாணவர் 1 : நான் இலண்டனுக்கு வந்து இப்ப நாலு வருஷமாச்சு. இன்னும் ஒருநாள்கூட நிம்மதியா நித்திரை கொள்ள முடியேல்லை.

மாணவர் 2 : ஏன் அப்பிடி? நீர் T.V. நல்லாப் பாக்கிறீர்போலை இருக்கு.

மாணவர் 1 : நானோ? T.V.யோ? என்னை அப்பா ஆறு மணிக்குப் பிறகு T.V.லை தொட விடமாட்டார். அம்மா ஆறு மணிக்குத்தான் தமிழ்ப் படம் பாக்கத் தொடங்குவா. என்னை Home work செய்யச் சொல்லி அனுப்பிப் போட்டு, இரவிரவா பழைய கதையள் கதைப்பினம். என்னாலை ஒண்டும் செய்யமுடியாது.

மாணவர் 2 : நான் என்னுடைய அம்மா, அப்பா வீட்டிலை இல்லாத நேரம்தான் T.V. பாக்கிறனான். நீரும் அதுமாதிரி

உம்மடை அப்பா, அம்மா இல்லாத நேரம் T.V. பாக்கலாம் தானே?

மாணவர் 1 : அப்பா, அம்மா வீட்டிலை இல்லாட்டிலும், அங்கே எனக்கொரு தங்கச்சி ஒண்டு இருக்கது. அம்மாவின்ரை செல்லம். அது என்னை ஒண்டும் செய்ய விடாது.

மாணவர் 2 : அவா அம்மாவின்ரை செல்லம் எண்டா, நீர் அப்பாவின்ரை செல்லமோ?

மாணவர் 1 : என்ரை அப்பா வீட்டிலையே நிக்கிறதில்லை. அந்தக் கூட்டம் இந்தக் கூட்டம் எண்டு சொல்லிப்போட்டு போய் இரவு பன்னிரண்டு மணிக்குத்தான் வருவார். அவர் வெளியாலே போன உடனை அம்மா Mobile phone ஐ எடுத்தா எண்டா, வைக்கவே மாட்டா. வாய் ஓயாது. கிணு கிணு எண்டு ஒரே கதை. (மெதுவாக) நான் அம்மா Mobile phone லை மற்றவையோட கதைக்கேக்கை, நான் என்ரை Room லை நிண்டு எல்லாக் கதையளும் கேப்பன். சும்மா சொல்லப்படாது கதையள் எல்லாம் Very interesting.

மாணவர் 2 : நானும் Home work செய்யிறதெண்டு சொல்லிப் போட்டு என்னுடைய Roomக்குள்ளே இருந்து கொண்டு Manchester United magazine தான் வாசிக்கிறனான். இதுகள் ஒண்டும் அப்பா

அம்மாவுக்குத் தெரியாது. யாருக்கும் சொல்லிப் போடாதேயும்.

மாணவர் 1 : இங்கை வந்தநாள் தொடக்கம் ஒரு நாளும் அளவான சட்டை போட்டதில்லை. பெரிய சட்டையா வாங்கினா வளர வளரப் போடலாம் எண்டு எப்பவும் பெரிய சட்டையள்தான் வாங்கித் தருவினம். நான் வளர முதல் சட்டையள் எல்லாம் கிழிஞ்சு போயிடும்.

மாணவர் 2 : அக்காவின்ரை அளவில்லாத T.Shirtடுகள் எல்லாம் இப்ப நான்தானே போடுறனான். அதுமாதிரி நீரும் உம்மடை தம்பி, தங்கச்சிக்கு கொடுக்கலாம்தானே.

மாணவர்-1 : அதுதான் நடக்காது. அளவில்லாத சட்டைகளை பக்கத்து வீட்டுக்காரருக்கு கொடுத்தாலும் கொடுப்பன் ஆனால் தம்பி, தங்கச்சிக்குக் கொடுக்க மாட்டன். நான் ஒரு அண்ணன் வீட்டிலை இருக்கிறன் எண்டு யார் கவனிக்கினம்? Remote controlக்கு வீட்டிலை எந்த நாளும் ஒரே சண்டை. T.V. பாத்தாலும் அவையள் போடுற programme தான் நானும் பாக்கவேணும். தாங்கள் மட்டும் Spice Girls ன்ரை பாட்டுக்களைப் போட்டு போட்டு னன... னன... ன... னன எண்டு தலையை ஆட்டிக் கொண்டு இருப்பினம்.

மாணவர் 1 : நான் படிச்சு முடிச்சிட்டு, பெரிய வீடு வாங்கி எல்லா அறையிலும் ஒவ்வொரு T.V. வாங்கிப் போடுவன். எல்லா T.V.programmesம் பார்ப்பேன். ஒவ்வொரு நாளும் Video film எடுத்துக் கொண்டு வந்து போட்டுப் பாப்பன். ஆனால் நான் Mobile phone வாங்கவே மாட்டன். வாங்கினாலும் அம்மா மாதிரி மற்றவைக்கு கேட்கத் தக்க மாதிரிக் கதைக்கவே மாட்டேன். அறையைப் பூட்டிப்போட்டுத் தான் கதைப்பன்.

மாணவர் 2 : இங்கே நீர் இன்றைய Home work செய்து போட்டீரோ? நான் இன்னும் செய்யேல்லை. அப்பா வந்து மொங்கப் போறார்.

மாணவர் 1 : நானும் இனித்தான் செய்யவேணும். வாரும் வீட்டை போவம். (சபையோரைப் பார்த்து) இண்டையான் Home work கே இன்னும் செய்து முடியேல்லை. இனி படிச்சு, சோதனை பாஸ் பண்ணி, வேலை செய்து, வீடு வாங்கி, T.V., Mobile phone, வாங்கி மற்றவையோடை கதைச்ச மாதரித்தான். என்ரை பாட்டா அடிக்கடி சொல்லுவர் "வடலி வளத்துக் கள்ளுக் குடிச்ச மாதிரி" எண்டு. அது மாதிரித்தான் இதுக்கும். எல்லாரும் இருங்கோ நாங்கள் போயிட்டு வாறம்.

காட்சி 2 :

(இரு முதியோர்கள் வருதல்)

செல்லாச்சி : உதிலை இரண்டு இளசுகள் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலை இதிலை நிண்டு கதைச்ச கதையளைக் கேட்டனீங்களே? என்ன மாதிரிக் கதைச்சக் கொண்டு போகினம் பாத்திங்களே?

கந்தப்பு : அதுகள் இங்கத்தேப் பிள்ளையள். அப்பிடித்தன் இருக்குங்கள். பின்னை எங்களைப் போல மாமரத்தோடையும், பனை மரத்தோடையும் கயித்தைக் கட்டிப் போட்டு ரெலிபோன் கதைச்ச மாதிரியோ? சும்மா இரும்.

செல்லாச்சி : அந்த நேரம் உந்த மோபைல் (Mobile) ரெலிபோனைக் கண்டு பிடிச்சிருந்தா நான் வீட்டிலை நிண்டு உவர் தோட்டத்துக்கை நிக்கேக்கை என்ன காய் பிஞ்சு வேணுமெண்டு கதைச்சிருப்பன்.

கந்தப்பு : வேலைப் பொட்டுக்காலை கதைக்காமல் மோபைலிலை கதைச்சிருப்பினம். நான் எண்டா முதலி தென்னை மரத்திலை இருக்கேக்கை அவனோடை கதைச்சிருப்பன்.

செல்லாச்சி : என்ன? கள்ளு எப்ப இறக்கிக் கொண்டு வருவாய் எண்டோ? நான் ஊருக்குப் போனால் உதிலை இரண்டு மூண்டு வாங்கிக் கொண்டுதான் போறது.

கந்தப்பு : உதுகளைவிடும். இங்கத்தைப் பிள்ளையள்தான் எந்த நேரமும் இங்கிலீசிலைதானே கதைக்கிதுகள் எண்டுபாத்தா, எங்கடை பெரியாட்களும் அப்பிடித்தானே கதைக்கினம்.

செல்லாச்சி : (சபையோரைப் பார்த்து) இவரும் அப்பிடித்தான் அண்டைக்கு பஸ்காரனோடை இங்கிலீசிலை கதைச்சு, Harrowவுக்குப் போறமெண்டு சொல்ல அவன் கொண்டே Hammersmithலை இறக்கிவிட்டான்.

கந்தப்பு : இங்கே அண்டைக்கு நீர் என்ன செய்தனீர்? தண்ணி விடாய்க்குதெண்டு போய் கடையிலை Give me some Green water எண்டு கேட்டா ஊரிலை பச்சைத் தண்ணி எண்டா அதை இங்கே Green water எண்டு சொல்ல வேணுமாம். இவாவின்ரை மொழி பெயர்ப்பு அது. அவன் பார்த்த பார்வை. அதை நினைச்சா இப்பவும் பயமாக்கிடக்குது.

செல்லாச்சி : (மறுபுறம் திரும்பி பார்த்து) இங்கை ராணி அக்கா வாறா. என்னக்கா இந்த நேரத்திலை கடைக்குப் போட்டு வாறியள் போலை.

ராணி : (கையில் Bags உடன் வந்து) Last night தொடக்கம் John க்கு சுகமில்லை. அதுதான் Chemist லை போய் medicine வாங்கிக் கொண்டு வாறன்.

கந்தப்பு : John னோ? அதார் புது ஆளா இருக்குது. உங்கடை மகன்ரை பெயரை மாத்திப் போட்டீங்களே?

ராணி : No, No அது என்னடை Doggy யின்ரை Name.

செல்லாச்சி : (கந்தப்பு பக்கம் திரும்பி) Doggy எண்டா என்னப்பா? வர வர ஒரு இங்கிலீசும் விளங்குதில்லை.

கந்தப்பு : Dogy எண்டா daughter அப்பா. அவையின்ரை மகளின்ரை பெயர் போலை இருக்கு.

ராணி : No, No அது என்னடை Dog, நாயின்ரை பெயர்.

கந்தப்பு : (சபையோரைப் பார்த்து) நல்ல வேளை. நாய்களுக்கு வெள்ளைக்கரற்றை பெயரை வைச்சது எவ்வளவு நல்லதாப் போச்சு. தமிழ்ப் பேரை வைச்சிருந்தா, இப்ப John எண்ட மாதிரி கோணேஸ், தங்கராசா இவையளுக்கு சாமான் வாங்கிக் கொண்டு போகிறேன் எண்டால் எப்பிடி இருந்திருக்கும் நினைச்சுப் பாருங்கோ. அவையின்ரை மனிசிமார் சும்மா விட்டிடுவினமே.

ராணி : John க்கு தண்ணி தண்ணியா வயித்தாலை போகுது. I don't know what to do.

கந்தப்பு : I don't know what to do. ஏன் இராத்திரி ஏதேனும் தண்ணி கிண்ணி பாவிச்சதோ?

ராணி : இராத்திரி ஒரு Birthday party க்கு போனனாங்கள். Food poisioning போலை இருக்கு.

செல்லாச்சி : இப்ப நாயளுக்கும் Birthday party வைக்கிறீங்களோ?

ராணி : No, No, No You are wasting my time. I must go now. (போகிறார்)

கந்தப்பு : ஊரிலை ஒரு நேரம் சாப்பிட முடியாமல் சனங்கள் எவ்வளவு கஷ்டப்படுகுதுகள். இங்கை என்ன நடக்குது எண்டு பாருங்கோ. இன்னும் கொஞ்ச நாளையிலை, Hall லுகளும் வாடனக்கு எடுத்து, சாப்பாடுகளும் ஓடர்களுக்கு எடுத்து நாய்ளுக்கு கலியாண வீடுகளும் சொல்லிச் செய்வினம்.

செல்லாச்சி : இங்கே உதிலை நிண்டு விடுப்புக்கள் கதையாமல் வாங்கோ வீட்டை போவம். T.V.யிலை தமிழ்ப் படம் இருக்குது. (போகிறார்)

கந்தப்பு : (சபையோரைப் பார்த்து) படம் எண்ட உடனை ஓடுற ஓட்டம்? உந்தச் சின்னனுகள் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலை சொன்னதிலை என்ன பிழை? அதுசரி, அதையும் விட்டா எங்களைப் போல ஆக்களுக்கு வேறை என்ன வேலை இங்கை. இருங்கோ வாறன். (போகிறார்)

❖❖❖

காட்சி - 3

(இரு கவிஞர்களும், மணியம் அவர்களும் வருதல்)

மணியம் : எல்லோருக்கும் வணக்கம். இங்கே இப்ப நாங்கள் ஒரு கவிதைப் போட்டி ஒண்டு நடத்தப் போறம். (கவிஞர்கள் வந்து சபைக்கு வணக்கம் சொல்லிய பின்னர்) இவர்கள் கவிஞர்கள். இவர் தான் முற்பிறப்பிலே ஆறுமுக நாவலராம். இவர் முற்பிறப்பிலே பாரதியாராம்.

கவிஞர் 1 : நாங்கள் இருவரும் கவிஞர்கள் ஒரு சிறு கவிதைப் போட்டி நடத்தலாம் என்று இங்கே வந்திருக்கின்றோம்.

கவிஞர்-2 ஆமாம், நாங்கள் பாட்டுக்கள் சொல்வோம். மணியண்ணை அதற்குப் பொருள் கூறுவார். கேட்டுக் கவலைப் படவேண்டியது நீங்கள் முன்பிறப்பில் செய்த பாவம்.

மணியம் : தமிழை வளர்க்க வேண்டுமென்டு படாதபாடு படுகினம். இவர்களுக்கு தமிழின் மேல் ஒரு பைத்தியம். (சபையோரைப் பார்த்து) இவை இரண்டும் அரைப் பைத்தியங்கள். இரண்டு அரை சேர்ந்தால் முழுசாக இருக்கும்தானே. (கவிஞர்-1ஐப் பார்த்து) எங்கே உங்கள் முதல் கவிதையைச் சொல்லுங்கள்.

கவிஞர்-1 : (தொண்டையைச் செருமிவிட்டு)

கொக்குவிலில் பிறந்து வந்தேன்
கொக்குவிலில் வளர்ந்து வந்தேன்

இப்புவியில் இச்சமயம் கிங்ஸ்பரியில் இருந்து வந்தேன்.

மணியம் : இவர் என்ன சென்னவர் எண்டு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும் எண்டு நினைக்கிறன்.

கவிஞர்-2 : இது என்ன பாட்டோ? கதையோ? நான் சொல்கிறேன் கேளுங்கள்

**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**உச்சிமீது பொம்மர் வந்து குண்டுபோட்ட போதிலும்**
**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**
**அப்பருக்கும் அச்சமில்லை, அம்மாவுக்கும் அச்சமில்லை**
**அடுத்த வீட்டு வெள்ளைக்கார John க்கும் அச்சமில்லை**

மணியம் : தாய், தகப்பனுக்கு மட்டுமில்லை அயலட்டையவைக்குக்கூட அடங்காதவர் இவர்... அடுத்த பாட்டு...

கவிஞர் 1 : Chicken னோடு Chips ம் செய்து அம்மா தந்தபோதிலும்

Mc Donald ஐ எண்ணி எண்ணி மாட்டேன் என்று சொல்லுவேன்

அப்பா வந்து கன்னம் இரண்டில் அப்பிவிட்ட பின்னர்தான்

விக்கி விக்கி விழுங்கிவிட்டு வீட்டை விட்டு ஓடுவேன்.

மணியம் : இதுக்கு விளக்கம் தேவையில்லை எண்டு நினைக்கிறேன். இதுக்குத்தான் சொல்கிறது. அரை குறையா தமிழ் படிச்சுப் போட்டு பாட்டு எழுதப்படாது எண்டு. கடைசியா இங்கிலீசுமில்லை தமிழுமில்லை.

கவஞர் 2 : நான் அப்பிடியில்லை. என்ரை அடுத்த பாட்டைக் கேளுங்கோ. அவருக்கு,

தலையிலை மயிருமில்லை, தமிழிலே சுவையுமில்லை

வயதிலும் அதிகமில்லை, கவிதையில் பொருளுமில்லை.

கவிஞர் 1 : தலையிலை தொப்பி போட்டு தெரியாமல் மறைச்சுவிட்டால்

தலையென்ன வழுக்கையோ இல்லையோ தெரியாது

நரைச்சல் தலைக்கெல்லாம் கறுப்புக் கலர் அடிச்சாரோ

நறுக்கென்று பேசிவிட்டால் நல்ல தமிழ் ஆகிடுமா?

மணியம் : இப்பத்தே சினிமாப் பாட்டுகள் மாதிரித்தான் இவையின்ரை கவிதையளும், தமிழ் Dictionary யிலை இல்லாத சொல்லுகள் எல்லாம் இவையின்ரை கவிதையளிலை வரும். ஒரு சொல்லும் விளங்காது. ஒரு பொருளும் இருக்காது.

கவிஞர் 2 : இது 1999. காலத்துக்கு ஏற்ற மாதிரித்தான் கவிதையளும் மாற வேணும்.

கவிஞர் 1 : அடுத்த வருடம் 2000 அதுக்கேத்த மாதிரி அடுத்தவருஷம் நாங்கள் இங்கை வந்து புதுக் கவிதையள் சொல்லிக் காட்டுவோம்.

மணியம் : இந்த வருஷம் சொன்ன கவிதைகளே போதும். அது சரி, நீங்கள் இங்கை கவிதைப் போட்டிக்கு வந்தனீங்களோ? உங்கடை வீட்டுச் சண்டையள் பிடிக்கவே வந்தனீங்களோ? வீட்டை ஓடுங்கோ, நான் இங்கை இருந்து மிச்ச Programme பாக்கவேணும்.

கவிஞர் 2 : நாங்கள் செய்தது அப்பாவை, அம்மாவைப் போலே அன்புச் சண்டை. ஆனால் எங்கள் குறிக்கோள் தமிழ்தான். அது வளர நாங்கள் எத்தனை சண்டைகள் வேணுமெண்டாலும் போடுவோம். எங்கே வேண்டும் எண்டாலும் போடுவோம். எல்லோருக்கும் வணக்கம்.

ஃ திரை ஃ

---

குறிப்பு : இந்த நாடகம் கிங்ஸ்பரி தமிழ்ப்பாடசாலை மாணவர்களால் மேடையேற்றப்பட்டது

# எனது தமிழ்ப்பாடசாலை

(இரு வயோதிகர்கள் உரையாடிக்கொண்டு இருக்கிறார்கள்)

கிழவன் : இங்கை பாருங்கோ, நாங்கள் இன்றைக்கு, உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறோம்.

கிழவி : நாங்கள் எல்லாம் எங்கடை நாட்டைவிட்டு இங்கை வந்து இருக்கிறம். நாலு நேரமும் நல்லா வயிறு முட்டச் சாப்பிடுகிறம்.

கிழவன் : நினைச்ச உடனை விதம் விதமா உடுப்புகளும் வேண்டிப் போடிறம். காலிலை இருந்து கழுத்து வரைக்கும் தங்கப் பவுணிலை நகைகள்.

கிழவி ; அதுமட்டுமே, இன்னும் எத்தினையோ இப்பிடி நடக்குது. அதுக்கிடையிலை நான் பெரிசோ நீ பெரிசோ எண்டு இங்கை சண்டைகள்.

கிழவன் : பெரியாக்களைப் பாத்து இப்ப உந்த சின்னஞ் சிறிசுகளுமெல்லே இப்ப பழுதாப் போகுதுகள். உதிலை இரண்டு சிறிசுகள் வருகுதுகள். என்ன கதைக்கினம் எண்டு கேட்டுப் பாருங்கோவன்.

பிரியந்தன் : Christopher, நீர் இண்டைக்கு எங்கடை தமிழ்ப் பள்ளிக்கூடம் போனீரோ?

Christ : ஓம். நான் போனனான். எனக்கு இப்ப எங்கடை தமிழ்ப் பள்ளிக்கூடம் போக நல்ல

விருப்பம்.பிரியந்தன் : இப்ப நல்லாப் படிக்கிறீர் போல இருக்கு. எனக்கு ஒவ்வொரு நாளும் Home work செய்யவே நேரம் இல்லை. நீர் Home work செய்யிறதில்லையோ?

Christ : நானே? Home work கோ? ம்! நான் ஒருநாளும் என்னுடைய Home work செய்யிறதில்லை. என்னரை அப்பாதான் எல்லாம் செய்து தாறவர். யாருக்கும் சொல்லிப் போடாதையும். நான் தமிழ்ப்பள்ளிக்கூடம் போறது ஏன் தெரியுமோ? இப்ப அங்கை நல்ல Mutton Rolls ம், பெரிய பெரிய வடையளும் மலிவா விற்கினம்.

பிரியந்தன் : அப்ப நீர் அங்கே சாப்பிடவே பள்ளிக்கூடம் போகிறீர்?

Christ : சாப்பிட மட்டுமில்லை, சாப்பிட்டிட்டு அங்கே உள்ள Corridor லை எல்லாம் சேர்ந்து Football விளையாடுவோம். அதற்காகத்தான்.

பிரியந்தன் : நல்லாத்தான் இருக்கப்போகுது. அது சரி, நீர் தமிழ்ச் சோதனையிலை எத்தனை Marks எடுத்தீர்.

Christ : நான் வயித்துக்கை குத்துது என்று சொல்லி, சோதனைக்குப் போகவே இல்லை. எப்பிடி என்னரை ஐடியா?

பிரியந்தன் : அப்படி நீர் இனிமேல் செய்யக்கூடாது. அப்பா அம்மாவிடம் பொய் சொல்லக்கூடாது. தமிழிலை எத்தினையோ நல்ல நல்ல கதையள் எல்லாம் இருக்குதாம். நாங்கள் தமிழைப் படித்தால்தானே பிறகு அந்தக் கதையளைப் படிக்கலாம்.

Christ : நீர் என்ன சொல்லுகிறீர்?

பிரியந்தன் : ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழ்ப் பள்ளிக்கூடம் போய், தமிழை ஒழுங்காகப் படியும். இல்லாட்டா, பிறகு கவலைப் படுவீர்.

Christ : சரி இனிமேல் அப்பாவை Homework செய்ய விடாமல், நானே செய்கிறேன். அது சரி, இப்ப நீர் எங்கே போகிறீர்?

பிரியந்தன் : அந்தக்கடையிலை போய் Mutton Rolls ம், பெரிய வடையளும் வாங்கப் போகிறேன். வாரும் உமக்கு நான் வாங்கித் தாறன்.

(போகிறார்கள்) (கிழவனும் கிழவியும் வருகிறார்கள்)

கிழவன் : என்ன கதைச்சவை எண்டு, நல்லாக் கேட்டனீங்கள்தானே.

கிழவி : இப்ப அதுகள் கதைச்சதிலை என் பிழை?

கிழவன் : என்ன பிழையோ? வயதுபோனதுகளைக் கூட்டிக்கொண்டு வெளியிலை போகக்கூடாது எண்டு என்ரை மகன் சொன்னது ஏன் எண்டு இப்பதான் விளங்குது.

கிழவி : அதுகளை யார் கூடாதது எண்டு சொன்னது? தமிழ் படிச்சா எவ்வளவு நல்லதெண்டு சொன்னது உங்களுக்குக் கேக்கேல்லைப் போலை இருக்கு.

உந்தச் செவிட்டு மிசினை போட்டுக் கொண்டெல்லே வரச் சொன்னனான்.

கிழவன் : அவா போட்டுக்கொண்டு வந்திருக்கிறா போலை இருக்கு. இங்கை இன்னும் சிலபேர் வருகினம் என்ன சொல்லுகினம் எண்டு கேட்டுப்பாருங்கோ.

(நந்தினி, ஷர்சினி ஒரு புறத்திலிருந்தும், சிந்துஜா, நிவேதா மறுபுறத்திலிருந்தும் வருகிறார்கள்)

ஷர்சினி : Hi, How are You?

நந்தினி : இப்ப எங்கடை அம்மா அப்பா எல்லாரும் அவர்களுடைய நண்பர்களைக் கண்டவுடனே தமிழிலே வணக்கம்! எண்டுதான் சொல்லுகினம்.

ஷர்சினி : They are old fashion. I don't want to talk Tamil in front of other people.

நிவேதா : ஏன்? இப்ப French. German ஆட்கள் எப்பவும் தங்களுடைய மொழியிலைதான் கதைப்பினம். நாங்களும் தமிழிலை ஏன் அப்படிக் கதைக்க முடியாது.

ஷர்சினி : They are European நாங்கள் அப்படிக் கதைச்சா மற்றவை சிரிப்பினம்.

சிந்துஜா : அப்படி இல்லை Far East லை இருந்து வந்த ஆட்களும் தங்களுடய மொழியிலைதானே கதைக்கினம்.

நந்தினி : அவர்களுடைய அம்மா அப்பா எல்லாரும் அவர்களோடை English ல்ல கதைக்வே மாட்டாங்களாம். ஆனால் எங்கடை அப்பா அம்மாவை எல்லோரும் எங்களோட தமிழிலை கதைக்கவே மாட்டினம்.

சிந்துஜா : அது அப்பா அம்மாமார் தாங்கள் English improve பண்ணத்தான் அப்படிக் கதைக்கிறவை.

நிவேதா : அவை இங்கிலீஸ் லை கதைச்சா, நீங்கள் தமிழிலை கதையுங்கோ. அப்ப இரண்டு போரும் தமிழிலும், இங்கிலிஸ் ம் Improve பண்ணலாம்தானே.

ஷர்சினி : அப்பிடிச் சொன்னால், உடனே அப்பா ஏதாவது பழமொழி சொல்லுவார். அது ஒரு சொல்லும் விழங்காது.

நந்தினி : எங்கடை அப்பாவுக்கு, தமிழ் சரித்திரம் எண்டால் நல்ல விருப்பம். நல்ல நல்ல கதைகள் எல்லாம் சொல்லித்தருவார்.

சிந்துஜா : என்னுடைய அப்பாவுக்கு நாங்கள் தமிழ் படிக்கிறது நல்ல விருப்பம். ஆனால் ஏதாவது கருத்துக் கேட்டால் சொல்லித்தர மாட்டார். ஏனெண்டால் அவருக்குத் தெரியாது.

நிவேதா : எங்கடை அம்மாவுக்கு திருக்குறள் எண்டால் நல்ல விருப்பம். எனக்கும் விருப்பம். நான் ஒவ்வொரு முறையும் நான் திருக்குறள் போட்டியிலை பரிசு எடுப்பேன்.

ஷர்சினி : ஏன் ஒவ்வொரு முறையும் திருக்குறள் போட்டி செய்ய வேணும்? Michael Jackson போட்டி வைத்தால் நான் கட்டாயம் முதல் பரிசுதான் எடுப்பேன்.

நந்தினி : திருக்குறள் அப்படியானது இல்லை. பல நாடுகளிலை மொழி பெயர்த்து வைத்து இருக்கிறார்கள். அது ஒரு தமிழ்ப் பொக்கிஷம் என்றும் சொல்லலாம். என்று அப்பா சொல்லித்தந்தார்.

சிந்துஜா : என்னுடைய அம்மாவும் அப்பாவும் ஒரே Busy. எனக்கு என்னுடைய Grandma தான் தமிழ்ப் பாடம் எல்லாம் சொல்லிக் கொடுப்பார். நான் Dance பாடத்திலை கொஞ்சம் Weak. ஆனால் Grandma வை Dance பாடம் சொல்லித்தரச் சொல்லிக் கேட்க விருப்பம் இல்லை. அவர் ஆடுவாரோ தெரியாது.

நிவேதா : எனக்கு அந்தப் பிரச்சினையே இல்லை. அப்பா ஒரு Part-Time வேலை செய்யிறார். அது தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலேதான் இருக்குது. அந்த வேலை முடிந்தா பிறகு தமிழ்ப் பள்ளிக்கூடம் வருவேனோ தெரியாது.

ஷர்சினி : எங்களுக்கு Test பண்ணுகிறமாதிரி, எங்களுடைய அம்மா அப்பாவைக்கும் பேச்சுப் போட்டி, திருக்குறள் மனைப் போட்டி வைக்க வேணும்.

(அப்போது வேறொரு வயோதிப ஜோடி - சௌமியாவும், சுபத்திராவும் வருகிறார்கள்)

சௌமியா : நீங்கள் இங்கே இருந்து கதைத்த எல்லாவற்றையும் நாங்கள் கேட்டுக் கொண்டுதான் இருந்தோம். இது எலிகள் சேர்ந்து பூனைக்கு மணி கட்டின மாதிரித்தான் இருக்கப் போகுது.

சுபத்திரா : நாங்கள் அந்த நாளேலை படிக்காத படிப்பே நீங்கள் இங்கை படிக்கிறீங்கள்? அந்த நாளேலை எங்கடை பொன்னுத்துரை வாத்தியார் போட்ட அடி, இப்பவும் வலிக்குது.

நந்தினி : எங்களுக்கும் தமிழ் படிக்க விருப்பம் என்றுதான் நாங்களும் தமிழ்ப் பள்ளிக்கூடம் வருகிறோம். இல்லை என்றால், நாங்கள் அங்கே வரவே மாட்டோம்.

சிந்துஜா : எல்லாரும் எங்ளோடை எப்போதும் தமிழிலை கதையுங்கோ. தமிழ்ப் படங்கள் எடுத்துத் தாருங்கோ. நான் இன்னும் படையப்பா படம் பார்க்கவே இல்லை.

சௌமியா : ஆள் நல்ல வல்லவி போல இருக்குது. எங்களைக் கொண்டு படம் எடுக்க நிற்கிறாள்.

சுபத்திரா : அது உங்களை இல்லயப்பா. அது பிள்ளை பொதுவாகச் சொன்னது.

சௌமியா : விளங்குது விளங்குது. பிள்ளையளின்ரை சாட்டிலை தானும் ஒருக்கால் படையப்பா படம் பார்க்கத்தான்.

சுபத்திரா : படம் பார்த்திட்டு பேசாமல் இருந்தால் பரவாயில்லை. அந்த வசனங்களை வீட்டிலை என்னோடை கதைச்சா நான் என்ன செய்கிறது?

"நான் ஒருக்காச் சொன்னா நூறுதரம் சொன்னதிற்குச் சமன்". என்று எந்த நேரமும் சொன்னபடி. அது மட்டுமே, ஆசையா ஒரு சிலை வாங்கித் தரச்சொன்னா, உடனை "அதிகமா ஆசைப்படுகிற பெண் நிம்மதியா வாழ்ந்ததாக சரித்திரமே கிடையாது" என்று அதுக்கொரு மறுமொழி.

நிவேதா : அன்ரி, அது அப்பிடி இல்லை. "அதிகமா ஆசைப்படுகிற ஆணும், பெண்ணும் நிம்மதியா வாழ்ந்ததாக சரித்திரமே கிடையாது" என்றுதான் ரஜனி அங்கிள் சொல்லுகிறார்.

ஷர்சினி : சுப்பர் ஸ்ரரார் ரஜனிகாந்தினுடைய Style தான் எனக்குப் பிடிச்சுது.

சுபத்திரா : அப்படியா சங்கதி? இதுக்குத்தான் அடிக்கடி தமிழ்ப் படம் பார்க்க வேணும் என்று சொல்கிறன்.

சௌமியா : அதுசரி, ரஜனி இப்ப உங்கடை அங்கிளாகி விட்டார் போல இருக்குது.

சுபத்திரா : இங்கே எல்லாரும் கவனமாகக் கேளுங்கோ, இப்ப எங்கடை மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலை நல்லா நடக்குது. எங்கடை Fine Arts சோதனை மாதிரி ஒருத்தராலும் செய்ய முடியாது. அவ்வளவு திறமா நடக்குது. உங்களுக்குத் தெரிஞ்ச ஆட்களிட்டைச் சொல்லி, எங்கடை தமிழ்ப் பிள்ளையளை அங்கை கூட்டிக்கொண்டு வாருங்கோ. அதுகளும் தமிழையும், நுண்கலைகளையும் படிக்க விடுங்கோ. தமிழ்ப் படங்களையும் எடுத்துக் கொடுங்கோ. அதுகளைப் பார்த்து அதிலை வாற வசனங்களைப் பேசினாலும், பிள்ளைகளின்ரை வாயிலை இருந்து தமிழ் வசனங்களைக் கேட்கிறதிலை இருக்கிற சந்தோசம் எவ்வளவு காசு கொடுத்தாலும் வராது. நாங்கள் சொன்னதுகளை மறக்காதையுங்கோ. நாங்கள் போயிட்டு வரப்போகிறோம்.

ஃ திரை ஃ

---

குறிப்பு : இந்த நாடகம் மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலை மாணவர்களால் மேடையேற்றப்பட்டது.

ஓரங்க நாடகம்

# இலண்டனில் நாரதர்

*இடம் : இலண்டன் வீதி*

*பாத்திரங்கள் : நாரதர், நல்லதம்பி, அன்னம்மா, அம்பலவாணர், மீனாட்சி, சிறுமி, சோமு, பாலு, இரண்டு Police அதிகாரிகள்*

(நாரதர் பாடிக் கொண்டு வருகின்றார்)

நாரதர் : சம்போ மகாதேவா!, ஓம் நமோ நாராயணா!

சம்போ மகாதேவா!, ஓம் நமோ நாராயணா!

நல்லதம்பி : ஐயா!, நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? இங்கே யாரைத் தேடுகின்றீர்கள்?

நாரதர் : என்ன?, என்னை உங்களுக்குத் தெரியாதா? இந்த உலகம் எங்கிலும் என்னைப்பற்றித் தெரிந்தவர்கள் பலர் இருக்கின்றார். ஆனால் இந்த இலண்டனிலே என்னைப் பற்றித் தெரிந்தவர்கள் குறைவாகவே இருக்கின்றார்கள். போலிருக்கின்றதே!

அன்னம்மா : ஐயா!, நீங்கள் யார் என்று எனக்குத் தெரியாது. உங்களைப் பார்த்தா ஏதோ நாடகத்திற்கு வேஷம் போட்ட ஆள்மாதிரி இருக்கின்றதே!. இலண்டனிலே எங்கள்

பக்கத்து வீட்டுக்காரரையே தெரியாது. அப்படி இருக்கும்போது, உங்களை எப்படி எங்களுக்குத் தெரியும்?

நாரதர் : சிவ, சிவா இவர்கள் எல்லாம் பூவுலக மக்கள். ஆனால் நான் தேவலோகத்திலிருந்து வருகின்றேன்.

அன்னம் : தேவலோகமா? அது எங்கே இருக்கிறது? ஓ!, அந்த நாரதரா நீங்கள்?

நல்ல : அன்னம், இவர் இந்திரன் சபையிலிருந்து வருகின்றார் போலிருக்கிறது. அதெல்லாம் சாதாரணமான ஆட்களுடைய கண்ணுக்குத் தெரியாது. ஏதோ நாங்கள் செய்த புண்ணியம்தான் இன்றைக்கு இவருடைய தரிசனம் எங்களுக்குக் கிடைத்தது.

நாரதர் : அப்படிச் சொல்லும், உமது மனைவி, அடிக்கடி ஆங்கிலத்தில் ஆட்களுக்கு முன்னால் கதைப்பது, அவர்களைப்போல் தலை மயிரை வெட்டுவது, அவர்களைப் போலவே வாழ நினைப்பது, இவைகளிலேதோன் அதிக நேரம் செலவு செய்கின்றார்.எல்லாம் தவறு.

நல்ல : (மறுபக்கம் திரும்பி) என்னுடைய மனைவியைப் பற்றி இவருக்கு யாரோ நன்றாகச் சொல்லி வைத்திருக்கின்றார்கள் போல் இருக்கிறது.

அன்னம் : ஐயா, நாரதரே!, நாங்கள் இருப்பதோ இங்கிலாந்து, பேசுவதோ ஆங்கிலம், வாழும் இடத்துக்கேற்ற மாதிரி எம்மையும் மாற்றிக் கொள்ள வேண்டும் அல்லவா?

நாரதர் : அவைகளை மட்டும் மாற்றினால் போதாது. உங்கள் சுயநலத்திற்காக அடுத்தவரோடு சண்டை பிடிப்பதையும், உங்களுக்குப் பிடிக்காதவர்கள் செய்யும் வேலைகளைக் குழப்புவதையும், நீங்கள் மட்டும்தான் வாழ வேண்டும் என்று நினைப்பதையும் மாற்ற வேண்டும்.

அன்னம் : எல்லாவற்றையும் மாற்றுவது மிகவும் கடினம். அது சரி, நாங்கள் வேறென்ன செய்ய வேண்டும்?

நாரதர் : ஆங்கிலத்தையும், ஆங்கிலக் கலாச்சாரத்தையும் மட்டும் படிக்காமல், எமது வரலாறுகளையும் கலைகளையும், மொழியையும், கலாச்சாரத்தையும் கற்கப்பழக வேண்டும்.

நல்ல : நாங்கள் இங்கே அவற்றையெல்லாம் செய்து கொண்டுதான் இருக்கின்றோம். அது சரி, தாங்கள் இன்று இங்குவரக் காரணம் என்னவோ?

நாரதர் : இன்று இந்திரன் சபையிலும், இறைவன் சந்நிதியிலும் விடுமுறை. அதுதான் இலண்டனைச் சுற்றிப் பார்க்கலாம் என்று

புறப்பட்டு வந்தேன். இங்கே எல்லாம் நலமா இருக்கிறீர்கள் தானே?

அன்னம் : அதை ஏன் கேட்கிறியள்? இலண்டனுக்கு வந்த உடனே எங்களுடைய ஆட்கள் தங்களையே மறந்து விடுகிறார்கள். பிள்ளைகளுக்குப் பெயர் வைப்பது தொடக்கம் ஒரே பிரச்சினைகள்தான். அதோ அங்கே வருகிறவருக்குப் பெயர் தருமராஜா.

நாரதர் : அப்படியா? அவர் தருமத்திலே சிறந்தவராக இருப்பார் என்று எண்ணுகின்றேன்!

நல்ல : ஒரு சல்லிக் காசு மற்றவர்களுக்குக் கொடுக்க மாட்டார். வீட்டுக்குப் போனால் தேநீர் குடிக்கச் சொல்லிக் கேட்கவே மாட்டார். யாராவது Charity என்று போனால் வீட்டில் இருந்து கொண்டே மனைவியிடம், தான் இல்லை என்று கூறும்படி சொல்லி அனுப்புவார்.

அன்னம் : அது மட்டுமில்லை, இன்னொருவரின் மனைவிக்குப் பெயர் தனலட்சுமி. அவளுடைய கணவன் இரண்டு மாதத்திற்கு ஒருமுறைகூடச் சேலை வாங்கிக்கொடுக்க மாட்டார். ராஜு பட்னிப் பக்கமோ, Western Jewellers பக்கமோ வருடத்திற்கு ஒரு முறை கூடக் கூட்டிக் கொண்டு போகமாட்டார்.

நல்ல : இன்னொருவர் இருக்கிறார் பெயர் மட்டும் வீமசேனன். சுண்டெலியைக் கண்டால் வீட்டைவிட்டு வெளிக்கிடவே மாட்டார். மனைவிக்குப் பயந்தவர் வீட்டிலே மனைவி வைச்சதுதான் சட்டம்.

நாரதர் : உங்கள் கதைகளைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போல் இருக்கின்றதே! ம்!. அப்புறம்?

அன்னம் : எங்களுடைய அடுத்த வீட்டுக்காரர் பெயர் ஹரிச்சந்திரன். அரிச்சந்திரன் என்ற பெயரை அப்படி மாற்றி வைத்துள்ளார். ஆனால் சொல்கிறது முழுக்கப் பொய். இப்படியாகப் பலர் பெயருக்கும் ஆட்களுக்கும் பொருத்தமில்லாமல் இருக்கின்றார்கள். அவர்களோடு நாங்கள் படும் பாடு கொஞ்சமல்ல.

நாரதர் : எதற்கும் நீங்கள் உங்கள் பெயர், விலாசம், தொலை பேசி இலக்கங்களை எழுதித் தாருங்கள். நான் பின்பு கவனித்துக் கொள்கின்றேன். சரி நீங்கள் சென்று வாருங்கள். (அவர்கள் போனபின்)

நான் இடைக்கிடையே எனக்குப் பொழுது போகாவிடில் சரஸ்வதி, இலட்சுமி, துர்க்காதேவி இவர்களுக்கிடையே சண்டையை உண்டாக்கி விடுவேன். சும்மா சொல்லக்கூடாது. பெண்கள் சண்டை பார்ப்பதற்கு மிக இனிமையாக இருக்கும்.

ஆனால் இங்கே என் பணியைச் செய்ய பல நாரதர்கள் இருக்கின்றார்கள் போலிருக்கின்றதே? ம்!, பரவாயில்லை!

(மறு பக்கம் திரும்பி) இதோ இவர்களிடம் இருந்தும் சிலவற்றை அறிவோம்.

(அம்பலவாணர், மீனாட்சி, சிறுமியும் வருகின்றார்கள். கும்பிட்டபடியே)

அம்பலவாணர் : ஐயா நாரதரே!, நீங்கள் வந்திருப்பதை என் மனைவி எப்படியோ அறிந்துவிட்டார். அதுதான் எமது பிள்ளைக்கு உங்களைக் காட்ட இங்கு அழைத்து வந்திருக்கின்றார்.

மீனாட்சி : கும்புடுகிறேன் சாமி. நான் ஊரிலை சின்னப் பிள்ளையா இருந்த காலத்திலை ஒருமுறை ஒரு சினிமாத் தியேட்டரிலை உங்களைப் பார்த்தனான். அதுக்குப் பிறகு இப்பத்தான் பார்க்கிறேன்.

சிறுமி : Who is this man, mum? ஏன் இப்படிக் Half Naked ஆக நிற்கிறார்? உங்களுக்கு இப்போது குளிரவில்லையா? உங்களிடம் வேறு Dresses இல்லையா?

நாரதர் : குழந்தாய், முன்பெல்லாம் எமது தமிழ் மக்கள் வெப்பமான நாடுகளில்தான் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் எல்லாம் இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பா, கனடா என்று வாழ்வதால் எமக்கு அங்கெல்லாம் சென்று

அவர்களுடைய பிரச்சினைகளைக் கவனிக்க முடியாது இருக்கின்றது.

மீனாட்சி : அதுதான் வெளி நாடுகளில் வாழ்பவர்களுக்குள் பிரச்சினைகள் அளவுக்கதிகமாக இருக்கின்றது போலும்! இப்போதுதான் சரியான காரணம் தெரிகின்றது.

அம்பல : அவைகள் எல்லாம் எங்களோடு கூடப் பிறந்தவைகள். ஒருநாளும் எங்களை விட்டுப் போகாது.

சிறுமி : அதற்கு நாங்கள் என்ன செய்யலாம்?

நாரதர் : அதற்காகத்தான் நான் இன்று இங்கே வந்திருக்கின்றேன். ஆனால் நான் இனிமேல் இங்கே வந்து உங்கள் பிரச்சினைகளைத் திர்ப்பதாயின், எனக்கு நீங்கள் எல்லோரும் சேர்ந்து நல்ல உடுப்புக்களும், அதாவது 3 Piece சூட்டும், Transport டிற்காக ஒரு Benz காரும், செலவிற்கெனப் பணமும் தரவேண்டும். அதுவும் Cash ஆகத்தான் வேண்டும்.

சிறுமி : அப்போ, Benz கார் வைத்திருக்கிற எல்லோரும் தேவலோகம் போய் வரலாமா?

அம்பல : கார் வைத்திருந்தால் மட்டும் போதாது. அங்கு போகப் பாதையும் தெரியவேண்டும். தேவலோகம் போகாவிட்டாலும், பொது

இடங்களுக்கு அடிக்கடி போய்விட்டு வருவார்கள்.

நாரதர் : நன்றாகச் சொன்னீர். என்னைத் தவிர இங்கு யாருக்கும் அங்கு போகப் பாதை தெரியாது.

சிறுமி : அப்போ, A-Z இல் கூட இல்லையா?

(இந்நேரம் வேறு இருவர் (சோமு, பாலு) மறுகரையில் வந்து நின்று இவர்களின் பேச்சுக்களைக் கேட்டபடி நிற்கிறார்கள்)

மீனாட்சி : ஐயா, நாரதரே!, நாங்கள் இலண்டனுக்கு வந்த நாள் தொடக்கம் ஒரே கடன். அந்தச் செலவு, இந்தச் செலவு என்று தலை தூக்க முடியுதில்லை. நான் உங்களுக்கு எனது இரண்டு சோடி காப்புக்களைக் கழற்றித் தருகிறேன். நீர் தேவலோகம் சென்றது. எனது வீட்டுக் கஷ்டங்களை அங்கு சொல்லி, இல்லாமல் செய்ய வேண்டும்.

அம்பல : என்ரை அப்பு ஆச்சி தங்கடை ஞாபகமாகத் தந்த காப்புக்கள் இவை. Colour T.V., Computer, Mobile Phone எல்லோரும் வைத்திருக்கிறார்கள். நாமும் வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டால் என்ன செய்வது? அவைகள் எல்லாம் வாங்கி வைத்திருக்கிறார். ஆனால் ஒன்றும் பாவிக்கத் தெரியாது. பேராசை!

சிறுமி : அம்மா, நீங்கள் அவரை Bribe பண்ணுகிறீர்களா? கடவுளுக்கு ஏன் காசு?

மீனாட்சி : பிள்ளை! நீர் அப்படிக் கதைக்கக் கூடாது. கடவுளுக்குக் கொடுக்கும்போது கணக்குப் பார்த்துக் கொண்டு கொடுக்க கூடாது. அப்போதுதான் பலன் கிடைக்கும்.

நாரதர் : நீங்கள், எவ்வளவு கூடப் பணம் கொடுக்கின்றீர்களோ அவ்வளவுக்கு உங்களுக்கு நன்மை கிடைக்கும்.

சோமு : உந்தக் கிழவன் கிழவிக்கு சொந்த மூளை எல்லாம் எங்கே போய்விட்டது? கடவுள் இவ்வளவு காசு தாருங்கோ என்று கேட்டதாக நான் இதுவரையிலே கேள்விப்படவில்லை.

மீனாட்சி : ஐயா, நான் எனது ஒற்றைப்பட்டுச் சங்கிலி யையும் உமக்குத் தருகின்றேன்.

அம்பல : அதுவும் என்னரை ஆச்சியின்ரை சங்கிலி. இன்றோடு எல்லாம் போகப் போகிறது!

சோமு : அந்தக் கிழவியும், கிழவனும் அவரை உண்மையான நாரதர் என்று நம்பி விட்டார்கள் போல இருக்கிறது. இவர் நாரதரோ, அல்லது நல்ல ஏமாற்றுப் பேர்வழியோ தெரியவில்லை.

பாலு : இவரைப் பார்க்க எங்களுடைய ஒரு தூரத்துச் சொந்தக்காரர் மாதிரி இருக்கிறது. கொஞ்சம் இருந்து பார்ப்போம்.

சோமு : நாரதன் கலகம் நன்மையிலேதான் முடியும் என்றுதான் கூறுகின்றார்கள். ஆனால் இன்றைக்கு இந்த நாரதர் கதை பெரிய பிரச்சினையிலேதான் முடியப்போகிறது.

பாலு : நாங்கள் இப்பவே Police இற்குப் போன் பண்ணி விசயத்தைச் சொல்லுவோமா?

சோமு : எதற்கும் Phone பண்ணும். பின்பு பார்த்துக்கொள்வோம். (Phone பண்ணுகிறார்)

அம்பல : நாரதரே!, நீர் இங்கு கிடைக்கும் பணத்தையெல்லாம் எப்படி இந்திரனுடைய சபைக்குக் கொண்டு போவீர்?

நாரதர் : எல்லாவற்றையும் விற்றுவிட்டு, இந்திரனுடைய பெயருக்கு ஒரு Cheque தந்தால் அதனை நேரே சென்று அங்கு அவருடைய கையிலே கொடுப்பேன்.

அம்பல : இந்திரன் சபையிலும் இங்கிலிஸ் Sterling Pounds தான் பாவிக்கின்றார்களோ?

நாரதர் : You are correct. இப்போது அங்கே ஒரு Barclays bank ம் திறக்கலாம் என்றும் யோசித்துள்ளோம்.

அம்பல : இன்னும் கொஞ்சநாள் நீங்கள் இங்கே இருந்தால் அங்கே ஒரு நகைக்கடையும் நீங்கள் திறக்கலாம்.

நாரதர் : (சோமுவையும் பாலுவையும் பார்த்துவிட்டு) அதோ அங்கே என்னைப்

பார்க்கப் பக்தர் கூட்டம் கூடத் தொடங்கிவிட்டது. நீங்கள் உங்களிடம் இருப்பதைத் தந்துவிட்டு போய்விட்டு வருகிறீர்களா?

மீனாட்சி : நீங்கள் இனி எப்போது இங்கே திரும்பவும் வருவீர்கள்?

நாரதர் : திடீரென்று வருவேன் திடீரென்று போய்விடுவேன். சரியான திகதி குறிப்பிட்டுச் சொல்ல முடியாது.

அம்பல : மீனாட்சி, உம்மைப் போல ஆட்களைக் கண்டால் உடனே இங்கே வருவார். அடுத்த முறை வரும்போது உம்முடைய அட்டியலையும், பதக்கம், சங்கிலியையும் கொண்டுவாரும்.

சிறுமி : அப்போ, நீங்கள் வருவதற்கு முன் எங்களுக்குப் போன் பண்ணிவிட்டு வந்தால் நல்லது. (அவர்கள் வணங்கிவிட்டுப் போகின்றார்கள்)

சோமு : மச்சான்! இலண்டனிலே இங்கிலிஸ் கதைக்கிற நாரதரை இண்டைக்குத்தான் காண்கின்றேன்.

பாலு : எங்களிடம் தான் வருகிறார். வரட்டும்.

நாரதர் : (வந்து கொண்டே) சம்போ மகா தேவா!, ஓம் நாராயணா!

சோமு : ஐயா நாரதரே! உங்களை எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறதே!... நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?

நாரதர் : நான் எங்கும் இருப்பேன். எதிலும் இருப்பேன்.

பாலு : இப்போது நீங்கள் இங்கே என்ன Collection க்காக வந்திருக்கின்றீர்கள்?

நாரதர் : நானா? Collection னா? உங்கள் குறைகளைக் கேட்டுக்கொண்டு போய் அங்கே சொல்லிஅவைகளைத் தீர்த்து வைப்பேன்.

சோமு : அண்ணை நாரதரே! இன்னும் கொஞ்ச நேரத்திலே இங்கே, உங்களை அழைத்துக்கொண்டு போக, பெரிய காரும், இரண்டு ஆட்களுக்கும் ஒழுங்கு செய்திருக்கின்றோம். நீங்கள் அதிலே போகலாம்.

பாலு : இதோ அவர்களே வந்துவிட்டார்கள்.

(அப்போது இரு போலீஸ்காரர்கள் வருகின்றார்கள். நாரதர் ஓட முயலுகின்றார். அவரைப்பிடித்து கைவிலங்கு மாட்டுகின்றார்கள்)

நாரதர் : ஐயகோ!, என்ன அநியாயம். என்னை எங்கே கொண்டு போகின்றீர்கள்?

சோமு : ஐயா நாரதரே! நீங்கள் எங்கிருந்து வந்திர்களோ அங்கேதான் கொண்டு போகிறார்கள்.

போலீஸ் 1 : இவர் ஒரு Criminal. சென்ற மாதம் தான் jail லில் இருந்து ரிலீஸ் ஆனவர். ஒரு நல்ல நடிகன். அதுதான் நன்றாக வேஷம் போட்டு, ஆட்களை ஏமாற்றிப் பணம் சேர்க்கின்றார். உள்ள திறமைகளை நல்ல வழிகளிலே செலவு செய்தால், எல்லோருக்கும் நல்லது.

போலீஸ்காரர் 2 : இவர் போல ஆட்களை வெளியிலே விடவே கூடாது. இவர் மட்டுமல்ல அப்பாவி மக்களை ஏமாற்றிப் பணம் சேர்ப்பவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப் படவேண்டும். (போகின்றார்கள்)

சோமு : உந்த நாரதர் எனக்குத் தெரிந்தவர்தான். அவருடைய பெயர் நா. ரதன். அதை நாரதர் என்று மாற்றி வைத்துக்கொண்டு இப்படி வஞ்சகம் இல்லாத ஆட்களை ஏமாற்றுகிறார். இருக்கும் உடம்புக்கு ஒரு பேக்ட்ரரியிலே வேலை செய்தால்கூட நன்றாக உழைக்கலாம்.

பாலு : நல்ல கருத்துக்களைச் சொல்லுவதற்காக எங்களுடைய தமிழ்ப் புராணங்கள்,

இதிகாசங்கள் மட்டுமல்லாமல், மற்றைய மதங்களிலே கூட பல கதைகள் இருக்கின்றன. இவர்கள் போன்ற ஆட்கள் இப்படியாகச் செய்கிறதாலே, இந்த இளம் பிள்ளைகள் பிழையாக விளங்கிக் கொள்ளப் போகின்றார்கள்.

சோமு : எங்களுடைய தமிழ்ப் பிள்ளைகள் கெட்டிக்காரர்கள். யார் என்ன வேஷம் போட்டாலும் எங்கள் தமிழ்ப் பிள்ளைகளை யாரும் ஏமாற்ற முடியாது. எது நல்லது, எது கூடாது என்று அவர்களுக்குத் தெரியும். (சபையோரைப் பார்த்து) நீங்கள் என்ன சொல்கின்றீர்கள்? நான் சொன்னது சரிதானே? எல்லோரும் இருங்கள், நாங்கள் போய்விட்டு வருகின்றோம்.

(எல்லோரும் போகின்றார்கள்)

ஃ திரை ஃ

---

குறிப்பு : இந்த நாடகம் மேற்கு இலண்டன் தமிழ்ப்பாடசாலை மாணவர்களால் மேடையேற்றப்பட்டது.

# "ஞானசம்பந்தர்"

காட்சி-1

இடம் : - பாண்டிய மன்னன் அரண்மனை. (மதுரை)

பாத்திரங்கள் : அரசன் - மாறவர்மன் (கூன்பாண்டியன்), மனைவி - மங்கையர்க்கரசி, தோழி, அமைச்சர் - குலச்சிறையார். இரண்டு காவலாளர்கள். (அரண்மனையில் உலவியவண்ணம் இருக்கின்றார்கள்)

பாண் : அமைச்சரே!. இன்று நான் எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறேன் தெரியுமா? அரச சபையினிலே, அறிவுசார்ந்த மந்திரிகள். தமிழ்க்கவி பாட, புலமை மிக்க புலவோர்கள். அந்தப்புரத்தினிலே அழகோடு, தெய்வ பக்தி கொண்ட தேவி மங்கையர்க்கரசி. இன்னும் தான் வாழவேண்டும் என்று எண்ணாமல், நாம் வாழவேண்டும் என எண்ணி வாழும் என் நாட்டு மக்கள். மனம் பூரித்திருக்கிறேன் மந்திரியாரே!

குல : கேட்பதற்கு ஆனந்தமாகத்தான் இருக்கிறது. ஆனால், தேவியாரின் மனம் சங்கடப் படுகின்றதே மன்னா!

பாண் : அதாவது. நான் சமண சமயத்தை தழுவுகின்றேன். அதனால் மக்களெல்லாம் என்னைப் போல் சமண சமயத்தைத் தழுவி விடுவார்கள். அதனால்

சைவசமயம் தாழ்ந்து போய்விடும் என்று தானே மங்கையர்க்கரசி பயப்படுகின்றார்? என்னைப்போல் தானும் சமணசமயத்தை தழுவினால், எல்லாம் சரியாகப் போய்விடும். அல்லவா?

குல : இதோ தேவியாரே இங்கு வந்துவிட்டார். அவரிடமே இதனைக் கூறிப் பாருங்கள் மன்னா!

மங்கை : (சிறிது தயக்கத்துடன்) அரசே.. தங்களிடம்...ஒன்று கேட்கலாமா?

பாண் : மங்கையர்க்கரசி! நாம் மணம்முடித்த நாளிலிருந்து, எதுவித குறைகளும் விட்டு வைத்தாக எனக்கு ஞாபகமில்லை. இன்று என்ன அப்படி திடீரென்று தேவைப்படுகின்றது.

மங்கை : திங்களை சடையில் அணிந்து, மங்கையொரு பாகனாய், எங்கும் நிறைந்திருக்கும் எமது ஈசன் கருணை, இன்று எமக்குக் கிடைத்திருக்கின்றது.

பாண் : தேவி மங்கையர்க்கரசி! சுற்றி வளைத்துப் பேசாமல், சற்றுப் புரியும் படியாக கூறினால் என்ன?

தோழி : மன்னா! சிறு பாலகனாக இருந்த போதே ஞானப்பால் அருந்தி, சிவஞானம் பெற்ற ஞானசம்பந்தர். தற்சமயம்

திருமறைக்காட்டிலே வந்து தங்கி இருக்கின்றார். அவரை எமது மதுரை மாநகருக்கு வரவழைத்து. சைவ சமயத்தின் பெருமைகளை எல்லாம் எம் நாட்டு மக்களுக்கும் எடுத்துரைக்க, அரசியார் விரும்புகிறார். தங்கள் உத்தரவு வேண்டும்.

மங் : ஆம், அரசே, திருநாவுக்கரசரும், ஞானசம்பந்தரும் திருமறைக்காட்டிலே பதிகங்கள் பாடி, மூடிக்கிடந்த கதவுகளை திறக்கவும், பின்னர் மூடவும் செய்த அற்புதங்கள் எல்லாம் நீங்களும் அறிந்தவை தானே!

பாண் : நாடாளும் மன்னனாகிய நான் சமணத்தை ஆதரிக்கின்றேன். இந்நாட்டு மக்களும் சமணத்தை ஆதரிக்கின்றார்கள். ஆனால் நீங்கள் இருவரும் இங்கு சைவ சமயத்தை ஆதரிக்கின்றீர்கள்! அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் நான் இதனை அநுமதித்தால் சமணத்துறவிகள் என்மீது ஆத்திரம் கொள்ளவும் கூடும். அவரை இங்கே அழைத்து எதற்காக வீணான தொந்தரவுகளை விலைக்கு வாங்கிக்கொள்ள வேண்டும்? எனக்கென்னவோ இது நல்லதாகப் படவில்லை.

குலச் : அரசே! மதம், மக்களை மகிழ்ச்சியோடு வாழவைக்கவே வழிசெய்கின்றது. அதை

விடுத்து, மத்தின் பெயரால் வேண்டாத வினைகளை எல்லாம் வரவழைத்து, வேடிக்கை பார்ப்போருக்கத்தான் வீணான தொந்தரவுகள். வாழ்க்கையும் கசந்துபோய்விடும். வீணான கவலை வேண்டாம். அரசே! எல்லாம் நலமாக நிறைவேற அந்த ஆண்டவன் அருள்புரிவார்.

தோழி : மன்னரும், மங்கையர்க்கரசியாரும் மகிழ்ச்சியுடன் இருந்தால், நாம் மேலும் மேலும் மகிழ்வோம்.

மங் : பால் மணம் மாறாத அந்தப் பாலகனின் பாத மலர்கள். எமது மதுரையிலும் படவேண்டும். கடவுள் அருள் பெற்ற அந்தக் குழந்தையின் குரலோசை எமது காதுகளிலும் கேட்கவேண்டும். அவரை அழைத்துவர இன்றே ஆள் அனுப்ப உத்தரவு தாருங்கள்.

பாண் : பெற்ற திருநாடும். சுற்றமும், கற்றுவந்த தீந்தமிழும், சுகம் பெற, உற்றதொரு வேளை வந்ததென நீ சிந்தை கொண்டதனால், இக்கணமே அவரை அழைத்துவர ஆள் அனுப்புகின்றேன்.

❖❖❖

காட்சி -2

இடம் : (திருமறைக்காட்டுச் சிவன் கோவில்)

பாத்திரங்கள் : திருநாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள்)

ஞான : அப்பரே! என்னை மதுரைக்கு வரும்படி, கூன்பாண்டியனின் தேவி மங்கையர்க்கரசி அம்மையாரிடமிருந்து அடியேனுக்கு அழைப்பு வந்திருக்கின்றது. யாம் சிறிது காலம் அங்கு சென்று வர ஆவல் கொண்டுள்ளோம்.

திரு : (சிறிது யோசித்துவிட்டு) ஐயனே! இப்பொழுது நாளும் கோளும் சரியில்லை. அம்மையாரின் அழைப்பு வந்தாலும், அரசன் கூன் பாண்டியனோ சமணசமயத்தை நேசிப்பவன். அங்கு ஆயிரக்கணக்கில் சமணர்கள் வாழ்கின்றார்கள். சிறுபிள்ளையாகிய நீர், தனியே இப்பொழுது அங்கு செல்வது சரியாக எனக்குப் படவில்லை.

ஞான : சிறுவனான எம்மை, பெரியவனாக மதித்து வரவேற்கின்றார்கள். அன்புடன் வரவேற்கும் போது, அங்கு செல்லாமல் விடுவது அவர்களை அவமதிப்பது போல் அமையாதா, அப்பரே?

திரு : அடேயப்பா!, அறிவில் முதிர்ந்தவர் தாங்கள்தான், அநுபவத்தில் முதிர்ந்தவரும் தாங்கள்தான். தங்கள் காலத்தில் யானும் வாழ்கின்றேன் என்கின்றபோது எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறது தெரியுமா?

திரு : எல்லாம் அவன் செயல். அறிவிலிகளான சமணத் துறவிகள் ஆத்திரத்திலே என்ன செய்வது என்று அறியாது தங்களுக்கு ஏதாவது தீங்கிழைத்து விடுவார்களோ என்றுதான் அஞ்சுகிறேன் ஐயனே!

ஞான : அப்பரே! நீங்களா இப்படிக் கூறுவது? தில்லையிலே நடனமாடும் சிவனின் தொண்டர்களுக்கு எல்லா நாட்களும் நல்ல நாட்களே. நாளும் கோளும் எதுவும் செய்துவிட முடியாது.

திரு : ஈசன் கிருபை இதுவானால், மங்கையர்க்கரசி அம்மையாரின் பூசனையின் பயனும் இதுவானால், ஆலவாயில் ஆட்சிசெய்யும் ஆண்டவனின் ஆசியும் அதுவானால், யாரால் அதைத் தடுக்க முடியும்?

ஞான : (கோவிலை நோக்கி "வேயுறு தோளி பங்கன்" என்ற தேவாரம் பாடுகிறார்)

**"வேயுறு தோளிபங்கன் விடம்உண்ட கண்டன் மிக நல்ல வீணைதடவி**
**மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்து என் உளமே புகுந்தஅதனால்**
**ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி பாம்பு இரண்டும்உடனே**
**ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே."**

திரு : எல்லாம் நலமாக நடக்கட்டும். போய் வாருங்கள்.

❖❖❖

காட்சி 3

இடம் : பாண்டிய மன்னன் அரண்மனை. (மதுரை)

பாத்திரங்கள் : சமணத் துறவிகள் - நால்வர் (அங்குமிங்கும் அவசரமாக நடந்து திரிகின்றார்கள். நடக்கும் போது ஒருவரோடு ஒருவர் இடித்துக் கொள்கின்றார்கள்)

துறவி 1 : தலைவா! (சிறிது கொச்சைப் பேச்சுடன்) விஷயம் தெரியுமா உங்களுக்கு? ஞானசம்பந்தன், அரண்மனைக்கு வரப்போகின்றானாம். அரசனும் அதற்கு அனுமதி அளித்துவிட்டாராம்.

துறவி 2 : (திக்கித்திக்கிப் பேசுதல்) அப்படியா? அவ....அவ...அவனை இங்கே வரவிடக் கூ... கூ... கூ... கூடாது.

துறவி 1 : அந்த சின்னப் பொடிப் பயலுக்கா இவ்வளவு பயந்து நடுங்குகிறீர்கள்? வாடைக் காற்றோடு போய்விடக் கூடியவன். வாயைத் திறந்து, ஏதோ அழகான தமிழில் தேவாரம் பாடிவிட்டானாம்.

துறவி 2 : அவன் ஒரு ஞ....ஞா... ஞானக் குழந்தை, ஈசன் அருள் பெற்ற தெய்...தெய்... தெய்வக் குழந்தை இதுவரையில் எத்தனையோ அ... அ... அற்புதங்கள செய்துவிட்டான். அதனால்தான் பா... பா... பயப்படுகின்றேன்.

துறவி 1 : ஒரு சொல் இன்னும் உருப்படியாக சொல்லத் தெரியாது. புத்திமதி சொல்ல வந்து விட்டார்.

துறவி 3 : தலைவா, இரவோடு இரவாக நான் அங்கு சென்று, அந்தப் பொடிப்பயல் இருக்கும் மடத்திற்கு தீ வைத்து அதனை இருந்த இடம் தெரியாது செய்துவிட்டு வருகின்றேன் உத்தரவு கொடுங்கள்!

துறவி 4 : இவர் என்ன அரசனிடம் உத்தரவு கேட்பது போல் கேட்கிறார். பொடிப்பயலின் மடத்துக்கு தீ வைக்க உத்தரவு வேண்டுமா? நானே உத்தரவு தருகிறேன். போய் விரைவில் வா.

துறவி 1 : இது மன்னருக்குத் தெரிந்தால்?

துறவு 2 : மன்னருக்கு இ... இ.... இது, தெ.... தெ.... தெரியக்கூடாது. ஆ..... ஆ.... அதுதான் ச.... ச.... சரியான வழி நீ போ... போ... போய்.... வா.....!

(போகின்றார்கள்)

*மடம் தீப் பற்றி எரிதல், பாண்டியனுக்கு வெப்பு நோய் வருதல் எல்லாம் திரை மறவில். ஒலி, ஒளி அமைப்புக்களைக் கொண்டு செய்து காட்டுதல் வேண்டும்.*

❖❖❖

காட்சி 4

இடம் : பாண்டிய மன்னன் அரண்மனை. (மதுரை)

பாத்திரங்கள் : அரசன் - மாறவர்மன் (கூன்பாண்டியன் - படுக்கையில்) மனைவி - மங்கையர்க்கரசி, அமைச்சர்- குலச்சிறையார், இரண்டு காவலாளர்கள், சமணத்துறவிகள்.

பாண் : மந்திரியாரே என்னால் வேதனை பொறுக்க முடியவில்லை. என் குடல்கள் எல்லாம் தீப்பற்றி பற்றி எரிவது போல் இருக்கின்றது.

குல : மன்னா! இது சாதாரண நோயாக எனக்குத் தெரியவில்லை. இப்படி ஒரு நோயை நான் என் வாழ்நாளிலே கண்டதில்லை. இதில் ஏதோ சூது இருக்கின்றது.

மங் : அரசே! கள்ளங் கபடமற்ற அந்தப் பாலகன் தங்கியிருந்த அந்த மடத்திற்கு தீ வைத்து நாசம் செய்து விட்டார்கள் இந்த சமணத் துறவிகள். அதற்கான தண்டனைதான் இது. அந்த ஞானசம்பந்தரால்தான் இந்த நோயைக் குணப்படுத்த முடியும். நான் இப்போதே சென்று ஞானசம்பந்தரை அழைத்து வர உத்தரவு இடுங்கள்.

பாண் : யாரையாவது கூட்டி வந்து என்னைக் குணமாக்கி விடுங்கள். என்னால் பொறுக்க முடியவில்லை.

மங் : நான் இப்போதே சென்று அவரை அழைத்து வருகின்றேன். (போகிறார்)

துறவி 1 : அரசே, வேண்டாம்! இன்னும் ஒரு நாள் அவசகாசம் கொடுங்கள். அதற்கிடையில நிச்சயம் உங்களைக் குணப்படுத்தி விடுவோம்.

பாண் : (சிறிது கோபத்துடன்) இரண்டு நாட்களாக நீங்கள் செய்த பரிகாரங்களால் என் வேதனை கூடியதே ஒழியக் குறையவே இல்லை. உங்களை நம்பி நான் பட்ட துன்பம் போதும். இனி ஒருகணமும் என்னால் பொறுக்க முடியாது.

(சமணத்துறவிகள் மயில் இறகுகள் கொண்டு அரசனின் உடம்பை தடவிக் கொண்டு இருக்கின்றார்கள்.)

(சபையில் ஞானசம்பந்தர் வருகிறார். குலச்சிறையாரும் மங்கையர்க் கரசியாரும் கைகூப்பி வணங்குகிறார்கள்.

(சமணத்துறவிகள் மறுபக்கம் முகத்தை வைத்துக்கொண்டு நிற்கிறார்கள்)

ஞான : வணக்கம் மன்னா! வணக்கம்! ஓம் நமசிவாய! ஓம் நமசிவாய!

பாண் : ஐயனே! அடியேன் தெரிந்தோ தெரியாமலோ ஏதாவது தவறு செய்திருந்தால் என்னை மன்னித்தருள வேண்டுகிறேன்.

ஞான : தில்லையிலே ஆடுகின்ற அந்த ஆண்டவன் தன் கருணைக் கண் திறந்து அருள்புரிவாராக.

துறவி 2 : ஆ...ஆ...ஆ... ஆண்டவன். எ..எ..எந்த ஆண்டவன்? எ.எ... எங்கள் ஆண்டவன்தான் பெரிய ஆ...ஆ... ஆண்டவன்.

துறவி 3 : அரசே! தில்லையுமில்லை, கொல்லையுமில்லை. ஏதோ மந்திர வித்தைகளைக் கொண்டு மக்களை மயக்கி வருகிறான் இந்தப் பொடிப்பயல். இவனா உங்களைக் குணமாக்கப் போகிறான்?

குல : ஆண்டவன் அடியார்களுக்கு அவன், இவன் என்ற வாக்குவாதங்கள் தேவையே இல்லை. உள்ளத்திலே உண்மையான பக்தி இருந்தால், பேசும் வார்த்தைகளில் பரிவு, பாசம் தானாகவே வரவேண்டும்.

மங் : (ஞானசம்பந்தரை நோக்கி வணங்கியபடி) பெருமானே! அன்னை உமையவளிடம் பாலோடு. சிவஞானத்தையும் பெற்ற "ஞானசம்பந்தப் பெருமானே!" தங்கள் வருகையால் இந்தப் பூமி புண்ணிய பூமியாகிவிட்டது. பார்வதியும் -பரமசிவனும் பொய் என்றும், பரமனின் பக்தர்கள் பித்தர்கள் என்றும் பேசித் திரிவோர்கள் செய்யும் பித்தலாட்டங் களால், நாம் படும் பாடு கொஞ்சமல்ல.

தோழி : பெருமானே!, எமது அரசப் பெருந்தகையின் அவலத்தைப் போக்கி அருள வேண்டுகிறேன்.

துறவி 4 : (சிறிது கோபத்துடன்) அரசே! நாம் இதுவரை செய்த மருந்துகளினால் இந்தப் பக்கம் சூடு சிறிது தணிந்துள்ளது. இவரை அந்தப்பக்கத்தை சுகமாக்கும்படி கூறுங்கள். இது எங்கள் பக்கம்!.. ஆமாம்!

(இன்னொரு துறவி தொட்டுப் பார்த்துவிட்டு இல்லை எனத் தலை ஆட்டுகிறார்)

மங் : அந்தப் பக்கம், இந்தப்பக்கம் என்று பிரிக்காமல், அரசரின் வியாதியைச் சிக்கிரம் குணமாக்கிவிடுங்கள்.

ஞான : தாயே! அவர்கள் விருப்பப் படியே செய்வோம்.

துறவி 1 : சரி பார்ப்போம்.

ஞான : (பாடுகிறார்)

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவ்து நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆல வாயான் திருநீறே.

பாண் : ஐயனே! எனது வலப்பக்கமோ. வைகைக் கரை போல் குளிர்ந்துவிட்டது, (வேதனையுடன்) ஆ! எனது இடப்பக்கமோ

இடைவிடாது எரியும் எரிமலை போல இன்னமும் கொதிக்கின்றதே!

துறவி 2 : என்னது? (சிறிது தொட்டுப் பார்த்து, கையை உதறுதல்)

மங் : ஞானசம்பந்தரே! எமக்கு அருள்வழி காட்ட வந்த இளையவரே! அரசரின் முழுநோயையும் நீங்களே நீக்கியருள வேண்டும்.

ஞான : (மறுபக்கம் சென்று பாடுகிறார்)

*முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு*
*சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு*
*பக்தி தருவதுநீறு பரவ இனியது நீறு*
*சித்தி தருவது நீறு திரு ஆலவாயான் திருநீறே.*

பாண் : (நோய் குணமாகி எழுகிறார். இதனைப் பார்த்து சமணத் துறவிகள் மெதுவாக நழுவி ஒடுகின்றார்கள். அரசன் ஞானசம்பந்தரை வணங்குகிறார்)

ஞானசம்பந்தப் பெருமானே! மாயை இருளில் முழ்கி, தீய சக்திகளின் வசமாகி இருந்த எம்மை, பாசமெனும் படகேற்றி, கரைசேர்த்து, அறிவூட்டினீர்கள். இதுவரை எமது சைவ சமயத்தின் பெருமையை அறியாது வாழ்க்கையை வீணாக்கி விட்டேன். இனிமேல் சைவ சமயத்தின் பெருமையை உலகம் எங்கும் பரப்ப

வழிசெய்வேன். என் நாட்டு மக்கள் எல்லாம் சைவ நெறிகளைப் பின்பற்றி பயன்பெறவும் வழி செய்வேன். எனது பிழைகளை மன்னித்து அருள்புரிய வேண்டுகிறேன் ஐயனே!..

(அரசனும், மங்கையர்க்கரசியாரும், தோழியும், குலச்சிறையாரும் ஞான சம்பந்தரை வணங்கியபடியே நிற்கின்றார்கள்)

(பின்னணியில்)

**மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு**
**தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு**
**செந்துவர் வாய்உமையங்கன் திருஆல வாயான் திருநீறே.**

ஃ திரை ஃ

# அப்பு இலண்டனிலே

(நகைச்சுவை நாடகம்)

*துரையப்பா, சரஷ்வதி - துரையப்பாவின் மனைவி, சுப்பையா, தங்கம் சுப்பையாவின் மனைவி, தில்லையம்பலம், பரிமளம் - தில்லையம்பலத்தின் மனைவி, மயூரன் - துரையப்பா, சரஷ்வதியின் மகன், சிந்து - துரையப்பா, சரஷ்வதியின் மகள், வேலு - நண்பர், குமார் - நண்பர், கண்ணன் - நண்பர், சண்முகம், பரமேஸ்வரி - சண்முகத்தின் மனைவி*

காட்சி -1

*பாத்திரங்கள் - (இலண்டன்) சுப்பையா, தங்கம், தில்லையம்பலம், பரிமளம், (யாழ்ப்பாணம்)துரையப்பா, சரஷ்வதி, மயூரன்.*

*இடம் : சுப்பையா வீடு (இலண்டன், ஊர்வசி - பாடல் பாடுவது கேட்டுக் கொண்டு இருக்கிறது*

தங்கம் : உங்கை என்ன தனிய இருந்து என்ன நடக்குது? நான் எவ்வளவு நேரமா இங்கை வரச்சொல்லிக் கூப்பிடுகிறன். இப்ப ஊர்வசிதான் இல்லாத குறை. உந்த பாட்டை நிப்பாட்டிப் போட்டு இங்கை ஒருக்கா எழும்பி வாங்கோ. வயது போகப் போகத்தான் இளமை திரும்புது!

சுப்பையா : என்னப்பா, என்ன வந்திட்டிது இப்ப? ம்! நான் ஒரு இடத்திலை, ஒரு கொஞ்ச நேரம் இருந்து, அருமையா ஒரு பாட்டுக் கேட்டாப் போச்சு. அதிலை ஒரு பொம்பிளை யின்னரை பேர் வந்திட்டா இங்கை இருந்த பாடில்லை. இப்ப என்ன வேணும் உமக்கு?

தங்கம் : எனக்கொண்டும் இப்ப வேண்டாம். நல்லவேளை, ஆடி ஆடிப் பாடேல்லை. நீங்கள் எந்தக்கிழவியளின்ரை பாட்டையாவது கேளுங்கோ. இப்ப எழும்பி ஒருக்கா உந்தக் 'hoover' ஐப் போட்டு, எல்லாத்தையும் ஒருக்கா துப்புவாககி விடுங்கோ.

சுப் : என்ன விசேஷம் இண்டைக்கு? வர வர எனக்கு எதுவும் சொல்கிறதில்லை. வீட்டு வேலைகள் செய்ய மட்டும் தவறாமல் கூப்பிட்டிடும்.

தங்கம் : பரிமளக்காவை அரை மணித்தியாலத்திலை இங்கை வாறமெண்டு போன் பண்ணினா. அதுதான். (சற்று அழுத்தமாக) நான் இப்ப ஒண்டும் கதைக்க முடியாது. எதுக்கெடுத்தாலும் முதல்லை சண்டைதான். நாற்பது வயது வந்தா நாய்க்குணமும் வரும் எண்டு சொல்லுவினம். இப்ப ஐம்பது வயது! வந்தா என்ன குணம் வரும் எண்டு ஒருக்கா அறியத்தான் வேணும்.

சுப் : நாற்பது வயது வந்தா நாய்க்குணமும் வரும், நல்ல குணமும் வரும். சொல்லிறதை கொஞ்சம் அன்பா. தன்மையாகச் சொன்னா, செய்ய முடியாத வேலை எண்டாலும் செய்ய ஆசையாக இருக்கும். சும்மா வள். வள், எண்டு விழுந்தா என்னெண்டு மனம் வரும்? ம்.

தங்கம் : பாத்திங்களே, இப்பதான் நாய்க்குணம் எண்டு சொன்னனான். அதுக்கிடையிலை வந்தவள் எண்டு தொடங்கியாச்சுது.

சுப : இங்கை பாரும். இங்கை ஆட்களைவிட நாயள், பூனையளுக்கு நல்ல மதிப்பிருக்குது.

தங்கம் : அப்ப இனிமேல் நான் உங்களுக்கு TIN இருக்கிற இலை இருக்கிற சாப்பாடு நேரத்துக்கு நேரம் தந்து, இடைக்கிடைக்கும் Park ம் கூட்டிக் கொண்டு போய்விடட்டே?

சுப் : கொஞ்சம் இடம் குடுத்தா, கழுத்திலை கயிறுபோட்டு உந்த தூணிலை கட்டி விடுவீர் போலை இருக்கு.

தங்கம் : இனி அது ஒண்டுதான் இல்லாத குறை.

சுப் : சும்மா கதையை மாத்தாதையும். அந்த நாளிலே. இங்கை வந்த புதுசிலை. அங்காலை இங்காலை போக விடமாட்டியள். கதைக்க கதைக்கத் தேன் ஒழுகும். இப்ப என்னோடை அன்பா, ஆசையா ஒரு சொல்லு... ம்... கதைக்கிறதே அத்தி பூத்த மாதிரி. ஆட்களுக்கு முன்னாலைமட்டும் அத்தான், குட்டான் எண்டும் மாயம் போட்டுக்கதையும்.

தங்கம் : உங்கை இருந்து சும்மா பழங்கதையள் கதைச்சு என்னை மருட்டாமல், எழும்பி வேலைகளைச் செய்யுங்கோ. இப்பவும்

உங்களுக்கு இருபத்தைஞ்சு வயதே நான் முந்தின மாதிரி வழ வழவெண்டு கதைக்க?

சுப் : ஒகோ, அப்பிடியே சங்கதி? என்னை இப்ப அரைக்கிழவன் ஆக்கியாச்சுப்போலை இருக்குது.

தங்கம் : அரைக்கிழவன் இல்லை, இப்ப முழுக்கிழவன்தான்? (இந்நேரம் கதவு மணி அடிக்கின்றது)

தங்கம் : (அவசரமாக) அவை வந்திட்டினம் போல இருக்குது. எழும்பி கதவையாவது திறந்து விடுங்கோவன். எங்கடை வீட்டைப்பாத்து சிரிக்கப் போகினம்.

சுப் : ஆட்கள் வந்தா மட்டுந்தான் வீடு துப்பரவாக்கிறது. நான் மட்டும் எந்தக் குப்பையுக்கையும் இருக்கலாம்.

(மறுபடியும் மணி அடிக்கிறது)

தங்கம் : இனி ஆக்களைக் கண்ட உடனே உசார் வரப்போகுது. விடியக் காலத்தாலை என்னோடை சும்மா கொழுவிறதை விட்டிட்டு, போய்க் கதவைத் திறந்து விடுங்கோ. வருஷம் பிறந்து முன்னம் முன்னம் வீட்டை வருகினம், அதுக்குள்ளை இங்கை எத்தினை பிரச்சினையாக்கிடக்குது.

சுப் : இதை முன்னுக்கே சொல்லி இருந்தா, இவ்வளவு பிரச்சினையும் வந்திராது. பரிமளத்தையும் பாத்து எத்தனை நாளாச்சு. வரட்டும்.

(எழுந்து போய்க் கதவைத் திறந்து விடுகிறார்)

தங்கம் : வாங்கோ, வாங்கோ.

சுப் : வருஷம் பிறந்து எவ்வளவு நாளாச்சு. இப்பத்தான் நேரம் கிடைச்சுதோ

பரி : இங்கை நேரம் போறதே தெரியாது. அதுக்கிடையிலை ஆறு மாதம் போட்டுது.

தில்லை : என்ன மணி அடிச்சது உங்களுக்கு கேக்கேல்லையே? கதவைத் திறக்காமல் இரண்டு பேரும் உங்கை என்ன செய்தனீங்கள்? தங்கத்தின்ரை சத்தம் எல்லாம் வெளியிலை கேட்குது.

தங்கம் : நாங்கள் இரண்டு பேரும்தான் கதைச்சனாங்கள். என்னெண்டு என்னரை சத்தம் மட்டும் வெளியிலை கேட்டுது?

சுப் : உம்மடை "Pitch" கொஞ்சம் கூடத்தானே. சும்மா இரும். உதிலை நிண்டு ஆராய்ச்சி செய்யாமல் வீட்டுக்கை வந்த ஆட்களை இருக்கச் சொல்லும்.

பரி : இல்லைப் பாருங்கோ, இவருக்கு இப்ப கொஞ்ச நாளா, ஆரேன் பெம்பிளையன் கதைச்சா கூடக்கேக்குது என்ன தங்கம், சுப்பையா அண்ணையோடை ஏதும் சண்டையே?

தங்கம் : அப்பிடிப் பெரிசா ஒண்டும் இல்லை அக்கா. ஒருக்கா உந்த வீட்டைத் துப்பரவாக்கிவிடச் சொல்ல அவருக்குக்

கோபம் வந்திட்டுது. அவற்றை ஊர்வசியைக் குழப்பிப் போட்டனாம்.

பரி : எங்கடை இவருக்கும் இப்ப ஏதும் வேலை செய்யச் சொன்னா இடைக்கிடை பிடிக்குதில்லை. எல்லாம் நான் குடுத்த இடம். அது சரி என்ன ஏதோ பலகாரம் செய்யப் போறீங்கள் போலை இருக்குது. என்ன விசேஷம்?

சுப் : என்னுடைய தங்கச்சி சரசுவுக்கும் - துரையப்பர் மச்சானுக்கும் இலண்டனுக்கு வர "விசா" கிடைச்சிடும். அவை உதாலை கனடாவுக்குப் போகினம். அவையின்ரை மூத்த மகளுக்கு கலியாணம் எல்லே. போற வழியிலை எங்களையும் பாத்துக் கொண்டு போகலாம் எண்டு வருகினம்.

தங்கம் : ஓமக்கா, சில வேளை அடுத்தடுத்த கிழமையிலை இங்கை வந்தாலும் வருவினமாம். அது தான் கொஞ்ச பலகாரம் செய்து வைப்பம் எண்டு தொடங்கினான். அதுக்கிடையிலை இங்கை எத்தினை பிரச்சினையாக் கிடக்குது.

தில்லை : உம்மடை தங்கச்சியைத்தானே தங்கத்தின்ரை அண்ணர் துரையப்பா முடிச்சது?

தங்கம் : அதாலை தானே இவ்வளவு பிரச்சினைகளும். அங்கை அண்ணை ஏதேன் உறுக்கிக் கதைச்சா இந்த அண்ணைக்கு, உடனை இங்கை

"எக்ஸ்பிரஸ்" லை கடிதம் வரும். ஒரு நாளும் ஒண்டுக்கை ஒண்டு முடிக்கப்படாது.

பரி : ஒண்டுக்கொண்டு உதவியா இருக்கிறதுதானே. இப்ப அப்படி செய்த படியாலை தானே அவையளும் இங்கை வந்து நிக்க வசதியா இருக்குது.

சுப் : அங்கைதானே பிரச்சினை இருக்குது. மச்சாளுக்கும் - மச்சாளுக்கும் இடைக்கிடை தான் ஒத்துவரும். அதோடை துரையப்பர் மச்சான் கொஞ்சம் தண்ணி பாவிக்கிறவர். கொஞ்சநாளா அங்கத்தே பிரச்சினையளாலை விட்டிட்டு இருக்கிறார். இங்கை வந்து பழையபடி தொடங்கினால் பிறகு நான் தான் தொடக்கி விட்டனான் எண்டெல்லே வந்திடும்.

தங்கம் : என்ரை அண்ணை அப்பிடி ஒண்டும் செய்ய மாட்டார். நீங்கள் உங்கடை தங்கச்சியின்ரை வாயைக் கொஞ்சம் அடக்கச் சொன்னால் காணும்.

தில்லை : நல்லாத்தான் இருக்கப் போகுது போலை இருக்கு. இஞ்சேருங்கோ நான் சொல்கிறன் எண்டு கோவிக்காதையுங்கோ. அவை இங்கை வந்தாப்போலை. புறம்பா எங்கினையேன் தூரத்திலை ஒரு அறை எடுத்துக் குடுத்து விடுங்கோ. கிட்ட இருந்தாத்தான் கரைச்சல்.

பரி : என்னெண்டு அவையளைத் தனிய விடுகிறது? அவையள் இங்கிலீசும் நல்லாக் கதைக்க மாட்டினம். இடங்களும் புதிசு. சும்மா உதுகளைக் கிளறி விடாமல் இருங்கோ. உங்களுக்கு வேறை வேலையில்லை.

சுப் : நீர் சொல்லிறது சரிதானப்பா. தூர இருந்தா தான் ஆசையும் கூட இருக்கும்.

தங்கம் : இங்கே உந்த எண்ணம் இருந்தா, இப்பவே ஒரு அறையை எடுத்துக்கொண்டு "ரெடி"யா இருங்கோ. உங்கடை தங்கச்சி வந்த உடனை அண்ணனும் தங்கையுமா போய் அங்கை இருங்கோ. நான் என்ரை அண்ணையோடை இங்கை இருப்பன்.

சுப் : "விசா"க்கிடைச்ச உடனேயே இப்பிடி எண்டா, இங்கை வந்தா நான் வெளியிலை போலைதான் கிடக்குது.

தில்லை : அல்லது போனா நான் இன்னொரு "ஐடியா" சொல்றன்.

பரி : சும்மா இருங்கோ உங்கடை "ஐடியா"வும் நீங்களும். வருஷப்பிறப்புக்கு வந்திருந்து "ஐடியா" க்கொடுக்கிறார். பரிமளம், வாரும் நான் கொஞ்சநேரம் உமக்கு பலகாரம் சுட உதவிசெய்து போட்டுப் போறன்.

(பரிமளமும் தங்கமும் உள்ளே போகின்றார்கள். போனபின்)

சுப் : பாத்திரோ எங்கடை விதியை? அந்த நாட்களிலை ஊரிலை இருந்து விதம் விதமா பலகாரங்கள் எல்லாம் வரும். இப்ப என்னடா எண்டா, இங்கை இருந்து தான் பலகாரங்கள் செய்து அனுப்ப வேணும் போல இருக்குது.

தில்லை : நாங்களும் ஆம்பிளையள் எண்டு இருக்கிறம். எங்களைக் குட்டி இருத்திப் போட்டு அவையள் குசினியுக்கை போகினம் மிச்சம் கதைக்கிறதுக்கு.

சுப் : ம்ம்! உமக்கு விசயம் தொரியாது பாரும், இப்ப நான் கொஞ்சம் உறுக்கிக் கதைக்காமல் விட்டிருந்தா, மனிசி என்னை இப்ப முறுக்குப் புழியச் சொல்லி கூப்பிட்டிருக்கும். நீங்கள் இருக்கிறீங்கள் எண்ட துணிவிலை தான் அப்பிடிக் கதைச்சனான். அதுமட்டுமில்லை. இடைக்கிடை கொஞ்சம், கொஞ்சம் உறுக்கி வைக்க வேணும். இல்லையெண்டா, பிறகு அதுகள் ஊரிலை இருந்து இங்கை வர மனிசி பிச்சுப் பிடுங்கிப் போடும் பாரும்.

தில்லை : நீர் மட்டுமில்லை, நானும் உம்மடை தையிரியத்திலைதான் அப்பிடிக் கதைச்சனான். உமக்குத் தெரியும்தானே என்ரைமனிசியின்ரை குணம். எந்த நேரத்திலை மனிசி தொங்கிப் பாயும் எண்டு தெரியாது. நான் உள்ளதைச் சொல்லிடுறனப்பா, இப்ப மனிசியோடை

வீட்டுக்கை தனிய இருக்க கொஞ்சம் பயமாய் இருக்குது. ஆளும் பூதம் மாதிரி.

சுப் : எனக்கும் கொஞ்ச நாள் அப்பிடித்தான் இருந்திது. ஆனால் இப்ப பழகி விட்டுது. அவை எப்பிடித்தான் உறுக்கிக் கதைச்சாலும், ஒருக்கால் கோவிச்சுக் கொண்டு வீட்டை விட்டிட்டு போகப் போறன் எண்டு சொல்லிப்பாரும், பிறகு மூச்சுக் காட்ட மாட்டினம்.

தில்லை : உதெல்லாம் என்ரை ஆளிலை வாய்க்காது. மனிசி இதுதான் சாட்டெண்டு சிலவேளை போம் எண்டு சொல்லிவிட்டா நான் என்ன செய்யிறது? எங்கை போறது? என்னத்துக்கு வாயைக் குடுத்து வில்லங்கத்தை விலைக்கு வாங்குவான். சின்ன வயதிலை, என்ரை சாதகத்தைப்பாத்து, எனக்கு பின்னடிக் காலத்திலை, ஒரு பொம்பிளையாலை பிரச்சினை வரலாம் எண்டு சொன்னவை. அது இப்ப அடிக்கடி ஞாபகம் வருகுது.

சுப் : உமக்கு மட்டுமில்லை, இங்கை அனேகமான ஆட்களுக்கு அப்பிடித்தான் இருக்கு. நான் சாதகம் பாக்காமலே சொல்லுவன், எனக்கும் அப்பிடி ஒரு குறை இருக்குதெண்டு.

தில்லை : ஊரிலை எண்டா, உவையளை வயோதிபர் மடத்திலையாதல் கொண்டு போய்விடலாம். இங்கை என்ன

செய்யிறது? அதுசரி, எப்ப துரையப்பாவும், சரசுவும் இங்கை வருகினம்? அவையோடை யாதல் சேர்த்துவிடுவம்.

சுப் : அவையள் இனிக் கொழும்புக்கு வந்து "போன்" பண்ணினால்தான் எல்லாம் விபரமாத் தெரியும். அங்கை இப்ப என்ன செய்யினமோ தெரியேல்லை.

தங் : (வந்துகொண்டே) இரண்டு பேரும் எழும்பி இங்கை வாங்கோ. வேலையில்லாத குணம் தானே இரண்டு பேருக்கும். எங்களை வயோதிபர் மடத்திலை விட்டிட்டு, நீங்கள் எங்கை போகப் போறீங்கள்? இங்கை அரிசிமா முடிஞ்சு போச்சு. நீங்கள் போய் எங்கடை வேலுவின்ரை கடையிலை சிவத்தைப் பச்சை அரிசிமா வாங்கிக்கொண்டு வாங்கோ.

பரி : நீங்களும் போட்டு வாங்கோ. சும்மா இருந்து உளைவெடுக்காமல் உதாலை நடந்து போட்டு வாங்கோ.

தங் : ஓமக்கா உதுதான் சரி. நல்லா நடந்து போட்டு வரட்டும்.

சுப் : தங்கம், நாளைக்கு எனக்கு சீனன் தைலம் போட்டுத் தடவ ஆயத்தம் எண்டால், நாங்கள் நடந்து போட்டு நாளைக்கு வாறம்.

தில் : பரிமளம் உமக்கும் சேத்துத்தான் சொல்லிறம்.

பரி : அப்ப ஒருக்கா, அங்கைபோய் சீனன் தைலத்தையும் வாங்கிக் கொண்டு வாங்கோ.

தில் : என்ரை சாதக பலன் சரி போலைதான் இருக்குது.

(இந்நேரம் தொலை பேசி மணி ஒலிக்கிறது)

தங் : ஆரது அண்ணையோ கதைக்கிறீங்கள்? கொழும்பிலை இருந்து கதைக்கிறீங்களோ? என்ன சொல்லிறீங்கள்? ஒண்டும் கேக்கேல்லை. திருப்பிச் சொல்லுங்கோ....

❖❖❖

காட்சி - 2

(யாழ்ப்பாணம் - துரையப்பா வீடு)

(துரையப்பா கொழும்பிலிருந்து திரும்ப வருகிறார். தள்ளாடியபடி வருகிறார்.)

மயூரன் : அம்மா!, இங்கை பாருங்கோ அப்பு தள்ளாடிக் கொண்டு வாறார். கொழும்பிலை ஆரேரா அடிச்சுப் போட்டினம் போலை இருக்குது.

சரஷ்வதி : இதென்ன இந்த மனிசன் இந்த நேரத்திலை எங்கையோ போய்க் குடிச்சிட்டு வாறார் போலை இருக்குது? இலண்டனுக்குப் போறதுக்கு இன்னும் ஒரு கிழமைதான்

இருக்குது. எல்லா ஒழுங்குகளையும் செய்து போட்டு வாருங்கோ எண்டால், உங்கை என்ன செய்து போட்டு வாறார்?

மயூரன் : அப்பு இலண்டனுக்குப் போற கவலையிலைதான் கொஞ்சமாக் குடிச்சிட்டு வாறார் போலை இருக்குது.

சரஷ்வதி : என்ன இலண்டனுக்குப் போற மெண்ட கவலையோ? கொப்பருக்கோ? சும்மா அப்பருக்காக உதிலை நிண்டு "சப்போட்" பண்ணாமல் நில்லும். எனக்கு எத்தினை வேலை இருக்குது. ஏதேன் வேலை கிடந்தால்தானே. அண்ணருக்கும் மச்சாளுக்கும் ஏதேன் செய்து கொண்டு போய் குடுக்கலாம் எண்டு நினைச்சன்.

துரையப்பா : (துரையப்பா பாடிக்கொண்டு வருகிறார்) "அந்த அராலிக் கடையோரம் என சரசைக் கண்டேனே" சரசு... என்ரை சரசு... என்னப்பா பேசாமல் நிக்கிறீர்? என்னைக் காணேலையே எண்டு தவிச்சுப் போனீரோ என்னப்பா நாலு நாளையுக்கை கறுத்துப் போனீர்? நான் கொழும்பாலை யெல்லே வாறன். எத்தினை வருசத்துக்குப் பிறகு என்ரை தங்கச்சியோடை "போன்" பண்ணிக் கதைச்சுப் போட்டு வாறன் தெரியுமே

சரசு : என்ன ஒரே பாட்டாக் கிடக்குது? உங்கை என்னவெல்லாம் நடத்திப்போட்டு வாறியள்? நான் இங்கை வீட்டுக்கை

இருக்கிறன், ஆரைப் பாத்திட்டு இப்ப உந்தப் பாட்டெல்லாம் பாடுப்படுகுது?

மயூ : அப்பு, நீங்கள் பாட்டைப் பிழையா பாடுறீங்கள்.

துரை : டேய் தம்பி, சும்மா இரடா. நான் எத்தினை புதுப்பாட்டுக்கள் கொழும்பிலை கேட்டிட்டு வாறன் தெரியுமோ. நாங்கள் பாடாத பாட்டோ? சரசு, ''சரசு டார்லிங்'' எங்கையப்பா நிக்கிறீர்? இங்காலை வாரும். இங்கே, இவ்வளவு நாளும், நீர் கொஞ்சம் நிறம் குறைவெண்டு எனக்கு ஒரு கவலை. இனி நான் அதைப்பற்றிக் கவலைப்பட போறதில்லை. ஏன்? ஏன் எண்டு கேக்கேல்லை, இனிமேல் எங்களுக்கு இலண்டன், கனடா தானே சிவியம்தானே. நீர் இங்கை திரும்பி வரயுக்கை, நிறத்திலை, உந்த வெள்ளைக்காரர் எல்லாம் தோத்துப்போவினம்.

சரசு : இங்கே, குடிச்சா, சும்மா பேருகளையும் மாத்தி, வாயிலை வந்தபடி கதையாதையுங்கோ. பேரப்பிள்ளையளைக் காணிற வயதிலைதான் "கலர்" சரியில்லை எண்டு கொண்டு.

துரை : "விசா" கிடைச்ச சந்தோஷத்திலை ஒரு சின்ன தண்ணி அடிச்சனான். அங்கைபோய் அந்த வெள்ளைக் காரங்களுக்கு முன்னாலை என்னெண்டு உம்மைக் கூட்டிக்கொண்டு போறது எண்டு

ஒரு கவலை. ஒரு சொல்லு இங்கிலீசும் கதைக்கத் தெரியாது.

மயூ : அப்பு, எதுக்கு இப்ப இங்கிலீஸ்? எங்கடை ஆட்கள் கனபேர் இப்ப அங்கை இருக்கினம். உங்களுக்கு "விசா" கிடைச்ச நாளையிலை இருந்து அம்மா இங்கிலீஸ் படிக்கிறாதானே. (சிறிது நளினத்துடன்) கொஞ்சம் தமிழ் படிச்சுக்கொண்டு போனாலும் பரவாயில்லை.

துரை : உதுதான் எனக்குப் பிடிக்கிறதில்லை. நானும் கொம்மாவும் கதைக்கேக்கை ஆர் உன்னைக் குறுக்கே வரச்சொன்னது? நாங்கள் புருஷன் - பெண்சாதி பலதையும் கதைப்பம். நீ உள்ளை போய் படி. கொம்மா இங்கிலீசு படிச்சு..., நாங்கள் இலண்டனுக்குப் போய்.. "வடலி வளத்துக்கு கள்ளுக் குடிச்ச" மாதிரி. நல்லாத்தான் இருக்கும். இது இந்த ஜென்மத்திலை நடக்கிற காரியமே

சரசு : பழமொழியிலை கூட குடிக்கிற வசனம் தான். இப்பத்தைப் பிள்ளையளுக்கு உலக அறிவு கூட. அவன் சொல்கிறதையும் கொஞ்சம் கேளுங்கோ.

துரை : தம்பி மதூ... மயூ (தனக்குள்) இப்பத்தைப் பிள்ளையளுக்கு பல்லுடையிற பெயர்களையும் வைச்சு... தமிழோ, இங்கிலீசோ எண்டுகூட தெரியுதில்லை. டேய் தம்பி, நீ போய் ஒரு இங்கிலீஷ்

பேப்பர் வாங்கிக் கொண்டுவா சரசு, உந்த றேடியோவிலை இங்கிலீஷ் மீற்றரைப் பிடியும். இண்டையிலை இருந்து என்னோடை ஒருத்தரும் தமிழை கதைக்கக்கூடாது. என்ன!.

சரசு : போய் என்னத்தை எண்டால் என்ன பிடியுங்கோ. நீ இங்கிலீஷ் பேப்பரையும் வாங்கிக் கொண்டு ஒரு வெள்ளைக் காரனையும் கூட்டிக்கொண்டு வா. வாசிச்சு விளங்கப்படுத்த. இல்லாட்டா இண்டையிலை இருந்து பட்டினிதான்.

துரை : மூச்சு! உங்கை ஒருத்தரும் மூச்சுக் காட்டக் கூடாது. அடிச்சு இருக்கிற பல்லு முப்பதையும் கொட்டிப் போடுவன்.

மயூ : எல்லாருக்கும் முப்பத்திரண்டு பல்லெல்லோ இருக்குது.

துரை : டேய் மயூ, எல்லாருக்கும் முப்பத்தி ரண்டுதான். ஆனால் கொம்மாவுக்கு முப்பதுதான். (சிறிது சிரிப்புடன்) மிச்சம் இரண்டுக்கும் என்ன நடந்ததெண்டு எனக்கெல்லோ தெரியும்.

சரசு : அதுக்கு ஏன் இப்ப சத்தம் போட்டுக் கதைக்கிறியள்? அங்கை, சிவக்கொழுந்து மச்சாளும் யன்னலுக்காலை இங்கைதான் பாத்துக் கொண்டு நிக்கிறா.

துரை : ஆர் அது? சிவக்கொழுந்துவோ? அவவை இங்கை ஒருக்கா வரச் சொல்லு, இஞ்சேரும்

சரசு, உதுக்கப் போய் சிவக்கொழுந்து எண்டு பேர் வைச்சுதுகள். ம்! கழுவின நெருப்புத் தணல் மாதிரி நிறம். பொழுது பட்டா, ஆள் நிக்குதோ இருக்குதோ எண்டு தெரியாது.

சரசு : இங்கை தம்பியும் நிக்கிறான். சும்மா வாயிலை வந்தபடி கதையாதையுங்கோ.

துரை : முதல் முதல்லை உவவின்ரை மகன் இலண்டனுக்குப் போன காலத்திலை, நானும் சும்மா அங்கை போக, அவ என்னைப் பாத்து what do you want? எண்டு இங்கிலீஸ்லை யெல்லே கேட்டவா. தாங்கள் இனி இலண்டன்காரர், உவையை இனித்தேவை இல்லை எண்டுதானே அப்பிடி ஆக்களுக்கு முன்னாலை கேட்டவா. நான் இன்னும் அதை மறக்கேல்லை. என்ன! இப்ப ஒட்டி நிண்டு யன்னலுக்காலை பாக்கிறாவே?

மயூ : அப்பு, What do you want? எண்டு இங்கிலீசிலை கேக்காமல் பின்னை என்ன தமிழிலையே கேக்கிறது? சிவக்கொழுந்து மாமி அப்பிடி ஒண்டும் பிழையா கதைச்சிருக்க மாட்டா.

துரை : நான் குறுக்கையெல்லே கதைக்க வேண்டாம் எண்டு சொன்னனான். இப்ப கொஞ்சம் விட்டா எனக்கு இங்கிலிஸ் படிப்பிச்சுப் போடுவாய் போலை

இருக்குது. நான் இலண்டனுக்குப் போட்டு வந்து உவவை What do you want? எடி எண்டு கேக்கேல்லை என்ரை பேரை மாத்து.

சரசு : இலண்டனுக்குப் போக முதலே பேரை மாத்தினாலும் மாத்தி விடுவியள் போலை இருக்குது. என்னத்தை விட்டாலும் உந்த பழிக்குப் பழிவாங்கிறதை மட்டும் விடாதேயுங்கோ.

துரை : அதுமட்டுமே, அவவின்னரை மேன் ஊருக்குத் திரும்பி வரயுக்கை, உந்த வீடு சரியில்லை எண்டு, ஒரு hotel லையெல்லே போய் நிண்டவர். அவ்வளவு தடிப்பு அவருக்கு. பிறந்து வளந்த வீட்டை விட, உந்த hotel லோ பெரிசு? என்ரை பிள்ளை எண்டா அப்பிடிச் செய்யுமே? இல்லை ஒரு கதைக்குக் கேக்கிறன். சும்மா ஊர்க் கதையளை விட்டிட்டு, உங்கடை வேலையளைப் பாருங்கோ.

மயூ : அப்பு, அம்மா ஒண்டும் ஊர்க்கதை கதைக்கேல்லை. நீங்கள்தானே கதைக்கிறீங்கள்.

சரசு : அது தானே, தான் சொல்லிற எல்லாத்தையும் சொல்லிப் போட்டு, பிறகு நான் சொன்னனான் எண்டு கதை.

துரை : உங்கை விட்டா, தாயும் மேனுமாகச் சேர்ந்து எனக்கு அடி போட்டாலும்

போடுவியள் போலை இருக்குது. எல்லாம் நான் குடுத்த இடம்தான். உன்னைப் போய் படிக்கவெல்லே சொன்னனான். (சரசுவைப் பார்த்து மெதுவாக) சரசு... இங்கை வாரும்.

சரசு : என்னது?

துரை : நான் கொழும்பிலை நிக்கேக்கை, தங்கம் போன் பண்ணினதெண்டு சொன்னனானேல்லே.

சரசு : எனக்கு ஒண்டும் சொல்லேல்லை. என்ன இது புதுக்கதையா இருக்குது.

துரை : சரி இப்ப சொல்றன் கேளுமன். அங்கையும் வந்து உந்த நாட்டுத் தமிழை கதைக்காமல், கொஞ்சம் Style ஆக இடைக்கிடை "இங்கிலீஷ்" சொல்லுகளும் வைச்சு கதைக்கப் பழகிக் கொண்டு வரச்சொன்னா.

சரசு : (கோபத்துடன்) என்னது?, அதுக்கிடையிலை ஓதிவிடத் தொடங்கிவிட்டாவே. நான் ஏன் இலண்டனுக்குப் போறன்? உவாவோடை கனக்கக் கதையள் இருக்குது.

துரை : என்ரை ஒரே ஒரு தங்கச்சி கதையோட கதையா சொல்லிச்சுது. அதுக்கு ஏனப்பா இப்ப கட்டெறும்பு கடிச்ச மாதிரி துள்ளுநீர்?

சரசு : கதையோடை கதையா சொல்லிற கதையே உதுகள் எல்லாம். என்ரை அண்ணையைக் கலியாணம் செய்திருக்காட்டி உவா இலண்டனுக்குப் போயிருப்பாவே? நான் அடுத்த கிழமை இலண்டனுக்குப் போய் எல்லாருக்கும் நல்ல பாடம் படிப்பிச்சுப் போட்டுத்தான் வாறது. இருங்கோ வாறன். (உள்ளே போகிறார்)

மயூ : அப்பு, உதுகளை ஏன் இப்ப அம்மாவுக்கு சொன்னீங்கள்? தங்கம் மாமி அப்பிடிச் சொன்னவாவே? அல்லது உதுகும் புழுகுதானோ? சும்மா குடிச்சுப் போட்டு உங்களுக்கு என்ன கதைக்கிறதெண்டு தெரியேல்லை.

துரை : தம்பி மயூ, அதுகள் ஒண்டும் அப்படிச் சொல்லேலல்லை. நான்தான் அப்பிடியெண்டால் நல்லா இருக்கும் எண்டு நினைச்சன். நான் இண்டைக்கு ஒண்டும் குடிக்கேல்லை, உங்கை ஊரிலை என்ன கிடக்கு குடிக்கிறதுக்கு? ம்!. சும்மா குடிச்சமாதிரி இண்டைக்கு நடிப்பு நடிச்சனான். உந்த சிவக்கொழுந்துவுக்கு ஒரு பேச்சுக் குடுக்க வேண்டும் எண்டு கனநாளா ஒரு ஆசை. இலண்டனுக்குப் போக முதல் குடுக்கிறதைக் குடுத்திட்டுப் போனால் உவா என்ன செய்வா?

மயூ : அப்பு அங்கை பாருங்கோ, சிவக்கொழுந்து மாமி இந்தப் பக்கமாகத்தான் வாறா.

துரை : நான் உள்ளை போறன், எங்கை எண்டு கேட்டா, அப்பு "ரெஸ்ட்" எடுக்கிறார், ஏதும் கதைக்கிற தெண்டா, நாளைக்கு வரச் சொல்லு. உங்கை பலகாரம், கிலகாரம், மிளகாய்த்தூள் கிளகாய்த்தூள் கொண்டு போகவேணும் எண்டு கேட்டா, ஒரு இறாத்தலுக்கு ஐம்பது "பவுண்ஸ்" எண்டு சொல்லு. எல்லாத்தையும் இங்கிலீஸ்லை சொல்லு. (உள்ளே போகிறார்)

❖❖❖

காட்சி - 3

*இடம் : விமான நிலையம் - சுப்பையா வீடு*

*பாத்திரங்கள் : சுப்பையா, தங்கம், துரையப்பா, சரஷ்வதி, வேலு. (சுப்பையாவும், தங்கமும் துரையப்பா, சரஷ்வதியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். நண்பர் வேலு வருகிறார்)*

தங்கம் : அங்கை பாருங்கோ வேலு வாறார். இங்கை ஒரே ஆக்களாயிருக்குது. இங்கை நிண்டு தமிழாராய்ச்சி செய்யாமல், ஆளை அனுப்பி விடுங்கோ.

சுப் : எங்கடை ஆட்களைக் கண்டால், தமிழிலை கதைக்கிறதுதான் முறை. நான் தமிழிலை கதைக்கிறது வெக்கமாயிருந்தா நீர் கொஞ்சம் தள்ளி நில்லும்.

தங் : ம்! இப்ப வர வர என்னிலை பிடிக்குது இல்லைத்தான். ஆட்களைக் கண்ட உடனை இனி உசார் வரப்போகுது.

சுப் : தங்கம்! ஏன் இப்ப என்னோடை கோபிக்கிறீர்? ம்! நான் இப்ப என்ன பிழையாகச் சொல்லிப்போட்டன்? எதுக்கு இப்ப முகத்தை "உம்" எண்டு வைச்சுக் கொண்டு நிக்கிறீர்? வேலு கிட்ட வரயுக்கையாதல் ஒருக்கா சிரிச்சுப் போட்டு, பிறகு உப்படி வைச்சுக் கொண்டு நில்லும்.

தங்கம் : எனக்கு அப்பிடி ஒண்டும் ஆக்களைக் கண்ட உடனை வில்லங்கமா சிரிக்க வேணுமெண்டில்லை. தங்கச்சி வரப்போறா எண்ட உசாரிலை, இப்ப கதைகள் எல்லாம் ஒரு மாதிரி போகுது.

சுப் : என்னப்பா உம்மடை அண்ணையும், என்ரை தங்கச்சியும்தானே வருசினம். அதுக்கேன் சினந்து கொண்டு நிகிறீர்? என்னைப் பாத்து நீர் சிரிச்சு எத்தனை நாளாச்சுது? இந்தச் சாட்டிலையாகுதல் ஒருக்கா சிரிக்கப் பண்ணலாம் எண்டு பாத்தன்.

தங்கம் : சும்மா சிரிச்சு மழுப்பி, என்ரை 'mood' ஐ மாத்தாதேயுங்கோ. கழுத்துத் திரும்ப மாட்டாமல் நான் கஷ்டப் படுகிறது தெரிஞ்சாத்தானே.

சுப் : உம்மை ஆர் உந்த நகையள், கூறைச் சீலை எல்லாம் உடுத்துக்கொண்டு வரச்சொன்னது? ம்! அதுக்குள்ளை இண்டைக்குத்தான் கொண்டையும் போட்டுக் கொண்டு வரவேணும்? இருக்கிற நகையள், சீலையளைக் காட்டிறதுக்கு இதே நேரம்?

தங்கம் : அந்த நேரம் எனக்குத் தந்த சீதனக் காணியைத் திருப்பிக் குடுத்திருக்காட்டா, உங்கடை தங்கச்சி கல்யாணம் முடிச்சிருப்பாவே?

சுப் : இங்கே, சும்மா கண்டபடி கதையாதையும். உம்மடை அண்ணா, நான் அனுப்பின இலண்டன் சேட்டு, கால்சட்டையளைப் போட்டுக் கொண்டு போய் காட்டித்தானே என்ரை தங்கச்சியை மயக்கினவர். இல்லையெண்டா ஒரு படிச்ச மாப்பிளையாப்பாத்து அவளுக்கு இங்கை முடிச்சுக் குடுத்திருப்பன்.

தங்கம் : ம்! அவவின்ரை வடிவிலை, அவவுக்கு இலண்டன் மாப்பிளை வேணும்.

சுப் : இங்கே, வடிவைப் பற்றி நீர் கதைக்கப்படாது. உம்மடை வடிவிலையே நான் உம்மை முடிச்சனான்? இங்கை வேலு கிட்ட வந்திட்டானப்பா கதைக்கிறதை நிப்பாட்டும். (வேலு வருகிறார்)

வேலு : என்ன சுப்பையாண்ணை சோடியா வந்து நிக்கிறீங்கள். ஆரோ ஊரிலை இருந்து வருகினமோ? என்ன தங்கம்மாக்கா, எங்கையோ கல்யாணவீட்டாலை வாறியள் போலை இருக்குது.

தங்கம் : எங்கடை அண்ணையவை ஊரிலை இருந்து வருகினம். மகளின்ரை கலியாண வீட்டுக்கு, கனடாவுக்குப் போகினம், போறவழியிலை எங்களையும் பாத்துக் கொண்டு போகலாம் எண்டு வருகினம். நாங்களும் அவையளைப் பாத்துக் கனகாலமாச்சுதுதானே.

வேலு : அதுக்கேன் சுப்பையாண்ணை ஒரு மாதிரி "டென்சன்" லை நிக்கிறீங்கள்?

சுப் : தங்கம், உதலை நில்லும், நான் வேலுவோடை கொஞ்சம் தனியக்கதைச்சுப் போட்டு வாறன்.

(இருவரும் செல்கிறார்கள். சிறிது கழித்து)

சுப் : என்னடாப்பா மனிசிக்கு முன்னாலை இப்பிடிக் கேட்டிட்டாய்? நாங்கள் சும்மா ஒரு துண்டுக் காணிவிசயத்திலை இருந்து துரையப்பா குடும்பத்தோடை எனக்கும் மச்சான்தான், அவையோடை சின்ன மனஸ்தாபம்.

வேலு : அது தெரிஞ்ச விசையம்தானே. அது சரி நீங்கள் என்னத்தை மறந்தாலும்

பழைசுகளை மறக்க மாட்டீங்கள். அவை அதெல்லாம் இப்ப மறந்திருப்பினம்.

சுப் : அவை மறந்திட்டினம் போலை இருக்கு. ஆனா என்ரை மனிசி இன்னும் மறக்கேல்லை. மனிசி இடைக்கிடை கதைக்கிறதைப் பார்த்தா, இந்த 'Airport' லையே முந்தி ஊரிலை சண்டை பிடிச்ச மாதிரி தொடங்கி விடுமோ எண்டுதான் கொஞ்சம் பயமாயிருக்கப்பா.

வேலு : அண்ணை, இங்கை எங்கை பாத்தாலும் "security' யும் "police" மா இருக்குது. இங்கை பயப்பிடத் தேவையில்லை. எதுக்கும் அவை வரயுக்கை நீங்கள் போய் அவங்களுக்குக் கிட்ட நில்லுங்கோ.

சுப் : இங்கே, நான் இப்ப உம்மடை 'idea' கேட்க வரேல்லை. முந்திக் கேட்டு நாங்கள் பட்ட பாடு தெரியும்தானே.

வேலு : அண்ணை, இப்பிடிச் செய்யுங்கோ, அவை வந்த உடனை, நீங்கள் தங்கம்மாக்காவோடை கொஞ்ச நேரம் இங்கிலீஸ்லை கதையுங்கோ. கண்டபடி சிரிக்காதையுங்கோ.

சுப் : உதெல்லாம் அந்தக் காலம். அவையளுக்கு முன்னாலை இங்கிலீஸ்லை கதைச்சு, இனி முந்தினமாதிரி பேய்க்காட்ட முடியாது பாரும். ஏனெண்டா அவை "விசா" கிடைச்ச நாள் தொடக்கம் இங்கிலீஸ் படிக்கினம் எண்டும் கேள்விப் பட்டம்.

வேலு : இங்கே, தங்கமக்கா அவசரமா வாற, அவை வந்திட்டினம் போல இருக்குது. என்ன தங்கமாக்கா? துரையப்பா அண்ணையவை வருகினமோ?

தங்கம் : "Plane" வந்து மூண்டு மணித்தியாலமாச்சுது. என்ன நடந்த தெண்டு தெரியேல்லை. ஒருக்கால் போய் என்னெண்டு கேட்டுக் கொண்டு வாருங்கோவன்.

வேலு : துரையப்பா அண்ணர் கொஞ்சம் தண்ணி பாவிக்கிறவரெல்லே, "plane" வந்து நிண்டதும் தெரியாமல் இப்பவும் அதுக்குள்ளைதான் இருக்கிறாரோ தெரியேல்லை.

தங்கம் : என்ரை அண்ணை அப்பிடி ஒண்டும் படிக்காதவரில்லை. இரண்டாம் வகுப்பிலை இரண்டு வருஷமும், மூண்டாம் வகுப்பிலை மூண்டு வருஷமும் இருந்து படிக்கேல்லை. நான் போனிலை எல்லாம் வடிவாச் சொல்லித்தான் விட்டனான்.

வேலு : குத்துக்கதை போடுறதுக்க தங்கம்மாக் காவைக் கேட்டுத்தான். தங்கம் அக்கா, நீங்கள் யாரைச் சொல்லுறீங்கள் எண்டு எனக்குத் தெரியும். என்ரை தலைவிதி. அதெல்லாம் அந்தக்காலம்.

சுப் : எந்தநேரத்திலை என்ன கதைக்கிறதெண்டு ஒருத்தருக்கும் தெரியேல்லையே. கிண்டல்

கதைகள் சொல்றதிலும், பழசுகளைக் கிளறிவிட்டுக் கூத்துப் பாக்கிறதிலும் எல்லாரும் கெட்டிக்காரரர்.

தங்கம் : எங்களுக்குப் புத்திசொன்னது காணும், உள்ளைபோய் பாத்துக் கொண்டு வாருங்கோ.

வேலு : அங்கை அதிலை வாறது அவை போலத்தான் இருக்குது. வாருங்கோ கிட்டப் போய்ப் பாப்பம். அது அவை தான். (சிறிது பொறுத்து) என்ன துரையப்பா அண்ணை, எப்பிடிப் பயணங்கள் எல்லாம் இருந்திது? இங்கை தங்கம் அக்கா உங்களைக் காணேலை எண்டு துடிச்சுப் போனா தெரியுமோ?

தங்கம் : அண்ணை களைச்சுப் போனார் வாங்கோ எல்லாம் வீட்டை போய்க் கதைப்பம்.

சுப் : உந்த குத்துக்கதையள் போடுறதுதான் எனக்குப் பிடிக்கிறதில்லை. வீட்டை நடவுங்கோ உம்மோடை கனக்க கதைக்க இருக்கு.

(இடம் : - சுப்பையா வீடு)

துரையப்பா : இலண்டன், இலண்டன் எண்டு எத்தினை நாளா ஆரவாரம். ஒரு மாதிரி வந்து சேர்ந்தாச்சு. உந்த கதவுகள், யன்னலுகளை ஏன் எல்லாம் பூட்டி வைச்சிருக்கிறீங்கள்? திறந்து விடுங்கோவன். என்ன ஒரே

அம்மலாக் கிடக்குது. எங்கை உங்கடை கிணத்தடியைக் காட்டுங்கோ நான் ஒருக்கா குளிச்சிட்டு வரப்போறன்.

தங்கம் : (சிறிது சிரிப்புடன்) அண்ணருக்கு இப்பவும் ஊரிலை இருக்கிறனெண்ட யோசினைதான். மேலுக்கு "bath room" இருக்கு, கொஞ்சம் பொறுங்கோ, சரசு மச்சாள் குளிக்கிறா. குளிச்சிட்டு வரட்டும்.

சுப் : (சிறிது ஆச்சிரியத்துடன்) தங்கம் இங்கை ஒருக்கா வாரும். (சிறிது பொறுத்து) என்னாலையே நம்பமுடியாமல் இருக்குது. என்ன வலு அன்பா இருக்குது. ஊரிலை இருந்து மச்சாள் என்னவோ கொண்டுவந்து தந்திட்டா போலை இருக்கு.

தங்கம் : சும்மா இருங்கோ, அங்கை அதுகள் எவ்வளவு கஷ்டப்படுகுதுகள். சரசு மச்சாளிகரை கதைன்ளைக் கேக்க சரியான கவலையா இருக்கு எது. நீங்கள் போய் அண்ணையோடை இருந்து கதையுங்கோ. நான் மேலை போய்ப் பாத்திட்டு வாறன்.

சுப் : அது சரி. ஏன் "Airport" ஐ விட்டு வெளியிலை வர அவ்வளவு நேரம் எடுத்திது? கன ஆட்களோ?

துரை : ஆட்கள் அப்பிடி ஒண்டும் கனக்க இல்லை. சரசு சும்மா இருக்க மாட்டாமல் வாயைக் குடுத்தாப்போலை அவங்கள் மறிச்சுப் போட்டாங்கள்.

சுப் : அப்பிடி என்ன நடந்தது?

துரை : மற்றவைக்கு முன்னாலை தான் ஒரு இங்கிலீஷ் தெரியாத ஆள் எண்டு காட்டப்படாது எண்டொரு வைராக்கியத்திலை, நாங்கள் வெளிநாடு எண்டு வெளிக்கிட்ட நாள் தொட்டு சரசு இங்கிலீஷ் படி, படி எண்டு படிச்சுது. அமுதலிங்கத்தாற்றை பரம்பரையெல்லே. சும்மா இருக்குமோ?

சுப் : உங்கடை அமுதலிங்கத்தாற்றை, எங்கடை செல்லப்பற்றை பரம்பரையெல்லே, தாங்கள் பிடிச்ச முயலுக்கு மூண்டு கால் எண்டு நிக்கமாட்டினம், முப்பது கால் எண்டுதான் நிப்பினம். பிறகென்ன நடந்தது?

துரை : அவங்கள் ஏதோ கேக்க, மனிசி இருந்தாப்போல "that is all right" எண்டு சொல்லிப் போட்டுது. அவங்கள் அதுக்குப் பிறகு, இவவுக்கு ஏதோ கனக்க இங்கிலீஷ் தெரியும் எண்டு நினைச்சு ஏதோ எல்லாம் கேக்கிறாங்கள், மனிசி தற, தற எண்டு முழுசத் தொடங்கி விட்டுது. மனிசி முழுசிறத்தைப்பாத்திட்டு, இவ ஏதோ கள்ளக்கடத்தல் செய்யிறா எண்ட யோசினையிலை அங்கை நிண்ட வெள்ளையள், கறுப்புகள், சிவப்புகள் எல்லாம் வந்து மனிசியைச் சுத்தி வளைச்சுப் போட்டாங்கள் பாரும்.

எங்களை உள்ளுக்கை கூட்டிக் கொண்டுபோய் செய்யாத ''செக்கிங்கெல்லாம்'' செய்து போட்டுத்தானே விட்டாங்கள். மனிசிக்கு "சீ" எண்டு போச்சுது. உடனை திரும்பி ஊருக்கு போகப் போறனெண்டு நிண்டுட்டுது. பிறகு எவ்வளவு கரைச்சல்பட்டு இங்காலை கூட்டிக் கொண்டு வந்தனான் தெரியுமே?

சுப் : (மறுபுறம் திரும்பி) இங்கை இரண்டு பேரும் வருகினம்.

(இந்நேரம் தங்கமும், சரஷ்வதியும் வருகிறார்கள்)

தங்கம் : மச்சாள் குளிச்சிட்டா போலை இருக்குது. மச்சாள் வாருங்கோ. இருங்கோ நான் கோப்பி போட்டுக் கொண்டு வாறன். அண்ணை நீங்கள் போய் குளிச்சிட்டு வாங்கோ.

சுப் : சரசு இங்காலை வாரும். உந்த "Heater" க்குப் பக்கத்திலை கொஞ்ச நேரம் இரும்.

(இந்நேரம் தங்கம் அவசரமாகக் கூப்பிடுகின்றார்)

தங்கம் : இங்கை ஒருக்கா ஓடிவாங்கோ. குசினியுக்கை "Pipe" உடைஞ்சு போட்டுது போல இருக்குது. உந்த "bucket" ஐ எடுத்துக் கொண்டு கெதியிலை வாங்கோ.

துரை : என்னடாப்பா நாங்களும் வர "Pipe" ம் உடைஞ்சு போச்சுதே. இது நல்லது மாதிரி எனக்குத் தெரியேல்லை.

(மேலே இருந்து)

சுப் : இங்கை என்ன "Bath room" எல்லாம் ஒரே வெள்ளமா இருக்குது.

துரை : சரசு நீர் என்னெண்டு "Bath Room" க்குள்ளை இருந்து குளிச்சனீர்?

சரஷ்வதி : ஏன் எனக்கு இங்கை உள்ள "Bath Room" லை குளிக்கத் தெரியாதே? வெளியிலை நிண்டு தான் குளிச்சனான். ஏன் நான் இங்கை வந்து குளிக்கவும் படாதோ? எல்லாம் என்ரை தலைவிதி.

துரை : (மெதுவாகவும், ஆறுதலாகவும்) என்னப்பா சொன்னீர்? இன்னுமொருக்காச் சொல்லும். வெளியிலை நிண்டு குளிச்சனீரோ? போச்சடா. இவ்வளவு நாளும் காணிச்சண்டை, இனி இங்கை கிணத்தடிச் சண்டையே?

சுப் : தங்கம், இங்கை "bed room" எல்லாம் தண்ணி வந்திட்டுது. உந்த "Fire brigade" "Ambulance" எல்லாத்துக்கும் போன் பண்ணும்!

❖❖❖

காட்சி - 4

*இடம் : தில்லையம்பலம் வீடு*

*பாத்திரங்கள் : தில்லையம்பலம், பரிமளம், துரையப்பா, சரஷ்வதி, குமார் (ஒரு சினிமாப் பாட்டு பாடிக் கொண்டு இருக்கிறது)*

பரிமளம் : உங்கை இரண்டு போரும் என்ன செய்யிறியள்? மச்சானுக்கும் மச்சானுக்கும் விடிஞ்சா பொழுதுபட்டா "காட்ஸ்" அடிக்கிறதுதான் வேலை. எழும்பி வாங்கோ இங்காலை.

தில்லை : உம்மடை தம்பியை முதல்லை கூப்பிடும். நான் அப்போதையே நிப்பாட்டச் சென்னனான்.

தங் : சும்மா ஆளை ஆள் சாட்டாமல், இரண்டு பேரும் இங்கை வாங்கோ. தேங்காய் திருவிறது எப்ப? கறி வைக்கிறது எப்ப? துரையப்பா அண்ணையும், சரசக்காவும் சாப்பிட வெல்லே வரப்போகினம்.

குமார் : என்னக்கா. இப்பவும் தேங்காய்ப் பாலி லையே கறிவைக்கிறது? இங்கை வந்தும் முந்தின மாதிரி செய்யிறதொண்டா இவ்வளவு நேரம் எடுக்கும்?

தில் : நல்லாச் சொல்லும். நான் சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சுது. மற்றப் பாலிலை வைச்சா உடம்பு மொத்தமா வந்திடுமாம். வயது வட்டுக்கை போனாலும், எண்ணங்கள் எக்கச் சக்கம்.

என்ரை சொல்லுகள் ஒண்டும் இப்ப ஏறுதே இல்லை.

பரி : வேலை இல்லாத குணம்தானே உதெல்லாம். இங்கே நான் என்ன செய்யிறதெண்டு சமைக்கிறதும் பத்தாமல், இருந்து கொண்டு வக்கணை பேசுங்கோ. தம்பி குமார், இவருக்கு ஆரை யெண்டாலும் பிடிச்சு ஒரு வேலை எடுத்துக்குக் குடுத்துவிடப்பா. ஊரிலை இருந்து வந்து ஒரு வருஷமாகப் போகுது. ஏதேனும் "Part time" வேலை செய்தாலே எவ்வளவு காசு உழைச்சிருக்கலாம்.

குமார் : அக்கா, ஊர்மாதிரி. இங்கை ஆட்களைப் பிடிச்சு வேலை எடுக்கிற தெல்லாம் முடியாது. சும்மா இருந்து சாப்பிடுறதை விட்டுட்டு, அத்தானை வேலைக்கு விட்டீங்கள் எண்டா, இப்ப வாற காசும் வராது.

பரி : கொஞ்ச நாளைக்கு வேலை செய்து போட்டு, ஊருக்கு போகேக்கை கொஞ்ச "பென்சன்" ஆகுதல் எடுத்துக் கொண்டு போகலாம் எண்டு பாத்தன். அப்ப எங்கடை பொன்னையா மாமா. சிங்கப்பூரிலை இருந்து பென்சன் எடுத்துக் கொண்டு வந்து, எவ்வளவு நல்லா இருந்தவர் தெரியுமே?

குமார் : அக்கா, இங்கை நல்லா இருக்கப் பாருங்கோ. அவை இவையைப் பாத்து

வாய் ஊறாமல், உள்ளதைக் கொண்டு சந்தோஷமா இருக்க முயற்சி பண்ணுங்கோ.

தில்லை : இங்கே எங்களுக்கு புத்தி சொன்னது காணும், ஆறு மணிக்கு ஏதோ "Programme" பாக்கப் போறன் எண்டு சொன்னது போலை கேட்டுது. நேரம் ஆகேல்லையே?

குமார் : ஆறு மணி எண்டுதான் போட்டிருந்தது. ஆனா எங்கடை ஆக்களின்ரை நேரம் தெரியுந்தானே. ஆறுமணி எண்டா ஏழு மணிக்குத்தானே வந்து சேருவினம்.

(இந்நேரம் வாயில் மணி அடிக்கிறது)

குமார் : இங்கை அவை வந்திட்டினம் போலை இருக்குது. நான் போயிட்டு பிறகு வாறன். (துரையப்பாவும், சரஷ்வதியும் உள்ளே வருகின்றார்கள்)

தில் : வாங்கோ, வாங்கோ இருங்கோ.

பரி : வாங்கோ, வாங்கோ என்ன வேளைக்கே வந்திட்டீங்கள்! இரண்டு பேரும் நல்லாக் கறுத்துப் போனீங்கள்.

தில்லை : என்னப்பா, ஆளே அரை வாசியாப் போனீர்? இன்னும் தண்ணி அடிக்கிறதை விடேல்லைப் போல.

துரை : அங்கை சிலவேளையிலை பச்சைத் தண்ணிக்கே கஷ்டம். உதுகள் எல்லாம்

விட்டு கனநாளாச்சு. ஆனால் கிடைச்சா விடமாட்டன்.

பாரி : உதுகள் எல்லாம் இப்பவே கதைக்கிறது? என்ன வந்து ஒரு வருஷமும் ஆகெல்லை தெரியாத மாதிரிக் கேக்கிறீங்கள். ஏதோ இங்கை இருபத்தஞ்சு வருஷமா இருக்கிற ஆள் மாதிரி. இங்கை வந்த உடனை எல்லாத்தையும் மறந்து போங்கோ. இப்ப ஊரிலை இருந்து வாற ஆட்களோடை கதைக்க சரியான ஆசையா இருக்குது. அண்ணை நீங்கள் சொல்லுங்கோ. எப்பிடி ஊரிலை எல்லாம் இருக்கினம்?

தில்லை : குஞ்சு, அந்த விஷ்கிப் போத்திலை உடைச்சுக் கொண்டு வாரும். துரையப்பா அண்ணையின்ரை சாட்டிலை நானும் இண்டைக்கு கொஞ்சம் அடிச்சுப் பாப்பம்.

(இருவரும் விஸ்கி குடித்தபடி மற்றவர்களுடன் பேசிக் கொண்டு இருக்கிறார்கள்)

துரை : வந்த நாள் தொடக்கம் சரசுவுக்கும், தங்கத்துக்கும் வாய் ஓயேல்லை. இரண்டு பேரும் இப்ப நல்ல ஒற்றுமை. ஒரே ஊர்க்கதையள்தான். எனக்கு அதுகளைக் கேட்டுக் கேட்டுக் காதுகள் புளிச்சுப் போச்சு. இங்கையாலும் வந்து வேறை கதையளைக் கதைப்பம் எண்டால் நீங்களும் பழையபடி அதுகளைத் தொடங்காதையுங்கோ.

பரி : தங்கம் அக்கா சும்மா சத்தம் போட்டாலும், என்னை மாதிரி இளகின மனம். சும்மா பழய சண்டையளை விட்டுட்டு, ஒற்றுமையா இருக்கிறதுதானே!

சரசு : நான் இங்கை வந்து எப்பவேனும் தங்கம் மச்சாளோடை சண்டை பிடிச்சானானே? இவர்தான் உதுகளை எல்லாம் நினைப்பூட்டிறார்.

தில் : உதுகளை விடுங்கோ ஊரிலை இருந்ததைவிட பரிமளம் எவ்வளவு இப்ப எவ்வளவோ முன்னேற்றம். நான் ஒரு வேலையும் சொல்லத் தேவையில்லை. சமையல் எல்லாம் இப்ப தனிய கொஞ்சம் செய்வா. இண்டைக்கு விடியக் காலத்தாலை நாலுமணிக்கே நித்திரையாலை எழும்பிவிட்டா. வீடெல்லாம் துப்புரவாக்கி, யன்னல் கின்னல் எல்லாம் துப்புரவாக்கிப் போட்டு சொல்லிச்சுது. இப்பதான் முன்வீடு வடிவாகத் தெரியுதாம். முந்தியெல்லாம், வீட்டுக்குள்ளை இருந்து பாக்க அங்கை நடக்கிறது ஒண்டும் வடிவாகத் தெரியேல்லையாம்.

பரி : (சிறிது வெட்கத்துடன்) சும்மா இருங்கோ உங்களக்கு நெடுகலும் பகிடிதான்.

தில் : இண்டைக்கு என்ரை இவா நல்லா வெட்கப்படுறா.

துரை : ஊரிலை எண்டால், உரும்பராய் தொடங்கி யாழ்ப்பாணம் வரை இருக்கிற ஆட்கள் அத்தினை பேரையும் ஒருத்தர் விடாமல் சொல்லுவன். இங்கை என்னெண்டா, விடியிறதும் தெரியாது. பொழுது படுகிறதும் தெரியாது. நாலு மணிக்கு விடியுது, பொழுதுபட பத்து மணி செல்லுது.

பரி : அண்ணையின்ரை கதையைக் கேக்க ஊரிலை நிக்குமாப் போல இருக்குது. சொல்லுங்கோ கேப்பம்.

துரை : ஊரிலை. பல பலவெண்டு விடியேக்கை, எங்கடை பூதவராயர் கோயில் மணி கேக்கும். கோயில்லை பாடிற தேவாரங்கள் எங்கடை வீட்டை அப்பிடியே கேக்கும். என்ன இதமா இருக்கும். இங்கை என்னடாண்டா, விடியிறதுக்கிடையிலை சுப்பையான்ரை மேன் தினேஷ் எழும்பி ஏதோ பாட்டைப் போடுவான். என்ன பாஷை எண்டும் விளங்காது. என்ன ராகம் எண்டும் தெரியாது. பாடிறாங்களோ, கதைக்கிறாங்களோ எண்டு கூடத் தெரியாது. திடுக்குத் திடுக்கெண்டு அடிக்கிற அடியிலை பக்கத்து வீட்டுக்காரங்களும் எழும்பி விடுவினம்.

சரசு : ஊரிலை கோண்டாவில் சந்தியிலை போடிற பாட்டு உரும்பிராய்ச் சந்தியலை

கேக்கும். இங்கை கொஞ்சம் சத்தமா ஏதேனும் போட்டா, கொஞ்ச நேரத்திலை "பொலிஸ்" வந்திடுமாம்.

துரை : ஊரிலை என்ரை நாலுமுழ வேட்டியையும் உடுத்து மடிச்சுக் கட்டிக் கொண்டு, சரசுவையும் முன்னுக்கு ஏத்திக் கொண்டு "சைக்கிள்" ஓட என்ன இதமா இருக்கும்? எவ்வளவு ஆசையா இருக்குது. இங்கை அது முடியுமோ? ஒரு நாளைக்கு வல்லைவெளியிலை அடிக்குமாப்போலை காத்து, அடுத்த நாள் மன்னாரிலை எறிக்குமாப்போலை வெய்யில். மற்றநாள், நுவரேலியாவிலை நிண்டாமாதிரி ஒரே குளிர். அதுக்கிடையிலை எனக்குச் சீ எண்டு போச்சு.

தில்லை : அதுமட்டுமே, எங்கடை பிள்ளையார் கோயிலடி வாசகசாலையிலை இருந்து ஊர்க்கதையள் எல்லாம் கதைச்சுக் கதைச்சு, சாமம் சாமமா காட்சும் அடிச்சு, பேப்பர் வாசிக்கற சந்தோஷம், இங்கை எத்தினை ஆயிரம் கொடுத்தாலும் வராது பாரும்.

பரி : அந்தச் சாட்டிலை, அங்காலை அன்னம்மா அக்காவும் குழந்தைவேலர் அண்ணரும் என்ன கதைச்சவை எண்டு எங்கடை மதிலுக்குப் பக்கத்திலை நிண்டு கேட்டிட்டு, இவர் வந்து சொல்லேக்கை, எனக்கு சரியா குழந்தைவேலர் அண்ணரோடை

கதைக்குமாப்போலை எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்.

துரை : சுபாஷ் கபேலை இருந்து சுடச்சுட போண்டாவும், நண்டுப் பொரியலும் வாங்கிக் கொண்டுபோய், சின்னக்குட்டியின்ரை சுத்தமான தென்னங்களோடை சுத்திவர இருந்து அடிச்சுப் போட்டு, சரசுவைப் பாத்தா, உந்த "அரபிக் கடலோரம்" எண்ட பாட்டும், ஏரிக்கரையின் மேலே எண்டபாட்டும் ஒண்டாவரும்.

தில்லை : சிவப்பு மிளகாய்ச் சம்பலோடை, ஊர் மரவள்ளிக் கிழங்கையும் சேர்த்தடிச்சா, சும்மா இனத்திலை தாவுமப்பா.

பரி : இனி உங்கடை பழைய கிழங்குக் கதையளை கொஞ்சம் நிப்பாட்டுங்கோ. என்ன சரசக்கா? உங்களுக்கும் இவையின்ரை புழுகுகளைக் கேக்க பழைய ஞாபகங்கள் வந்திட்டு போலை?

சரசு : ஒண்டும் இல்லாட்டிலும், ஊரிலை கோயில் குளமெண்டு போயிட்டு வந்தா மனதுக்கும் நிம்மதியா இருக்கும். இங்கை வீட்டுக்கை இருக்க ஏதோ மறியலுக்கை இருந்த மாதிரியெல்லே இருக்குது. மாறி மாறி தங்கம் மச்சாளின்ரை முகத்தையும் அண்ணற்றை முகத்தையும் பாக்கப் பாக்க, இவருக்குப் பயமா இருக்குதாம். அதுதான் நேரத்தோடை இங்கை வருவம் எண்டு வந்திட்டம்.

தில்லை : எங்களுக்கும் வந்தநாளேலை அப்பிடித்தான் இருந்திது. இப்ப கொஞ்சம் பழகி விட்டுது. உந்த பயணங்கள் எல்லாம் இப்ப எப்பிடி இருக்கிது? முந்தின மாதிரித்தானோ அல்லது?

சரசு : அதை ஏன் கேக்கிறியள்? சந்திக்குச் சந்தி சோதனை. சீ எண்டு போச்சு. யாழ்ப்பாணத்திலை இருந்து கொழும்புக்கு வாரத்துக்கிடையிலை, கொழும்பிலை இருந்து இங்கை வந்திடலாம். காலம் அப்பிடி மாறிப் போச்சுது.

(தில்லையம்பலமும், துரையப்பாவும் அரை வெறியில் இருக்கிறார்கள்)

துரை : காலம் எல்லாம் மாறிப் போச்சுது, ஆனா இங்கை எங்கடை ஆட்கள் பலபேர் இன்னும் அப்படியே இருக்கினம்.

பரி : இங்கை உள்ள ஆட்கள் சிலபேருக்கு ஒரு சாதி வருத்தம் இருக்குது. அஞ்சாறுபேர் சேந்து, எடுத்த உடனை ஒரு "கொம்மிற்றி" தொடங்கி விடுவினம். மூலைக்கு மூலை உங்கை ஒரு ஆயிரம் "கொம்மிற்றி" யளும், சங்கங்களும் இருக்குது. உருப்படியா ஒருவேலை செய்யத் தெரியாது. எண்ணங்கள் மட்டும் எக்கச் சக்கம். தேவையில்லாமல் பிரச்சனைப் பட்டுக் கொண்டு இருக்கனம்.

தில்லை : ஊரிலை சுண்ணாகத்தான். சாவகச்சேரியான், சங்குவேலியான், கோண்டாவிலான், ஒட்டுமடத்தடியான் எண்டு பேச்சுப்பட்டினம். இங்கை இனி, அல்பேட்டனான், சவுத்தோலான், ரூட்டிங்கான், ஈஸ்ட்காமான் எண்டு பேச்சுப்பட்டாலும் படுவினம்.

துரை : அங்கை, சின்னவயதிலை, செய்யாத திருகுதாளங்கள் எல்லாம் செய்துபோட்டு, இங்கை வந்த சுருளி அண்ணையின்ரை இரண்டாவது மேன் சோதிலிங்கம், உங்கை என்னத்துக்கோ தலைவராம். அண்டைக்கு ஏதோ கூட்டத்திலை நிண்டுகொண்டு தடக்கித் தடக்கி "இங்கிலீஸ்லை" பேசிறார், அங்கை இருந்தது முழுக்கத் தமிழ் ஆட்களப்பா. என்னத்துக்கு உந்த எடுபாடெல்லாம். ம்! அந்த நாளேலை தடக்கித் தடக்கி இங்கிலீஸ் பேசினா, அங்கை தோள்ளை இருந்த சால்வையை எடுப்பினம். இங்கையும் வந்து இப்படிச் செய்தா... எனக்கு வாற ஆத்திரத்துக்கு... உவங்களை நடுச் சந்தியிலை வைச்சு, நாலு தட்டுத்தட்டி ஊருக்கு அனுப்ப வேணும்.

பரி : (மெதுவாக) இங்கை பாருங்கோ துரையப்பா அண்ணருக்கு இனி ஒண்டும் குடுக்காதையுங்கோ. இனிச்சாப்பிட வேணும்.

சரசு : ஓமக்கா, மனிசனுக்கு அரைக்கிளாஸ் அடிச்சாப் போதும். ஊரிலை எண்டா, உடனை போய் சிவக்கொழுந்து அக்கா வீட்டு மதில் கரையிலை நிண்டுகொண்டு ஞாயம் பேசுவார். இங்கை ஆருடைய வீட்டு மதில் கரையிலை நிண்டு பேசிறது?

துரை : உங்கை என்ன இரண்டுபேரும் இரகசியம் கதைக்கிறியள்? சரசு, எனக்கென்ன வெறியேண்டு யோசிக்கிறீரே? என்னப்பா நீலச்சீலை உடுத்துக் கொண்டு வந்திர் இப்ப சிவப்புச் சீலையோடை நிக்கிறீர். இலண்டன் எண்டாப்போலை மணித்தியாலத்துக்கு ஒரு சீலை மாத்தவேணுமோ?

தில்லை : சிவப்புச் சீலையோடை நிக்கிறது என்ரை மனிசி பாரும். இண்டைக்கு நல்லாத்தான் இருக்கப் போகுது. இனிக்காணுமப்பா.

துரை : இங்கை எதுக் கெடுத்தாலும் காசு, காசு. வீட்டுக்குள்ளை இருந்தாலும் காசு இல்லாட்டிலும் காசு. வெளியிலை வெளிக்கிட்டாலும் காசு, வெளிக்கிடாட்டிலும் காசு. உந்த ஒண்டுக்கு இரண்டுக்கு போனாக் கூட காசு குடுக்க வேண்டி இருக்கு. ம்! அறுபத்தைஞ்சு வருசமா ஒரு சல்லிக் காசும் குடுக்காமல் எங்கடை ஊரிலை உதெல்லாம் நான் செய்து போட்டு வந்திருக்கிறன். இலண்டன் எண்டால் என்னெண்டு இப்பத்தான்

நல்லா விளங்குது. "அக்கரைக்கு இக்கரை பச்சை" இல்லை சிவப்பு எண்டு இனி சொல்லுங்கோ.

பரி : நீங்கள் இருந்து கதையுங்கோ, நான் போய் சாப்பாடுகளை ஆயுத்தப்படுத்துகிறன்.

துரை : உங்கை இண்டைக்கு என்ன சமைச்சு வைச்சிருக்கிறீங்கள்? இங்கை வந்த நாள் தொட்டு காலையிலை நான் பட்டினி. ஏன்? ஏனெண்டு கேக்கேல்லை.

தில்லை : சரி சொல்லுமன் கேப்பன். இனித்தான் சுப்பையா அண்ணை வீட்டுக்குள்ளை நடக்கிறதெல்லாம் வெளியிலை வரப்போகுது.

துரை : விடிஞ்ச உடனை உந்த "Corn Flakes" ம் "Weetabix" ம் தான். வாயிலை வைக்கேலாது. ஊரிலை எண்டா, சரசு விதம் விதமா புட்டும் அவிச்சு, விளை மீனிலை ஒரு குழம்பும் வைச்சுவிட்டு தொண்டா, விதானையார் வீட்டடியிலை வரயுக்கை மூக்கைத் துளைக்கும். வைச்சாத்தானே! இங்கை விளைமீனுக்கு எங்கை போறது? விதானையார் வீட்டுக்கு எப்பிடிப் போறது?

(இந்நேரம் டெலிபோன் மணி அடிக்கிறது)

தில்லை : பரிமளம், உந்த போனை எடும். (வேலு) எண்டால் நான் இங்கை இல்லை எண்டு

சொல்லும். சும்மா உந்த "Mobile Phone" னுகளை வேண்டி வைச்சுக் கொண்டு ஏழு மணி எண்ட உடனை இங்கை வீட்டிலை இருக்க விடாங்கள். சனி, ஞாயிறு எண்டா ஒரே "போன்" தான். உந்த கூட்டத்துக்கு வா, அந்தக் கூட்டத்துக்கு வா, ''எலக்சனுக்கு'' வந்து எனக்கு வோட் பண்ணு, உனக்கு வோட் பண்ணெண்டு கொண்டு. "Free" யா கதைக்கலாம் எண்டுவிட்டது எங்கடை ஆக்களுக்குத்தான் நல்ல வாசி.

(பரிமளம் டெலிபோனில் கதைக்கின்றார்.)

சரஷ் : என்ன? உந்த "போன்" எல்லாம் சும்மா கதைக்கலாமே? மச்சாள் எண்டு இருக்கிறதுதான் உதுகள் எல்லாம் சொல்ல மாட்டினம். இன்னும் எத்தினையை மறைச்சு வைச்சிருக்கினமோ தெரியேல்லை.

பரி : அவையள் உங்களுக்கு தெரியும் எண்டு நினைச்சிருப்பனம். அவையிட்டை அந்த "போன்" இல்லைத்தானே.

துரை : இங்கத்தை ''போன்'' சிலதுகள் அடிக்கேக்கை, ஊர் செம்மறி ஆடுகள் கத்துமாப்போலை இருக்குது. நான் ஊருக்குப் போகேக்கை, உதிலை நாலைஞ்சு "போன்" வாங்கிக் கொண்டுபோய், அதிலை ஒண்டை சின்னக் குட்டியிட்டைக் குடுக்கப் போறன். அவன் பனையிலை பாளை தட்டிக் கொண்டு இருக்கேக்கை நான்

போன் பண்ணிக் கதைப்பன். மனிசி குசினியுக்கை நிக்கேக்கை நான் கோடிக்கை இருந்து கொண்டு "போன்" பண்ணுவன். சனி ஞாயிறிலை தான்.

சரஷ் : இங்கத்தை "போனை" அங்கை என்னெண்டு கொண்டுபோய்க் கதைக்கிறது?

துரை : ஏன்? இங்கத்தே மற்றச் சாமான்கள் எல்லாம் வேலை செய்யும். இங்கத்தே "போன்" மட்டும் எங்கடை ஊரிலை வேலை செய்யாதோ?

சரஷ் : சும்மா இருங்கோ, நெடுகலும் ஊர்க்கதையள்தான். அவா "போன்" லை கதைக்கறாவெல்லே.

பரி : அது துரையப்பா அண்ணருக்குத்தான். உங்கடை மகள் "சிந்து" கனடாவிலை இருந்து "போன்" பண்ணிறா. ஏதோ அவசரமாம். உந்த டி.வி.க்குப் பக்கத்திலை இருக்கிற "போனை" எடுங்கோ.

துரை : ஹலோ, ஹலோ! என்னப்பா ஒரு சத்தத்தையும் காணேலை.

தில்லை : உதென்ன, விஷ்கிப் போத்திலைக் காதுக்கை வைச்சுக் கொண்டு ஹலோ! ஹலோ! எண்டால், என்னெண்டு சத்தம் வரும்? உதை வைச்சிட்டுப் போனை எடுத்துக் கதையப்பா. (தனக்குள்) கட்டின மனிசியையே தெரியேல்லை. "போனை" என்னெண்டு தெரியப்போகுது?

சரஷ் : இங்கை விடுங்கோ நான் கதைக்கிறன் (கதைக்கிறார்) என்ன மேனை சிந்து, அப்புவோட கதைக்கப் போறீரே?.... என்ன... நேற்றுத்தானே அப்பு உம்மோட கதைச்சவர்... ஓம்... ஓம்... இண்டைக்கு சனிக்கிழமையெல்லே அண்ணர் ஆக்கள் எல்லாரும் வீட்டிலை நிக்கினம். அதாலைதான் போன் எடுக்க முடியாமல் போச்சுது.

துரை : சரசு, கதைக்கேக்கை கொஞ்சம் பாத்துக் கதையும். "பகலிலை பாத்துக் கதை, இரவிலை அது தன்னும் கதையாதை" எண்டு உங்கள் தரவளி ஆட்களுக்குத்தான் சொல்லி வைச்சிருக்கு.

சரஷ் : என்ன?... இங்கை வரப் போறீங்களோ?.... இங்கைதான் கலியாணவீடும் வைக்கப் போறீங்களோ? பிறகு? ஓம்... என்ன மாப்பிள்ளையின்ரை ஐயா, அம்மாவையும் இங்கை சனிக்கிழமை ஊரிலை இருந்து வருகினமோ? நான் அப்புவுக்குச் சொல்லிறன். அப்ப "போனை" வைக்கிறன்.

துரை : சரசு... இங்கை வாரும்... இதிலை இரும்.. என்ரை பிள்ளை என்ன சொன்னவளெண்டு ஒண்டும் விடாமல் சொல்லும்... ஏனப்பா ஒரு மாதிரிப் பாக்கிறீர்? ம்!

காட்சி - 5

*இடம் : சுப்பையா வீடு*

*பாத்திரங்கள் : - சுப்பையா, பரிமளம், சண்முகம், பரமேஸ்வரி, வேலு.*

*(வாயில் மணி அடிக்கிறது)*

தங்கம் : வாங்கோ சம்பந்திவை, வாங்கோ. இருங்கோ

சுப் : என்னப்பா சண்முகம், எத்தினை வருஷமாச்சு உங்களைப் பாத்து. ஆள் அப்பிடியே இருக்கிறீரப்பா. ஆனா பரமேஷ்தான் கொஞ்சம் ஊதிப் போச்சுது.

சண் : இங்கே, வந்து வீட்டுக்கை வரக்கு முன்னமே மனிசியிலை பிழை பிடிக்கத் தொடங்கி விட்டியேப்பா? தங்கமும் என்ன குறைவே?

தங் : இப்ப இரண்டு பேரும் எங்களை வடிவு பாக்கிறதை விட்டிட்டு, ஊரைப்பத்திச் சொல்லுங்கோ. கொஞ்சநாளா ஊரிலை இருந்து ஆக்கள் வந்து கொண்டே இருக்கினம். என்ன பரமேஸ் அக்கா, கலியாண வீட்டுக்கு பலகாரமெல்லாம் செய்தாச்சுதே?

பரமேஸ் : இங்கை வந்த களை இன்னும் மாறேலை. அதுவுமல்லாமல் இங்கை ஆர் உதவி செய்யப் போகினம். பொம்பிளை வீட்டுக்காரர்தானோ கல்யாண வீட்டுச் செலவெல்லாம் குடுக்கிறது. நாங்கள் எல்லாம் "ஓடர்" பண்ணப் போறம்.

சுப் : பாத்திரோ தங்கம், நாங்கள் எத்தினை வருஷமா இங்கை இருக்கிறம். ஒரு சாமான் இதுவரையிலை வடை "ஓடர்" பண்ணி எடுக்கேல்லை. இப்ப வந்த உடனை எல்லாரும் "ஓடர்" பண்ணுகினம்.

சண் : இங்கை பாருங்கோ எங்கடை தம்பி "டாக்குத்தர்". அவங்கடை "ஸ்ரைலுக்கு" ஏத்த மாதிரி செய்யிறதிலை ஒரு பிழையுமில்லை.

தங் : ஒரு பிழையுமில்லைத்தான். ஆனா எங்கடை அண்ணேன்ரை காசெல்லே செலவழியப் போகுது.

பர : பெம்பிளைப் பிள்ளையளைப் பெத்தா உப்பிடித்தான்.

சுப் : எங்கடை ஆட்கள் எங்கை போனாலும் பழைய பல்லவிதான். பிள்ளையள் விட்டாலும் தாய் தகப்பன்மார் விடாயினம். பிள்ளையள் "டாக்குத்தர்" எண்ட உடனை, தாய் தகப்பன்மார் கூட நெஞ்சை நிமித்திக் கொண்டெல்லே நடக்கினம். மற்றவையோடை கதைக்கவும் பஞ்சிப்படுகினம். இங்கை "டாக்குத்தருக்கு" உள்ள மதிப்பு ஒரு ''எஞ்சினியர்'' "எக்கவுண்டனுக்கு" இல்லைப்பாரும்.

வேலு : அது எங்கடை ஆட்களுக்கு இரத்தத்தோடை சேந்து போச்சுது. ''டாக்குத்தர்'' மாப்பிள்ளை எடுத்தாலும், "டாக்குத்தர்"

மருமகள் வந்தாலும் மாமன், மாமியவை கூட ஒரு மாதிரியெல்லே எங்களைப் பாக்கினம். கதையள் கூட கொஞ்சம் வித்தியாசமாய்த்தான் இருக்குது.

சண் : எங்கடை ஆட்கள் எல்லாரும் "டாக்குத்தர்" பரம்பரைதான். நாங்கள் மற்றவை மாதிரி இல்லை.

வேலு : எனக்கு அப்பிடி ஆரும் இருந்ததா தெரியேல்லை. சொல்லுங்கோ கோப்பம்.

சண் : இங்கே. என்ரை மனிசியின்ரை ஒண்டவிட்ட தம்பியிரை மச்சான் ஆர்?, என்ரை ஒண்டவிட்ட அண்ணற்ரை மூத்த மருமகன்ரை தம்பி முடிச்சது ஒரு "டாக்குத்தரை" தங்கச்சியை.

வேலு : உந்த ஒண்டை விட்டதுகளை விட்டிட்டு, ஒண்டை விடாமல் ஆரேன் இருந்தா சொல்லுங்கோவன். உப்பிடிப்பாத்தா எனக்கு கன பேர் இருக்கினம்.

பர : உமக்கோ? ம்! இதென்ன புதுக்கதையா இருக்குது. அப்பிடி ஆர் இருக்கிறது?

வேலு : ஊரிலை எங்கடை வீட்டுக்கு முன்னாலை ஒரு "டாக்குத்தர்" நான் வேலை செய்த கடைக்குப் பக்கத்திலை ஒரு "டாக்குத்தர்" இருந்தவர். இங்கையும் போன கிழமை நான் "டாக்குத்தரிட்டை" போயிட்டுத்தாயின் வந்தனான்.

சுப் : வேலு, நீர் இன்னும் ஒருக்கா ஒரு நல்ல "டாக்குத்தரா" பாத்து கொஞ்ச மருந்து எடுத்தாத்தான் நல்லது போலை இருக்கு. உங்களுக்கு வேறை கதையள் இல்லையே?

தங்கம் : இஞ்சேருங்கோ, உங்களுக்கும் வேலுவுக்குந்தான் சொல்லிறன். சும்மா இருந்து கொண்டு ''நரம்பில்லாத நாக்காலை நாலுபாட்டுக்கும் கதையாதையுங்கோ'' பிள்ளையளைப் படிக்கவிட்டு ஒரு ஆமான ஆக்கள் ஆக்கிறதெண்டா சும்மா லேசான காரியமே? அதுக்குத்தான் சீதனமும் அப்பிடி வாங்கினம்.

வேலு : நான் திரும்பவும் குறுக்கை கதைக்கிறன் எண்டு யாரும் கோவிக்கக்கூடாது. நான் ஒரு சீதனமும் வேண்டிறதில்லை எண்டு முடிவு செய்திட்டன்.

சுப் : அந்த முடிவெடுத்து இப்ப நாலைஞ்சு வருஷமாச்சு.

வேலு : என்ரை காசிலைதான் கலியாண வீட்டு செலவு, தாலி கூறை எல்லாம் செய்யிறது. ஆனா ஆரேன் தந்தா நான் வேண்டாம் எண்டும் சொல்லவும் மாட்டன்.

சண் : நீ என்ன எங்கடை தம்பி மாதிரி ஒரு டாக்டர்க்குப் படிச்சனீரே பொம்பிளை வீட்டைக் கொண்டு செலவழிக்க?

வேலு : நான் படிக்கிற காலத்திலை படிப்பெல்லாம் சரியான கஷ்டம். வாத்தியார்மாரும் சரியில்லை. அதாலைதான் என்னாலை படிக்க முடியாமல் போட்டுது. இல்லை எண்டா, நான் இப்பவும் படிச்சுக் கொண்டுதான் இருந்திருப்பன். இங்கை வந்தவை எல்லாம் ஊரிலை இருந்தா இங்கை மாதிரி படிச்சிருப்பினமே?

சுப் : படிக்கிறபிள்ளை எங்கை இருந்தாலும் படிக்கும். ஆனால் கொஞ்ச வசதியும் வேணும்தான். படிக்காட்டா என்ன? வடிவான பொம்பிளையை கலியாணம் செய்யமுடியாதோ? இங்கை நாங்கள் என்ன செய்தனாங்கள்?

தங் : சும்மா இருங்கோ. இடைக்கிடை என்னோடை ஒரு கொழுவல் கதையள் கதைக் காட்டாத பத்தியம் வராது. இருங்கோ நான் கோப்பி போட்டுக் கொண்டு வாறன். பரமேசக்கா வாங்கோ.

சண் : (சிறிது பொறுத்து) நான் என்ரை மனிசிதான் வாய் காட்டுது எண்டு பாத்தா, இங்கை தங்கம் எல்லாரையும் மிஞ்சிவிட்டுது போலை இருக்குது.

சுப் : ஊரிலை கோடிக்கு கோடி, மூலைக்கு மூலை நிண்டு ஊர்ப் புதினங்கள் கதைப்பினம். இங்கை என்ன செய்யிறது? ம்! அதுதான் தெரிஞ்ச ஆட்களைக்கண்ட

உடனை ஒரு சின்ன ஆவேசத்திலை அப்பிடிக் கதைக்கினம். நான் உதுகளை எல்லாம் கணக்கு எடுக்கிறேல்லைப் பாரும். அது வஞ்சகமில்லாதது.

வேலு : இங்கை அனேகமா எல்லாரும் மனிசிமாருக்கு கொஞ்சம் பயந்தவைதான். நான் ஒரு வடிவான பொம்பிளையைக் கலியாணம் முடிச்சு, மனிசியை ஆட்டி வைக்கேல்லை நான் கந்தர்மடத்தடி வேலு இல்லை.

சுப் : நல்ல அனுபவசாலி சொல்லிறார், கேளுங்கோ. அப்ப இந்த ஜென்மத்திலை உனக்குக் கலியாணம் இல்லை. இங்கே, உந்த வடிவு கிடிவுகளை விட்டிட்டு, ஒரு நல்ல குணமான பொம்பிளையா பாத்து செய்யடாப்பா. நான் இப்ப தங்கத்தின்ரை வடிவிலையே என்னோடை கூட்டிக் கொண்டு போறன். வேலைக்குப் போகேக்கை வாசல் வரைக்கும் வந்து கதவு சாத்தும். திரும்பி வந்த உடனை கோப்பி போட்டுத் தரும். கதவு திறந்த உடனை மனிசியின்னரை சமையல் மணத்திலை, வந்த களையெல்லாம் மாறிப்போம்.

சண் : நான் ஒருத்தரையும் நம்பமாட்டன். இங்கத்தை வெள்ளைக்காரர் மாதிரி "டைவேஸ்" எடுத்தாலும் எண்டுதான் உவை எல்லாம் உப்பிடிச் செய்யினம். அப்பிடி ஏதும் எண்டால் ஏனெண்டா, உந்த

வயதிலை ஆர் உவையை முடிக்கப் போகினம்?

வேலு : அண்ணை, உங்களுக்கும் அப்பிடித்தானே? பரமேஸ் அக்காவை விட்டா உங்களை ஆர் முடிப்பினம்?

சண் . என்னரை மனிசி அப்பிடிப்பட்ட ஆளில்லை. நான் இங்கை உள்ள ஆக்களைப் பற்றித்தான் கதைக்கிறன்.

வேலு : (மெதுவாக) சுப்பையாண்ணை, இவருக்கு வேளைக்கு கோப்பியைக் குடுத்து அனுப்பி விடுங்கோ. இல்லையெண்டா இண்டைக்கு இங்கை பெரிய பிரச்சினைக்கு இடமிருக்குது. கதையள் எல்லாம் ஒரு மாதிரிப் போகுது. இவருக்கு மூளை கிளையிலை ஏதும் சுகமில்லையோ? கதையை மாத்துங்கோ.

சுப் : இங்கை பாருங்கோ, நாங்கள் கலியாணம் முடிச்ச புதிசிலை, மனிசி என்னை ஒருநாளைக்கு கன்ன உச்சி புறிச்சு தலை இழுக்கச் சொல்லும். அடுத்த நாள், நடு உச்சி புறிச்சு இழுக்கச் சொல்லும். இன்னொரு நாள் உந்தக் காப்பிலியள் மாதிரி சுருட்டி விடச்சொல்லும். அப்ப எல்லாம் செய்தனான்தான். இப்ப அது முடியுமோ? இல்லை ஒரு கதைக்குக் கேக்கிறன்? தலைமயிருக்கு எங்கை போறது?

வேலு : சும்மா உந்த மயிர்க் கதையளைவிட்டிட்டு, கல்யாண வீட்டு ஆயுத்தங்களைப் பற்றிக் கதையுங்கோ உங்கை இப்ப கோயில்சள், Hall லுகள் எல்லாம் எடுக்கிறது சரியான கரைச்சல். ஒவ்வொரு நாளும் ஏதோ நடந்து கொண்டிருக்குது. எல்லாம் எங்கடை ஆக்கள்தான்.

சண் : அப்பிடி ஒரு இடம் எடுக்க உங்களாலை முடியாதோ? நான் தம்பியைக் கொண்டு நல்ல இடத்திலை பெரிய இடமா எடுத்து உந்தக் கலயாணத்தை நடத்திக் காட்டிறனோ. இல்லையோ எண்டு பாருங்கோ.

வேலு : அண்ணை, ஹால் காசும் பெம்பிளை வீட்டுக்காரரோ குடுக்கிறது?

சண் : பின்னை யார் குடுக்கிறது?

வேலு : அதுதானே என்ன இவ்வளவு உசாராக் கதைக்கிறீங்கள் எண்டு பாத்தன். இங்கை முழுச்செலவும் துரையப்பா அண்ணையவைதான் கொடுக்க வேணும்போல இருக்குது.

சண் : பின்னை, மாப்பிள்ளையும் "டாக்குத்தரா" வேணும், காசும் செலவழிக்க ஏலாதெண்டா என்ன செய்யிறது?

வேலு : ஏதோ நீங்களும் அவையளும் பட்டது பாடு. கலியாணம் செய்யப் போறதுகள்

போசாமல் இருக்குதுகள். தாய் தகப்பனுக்கு விலக்குப் பிடிக்கிறதுதான் பெரிய வேலை. கலியாண வீட்டுக்கு இங்கை இரண்டு ''லொறி'' யிலை ''பொலிஸ்'' வேணும்போலை இருக்குது. அது நான் ஒழுங்கு படுத்திறன்? இங்கை தங்கமக்கா வந்திட்டா. கோப்பியைக் குடியுங்கோ.

சுப் : நான் ஒருநாளைக்கு தங்கச்சியையும், மச்சானையும் இங்கை வரச் சொல்லிறன். நீங்களும் இங்கை வாங்கோ. எல்லாரும் கதைச்சு ஒரு முடிவு எடுப்பம்.

சண் : அவையை என்ன கேக்கிறது? ஏதும் கதைக்கிறதெண்டா, எல்லாரும் எங்கடை வீட்டை வாருங்கோ. பரமேசு, கோப்பியைக் குடிச்சிட்டு வாரும். தம்பி வந்திடப் போகினம். (சண்முகமும், பரமேஸ்வரியும் போகிறார்கள்)

தங் : உதுக்குத்தான் சொன்னனான் அண்ணையவை இருக்கேக்கை உதுகளைக் கதையுங்கோ எண்டு. அவருக்கு இங்கை வந்த உடனை, குதிரையிலை ஏறினமாதிரி எண்ணம் போலை இருக்குது. கலியாணம் முடியட்டும். உவைக்கு ஒரு பாடம் படிப்பிச்சுக் காட்டிறன்.

சுப் : பெரிய வாத்தியார், பாடம் படிப்பிக்கப் போறா. சும்மா இரப்பா. வேலு, என்ன கதையைக் காணேலை?

வேலு : என்ரை கலியாண வீட்டுக்கு அம்மாவை இங்கை கூப்பிடுவம் எண்டு இருந்தனான். இப்ப பாக்கிற சாடையிலை, என்னத்துக்கு வீண் கரைச்சல்களை எண்டு யோசிக்கிறன்.

தங் : கலியாண வீட்டுச் சாட்டிலை ஒருக்கால் இலண்டனையும் பாத்துக் கொண்டு போகத்தானே இங்கை வாறவை. இதுகும் இல்லாட்டா என்னெண்டு அவையள் இங்கை வாறது?

வேலு : தங்கமக்கா, நீங்கள் உள்ளை இருக்கேக்கை இங்கை சண்முகண்ணை உங்களைப் பற்றிச் சொன்னது கேட்டதோ?

சுப் : உனக்கென்னப்பா வேறை வேலை இல்லையே? அவருக்கு இங்கை என்னும் ஊர் பிடிபடல்லை அதுதான் அப்பிடிச் சொன்னவா.

தங் : அவருக்கு ஊரில்லை, என்னைப்பற்றி நல்லாத் தெரியேல்லை. வேலு, என்ன சொன்னவர் எண்டு சொல்லு. அண்ணையவைக்கு இப்பவே நான் "போன்" பண்ணிச் சொல்லி விடுகிறன்.

சுப : உந்தப் "போனை" வையப்பா. உங்கடை சண்டையளாலை, உந்த "டெலிபோன்" கொம்பனியளுக்குத்தான் நல்ல உழைப்பு. இதன்ன "மொபைல் போன்" எண்ட நினைப்போ?

தங் : இது என்ரை சீதனக்காசிலை வாங்கின வீடு. இங்கை நான் வைச்சதுதான் சட்டம்.

சுப் : இருபத்தைஞ்சு வருஷமா இதுதான் கதை. "போன்" பில்லுகள் கட்டிறது மட்டும் நான். இண்டைக்கு உந்த வேலுவை வீட்டுக்கை விட்டதுதான் நான் விட்ட பிழை.

❖❖❖

காட்சி - 6

இடம் : தெரு

*பாத்திரங்கள் : துரையப்பா, சரஷ்வதி, வேலு*

*(துரையப்பா காதில் "walkman" ஐ மாட்டிக் கொண்டு சரஷ்வதி உரத்துக் கூப்பிடுவது கூடத்தெரியாமல் செல்கின்றார்)*

சரஷ் : கத்திக் கத்தி என்ரை வானாள் போகுது. கண்டறியாதது ஒண்டைக் காதுக்கை மாட்டிக் கொண்டு, கிழக்கை போறனெண்டு கொண்டு மேற்கையெல்லே போகுது இந்த மனிசன். ஆரேன் எங்கடை ஆக்கள் கண்டா, காதுக்கை "செவிட்டு மெசின்" மாட்டியிருக்கு எண்டெல்லே நினைக்கப் போகினம். அறுபத்தெட்டு உடுப்புக்களையும் மாட்டிக் கொண்டு என்னாலை எட்டி நடக்கவும் முடியாமல் இருக்குது.

துரை : (திரும்பி வந்து) என்னப்பா பேசாமல் வாறீர்? இந்த "அரபிக் கடலோரம்" பாட்டு

இதுக்குள்ளை கேட்க, எனக்கு ஏதோ செய்யுது. படத்திலை பாத்த மாதிரி! நானே அங்கை நிக்குமாப் போலை இருக்குது.

சரஷ் : உங்களை அந்தப் படம் பாக்கவிட்டதுதான் பிழை. இப்ப உங்களுக்கு எத்தினை வயது? ம்... ஆரேன் எங்கடை ஆட்கள் பாத்தா சிரிக்கப் போகினம்.

துரை : இப்ப என்ன "காயாத கானகத்தே எண்டு" எண்டு பாடச் சொல்லிறீரோ? இலண்டனிலை காயாத கானகத்துக்கு எங்கை போறது? சும்மா சொல்லப்படாது சரசு, இப்பத்தே பாட்டுக்களைக் கேக்க அறையைப் பூடடிப்போட்டு உள்ளுக்கு நிண்டாகுதல் டிஸ்கோ "டான்ஸ்" ஆட வேணும்போல இருக்குது.

சரஷ் : என்னத்தையெண்டா என்ன பூட்டிப் போட்டு நிண்டு ஆடுங்கோ. இங்கை எங்களை மற்றவைக்கு முன்னாலை கொஞ்சம் மரியாதையா நடக்க விடுங்கோ.

துரை : எங்கடை ஆட்களைப் பற்றி எனக்குச் சொல்லிறீரோ? அதிலை பாரும் வேலு நிக்கிறார். ஊரிலை, உடுத்த வேட்டிக்கு அடுத்த வேட்டி இல்லாமல் இருந்தவர். இங்கை "ரை" கட்டாமல் அடுத்த வீட்டை போகமாட்டாராம்.

சரஷ் : அதுகள் கலியாணம் செய்யிற வயதுப் பிள்ளையள். எப்பிடியும் உடுக்கலாம்.

இங்கை அதுகள் தங்கடை காசிலை உடுக்குதுகள். நீங்கள் முந்தி என்னைப்பாக்க வரயுக்கை, இரவல் வாங்கி போட்டமாதிரி இல்லை. இப்ப கெதியா நடவுங்கோ. பிள்ளை சிந்துவை இன்னும் இரண்டு நாளிலை இங்கை வரப் போகினம். எனக்கு என்ன செய்யிற தெண்டு ஒண்டுமே தெரியேல்லை.

துரை : சரசு, நீர் போய் இவன் எங்கடை செல்வத்தின்ரை கடையிலை தேவையான சாமான்களை வாங்கும். நான் வேலுவோடை கொஞ்ச நேரம் கதைச்சுப் போட்டு வாறன். அதிலை நிண்டு எங்களைத்தான் பாத்துக் கொண்டு நிக்கிறார்.

சரஷ் : உதிலை நிண்டு விடுப்புகள் கதையாமல் கெதியா வாங்கோ. ஏழு மணிக்கு "T.V. Asia" விலை தமிழ்ப்படம் இருக்குது. கெதியா வீட்டை போகவேணும்.

துரை : உதுகளை மட்டும் தவற விடாதையுங்கோ.

(வேலு வருகிறார்)

வேலு : "மிஸ்டர் துரை" How are you?. How is your lovely wife?

துரை : (தனக்குள்) எல்லாருக்கும் என்ரை மனிசியிலை ஒருகண். (சிறிது உரத்து) என்னடாப்பா உதுகள் எல்லாம் எங்கை பொறுக்கின நீர்?

வேலு : அண்ணை இதைத்தான் "இங்கிலிசிலை" ஒரு "Manners" எண்டு சொல்லிறது. இங்கை மற்றவைக்கு முன்னாலை தமிழிலை கதைச்சா "No manners" எண்டு சொல்லுவினம்.

துரை : நீர் இப்ப என்னோடை கதைச்சதுதான் "Manners" இல்லாத மாதிரி எனக்குத் தெரிஞ்சுது.

வேலு : எப்பிடி இருக்கிறியள்? ஊர் எல்லாம் ஒத்துக் கொண்டுதோ? என்ன உங்கடை மகள் இங்கை வந்துதான் கலியாணம் செய்யப்போறா எண்டும் கேள்விப்பட்டன்.

துரை : ஓமப்பா, மாப்பிளை இங்கைதானே படிச்சவர். இனி எங்கடை ஆக்களும் கனபேர் இங்கைதானே இருக்கினம்.

வேலு : எப்பிடி பயணங்கள் எல்லாம் இருந்திது? முந்தின மாதிரித்தானோ? இங்கை இருந்தாலும் பாருங்கோ நெடுகலும் ஊர் நினைவுகள்தான். உங்களைக் கண்ட உடனை, ஊரிலை உரும்பிராய் சந்தியிலை நிக்குமாப் போலை இருக்குது.

துரை : கொழும்புப் பயணம் இப்ப எங்களுக்குப் பழகிப்போச்சுது. புதுசா வாறவைக்குத்தான் கொஞ்சம் கரைச்சல். ஆனால் மனிசிக்கு "Plane" முகிலுக்காலை போறதெண்டு நினைச்ச உடனை நெஞ்சுக்கை தண்ணியில்லை. அதைப் பாக்கப் பாக்க எனக்கும் வயித்தைக்

கலக்கத் தொடங்கி விட்டுது. நாங்கள் என்ன "Government" உத்தியோகம் பாத்தனாங்களே "Plane" லை ஓடித்திரிய. மனிசி கேக்க, நான் சொன்னன் உந்தப் பனையிலை இருந்து பாத்த மாதிரி இருக்குமப்பா எண்டு.

வேலு : எங்கடை நிந்தனைப் பனையிலை இருந்து பாத்த மாதிரி எண்டு சொல்லுங்கோவன்.

துரை : எங்கடை "Airport" லை என்னாலை மூச்செடுக்க முடியாமல் போச்சுக் காணும்.

வேலு : ஏன் அவ்வளவு சனமே?

துரை : எங்கடை "யாழ்தேவி" யிலை ஏறி கொழும்புக்கு போகேக்கை, ஏறின உடனை சாரம் மாத்திற மாதிரி, மனிசி "Plane" க்கை ஏறின உடனை மாத்திறதுக்கு சாரம் எல்லாம் தைச்சுக் கொண்டு வந்திது. அதுக்கை ஒருத்தரும் மாத்தேல்லையப்பா. ஏறின உடனை "corner seat" பிடிக்க வேணும் எண்டும் என்னட்டை நெடுகலும் சொன்னபடி. அது மட்டுமே மனிசி இலண்டனுக்கு போகேக்கை நான் கட்டாயம் "ரை" கட்டவேணும் எண்டு விடாப்பிடியாப் பிடிச்சுப் போட்டுது.

வேலு : ஓம், அவா நல்லாப் பிடிப்பா போலைதான் இருக்குது. பிறகு?

துரை : நான் சொன்னனான் தான், வேட்டியும் உடுத்து, 'ரை'யும் கட்டினா நல்லா இருக்காதெண்டு. பிறகு உவன் எங்கடை தம்பிதான் எங்கையே போய் 'லேங்ஸ்" தைப்பிச்சுக் கொண்டு வந்து தந்தான். ஏதோ மாட்டுக்கு உருவுதடம் போட்ட மாதிரி கழுத்திலை கட்டி விட்டான். என்னாலை மூச்செடுக்க முடியேல்லை. எனக்கு இப்பதான் தெரியுது ஏன் "ரை" கட்டிக்கொண்டு போறவை எல்லாம் மற்றவையோட கதைக்க பைஞ்சிப் படுகினம் எண்டு.

வேலு : அப்ப "Plane" க்கை சரசக்கா என்ன செய்தா? உங்கடை கதையளைக் கேக்க நல்லா இருக்கு.

துரை : "Plane" வெளிக்கிட்டதுதான் தாமதம் மனிசி எட்டி வெளியிலை பாத்திது. பயத்திலை அப்பிடியே மயங்கி விழுந்து போச்சுது. இரண்டு மணித் தியாலம் செண்டுது மனிசி எழும்ப. அது மட்டுமே, ஏதோ சாப்பாடுகள் தந்தாங்கள், இலை குழையள் மாதிரி. அரைவாசி பச்சை. மனிசி கேட்டுது, என்னப்பா Plane க்கையும் வந்து நாங்கள்தான் சமைச்சு சாப்பிட வேணுமோ எண்டு. நான் அதிலை வேலை செய்யிற ஆக்களிட்டை அடுப்பு ஒண்டு தாங்கோ எண்டு கேக்கப்பாத்தன். ஆனா என்னைவிட மனிசி இப்ப இங்கை நல்ல முன்னேற்றம்.

வேலு : அப்பிடி என்ன செய்யிறா. இப்ப என்ன Bathroom க்குள்ளை நிண்டு குளிக்கிறாவோ? எல்லாம் கேள்விப்பட்டன்.

துரை : மனிசி இங்கை வரவெளிக்கிட்ட நாள் தொடக்கம் ''இங்கிலிஸ்'' படிச்சுது. அது இப்ப இடைக்கிடை இங்கை உதவியாயிருக்குது. அண்டைக்கு உந்த Under ground Train லை போனனாங்கள். ஏதோ எல்லாம் சொல்லுறாங்கள், சொல்லுறாங்கள் எனக்கொண்டும் விளங்கேல்லை. கடைசியிலை சொன்னதை மனிசி பிடிச்சுப் போட்டுது.

வேலு : கடைசியிலை என்ன அப்பிடி சொன்னவை?

துரை : Thank you எண்டு சொன்னதுதான்.

வேலு : அப்ப நல்ல முன்னேற்றம்தான். நான் சொல்லிறனெண்டு குறை நினைக்கப்படாது. அண்ணை கதைக் கேக்கை கொஞ்சம் இங்கிலீசையும் சேத்துக் கதைச்சா, நல்ல Style ஆக இருக்கும். இப்ப பாருங்கோ, "சும்மா ஆட்டாமல் இரும்". எண்டு சொல்லிறதை, Shake பண்ணாமல் இரும் எண்டால், அதிலை ஒரு இது இருக்குது.

துரை : அண்டைக்கு எங்கடை "ஈஸ்ட்காம்" முருகன் கோயிலிலை இங்கத்தைதே சில சின்னஞ்

சிறிசுகள் கோயில் தேரைப் பாத்து look at the தேர் எண்டுதான் காணும் சொல்லுதுகள். எங்கடை தமிழ் இங்கிலிசோடை கலக்கேக்கை "இங்கிலீசுக்குத்தான்" மதிப்பு பாரும்.

வேலும் : இப்பத்தே தமிழ் பாட்டுகளைப் பாருங்கோ, "இங்கிலீசு" சொல்லுகள் கலக்கேக்கை அதிலை ஒரு இது இருக்குது.

துரை : அப்பிடி தமிழையும் இங்கிலீஷ் பாட்டுக்களோட கலக்கப் பண்ண வேணும்.

வேலு : அண்ணை, ஏதேன் அவசரம் எண்டால் "உதவி உதவி" எண்டு கத்தினால் எங்கடை ஆக்கள் கூட திரும்பிப் பார்க்க மாட்டினம். அங்கை, Help, Help எண்டுதான் சொல்ல வேணும். எல்லாம் கலக்கிற இடத்திலை கலந்தாத்தான் ஒரு கலக்குக் கலக்கும்.

துரை : நீ நல்லாத்தான் ஆராச்சி செய்து வைச்சிருக்கிறாய் போலை இருக்குது. அது சரி, உனக்கும் இப்ப நாப்பது வயதாகுது. எங்கையேன் பாத்து ஒரு கலியாணம் செய்யிறது தானே.

வேலு : நான் என்ன மாட்டன் எண்டு சொல்லிறனோ? அந்த நாளேலை இலண்டனிலை இருந்து ஊருக்கு போவினம் கலியாணம் செய்து கொண்டு வர. இனிமேல் அங்கை உள்ளவை தான் இங்கை வந்து கலியாணம்செய்து கொண்டு

போகவேணும். நான் நினைக்கிறமாதிரி வடிவான பொம்பிளையள் ஒண்டும் இதுவரையலை இங்கை இல்லை.

துரை : அப்ப நீ நெத்துக்கு விடு. வடிவு என்னடாப்பா வடிவு? ம் "ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்"எண்டு சொல்லுவினம். தொண்ணூறு நாள் கூட உந்த வடிவு நிண்டு பிடிக்காது. நான் என்ன சரசுவின்ரை வடிவிலையே முடிச்சனான்? அந்த நேரத்திலை வடிவுமாதிரித்தான் இருந்திது. வயது போகப் போக, குணம் தான் நல்லா இருக்க வேணும். இடைக்கிடை எண்டாலும், ஆசையா இரண்டொரு சொல்லு, கொடுப்புக்கை ஒரு சிரிப்பு, இனத்திலை தாவிற மாதிரி அரைச்ச குழம்போடை ஒரு சமையல், ஆரோடை கதைச்சாலும் "எங்கடை இவர்" எண்டு சொல்லேக்கை இருக்கிற ஒரு "இது"

வேலு : இங்கை வெள்ளைக் காரனைக் கேட்டா, மனிசிக்கு வயது போட்டுது எண்டால், சிலவேளை மனிசியை மாத்து எண்டு. சொன்னாலும் சொல்லுவினம்.

துரை : ஊரிலை எண்டா, மனிசியோடை ஏதேன் கோபம் எண்டால், மனிசிக்கு இரண்டு தட்டுப்போட்டுப்பாக்கலாம். இங்கை இருக்கிற நிலைமையிலை மனிசிமார்

புருஷன்மாருக்கு தட்டுப் போட்டாலும் போட்டு விடுவினம் போலை இருக்குது!

வேலு : அண்ணை, இங்கை கொஞ்சம் கவனமாயிருங்கோ. சொந்த மனிசி எண்டாலும் No எண்டால் No தான். பிறகும் ஏதும் செய்திங்களோ, கோட்டிலைதான் போய் நிக்க வேணும். இதெல்லாம் இங்கை நடக்குது. அதோடை மனிசிமாற்ரை சமையலை ஒருக்காலும் நல்லதெண்டு சொல்லக்கூடாது. பிறகு சமைக்கவே மாட்டினம். தலைமயிர் வளர்ந்து போச்சுதோ எண்டு மனிசியைக் கேட்கக் கூடாது.

துரை : நீ நல்ல அனுபவசாலி போலைதான் இருக்கு. இப்பதான் தான் தெரியுது, ஏன் இவ்வளவு நாளும் ஒருத்தரும் உனக்கு பொம்பிளை குடுக்காமல் இருக்கினம் எண்டு.

வேலு : என்ரை அம்மாவும் அந்த நாளேலை, நீ படிச்சு முடிச்சு மாமாவின்ரை மகளைத்தான் முடிக்க வேணும் எண்டு சொன்னவா. நான் எட்டாம் வகுப்பு படிக்கேக்கையே அதுகள் எல்லாம் கலியாணம் முடிச்சு பிள்ளையளும் பெத்துப் போட்டுதுகள்.

துரை : அது சரி, நீ மூண்டு நாலு வருஷமெண்டு ஒவ்வொரு வகுப்பிலும் இருந்தா, அதுகள்

என்ன செய்யிறது? ஒண்டில் படிப்பு இருக்க வேணும், அல்லது நல்ல காசு இருக்க வேணும். நீ சொல்லத்தான் ஞாபகம் வருகுது. இங்கை யாரிட்டை எண்டாலும் சரசுவின்ரை நகையை அடைவு வைச்சாகுதல் கொஞ்சக் காசு எடுக்க வேணும்.

வேலு : உங்களுக்கு இலண்டனுக்கு வந்தும் அடைவு வைக்கிற யோசினைதான். ஏன்? கலியாணவீட்டுச் சிலவுகளுக்கோ? அல்லது...

துரை : உங்கை ஏதோ உந்த National lottery யாம். அதிலை உந்த "சொறிக் காட்" டை வாங்கி, வாங்கி ஒரே கடன்.

வேலு : அது என்ன "சொறிக் காட்"? நான் கேள்விப் படேல்லை.

துரை : தமிழிலை சென்னா உங்களுக்கு விளங்காது. உந்த Scratch card தான். இண்டைக்கு விழும், நாளைக்கு விழும் எண்டு எல்லாரிட்டையும் காசு வாங்கி, வாங்கி அதுக்கிடையிலை மூக்குமுட்டக் கடன்!

வேலு : அண்டைக்கு சண்முகம் அண்ணரைச் சந்திச்சனான், அவர் கலியாணவீட்டுக்கு போட்டு வைச்சிருக்கிற கணக்குகளுக்கு உந்த National lottery விழுந்தாலும் போதாது.

துரை : நாங்களும் கேள்விப்பட்டம். நேரிலை காணேக்கை கேக்காமல் விடமாட்டன். ஆனால் மனிசிக்கு இதுகள் ஒண்டும் தெரியாது. அங்கை சரசு வருகுது. வாய் தடுமாறி மட்டும் சொல்லிப் போடாதையப்பா!

வேலு : அப்ப நான் வாய் தடுமாறாமலே சொல்லிறன்.

❖❖❖

காட்சி-7

*பாத்திரங்கள் : குமார், கண்ணன், சிந்து, வேலு*

*இடம் : தெரு (குமாரும், கண்ணனும் "pub" இலிருந்து வெளியே வந்து நிற்கிறார்கள்)*

கண்ணன் : இங்கே குமார், இதிலை குந்திக்கொண்டு இராமல் எழும்பி வாரும். இதென்ன எங்கடை ஊர்ச்சந்தியே. எழும்பி வாரும் எண்டெல்லே சொல்லிறன். நானும் இலண்டனுக்கு வந்து இரண்டு மாசமாச்சுது. இலண்டனை சுத்திக்காட்டச் சொல்லி ஒவ்வொரு நாளும் கேட்கிறன். நீர் என்னடாண்டா ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு "pub" ஆக சுத்திக் காட்டிக் கொண்டு வாறீர். நான் இலண்டனை எப்ப பாக்கிறது எண்டு தெரியேல்லை? இப்ப எழும்பி வாரும் வீட்டை போவம். யாரேனும் தெரிஞ்ச ஆட்கள் கண்டால் எவ்வளவு வெட்கம்?

குமார் : (சிறிது வெறியுடன் பேசுதல், பின்னர் முழு வெறியுடன் பேசுதல்)

டேய் கண்ணா! இது இலண்டன். ஒவ்வொரு நாளும் "pub" க்குப் போனால்தான் என்னாலை ஒழுங்கா ஒரு சொல்லு சொல்ல முடியுது. உந்த வெள்ளைக்காரனைப் பாரும். "pub" போறவன் தான் பெரிய மனுசன். சிகரட்டுக் குடிக்கிறவன்தான் "smart" ஆன ஆள். அதைத்தான் நானும் செய்யிறன்.

கண்ணன் : சரி, சரி நீர் இப்ப பெரிய ஆள்தான். எல்லாருக்கும் பெரிய ஆட்களாக வரத்தான் விருப்பம். அதுக்கு மற்றவை செய்யிறதைக் "Copy" பண்ணாமல் உங்கடை சொந்த மூளையிலை எதையேன் செய்யுங்கோவன். இப்ப வாரும் வீட்டை போவம். இதாலை போற வெள்ளைக் காரங்கள் எல்லாம் எங்களை ஒரு மாதிரிப் பாத்துக் கொண்டு போகினம்.

குமார் : யாரடா அப்பிடிப் பாக்கிறது? ம் ஏதோ காணாததைக் கண்டமாதிரி. உந்த வெள்ளைக்காரர் பாத்தா, எங்கடை தமிழை நல்ல பேச்சுக் குடுத்து விடு. எங்கடை தமிழ் ஆட்கள் யாரேனும் பாத்தா, இங்கிலீஸ்லை நல்ல பேச்சுக் குடுத்து விடு. (சிறிது சிரிப்புடன்) ஒருத்தருக்கும் ஒண்டும் விளங்காது. பாக்கிறதுக்க வேறை ஆட்கள் கிடைக்கேல்லையோ எண்டு கேளடா.

கண்ணன் : ஏன் நீர் கேளுமன்? உம்மாலைதானே உந்தப் பிரச்சினை எல்லாம். பிழைகளையும் செய்து போட்டு, ஏன் சும்மா இருக்கிற என்னைக் கொழுவி விடுகிறீர்? எங்கடை ஆட்கள் சிலபேர் இப்ப உப்பிடித்தான். தங்களாலை முடியேல்லை எண்ட உடனை சும்மா இருக்கிற அப்பாவியளைப் பிடிச்சு கொழுவி விட்டுட்டு கூத்துப் பாக்கினம். சிலபேர் தங்கடை சொந்தப் பிள்ளையளைக் கூட இதுகளுக்குப் பாவிக்கினம். முதுகெலும்பு இல்லாதவங்கள்!

குமார் : நான் ஏன் இண்டைக்கு "கடிச்சனான்?" குடிச்சனான்? ம்! மனசிலை மறக்க முடியாத பெரிய கவலை.

கண்ணன் : ஏன் மற்ற நாட்களிலை குடிக்காத மாதிரிக் கதைக்கிறீர்? எழும்பி வாரும் வீட்டை போவம்.

குமார் : நான் சொல்லிறதைக் கொஞ்சம் கேளடாப்பா. கலியாணம் செய்யலாம் எண்டா, ஒரு உழைப்பும் இல்லை. புதுகார் வாங்கலாம் எண்டா, ஒருத்தனும் "loan" தாறாங்களில்லை. ஒரு வீடு வாங்கலாம் எண்டால், ஒருத்தனும் "mortgage" ம் தாறாங்களில்லை. உழைப்பு ஒண்டும் இல்லாமல் கலியாணம் செய்தா, பிறகு மனிசி "வருஷப்பிறப்பும் இல்லே, புருஷன் உழைப்பும் இல்லை" எண்டு பாட்டுப் படிக்க, நான் இருக்கிறதாலை தூக்கி

அடிக்க, நான் திரும்பவும் "pub" க்குப் போய் குடிக்க, எதுக்கு வீண் தொந்தரவு எண்டுதான் இண்டைக்கு குடிச்சனான்.

கண்ணன் : இங்கை பாரும், இவ்வளவையும் எனக்கு எத்தினை நாள் திரும்பத் திரும்ப சொல்லிப் போட்டீர்? இப்ப எழும்பி வாரும். (மறு புறம் திரும்பி) இங்கை எங்கடை வேலு அண்ணை வாறார்.

வேலு : என்ன தம்பியவை மப்பிலை நிக்கிறீங்கள் போலை இருக்கு. என்ன "pub" ஆலையே வாறியள்? எதுக்கு நேரத்துக்குப் போகாட்டிலும், 'pub' க்குப் போறதுக்கு மட்டும் பிந்திப் போகாதையுங்கோ! உங்களை எப்பிடித் திருத்திறதோ தெரியேல்லை.

குமார் : வேலண்ணை, நான் ஏன் இண்டைக்கு குடிச்சனான்? மனத்திலை பெரிய கவலை. ஊரிலை இருந்த வீடெல்லாம் பொம்மரைப் போட்டு உடைச்சுப் போட்டாங்கள். என்னட்டை "B.Sc Civil Engineering" லை ஒரு "certificate" இருக்குது. M.Sc. Accountancy" லை ஒரு 'certifiate' இருக்குது. இதோடை 15 வருஷம் வேலை செய்த 'experience' உம் இருக்குது. ஒரு தடிப்பயலும் வேலை தாறாங்களில்லை. நான் என்ன செய்யிறது? அதுதான் இண்டைக்கு குடிச்சனான்.

வேலு : தம்பி, இங்கை உந்த 'qualification, certififate' க்களை ஒருதருக்கும் சொல்லாதையும். உதுகள் ஒண்டும் இல்லாதவைதான் இங்கை பெரிய ஆட்களாக இருக்கினம். எங்கடை ஆக்கள் சிலபேர் உதுகள் இருக்குது எண்டு தெரிஞ்சா கழுத்தறுத்துப் போடுவினம். ஒரு வேலையிலை சேந்து போட்டுப் பிறகு உதுகளைச் சொல்லும்.

குமார் : (மூவரையும் காட்டி) இண்டைக்கு 'you, you, you' எல்லாரும் என்ரை வீட்டை வாருங்கோ, நான் என்ரை 'certificate' க்களை உங்களுக்கு காட்டிறன். என்ரை கவலையை மறக்கத்தான் இண்டைக்கு குடிச்சனான்.

கண்ணன் : வேலு அண்ணை! நீங்கள் போங்கோ. நான் குமாரோடை 'pub' க்குப் போறதுதான். ஆனால் ஒண்டும் குடிக்கிறதில்லை. நான் இவரை வீட்டை கூட்டிக் கொண்டு போறன். இவர் இப்பிடித்தான் சொல்லுவார். ஒவ்வொரு நாளும் 'pub' திறக்கிற நேரத்துக்கு இவருக்கு ஏதோ ஒரு கவலை வந்திடும்.

வேலு : என்ன தம்பி விழுந்து கையைக் காலை உடைச்சுப் போட்டாரோ? விரலிலை என்னவோ கட்டியிருக்கு? ஏதேனும் காயமோ?

கண்ணன் : அதை ஏன் கேக்கிறியள்? அது அண்டைக்கு ஒரு நாள் எங்கடை ஊர் வெங்காயம்

வாங்கி சமைக்க வேணுமெண்டு வாங்கிக் கொண்டு போய் வெட்டினார். உவருக்கு வெறியிலை விரலுக்கும் வெங்காயத்துக்கும் வித்தியாசம் தெரியேல்லை. விரலை வெட்டிப் போட்டு, வெங்காயத்திலை இருந்து இரத்தம் வருகுது எண்டு கத்தினார். உதுகளை ஏன் கேக்கிறியள்? "குடிகாரன் பேச்சு விடிஞ்சால் போச்சு" எண்டு சொல்லுவினம். ஆனால் இவருக்கு விடியிறதே இல்லை.

வேலு : நானும் ஒரு காலத்திலை இங்கை உள்ள தண்ணிப்பந்தல்கள் எல்லாம் ஏறி இறங்கினனான்தான். ஒரு நாள் என்ரை டாக்குத்தர் சொன்னார். இந்த குடி மூளையிலை இருக்கிற அந்த ஞாபக சக்தியைக் குறைக்குமாம். என்னத்துக்கு கரைச்சலை எண்டு போட்டு, எல்லாத்தையும் இப்ப விட்டிட்டன். இருக்கிறதே ஒரு கொஞ்ச மூளை அதுவும் அல்லாட்டா, என்னெண்டு என்ரை இந்தியன் கடையிலை வேலை செய்யிறது?

கண்ணன் : உவற்றை விளையாட்டுகளை என்னெண்டு வெளியிலை சொல்லிறது? அண்டைக் கொரு நாள் ஒரு இடத்திலை விளையாட்டுப் போட்டி நடந்திது. 400 யார் ஒட்டம் ஓடவேணும். இவருக்கு சரியான வெறி. விசில் அடிச்ச உடனை, எல்லாரும் ஒருபக்கம் ஓட, இவர் மற்றப்

பக்கமா ஓடினார். ஏனடாப்பா இப்பிடி ஓடினாய் எண்டு கேட்க, எந்தப் பக்கமா ஓடினாலும் முடியிறது ஒரு இடத்திலைதானே அதாலைதான். ஆக்கள் குறைஞ்ச பக்கத்தாலை ஓடுவம் எண்டு ஓடினானம். இவர் சொன்னதும் ஒரு வழியிலை நியாயம்தான்.

குமார் : என்னடாப்பா என்னை விட்டிட்டு ஓடிற கதை கதைக்கிறாய். என்னை இதிலை விட்டிட்டு ஓடப்போறியோ?

கண்ணன் : நீங்கள் போங்கோ. இண்டைக்கு இதிலை நாள் முழுக்க இருக்கட்டும். அப்பிடி எண்டால்தான் இனிமேலாவது திருந்தி நடப்பார். வேலு அண்ணை இவரை இதிலை விட்டிட்டு போகலாம் எண்டு எனக்கு இதுவரையிலை யோசினை வரயில்லை. அவர்தான் அதையும் ஞாபகப் படுத்திவிட்டிருக்கிறார்.

வேலு : தம்பி அவர் என்ன சொன்னாலும் நிண்டு கூட்டிக் கொண்டு போம். சும்மா நடக்கேக்கை ஒவ்வொரு காலா தூக்கி வைப்பீங்கள். தண்ணி அடிச்சா இரண்டு கால்களையும் ஒண்டா தூக்கச் சொல்லும்! உந்த "Traffic lights" எல்லாம் எந்த நேரமும் பச்சை பச்சையாத்தான் தெரியும். உதுகள் எல்லாம் நான் கண்ட அனுபவம். உந்த குடிக்கிற காசுக்கு நல்ல சாப்பாட்டை வாங்கி சாப்பிடுங்கோவன். ஊரிலை

எவ்வளவு சனம் சாப்பாட்டுக்கு கஷ்டப்படுகுதுகள்?

குமார் : வேலண்ணை, சாப்பாடோ? உதிலை எங்கடை கோயிலிலை போனால் பத்துக் கறியளோடை சாப்பிட்டிட்டு வரலாம். எவ்வளவு காசு மிச்சம் தெரியுமோ?

வேலு : உதுகளுக்கே கோயில்களுக்குப் போறனீங்கள்? நல்லாத்தான் இருக்கப்போகுது. எங்கடை கோயில் எண்டு மட்டும் சொல்லுங்கோ. உந்தக் குடிக்கிற காசைச் சேர்த்து அங்கை கொடுத்தாலும் கொஞ்சம் புண்ணியமாவது கிடைக்கும்.

குமார் : அண்ணை நான் குடிச்சாலும் நியாயத்தைத்தான் பேசுவன். மூலைக்கு மூலை இப்ப கோயில்கள் வருகுது. ஆருக்கெண்டு காசு குடுக்கிறது? ம் பக்தியோடை கும்பிடப்போற கோயில்களை இப்ப சிலபேர் "பிஸினஸ்" செய்யிற இடமாக்கிப் போட்டினம். அதுமட்டுமோ எங்கை போனாலும் பிடுங்குப்பாடுதான்.

வேலு : ஊரிலும் இப்பிடித்தானே இருக்குது. இங்கை அதுகள் கொஞ்சம் பெரிசாகத் தெரியுது.

குமார் : ஆர் அதிலை போறது? "குரையப்பா அண்ணையின்ரை" - துரையப்பா அண்ணையின்ரை சிந்து போலை இருக்குது. சிந்துவை ஒருக்கால் இங்கை

கூப்பிடுங்கோ. இண்டைக்கு இரண்டிலை ஒண்டு கேட்க வேணும். ஒவ்வொரு நாளும் என்னைப் பாத்து சிரிச்சுப்போட்டு போகுது. என்னைக் கலியாணம் செய்யிறீரோ எண்டு ஒருக்கால் கேட்க வேணும்.

வேலு : என்ன தம்பி, சிரிக்கிற பொம்பிளையளை எல்லாம் என்னைக் கலியாணம் செய்யிறீரோ எண்டு கேட்டா, செருப்பாலைதான் சாத்துங்கள். கொஞ்சம் அளவாப் பேசுங்கோ.

குமார் : (பாடுகிறார்) "you" எங்கே "my" நினைவுகள் அங்கே "you" ஒருநாள் வரும் வரைக்கும் நானிருப்பேன் "River" கரையில்.

கண்ணன் : குமார் சும்மா இரும். அது ஒரு மாதிரிப் பாக்குது.

குமார் : (தொடர்ந்து பாடுகிறார்) 'full moon' நிலவில் 'snow' விழும் 'night' ல் 'sea' க்கரைச் 'sand' ல் இருப்போமா. 'silence' மொழியில், மயக்கத்தின் விழியில் 'story story' ஆக படிப்போமா?

வேலு : தம்பியவை, சிந்து இந்தப்பக்கமா வாறா போலை இருக்குது. பாக்கிற பார்வையும் சரியில்லை. வாற வரத்தும் நல்லாயில்லை. நில்லுங்கோ நான் பிறகு வாறன்.

கண்ணன் : குமார் பேசாமல் இரும். எல்லாரும் எங்களைத்தான் பாக்கினம்.

குமார் ; தமிழை உலகம் முழுக்கப் பரப்ப வேணுமெண்டா, தமிழ்ப் பாட்டை இங்கிலீஸ்லை மாத்திப் பாடுங்கோ. இங்கத்தே பிள்ளையளுக்கு English பாட்டு, disco எல்லாம் நல்லாப் பிடிக்கும். நான் என்னெண்டு 'English' பாட்டுப் பாடிறது? ம்... தமிழ்ப்பாட்டே சரியா வருகுது இல்லை. அதுதான் தமிழ்ப்பாட்டை 'English' லை மாத்திப் பாடினனான். பாத்தியா கண்ணா என்ரை 'English தமிழ்ப்' பாட்டிலை மயங்கி வருகுது. (சிந்து கிட்ட வந்தபின்) "Hello my dear Da....Da.... Darling....

சிந்து : என்ன 'da....da..' ஏன் எங்கடை மானத்தை வாங்கிறியள்? ம்.. உங்களுக்கு அக்கா தங்கச்சிமார் இல்லையோம்! றேட்டாலை ஒரு பெம்பிளைப் பிள்ளையளும் தனியாகப் போக முடியாமல் கிடக்குது. குடிச்சா ஒழுங்கா வீட்டை போங்கோவன். ஏன் நடுச்சந்தியிலை நிண்டுகொண்டு நாலுபேர் சிரிக்க வைக்கிறீங்கள்?

கண்ணன் : தங்கச்சி குறை நினைக்காதையுங்கோ. இவர் இண்டைக்கு கொஞ்சம் முறை தவறிக் கூப்பிட்டுட்டார். மன்னிச்சுக் கொள்ளுங்கோ.

சிந்து : நான் இங்கை வந்த நாள் தொடக்கம் ஒவ்வொரு நாளும் உங்களை இதிலை, இந்த நேரத்திலை பாக்கிறன். ஊரிலை எவ்வளவோ பேர் எத்தினையோ கஷ்டப் படுகுதுகள். ஏன் இப்பிடி காசைக் கரியாக்கிறீங்கள்? ம்!

குமார் : சிந்து, நீ...நீ... ஏன் ஒவ்வொரு நாளும் உதாலை போகேக்கை என்னைப் பாத்து சிரிக்கிறீர்? இதுக்கொரு முடிவு சொல்லிப் போட்டுத்தான் நீர் அங்காலை போகவேணும். நான் எத்தினை கற்பனை பண்ணி வைச்சிருக்கிறன் தெரியுமே?

சிந்து : நான் உங்களைப் பாத்து சிரிச்சது. உங்கடை அழகிலை இல்லை. உங்கடை அலங்கோலத்தை பாத்துத்தான் சிரிச்சனான். கோட்டும் சூட்டும் போட்டுக் கொண்டு, விதம் விதமா ஒவ்வொரு 'Tie' யும் கட்டிக் கொண்டு, ஒவ்வொரு நாளும் குடிக்க மட்டும் வந்திடுவியள். ஏன் இந்த பொன்னான நேரத்தை மண்ணாக்கிறீங்கள்?

குமார் : நான் குடிச்சாலும் நியாயத்தைத்தான் பேசுவன். ஊரிலை கள்ளுக் கொட்டிலுக்கு குடிக்க போறதெண்டா, சாரம் (கொடுக்கு) கட்டிக்கொண்டு போனால்தான் ருசிக்கும். 'Tie' கட்டிக்கொண்டு போக முடியாது. இங்கை

'Pub' க்கு போறதெண்டா, 'Tie' கட்டிக் கொண்டு போனால்தான் மதிப்பு. சாரம் (கொடுக்கு) கட்டிக்கொண்டு போக முடியாது (சிறிது சிரிப்புடன்) ம்! எனக்கு சாரம் (கொடுக்கு) கட்டவும் தெரியாது.

சிந்து : இப்ப உங்களுக்கு என்ன கட்டத் தெரியும், என்னகட்டத் தெரியாதெண்டு நான் கேக்கவரேல்லை. நீங்கள் என்னத்தைக் கட்டிக்கொண்டு போனாலும் எனக்கு கவலையில்லை. ஆனால் என்னைக் கலியாணம் கட்டலாம் எண்டு மட்டும் கனவு காணாதையுங்கோ. எனக்கு அப்பா, அம்மா, அக்கா, அண்ணை, தங்கச்சி, தம்பி எல்லாம் இருக்கினம்.

குமார் : பெரிய குடும்பம் போலை இருக்குது. அப்ப எனக்கும் சரிப்பட்டு வராது. ஊரிலை எத்தினை பேர் என்னைக் கட்டவேணு மெண்டு ஒற்றைக்காலிலை நிண்டவை. நீர் இங்கை என்னடா எண்டா...

சிந்து : இனிமேலும் என்னைக் கட்ட வேணுமெண்டு சொன்னா, நீங்களும் இனிமேல் ஒற்றைக் காலிலைதான் இங்கை நிற்கவேண்டி வரும். இங்கை எல்லாம் இந்த சின்னஞ்சிறிசுகள் எல்லாம் என்ன மரியாதையா பழகுதுகள். அதுகளைப் பாத்தாவது திருந்துங்கோவன். எப்பதான் திருந்தப் போறியளோ தெரியாது?

கண்ணன் : தங்கச்சி சிந்து, அவர் இப்பவே ஒற்றைக் காலிலைதான் நிக்கிறார். நீர் போம். நான் இவற்றை சினேகிதன் எண்ட முறையிலை உம்மிட்டை மன்னிப்புக் கேட்டுக்கொள்றன்.

சிந்து : நடக்கிறதை ஒழுங்கா நடந்தா மன்னிப்புக் கேட்பானேன், மரியாதை கெடுவானேன். மற்றவையை மதிச்சாத்தான் உங்களையும் மற்றவை மதிப்பினம். இனிமேலாவது ஒரு நல்ல எண்ணத்தோடை நடவுங்கோ. போகிறார்.

குமார் : (சிறிது பொறுத்து) டேய் கண்ணா, சிந்து போட்டாளேடா? நானும் இலண்டனுக்கு வந்த பொம்பிளை, கொஞ்சம் வெள்ளையா, வடிவா இருக்குதெண்டு பாத்தன். அவாவுக்கு இங்கிலீசே வாயிலை வருகுதில்லை. (பாடுகிறார்) போனால் போகட்டும் போடா... போடா... (வேலு திரும்பவும் வருகிறார்)

வேலு : என்ன தம்பியவை நல்லா வாங்கிக் கட்டினியளே? சரசக்கா மாதிரி, கொஞ்சம் வாய் கூடத்தான், ஆனால் நல்ல பிள்ளை. சிந்துக்கு, சண்முகம் அண்ணையின்ரை குகனை கலியாணம் பேசி எல்லாம் முற்றாச்சுது எண்டு கேள்விப்பட்டம். கனடாவிலை இருந்தும், ஊரிலை இருந்தும் எல்லாரும் வந்திருக்கினம். இங்கை தான் கலியாண வீடு செய்யப் போகினம்.

நீங்களும் வந்தா சாப்பிட்டிட்டுப் போகலாம். நல்ல பிள்ளையளா இருந்தால். எல்லாரும் தேடி வருவினம். இப்பிடி, இருந்தா "பொலிஸ்" தான் தேடிவரும்.

குமார் : (சிரிப்பு) நல்லாத்தான் இருக்கும். குகன் இலங்கையிலை இடிச்ச கோப்பித்தூள் மாதிரி. சிந்து, உந்த 'Jersy' பசு மாட்டிலை கறந்த புதுப்பால் மாதிரி. ஒரு பிள்ளை பிறந்தா, பால் விட்ட கோப்பி மாதிரித்தான் இருக்கும் எண்டு சொல்லுங்கோவன்.

வேலு :- தம்பியவை, நீங்கள் இங்கை வந்ததுதான் மிச்சம் இலண்டன் சீவியம் எப்பிடி எண்டு இன்னும் தெரியேல்லை. குகனும் உங்களைப் போலைதானே இங்கை வந்தவர். படிச்சு முடிச்சு இப்ப கனடாவிலை இருக்கிறார். அருமையான பையன். உங்களுக்கு எப்பிடிச் சொன்னாலும் ஏறாது. "கெடுகிறன் பந்தையம் பிடி" எண்டு நிக்கிறியள். "மரியாதையைக் குடுத்து, மரியாதையை வாங்குங்கோ". இண்டைக்கு நான் உங்களோடை சேர்ந்து என்ரை மரியாதையும் போச்சு. நீங்கள் இருங்கோ நான் வாறன். (போகிறார்.)

❖❖❖

காட்சி - 8

*இடம் : வீதி*

*பாத்திரங்கள் : சுப்பையா, தங்கம், சண்முகம், பரமேஸ்வரி*

சுப்பையா : தங்கம்! என்னப்பா இது? எவ்வளவு நேரமா உந்தத் தோட்டைக் கண்ணாடிக் குள்ளாலை பாத்துக் கொண்டு நிக்கிறீர்? ம்! கடைக்குள்ளை போய் பாக்கவும் வாறீரில்லை. ஏனப்பா உதிலை நிண்டு நேரத்தை வீணாக்கிறீர்?

தங்கம் : அதுக்கு ஏன் இப்ப சத்தம் போட்டு கதைக்கிறீங்கள்? இந்த நகைக்கடை முழுக்க தமிழ் ஆட்களாத்தான் இருக்குது.

சுப்பையா : இந்த நகைக்கடை மட்டுமில்லை, எந்த நகைக்கடைக் குள்ளை போனாலும் எங்கடை தமிழ் ஆட்களைக் காணலாம். சத்தம் போட்டுக் கதைச்சால்தான் தமிழ் ஆட்கள் எண்டும் மற்றவைக்குத் தெரியும். உமக்கு உந்த பச்சைக் கல்லுத் தோடோ வேணும்? வாரும் உள்ளை போய் பாத்து வாங்குவோம்.

தங்கம் : இங்கை பாருங்கோ, சிந்துவின்ரை கலியாண வீட்டுக்குத்தான் ஒரு தோடு பாக்கிறன். உந்த பச்சைக் கல்லுத் தோடு வேண்டினால், பச்சைக் கல்லிலை ஒரு அட்டியலும் வேணும், ஒரு பச்சைக் கலர் சீலையும் வேணும். அதுக்குத் தோதா ஒரு

சட்டையும் வேணும். இதுகளை வாங்கிப்போட்டுக் கொண்டு கலியாண வீடுகளுக்குப் போனா, பச்சைச் சீலை கட்டினவைக்குப் பக்கத்திலை இருக்கவும் கூடாது. இப்ப பச்சைக் கல்லுத் தோடு வாங்கிறதோ, நீலக்கல்லுத் தோடு வாங்கிறதோ எண்டுதான் யோசிக்கிறன். எதுக்கும் மச்சாள் என்ன கலரிலை வாங்கிறா எண்டு கேட்டுப்போட்டு வாங்குவம்.

சுப்பையா : (சிரிப்புடன்) நல்ல வேளை பச்சைக் கலரிலை ஒரு காரும் வேணுமெண்டு கேக்கேல்லை. (மறு பக்கம் திரும்பி) அங்கை பாரும் தங்கம். அந்தக் காறுக்கை புருஷன் பிள்ளையை வைச்சுக் கொண்டு இருக்கிறார். மனிசி உந்த நகைக்கடை யுக்கை நிக்கிறாப்போலை இருக்குது.

தங்கம் : இனிமேல் நானும் அப்பிடித்தான் செய்ய வேணும்போலை இருக்குது. எங்கை போனாலும் அவசரம். ஆறுதலா நிண்டு ஒரு சாமான் பாத்து எடுக்க ஏலாது.

சுப்பையா : (மறுபுறம் திரும்பி) அதிலை நிக்கிறது சண்முகத்தார் போலை இருக்குது. ஆர்அது பக்கத்திலை நிக்கிறது? ம். சண்முகத்தார்ரை மகளோ? ஆ! அவைக்கு...ஒரு மகன் மட்டும்தானே. அப்ப...ஆரது?

தங்கம் : அது சண்முகம் அண்ணை இல்லை, வேறை ஆரோ போலை இருக்குது. சும்மா மற்ற ஆட்களைப் பாக்கிறதை விட்டிட்டு, வாங்கோ "shopping" செய்வம்.

சுப்பையா : அது சண்முகத்தார் தானப்பா. Sun glass ம், தொப்பியும் போட்டுக் கொண்டு நிக்கிறதிலை ஆட்களை அடையாளம் தெரியேல்லை. 25 வருஷத்துக்கு முன்னாலை, சரியா கமலகாசன் மாதிரி இருந்தவர். இப்ப வயதும் போய், தலைமயிரும் கொட்டுண்டு போச்சு. தலைமயிர் இல்லாட்டிலும், ஆளின்ரை உசார் அப்படியே இருக்குது. பக்கத்திலை நிக்கிறது பரமேசு தானப்பா. பரமேசு போட்டிருக்கிற "பஞ்சாபி" உடுப்பிலை ஆளை அடையாளம் தெரியேல்லை. வாரும் போய் கதைச்சுப் போட்டு வருவோம்.

தங்கம் : ஓமப்பா, அது சண்முகம் அண்ணைதான். அண்டைக்கு இரவு வீட்டை வரக்கை சரியான கறுவலாக கிடந்திது. இப்ப நல்ல வெள்ளையாக் கிடக்குது. அது சரி அண்டைக்கு என்ன சொன்னவர்? ம்! அண்டைக்கு என்னைப் "phone" பண்ணக்கூட விடேல்லை. இப்ப போய் ஒருக்கால் அதைப் பற்றிக் கேக்கப்போறன்.

சுப்பையா : தங்கம், உதுகள் எல்லாம் இப்பவே கதைக்கிறது? அவர் அண்டைக்கு சும்மா விட்டுக்குடாமல் கதைச்சவர்தான், ஆனால்

ஆளிலை விசயமில்லை. நான் உமக்கு எல்லாம் ஆறுதலாச்சொல்றன்.

தங்கம் : கொஞ்ச நாள்போகட்டும் ஒருநாளைக்கு உவரை நான் கேக்காமல் விடமாட்டன்.

சுப்பையா : அதைப் பிறகு பாப்பம். இவையளைப் பாக்க எனக்கு நம்ப முடியாமல் இருக்குது. இப்பதானே இலண்டனுக்கு வந்தவை. கொஞ்ச நாளையிலேயே ஆட்களை அடையாளம் காண முடியேல்லை. புதுசு புதுசா எல்லாம் "Try" பண்ணிப் பாக்கினம் போலை இருக்குது.

தங்கம் : அது சரி நீங்களும் இங்கை வந்த தொடக்கத்திலை புதுசு புதுசா எல்லாம் "Try" பண்ணி பாத்தனீங்கள் தானே.

சுப்பையா : நீரும் சேர்ந்துதானே எல்லாம் செய்தனீர். என்ரை கால்சட்டை, "Pull over", "over coat" எல்லாம் போட்டுக்கொண்டு "shopping" போனதெல்லாம் மறந்து போனீர் போலை இருக்குது!

தங்கம் : அது அந்தக்காலம். இப்பவும் இடைக்கிடை போடுறதெல்லாம் எனக்கெல்லோ தெரியும்.

சுப்பையா : அதுக்கென்னப்பா, ஆர் உதுகளைப் பாக்கப் போகினம்? இது எங்கடை சொந்த விசயம். மற்றவைக்கு இதெல்லாம் தேவையில்லை.

தங்கம் : தங்கடையளைச் சொன்ன உடனை மட்டும் நுனியிலை வந்திடும் கோவம். அப்ப

இனிமேலாவது கொஞ்சம் கவனமாய்க் கதையுங்கோ.

சுப்பையா : இங்கை நீர் போட்ட சத்தத்திலை அவை இங்கைதான் பாத்துக்கொண்டு நிக்கினம். எங்களைக் கண்டிட்டினம் போலை இருக்குது. வாரும் போய் கதைப்பம்.

(சண்முகம், பரமேஸ்வரியும்)

சண்முகம் : இங்கை பாரும் பரமேஸ் அதிலை சுப்பையாவும், தங்கமும் வருகினம். எங்களைட்டைத் தான் வருகினம் போலை இருக்குது. அவையோடை கொஞ்சம் "style" ஆக கதையும்.

பரமேஸ் : நான் என்ன தமிழ்லையோ, இங்கிலீஸ்லையோ "Good Morning" எண்டு சொல்றது?

சண்முகம் : இப்ப நேரம் 4 மணியாச்சுது "Good Morning" எண்டு சொல்றது? அண்டைக்கு என்னத்திலை கதைச்சனீர்? இலண்டனுக்கு வந்த கொஞ்ச நாளேலை தமிழை மறந்து போங்கோ!

பரமேஸ் : என்ன அவையளைக் கண்ட உடனே உசார் வந்திட்டுது. என்ரை "mood"டை மாத்தாதையுங்கோ. இந்த "overcoat" சரியான பாரமாக் கிடக்குது. அத்தோடை நான் படுகிறபாடு.

சண்முகம் : சொல்லச் சொல்ல கேக்கேல்லை. அவன் தம்பி நேற்றுத்தானே உமக்கு வாங்கித் தந்தவன். தரயுக்கை என்ன சொன்னவன்? அம்மா குளிர் எண்டா மட்டும் போட்டுக் கொண்டு போங்கோ எண்டெல்லே சொன்னவன். இண்டைக் கென்ன குளிரோ? உந்த வெக்கையுக்கை உதையும் போட்டுக் கொண்டு வந்து நிக்கிறீர். சொல்லக் கேட்டால்தானே!

பரமேஸ் : அவன் ஆசையோடு வாங்கித் தந்தவன் என்னெண்டு போடாமல் விடுகிறது?

சண்முகம் : அதுக்கு ஒரு நேர காலம் வேண்டாமே அப்பா?

பரமேஸ் : உதுகளை விடுங்கோ. இனிமேல் நீங்கள் என்னை இங்கை பரமேஸ் எண்டு ஆட்களுக்கு முன்னாலை கூப்பிடக் கூடாது. நானும் இரண்டு மூண்டு இடத்திலை கவனிச்சனான். இங்கை சிலபேர் தங்கடை பெயரை "style" ஆக, சின்னப் பெயராக மாத்தி வைச்சிருக்கினம். இண்டையிலை இருந்து நீங்கள் என்னை "பரி" அல்லது "பரிஸ்" எண்டுதான் கூப்பிட வேணும்.

சண்முகம் : (சிறிது சிரிப்புடன்) அது சரி, உம்மை "பரிஸ்" எண்டு கூப்பிடுறன் நீர் என்னை "ஐரோப்பா" எண்டு கூப்பிடும். நாலு பேருக்கு முன்னாலை நிண்டு இப்பிடிக்

கூப்பிட்டால் நல்லாத்தான் இருக்கும். இஞ்சேரப்பா, தம்பியின்ரை கலியாண வீடு முடியட்டும். பிறகு நல்லா என்னெண்டான்ன செய்யும்.

பரமேஸ் : வர வர நான் ஒண்டும் கதைக்க முடியாது. எல்லாம் நான் குடுத்த இடம்தான். வீட்டைவாங்கோ பிறகு கதைக்கிறன்.

சண்முகம் : அதுக்கு ஏனப்பா சத்தம்போட்டுக் கதைக்கிறீர்? சரியப்பா நான் இனி "பரிஸ்" எண்டே கூப்பிடுகிறன். இங்கை அவை கிட்ட வந்திட்டினம்.

(சுப்பையாவும் - தங்கமும் வந்து கொண்டே)

சுப்பையா : என்ன இரண்டு பேரும் தனிய "shopping" நடக்குது போலை இருக்குது. என்ன பரிஸ் எண்டு கதைச்சுக்கேட்டுது. பரிஸ்க்கு போகப் போறீங்களோ? என்னப்பா இப்ப தானே இலண்டனுக்கு வந்தனீங்கள். கொஞ்ச நாளைக்கு இங்கை நிண்டுபோட்டு பிறகு பரிஸ்க்குப் போங்கோ.

தங்கம் : எப்பிடி அக்கா சுகமாய் இருக்கிறீங்களே? உங்கடை வீட்டை வருவம் வருவம் எண்டால் மாறி மாறி 'visitors' (சிறிது வித்தியாசமான குரலில்) அண்டைக்கொருநாள் போன் பண்ண எடுக்க இவர் விடேல்லை. நேரைபோய் கதைக்கிறதுதான் நல்லது எண்டாப் போலை நானும் அப்பிடியே

விட்டிட்டுட்டன். கலியாண வீட்டு அமளிலை, பரமேஸ்க்காவை அடையாளம் கூடத் தெரியேல்லை. எப்பிடி இலண்டன் எல்லாம் பிடிச்சுதோ?

சுப்பையா : சண்முகம், நீர் அண்டைக்கு வீட்டை வந்ததும், இண்டைக்கு என்னாலை உம்மை அடயாளம் கண்டுபிடிக்க முடியேல்லைப் பாரும்.

சண்முகம் : என்னப்பா நான் 40 வருஷமா இருந்தும், இடைக்கிடை பரமேசை என்னாலே இங்கை அடையாளம் காண முடியேல்லை, உங்களாலை எப்படிக் காணலாம்?

சுப்பையா : போட்டிருக்கிற உடுப்பும் அப்பிடித்தான் சொல்லுது!

தங்கம் : நீங்கள் சும்மா இருங்கோ, இலண்டனுக்கு வந்த உடனை இந்தக் "Climate" வித்தியாசத்துக்கு எல்லாருக்கும் உடம்பிலை சின்னச் சின்ன வித்தியாசங்கள் வரும்தான். எங்கடை ஆக்கள் கொஞ்சம் வெள்ளையாவும் வருவினம். கொஞ்சம் மொத்தமாகவும் வருவினம்.

சுப்பையா : சில பேருக்கு தலைமயிர் குறைஞ்சு குறைஞ்சு போய் மொட்டையாகியும் விடும். சண்முகம் உம்மை மாதிரி எண்டு சொல்லுமன். அதுமட்டுமில்லை, இன்னொரு வியாதியும் இருக்குது. ஊரிலை

அடுத்த வீட்டுக்காரனுக்குத் தெரியாமல் இருந்தவைக்கெல்லாம், இங்கை வந்த உடனை, தங்களுக்குத் தெரியாதது ஒண்டுமில்லை எண்டொரு நினைப்பும் வரும். எங்கையாவது வலியப்போய் நுழைஞ்சிடுவினம். ஒரு காரியம் செய்யவும் தெரியாது, செய்ய விடவும் மாட்டினம். பழிக்குப் பழி வாங்கிறதுக்கு மட்டும் கெட்டிக்காரர். அதை ஏன் கேக்கிறியள்? கொஞ்ச நாள் போக எல்லாம் உங்களுக்கு விளங்கும்.

சண்முகம் : உதுக்கு பரமேஸ் தான் சரிபோலை இருக்கு. சும்மா சொல்லப் படாது, பரமேஸ் அண்டையிலிருந்து இண்டை வரைக்கும் புதுப்புது விசயங்களைக் கண்டு பிடிக்கிறதிலை சரியான கெட்டிக்காரி. இங்கை வந்து கொஞ்ச நாளையிலேயே எத்தினை ஆராய்ச்சி செய்திட்டா தெரியுமே?

தங்கம் : இது என்ன புதுக்கதையா இருக்கு. சொல்லுங்கோ கேப்பம்.

பரமேஸ் : இங்கை பாருங்கோ, எத்தினை ஆயிரம் தமிழ் ஆட்கள் இங்கை வந்திருக்கினம். எங்களுக்கெண்டு ஒரு புதுவிதமான பேரிலை ஒரு தமிழ் சாப்பாட்டுக்கடை இல்லை. உந்த 'kentucky fried chicken' மாதிரி

ஏன் நாங்கள் எங்கடை தமிழ் ஊர்ப் பேரிலை ஒரு கடை திறக்கப்படாது? தமிழற்ரையையும், வெள்ளைக்காரற்ரை சாப்பாடுகளையும் சேர்த்து புதுவித மாகவும் செய்யலாம்.

தங்கம் : அக்கா என்ன சொல்லிறீங்கள். ஒண்டும் விளங்கேல்லை.

பரமேஸ் : இப்ப "கந்தர்மடம் கோழிப் பொரியல்" "மட்டக்களப்பு மரவள்ளிப் பொரியல்" எண்ட பேர்களிலை ஏன் கடையள் திறக்கக்கூடாது?

தங்கம் : நீங்கள் சொல்றதும் சரிதான். ஆனால் இதுகளை எலலாம் யார் செய்யிறது?

பரமேஸ் : நீங்கள் 25 வருஷமாக இலண்டனிலை இருக்கிறதெண்ட பேர்தான். இங்கை நான் வந்த கொஞ்ச நாட்களிலேயே கண்டு பிடிச்ச ஒரு ருசியான சாப்பாடு இது. எங்கடை இந்த கத்தரிக்காயை வதக்கி ஒரு கறிவைச்சு, இங்கத்தே உருளைக் கிழங்கிலை செய்த "Chips" ஐயும் சேர்த்து சாப்பிட்டுப்பாருங்கோ என்ன ருசியா இருக்கும். உந்த "பீசா" வை, பச்சமிளகாய்ச் சம்பலோடை சாப்பிட்டுப் பாருங்கோ. பிறகு வேறை ஒரு சாப்பட்டையுமே சாப்பிடமாட்டீங்கள்.

சுப்பையா : அப்ப சண்முகம்பாடு ஒவ்வொருநாளும் கொண்டாட்டம் போலைதான் இருக்குது. ஒவ்வொருநாளும் விதம் விதமான சாப்பாடு சாப்பட்டதாலை தான் ஆளையே அடையாளம் தெரியேல்லை போலை இருக்கு. கொட்டுண்ட தலைமயிர் திரும்ப முளைச்சாலும் முளைக்கும் பாரும்!

சண்முகம் : ஒவ்வொரு நாளும் விதம் விதமான சாப்பாடுதான் வயித்துக்குள்ளை குளப்படியும்தான். எங்கடை வயதெங்கை? நாங்களெங்கை? இந்த சாப்பாடு களெங்கை?

தங்கம் : வேறை என்னென்ன கண்டுபிடிச் சிருக்கிறீங்கள் எண்டு சொல்லுங்கோவன் கேப்பம். உங்களோடை கதைக்கிறதிலை நேரம் போறதே தெரியுதில்லை.

பரமேஸ் : நாங்களெல்லாம் எங்கடை நாடுகளை விட்டிட்டு இங்கை வந்திருக்கிறம். இனி எப்ப திரும்பி போவமோ தெரியேல்லை. நாங்கள் எல்லாம் சேர்ந்து ஒரு தமிழ்க் கட்சி ஒண்டு தொடங்கி "எலக்சன்" கேக்க வேணும்.

சண்முகம் : நீங்கள் எல்லாரும் பரிமளத்துக்குத்தான் "வோட்டு" போட வேணும். பரமேஸ் 'Prime Minister' வரவேணும். சும்மா இரப்பா...

தங்கம் : (சுப்பையாவை நோக்கி) நீங்களும் இவ்வளவு காலமா இங்கை இருக்கிறியள். இப்பிடியான ஒரு 'Idea' இதுவரையிலை உங்களுக்கு வரேல்லை. பரமேசக்கா சொல்றது அவ்வளவும் சரி.

சுப்பையா : அது சரி இண்டைக்கு நீங்கள் ஒரு கட்சி தொடங்குவீங்கள். நாளைக்கு வேலு இன்னொரு கட்சி தொடங்குவார். ம்! நல்லாத்தான் இருக்கும். இங்கை இருக்கிற சங்கங்களும், கழகங்களும், பள்ளிக் கூடங்களும் போதுமெண்ணப் போதும். எனக்கு விருப்பம் இல்லாதவை அதிலை இருக்கினம் எண்டா, அதை விட்டிட்டு இன்னொண்டு தொடங்கிறதோ? எங்கடை ஆக்கள் உதுகள் தொடங்கிறதில்லை மட்டும் கெட்டிக்காரர்.

தங்கம் : எல்லா இடமும் பிரச்சினைதான். தாங்களா உணரவேணும். உணர்ந்து திருந்த வேணும். எங்கடை நாட்டிலை நடக்கிறதுகளைக் கேக்க சரியான கவலையாகத்தான் இருக்குது. உந்த சின்னஞ் சிறிசுகள் எலலாம் உந்தச் சின்ன வயதிலை எவ்வளவு கஷ்டப் படுகுதுகள்? அதுகளை விட்டிட்டு தாய், தகப்பன், சகோதரங்கள் எல்லாம் எவ்வளவு மனக் கவலை யோடை சீவிக்குதுகள்.

பரமேஸ் : நீங்கள் அதுகளைக் கேட்டுத்தான் கவலைப் படுகிறீங்கள். ஆனால் நாங்கள் எங்கடை இரண்டு கண்களாலையும் பாத்து அனுபவிச்சனாங்கள். அதுகளுக்கு கட்டாயம் நாங்கள் ஏதாவது செய்யத்தான் வேணும். இங்கை வந்த உடனை நாங்கள் தப்பிவிட்டம் எண்டு ஒருத்தரும் நினைக்கக் கூடாது. (சண்முகத்தைப் பார்த்து) என்ன பேசாமல் நிக்கிறீங்கள்?

சண்முகம் : நான் சொல்ல நினைச்சதை நீரே சொல்லி விட்டீர். சுப்பையா பாத்திரோ, தமிழ்க் கட்சி ஒண்டு தொடங்கினால், நீங்கள் ஆருக்கு "வோட்டு" போடவேணுமெண்டு தெரியும்தானே.

பரமேஸ் : இங்கை கன இடத்திலை எங்கடை பிள்ளையள், அரை குறையாகத் தலைமயிர் வெட்டிக் கொண்டு போகினம். இதுகளைப்பாக்க எவ்வளவு அசிங்க மாக்கிடக்குது. இதுகளை நீங்கள் சொல்லித் திருத்தக் கூடாதே?

சுப்பையா : இங்கை கிழிஞ்ச கால்சட்டை போடுறதும், அரை வாசித் தலை மயிரை வெட்டிறதும் ஒரு விதமான 'Style' பாருங்கோ. உதெல்லாம், முப்பது வருஷத்துக்கு முன்னாலை, எங்கடை ஊரிலை இருந்த 'style' இப்பதான் இங்கை வந்திருக்குது.

இதுகள் எல்லாம் இளம் ஆட்களுக்குத்தான் சரி. எங்கடை வயதாட்களுக்கு சரிவராது பாருங்கோ.

தங்கம் : நீங்கள் சொல்றதைப் பாத்தா, பரமேசக்கா அப்பிடிச் செய்திடுவா எண்ட மாதிரி எல்லோ இருக்குது!

சண்முகம் : சரி, சரி பழையபடி இங்கையும் நிண்டு தங்கம் அண்டைக்கு சொன்ன மாதிரி பழசுகளைக் கிளறி தொடங்காமல், புதுசுகளைக் கதையுங்கோ.

தங்கம் : நாங்கள் ஒருநாளைக்கு உங்கடை வீட்டை கட்டாயம் வரத்தான் வேணும். கனக்க கதைக்க இருக்குது. சரியக்கா நாங்கள் போயிட்டு வாறம்.

❖❖❖

காட்சி - 9

*இடம் : சுப்பையா வீடு*

*பாத்திரங்கள் : சுப்பையா, தங்கம், தில்லை, பரிமளம், சண்முகம், பரமேஸ்வரி, துரையப்பா, சரஷ்வதி, வேலு*

தங்கம் : என்ன எல்லாரையும் இங்கை வாருங்கோ, கலியாண வீட்டை எப்பிடி நடத்திறதெண்டு "ஐடியா" போடுவம் எண்டு போட்டு நீங்கள் ரோட்டைப் பாத்துக் கொண்டு இருந்தா என்ன செய்யிறது?

சுப் : ரோட்டாலை ஊர்ச் சனமெல்லாம் ஒழுங்காப் போகுதுகள். இங்கை நாங்கள் ஒருவீட்டுக்காரர் எல்லாம் நாலு பக்கத்துக்கும் இழுத்துக் கொண்டு மூலைக்கு மூலை இருக்கிறம்.

பரி : நாங்களும் உங்களைப்போலத்தான் இலண்டனுக்கு வந்த உடனை இங்கை உள்ள ஆட்கள் எல்லாம் தமிழ் அரைவாசி மறந்திருப்பினம், முள்ளுக் கரண்டியாலைதான் சாப்பிடுவினம், காசுக்கட்டுக்கு மேலைதான் இருப்பினம் எண்டு ஒரே கற்பனை. இங்கை வந்தாப் பிறகு தானே தெரிஞ்சது எல்லாம். எங்கை இருந்தாலும் கடவுள் கொடுக்கிற அளவுதான் கொடுப்பார்.

தில் : இங்கை உங்கடை பேரப்பிள்ளையள் கூட சிலவேளை உங்களோடை கதைக்காதுகள் பாரும். இந்த கிழடுகளாலை பெரிய "நியூசென்ஸ்" எண்டு புறுபுறுக்குங்கள். ஊரிலை எண்டால, ஏதேன் பிழை விட்டா, இரண்டு தட்டுப்போட்டு திருத்தலாம். இங்கை அப்பிடிச் செய்யிறதெல்லாம சரியான கரைச்சல் பாருங்கோ. ஏதோ "ஓடும் புளியம் பழமும்" போலை தான் இருக்க வேணும்.

துரை : எங்களுக்கு இருக்கிறது ஒரே ஒரு பொம்பிளைப் பிள்ளை. எங்கடை

கஷ்டகாலமோ என்னவோ, இத்தினை ஆயிரம் மைல்களுக்கு அங்காலை இருந்து இங்கை வந்திருக்கிறம். அதை, வடிவா செய்ய வேணுமெண்டுதான் இங்கை நீங்கள் கேட்டதுக்கு எல்லாம் தலையளை ஆட்டிக்கொண்டு இருக்கிறம். இனிமேலும் எங்களாலை ஆட்டமுடியாது.

சண் : நாங்கள் எங்கடை தம்பி பிறந்த நாள் தொட்டு அவனை பெரிய இடத்திலை கலியாணம் செய்து குடுக்க வேணும். அவன்ரை கலியாணவீடு தடல் புடலாகச் செய்யவேணுமெண்டு ஒரு ஆசை.

பர : எங்களுக்கு அவன் ஒரே ஆம்பிளைப் பிள்ளைதானே. இனி இல்லை எண்ட திறமா இந்தக் கலியாணம் செய்யவேணுமெண்டு கனநாளா ஒரு ஆசை.

சரசு : நாங்கள் எங்கடை பிள்ளை பிறக்க முதலே அப்பிடிச் செய்ய வேண்டுமெண்டு நினைச்சனாங்கள். எங்கடை இவரைக் கேளுங்கோ. இல்லையெண்டு சொல்லிறாரோ எண்டு பாப்பம்.

துரை : நான் உம்மைக் கலியாணம் செய்ய முதலே அப்பிடி நினைச்சு வைச்சிருந்தனான் பாரும்..

சண் : இப்ப நாங்கள் உங்கடை பழைய கதையளைக் கேக்க இங்கை வரேல்லை. நாங்கள் கேக்கிற மாதிரி உங்களாலை செய்ய முடியுமோ இல்லையோ?

வேலு : இப்ப அவை முடியேல்லை எண்டா நீங்கள் என்ன செய்வியள் எண்டதை சொல்லுங்கோ பாப்பம்.

சண் : அதை இங்கை சொல்லமாட்டன். சொல்லிற இடத்திலை சொல்லுவன். என்ன செய்வன் எண்டதையும் இப்ப செய்ய மாட்டன். செய்யிற இடத்திலை செய்து காட்டுவன்.

வேலு : (தனக்குள்) ''தமிழ் வசனங்கள் கருணாநிதியின்ரை வசனங்களை விட திறமாயிருக்கு'' அண்ணை, இங்கை இருக்கிறது யார்? எல்லாரும் ஒண்டுக்கை ஒண்டு. ஒரு மாதிரிப் பாத்து "அட்ஜெஷ்" பண்ணிக் கெண்டு போங்கோ.

சுப் : இங்கே, நாங்கள் உங்களை இங்கை வரச் சொன்னது, கலியாணவீட்டு ஒழுங்குகளை செய்யிறதுக்குத்தான். சும்மா குத்துக்கதையள் போட்டு பிரச்சனைப்பட இல்லை.

தங் : காசு வேணும் எண்டால் நாங்கள் தாறம். கடைசி நேரம் மட்டும் விட்டிட்டு அவசரப்படாமல், எல்லா ஆயுத்தங்

களையும் வேளைக்கே செய்யுங்கோ? எங்கடை கலியாண வீடு என்னெண்டு நடந்ததெண்டு தெரியுந்தானே. இலண்டன் மாப்பிள்ளை எண்ட பேர்தான். பின்னேரம் மூண்டு மணிக்கு பொம்பிளை பாத்திட்டு, இரவு எட்டு மணிக்கு கலியாணவீடு. அடுத்தநாள் பத்துமணிக்கு இவர் இங்கை வந்திட்டார். நானும், அப்பு ஆச்சியும் பட்டபாடு. இருண்டது. விடிஞ்சது ஒண்டுமே தெரியேல்லை.

பரி : எல்லாருக்கும் கலியாணம் முடிச்ச தொடக்கத்திலை கொஞ்ச நாளைக்கு அப்பிடித்தானே இருக்கும். எல்லாம் மறந்து போனீர் போலை இருக்குது? இஞ்சேரும் உதை ஆர் இப்ப இங்கை கேக்கப்போகினம்? அது உம்மடை தலைவிதி. இலண்டனுக்கும் வரவேணும், படிச்ச, வடிவான மாப்பிளையும் வேணுமெண்டா என்ன செய்யிறது?

வேலு : சுப்பையாண்ணை, இண்டைக்கு என்ன பரிமளக்கா நல்ல போடு போடுறா. என்ன பழைய கோவம் ஏதோ இன்னும் இருக்குப்போலை!

சுப் : நாப்பது வயதாச்சேல்லே, இனி அப்பிடித்தான் போடுவினம். நாங்கள்தான் கொஞ்சம் விட்டுப்பிடிக்க வேணும். அவைக்கு அப்ப தொடங்கி,

எங்கடை கலியாண வீட்டுக்குச் சொல்லேல்லை எண்டு ஒரு சின்னக் கோவம்.

தில் : இருபத்தைஞ்சு வருஷமாகியும் இன்னும் மறக்கேல்லை. உதுகள் எண்டா மட்டும் நல்லா ஞாபகமிருக்கும். நான் ஏதும் சொன்னால், அறணை மாதிரி இரண்டு நிமிஷத்திலை எல்லாம் மறந்து போயிடும்.

வேலு : இருபத்தைஞ்சு வருஷமாச்சு இதைக் கண்டு பிடிக்க. இது பாருங்கோ எங்களோடை இரத்தத்தோடை கலந்து போச்சுது.

சண் : எங்கடை தம்பி, இங்கை உள்ள சில பேரைப் போலை இரண்டு காதிலும் பொம்பிளையள் மாதிரி தோடுகள் போடவும் இல்லை, தலைமயிர் வளத்து கூட்டிக் கட்டவும் இல்லை. இலண்டனிலை படிச்சாலும் அவன் ஒரு அசல் யாழ்ப்பாணத்து தமிழ் மாப்பிளை.

வேலு : அப்பிடி இருந்திருந்தா, இப்ப நீங்கள் இருக்கிற நிலையிலை அதுகளுக்கும் சேர்த்தெல்லே சீதனம் கேட்டிருப்பீங்கள். நான் உங்களை ஒண்டு கேக்க வேணும். அண்டைக்கு கண்ட இடத்திலை நல்ல பாவி மாதிரிக் கதைச்சீங்கள். இப்ப கதையள் எல்லாம் ஒரு மாதிரிப் போகுது!

துரை : அது எங்களைக் கண்ட உடனை வாற ஒரு சாதி வருத்தம்.

சரசு : சும்மா இருங்கோ. கலியாணம் செய்யப் போறதுகள் தங்கடைபாடு. நீங்கள் இங்காலை இன்னொருபாடு.

சண் : இந்தக் கலியாண வீடு சரியா நாங்கள் யாழ்ப்பாணத்திலை செய்தது மாதிரி செய்ய வேணும். வீட்டுக்கு முன்னாலை பந்தல் போட்டு, ''ஸ்திரி'' போட்ட துணியாலை வெள்ளையும் கட்டி, இரண்டு வாழைக்குலை, வாழையோடை பழுக்கவைச்சு முன்னாலை கட்டவும் வேணும்.

வேலு : அதோடை, இரண்டு கூட்டம் மேளமும் பிடிச்சு இரவிரவா அடிச்சு, பக்கத்திலை இருக்கிற ஆக்களை எல்லாம் எழுப்பி, பொலிசுக்குப் போன் பண்ண, அவர்கள் வந்து எங்களை வானிலை ஏத்திக் கொண்டு போக..... சும்மா இருங்கோ அண்ணை, இதென்ன எங்கடை ஊரே ஆட்களைப் பிடிச்சு பிணை எடுத்துவிட. அண்ணை, நீங்கள் விஷயம் தெரியாமல். கதைக்காதையுங்கோ. உதுகள் எல்லாம் இங்கை "பெமிஷன்" இல்லாமல் செய்ய முடியாது. "பெமிஷன்" தரவும் மாட்டினம்.

சுப் : நாங்கள் வந்த நாளேலை ஒரு அறையுக்கைதானே சீவியம். சமைக்கிறது அதுக்குள்ளைதான், படுக்கிறதும் அதுக்குள்ளைதான், ஓடிப்பிடிச்சு விளையாடினாலும் அதுக்குள்ளைதான். இப்ப என்னடாண்டா, எல்லாருக்கும் வீடும் சீதனம் குடுத்து, வீதிவழிய பந்தலும் போட்டு, வாழைக்குலையும் கட்டிக் கலியாணம் செய்யிற காலம் வந்திட்டுது.

தங்கம் : அப்ப ஏன் அவசரப் பட்டனீங்கள்? இவ்வளவு காலமும் பொறுத்திருந்தால் நீங்களும் இப்பிடிச் செய்திருக் கலாந்தானே!

சுப் : இலண்டனிலை பந்தல் போட்டு, வாழைக்குலையளும் கட்டி, உம்மைக் கலியாணம் செய்யிறதுக்காக இருபத்தைஞ்சு வருசம் காத்திருக்க வேணுமே? அப்படி எனக்கென்ன தலை விதி?

வேலு : சுப்பையாண்ணை, நீங்கள் அப்ப கலியாணம் செய்த உடனை விட்டிட்டு வந்த கோபம் தங்கமக்காவுக்கு இன்னும் மாறேல்லைப் போல இருக்குது.

சண் : உங்கடை பழைய கதையளை விட்டிட்டு, நான் சொல்லிறதை வடிவாக் கேளுங்கோ. அரிசி சாமான் முதல் கொண்டு, எல்லாம்

ஊரிலை இருந்து வரவேணும். நாலாஞ் சடங்கெல்லாம் சும்மா தடல் புடலா இருக்க வேணும். முழு ஆடு ஒண்டு அடிச்சு முறையா செய்ய வேணும். அதோடை அண்டைக்கு ஒரு "டிஸ்கோ" வும் வைக்க வேணும்.

துரை : ஓ!, இப்ப "டிஸ்கோ" வைக்கேல்லை எண்டே இத்தினை பிரச்சினையளும்?

தில் : இப்ப உங்கள் தரவளி ஆட்களுக்குத்தான் "டிஸ்கோ" கட்டாயம் வேணும் உங்கத்தையில் "பாட்டியளிலை" அவையின்ரை ஆட்டங்களைப் பாக்க வேணும். என்னெண்டுதான் எல்லாத்தையும் அடக்கி வைச்சிருக்கினமோ தெரியேல்லை?

சுப் : இவ்வளவு காலமா இலண்டனிலை இருக்கிறம். இதுவரை ஒரு "பாட்டியிலை" நானும் தங்கமும் உந்த "டிஸ்கோ" இன்னும் ஆடேல்லை. இப்ப வாறவைக் கெல்லாம் வந்த உடனை "டிஸ்கோ" வும் "பாட்டி"யளும்தான். அறையைச் சாத்திப்போட்டு நிண்டெண்டாலும் இனிமேல் நாங்கள் "டிஸ்கோ" ஆடிப் பழகத்தான் வேணும்.

தங் : எங்கடை ஊரிலை இப்பிடி ஆடினா, உருவாட்டம் எண்டும் சொல்லுவினம்.

உதாலைதான் நான் உதுகளை நினைச்சே பாக்கேல்லை.

பரி : "காத்துள்ள போதே தூத்த வேணும்" இடத்துக்கு ஏத்த மாதிரி இருக்க வேணும் பாரும்.

பர : பரிமளம் சொல்லிறது முழுதும் சரி. எங்கடை காலத்திலை அப்பு நீளப்பாவாடை வாங்கித் தந்து போட்டு செல்லுவார் அவள் வளர, வளரப் போடலாம் எண்டு. நெடுகலும் அப்பிடி வாங்கிறதிலை ஒருநாளும் நாங்கள் அளவான சட்டையள் போட்டதில்லை. இப்ப நடக்கிறதைப் பாருங்கோ.

தில் : இப்பவாகுதல் தெரியுதே இவ்வளவு காலமும் என்னென்னத்தை எல்லாம் "மிஸ்" பண்ணிப்போட்டீங்கள் எண்டு?

வேலு : அண்ணை இந்தக் காசுகளும் துரையப்பா அண்ணையவைதான் குடுக்க வேணுமோ?

சண் : இல்லை, "டிஸ்கோ" எண்டால் அரைவாசி நாங்கள் குடுப்பம். இங்கை உள்ளவையை விடுங்கோ. நாங்கள் இலங்கையிலே இருந்தாலும், இலண்டன் சீவியம் நடத்தினனாங்கள். நீங்கள் இங்கையிருந்து கொண்டு அங்கையிருக்கிற ஆட்கள் மாதிரி இருக்கிறீங்கள்.

பர : தம்பிக்கு "லீவு" இல்லை. கலியாணவீடு முடிஞ்ச இரண்டாம் நாள் திரும்பி போகவேணும் எண்டெல்லே சொன்னவன். அதை மறந்து போனீங்களே!

சண் : இங்கே, உதெல்லாம் பெரிய வேலையே? எனக்கு இங்கை வருத்தம் "சீரியஸ்" எண்டு ஒரு தந்தி அடிச்சாப் போச்சு. இப்பிடி ஊரிலை எத்தினை தரம் தந்தி அடிச்சனான் தெரியுமே?

தில் : உந்த தந்தி கிந்தி யெல்லாம் இப்கை செல்லுபடியாகாது. இப்ப என்ன முடிவு எடுக்கப் போறீங்கள்? எங்களாலை இங்கை கனநேரம் இருக்க முடியாது.

சரசு : ஏன் அவசரப்படுகிறியள்? இருங்கோ சாப்பிட்டுக்கொண்டு போகலாம்.

பரி : எங்கடை தம்பியும் மருமகளும் வாரமெண்டு "போன்" பண்ணினவை. நாங்கள் நேரத்துக்குப் போகவேணும்.

வேலு : சரி, துரையப்பா அண்ணை உங்கடை முடிவென்ன? கலியாணவீட்டுக்கு ஒரு ஐயாயிரம் அளவிலை சிலவு வரும்.

துரை : பத்தாயிரம் வந்தாலும் வரட்டும். பிள்ளை குடுப்பள்தானே.

சண் : எங்கடை தம்பி எத்தினை லட்சம் வந்தாலும் கொடுப்பான்தானே.

சுப் : இப்ப நீங்கள் இரண்டுபேரும் போட்டி போடுறதிலை உங்கடை பிள்ளையள்தானே நட்டப்படப்போகுதுகள். உதுகளை ஊருக்குக் கொண்டு போனால் எத்தினை வருஷத்துக்கு ராசா மாதிரி இருந்து சாப்பிடலாம்?

தங் : எல்லாம் சரிவந்தால் நாங்களும் இருக்கிற வீடுகளை வித்துக்கொண்டு ஊரிலை போய் எப்ப காலை நீட்டிக்கொண்டு இருப்பம் எண்டு இருக்கிறம்.

சுப் : இங்கை என்ன காலை மடக்கி வைச்சுக் கொண்டு இருக்கிறீரோ? என்ன கதைச்சாலும் உடனை ஊருக்குப் போகிடும் கதை. ஒருக்கா போயிட்டு வருவம் எண்டால் அதுக்கு முடியாது.

தங் : தான் மட்டும் ஊர்க் கதையள் எண்டால் மணித் தியாலக் கணக்கிலை இருந்து கதைக்கலாம். நான் வாய் திறந்தால் போச்சு.

தில் : கடிச்சுத் தின்னாத குறை. பரிமளம் நீரும் ஏதேன் சொல்லுமன்? ஆட்களைக் கண்ட உடனை வெக்கமாக் கிடக்குதோ?

பரி : சும்மா என்னைக் கிண்டி, கொழுவல் கதையள் கதைக்காமல் கதைச்சுப் போட்டு வாங்கோ. அதுகள் வரப்போகுதுகள்.

வேலு : சண்முகண்ணை, என்ன பேசாமல் இருக்கிறியள்?

சண் : பேச விட்டால்தானே. நீங்கள் சொல்லிறதைப் பாத்தா, இங்கை சும்மா தேவையில்லாத செலவுகள் செய்யிறம் போலை இருக்குது.

பர : காசை மிச்சம் பிடிச்சு, ஊருக்குப் போகேக்கை எனக்கு இரண்டு சோடி கறுப்புக்கல்லுத் தோடுகள் வாங்கித் தரவேணும்.

துரை : வெள்ளைக் கல்லெண்டா, காதிலை தோடு இருக்குமாப்போலை எண்டாலும் இருக்கும்.

சரசு : நீங்கள் எனக்கென்ன வாங்கித்தரப் போறீங்கள்? நானும் அப்போதை தொடங்கிப் பாத்துக் கொண்டுதான் இருக்கிறன்.

துரை : உமக்கும் சிவக்கொழுந்துவின்ரை கலரிலை ஒண்டு வாங்கித்தாறன்.

வேலு : சண்முகண்ணை, இங்காலை ஒருக்கால் வாங்கோ. ஏன் அப்போதை ஒருமாதிரி விடாமல் கதைச்சனீங்கள்?

சண் : எனக்கும், துரையப்பாவுக்கும் கனநாளா ஒரு சின்னப் போட்டி. நாங்கள் என்ன பெரிய படிப்பு படிச்சனாங்களே மற்றவை மாதிரி இலண்டனுக்கு வர. எங்களிலை ஆராவது தப்பித்தவறி இலண்டனுக்கு

வந்திட்டா மற்றவர் மொட்டை அடிக்க வேணும் எண்டு எங்களுக்குள்ளை ஒரு சின்னப் போட்டி! துரையப்பா எனக்கு முதல் இலண்டனுக்கு வந்திட்டார். நான் தான் மொட்டை அடிக்க வேணும். இப்ப அதைக் கேட்டா என்ன செய்யிறது? கலியாணவீட்டு நாள்களிலை மொட்டை அடிச்சா நல்லா இருக்காது எண்டுதான். அந்தக் கதையை வரவிடாமல், கதையளை மாத்தி, கொஞ்சம் உசாராக் கதைச்சனான்.

வேலு : உப்பிடிப் பாத்தா இங்கை கனபேர் மொட்டை ஆட்களாத்தான் இருக்க வேணும். இங்கே, மொட்டையா வாறதுக்கு பந்தையம் பிடிக்கத் தேவையில்லை. அது தானா வரும். சும்மா எங்கடை ஆட்களை நாங்களே அடக்கிறதை விட்டிட்டு, இங்கை வந்தாதல் எங்கடை பிள்ளையளுக்கு இப்பிடி சந்தோஷமா கலியாணவீடு செய்து வைக்கிறம் எண்டதை நினைச்சாதல் சந்தோஷப் படுங்கோ.

துரை : அது பந்தையம் பந்தையம்தான். நான் மறக்கேல்லை. வசதியா வரயுக்கை கேக்கிறன்,

சரசு : சும்மா இருங்கோ. அவர் ஒரு மாதிரி அமந்துபோய் இருக்கிறார். சும்மா கிளப்பி விடாதையுங்கோ. இல்லை எண்டா ஊரிலைபோய் தான் வாழைக்குலை பழுக்கப் போட்டுக் கொண்டுவர வேணும்.

பர : பிள்ளையள் நல்லா இருந்தா தாய் - தகப்பனுக்குத்தானே மதிப்பும், சந்தோஷமும்!

தங் : மணவறையிலை, அல்லது மேடையிலை பிள்ளையள் நிக்கேக்கை, தாய்-தகப்பன் மாரைப் பாக்கவேணும். கொடுப்புக்கை ஒரு சாதிச் சிரிப்போடை... முன்னாலை போக விட்டிட்டு, பின்னாலை நிண்டு வடிவு பாப்பினம். அவையளைப் பாக்க என்ன சந்தோஷமா இருக்கும்!

சுப் : எங்கடை பிள்ளையள் இப்பிடிப் படிச்சு நல்லா இருந்தா, ஊருக்குத் திரும்பி போற காலத்திலை கட்டாயம் நல்ல உதவியா இருக்குந்தானே?

தங் : படிச்சா என்ன, படிக்காட்டா என்ன, இங்கை இருக்குமாப்போலை எல்லாரும் பிரயாசையா அங்கையும் போய் இருந்தா, எங்களுக்குத்தானே நல்லது.

தில் : நாங்கள் எல்லாம் ஒரு ஆளுக்கு ஒரு ஆள் ஒத்தாசையா, சந்தோஷமா இருக்கவேணும். இங்கையும் வந்து பிடுங்குப்பட்டா அசிங்கமாத்தான் இருக்கும்.

பரி : "கலகம் பிறந்தாத்தான் நியாயம் பிறக்கும்" கதையுங்கோ அதுக்காக அடி பிடிப் படாமல் ஒழுங்கா செய்யுங்கோ. இல்லாட்டா எங்கடை சின்னஞ் சிறிசுகளும்

உங்களைப்பாத்து சீவிய காலம் முழுக்க போற இடமெல்லாம் சண்டைபிடிச்சுக் கொண்டுதான் இருக்குங்கள்.

வேலு : இண்டைக்கு இங்கை எல்லாருக்கும் ஞானம் பிறந்திட்டுது. தத்துவங்கள் பேசிறீங்கள். இதெல்லாம் துரையப்பா அண்ணை யாலும், சண்முகண்ணை யாலும்தான் வந்தது. இதுகும் ஒருவழிக்கு நன்மைதான். இந்த சந்தோஷத்தைக் கொண்டாட, கலியாணவீடு முடிஞ்சாப்பிறகு கட்டாயம் அறையைச் சாத்திப்போட்டு எண்டாலும் ஒரு "டிஸ்கோ" வைக்கத்தான் வேணும். சொல்லி அனுப்பிறம் எல்லாரும் வாருங்கோ.

**வணக்கம்**

**ஃ திரை ஃ**

குறிப்பு : இந்த நாடகம் TRT வானொலியில் தொடராக ஒலிபரப்புச் செய்யப்பட்டது.

## விற்பனையாகும் இதர நூல்கள்

அறிவை வளர்க்கும் அற்புதக் கதைகள் ........ 20.00
கதையாம், கதையாம் காரணமாம் ........ 47.00
வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் சிறுகதைகள் ........ 20.00
லவ்லி எஸ்டேட்- P.K. இராமச்சந்திரன் ........ 27.00
அனைவரும் விரும்பும் அறிவுக்கதைகள் ........ 33.00

### மர்மச் சிறுகதை

தமிழ்வாணனின் சிறுகதைகள் - பாகம்-1 ........ 9.00
பாகம்-2 ........ 10.00
ஹிட்ச்காக் கதைகள் ........ 20.00
ரயில் திருடன் ........ 27.00
பண நோட்டுக்கள் பறந்தன! ........ 9.50
பிரேத மனிதன் ........ 8.75
உண்ணக் கொடுத்திட்டான் உயிர்களை! ........ 8.75
போலீசைக் கூப்பிடுங்கள்! ........ 10.25
கீக்கீ ........ 6.50

### சிறுவர்களுக்கான சிறுகதை

சிறியவர்களுக்கான சின்னக் கதைகள் ........ 32.00
சிறியவர்களுக்கான சிந்தனைக் கதைகள் பாகம்-1 ........ 28.00
பாகம்-2 ........ 10.00
இளையோருக்கான இனிய கதைகள் ........ 16.00
சிப்பாய் தாத்தா சொன்ன கதைகள் பாகம்-1 ........ 19.00
பாகம்-2 ........ 14.50
காலிழந்த சிறுமி ........ 18.00
வாத்தியார் மகன் ........ 17.00
வாசுவின் நேர்மை ........ 16.00
என் தம்பி நல்லவன் ........ 20.00
மாயக்கோல் மந்திரவாதி - பால நம்பூதிரி ........ 33.00
அதிசய டினோசர் ........ 48.00
தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும்
சிறுவர்களுக்கான சிறுகதைகள் ........ 37.00
அயல் நாட்டுச் சிறுகதைகள் (தமிழில் சித்திரா) ........ 28.00
புது மாமா - தேசபந்து ........ 36.00

# விற்பனையாகும் இதர நூல்கள்

அந்த நாய்க்குட்டி எங்கே? ........ 24.00
சுட்டிப்பையன் கார்த்திக் ........ 36.00
பெரியவர்களைச் சிந்திக்க வைத்த சிறுவர் சிறுகதைகள் 21.00
மாணவர்களுக்கான மணியான கதைகள் ........ 21.00
தங்கத் தம்பி ........ 15.00
சமூக உணர்வை வலியுறுத்தும் சிறுவர்களுக்கான சிறுகதைகள் ........ 44.00

## ☞ முழு நீளப் படக்கதை ☜

திரும்பி வரவில்லை! ........ 8.00
எம்.டி.பி. 7171 ........ 17.00
கத்திரிக்காய் கண்டுபிடித்தான்! ........ 6.50


## ☞ உண்மைக் கதை ☜

உண்மைக் குற்றங்கள் உணர்த்தும் பாடங்கள் ........ 28.00
பூர்வஜென்மக் கதைகள் ........ 20.00
பேய்க் கதைகள் ........ 31.00
துப்பறியும் நிபுணர் சொன்ன துடிப்பான கதைகள் ........ 14.75
தூக்கு மேடைக் கதைகள் ........ 13.25
உடல் சிலிர்க்க வைக்கும் உண்மைக் கதைகள் பாகம்-1 ........ 18.50
பாகம்-2. 33.00
உள்ளத்தைத் தொடும் உண்மைக் கதைகள் பாகம்-1 ........ 20.00
பாகம்-2. 17.00

## ☞ தமிழ்வாணனின் துப்பறியும் நாவல் ☜

சி.ஐ.டி. 009 ........ 53.00
பி.டி. 22 ........ 27.00
டயல் தமிழ்வாணன் ........ 8.75
ஹாவாயில் தமிழ்வாணன் ........ 8.00
சிகாகோவில் தமிழ்வாணன் ........ 21.00
டோக்கியோவில் தமிழ்வாணன் ........ 19.00
கெய்ரோவில் தமிழ்வாணன் ........ 8.00
பிராங்க்பர்ட்டில் தமிழ்வாணன் ........ 11.50

## இந்நூலாசிரியரைப் பற்றி...



**திரு.எம்.ரி.செல்வராஜா**

வட இலங்கையான யாழ்ப்பாணம் உரும்பாராயில் பிறந்தவர். பெற்றோர் மு.துரையப்பா - சரஸ்வதி. சிறு வயதிலிருந்தே நாடகத்துறையில் மிக்க ஈடுபாடு கொண்டவர். கதாபாத்திரம் உட்பட பல நாடகங்களில் நடித்தவர். ஈழத்து நாடகத் தந்தை கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் பாராட்டுதலைப் பெற்ற பெருமைக்கும் உரியவர்.

1973-ம் ஆண்டு இலண்டனுக்கு வந்து B.Sc in Civil Engineering படித்து முடித்து, வேலை பார்த்துக்கொண்டு தனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார். இலண்டனில் முதன்முதலில் 1979-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மேற்கு இலண்டன் தமிழ்ப் பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும், கிங்ஸ்பரி தமிழ்ப் பாடசாலையில் உதவித் தலைமை ஆசிரியராகவும், G.C.E. O/L தமிழ் ஆசிரியராகவும் கடமையாற்றுகின்றார். ஒரு சமூகத் தொண்டர்.

இலண்டனிலிருந்து வெளிவரும் மேகம் சஞ்சிகையின் (பிரித்தானியா) உதவி ஆசிரியர். சிறு கதை, கவிதை, நாடகம் எழுதும் ஆற்றல் உள்ளவர்.

இவர் எழுதிய நாடகங்களில் ஒன்பது நாடகங்கள் இத்தொகுதியில் அடங்குகிறது.

**- பதிப்பாசிரியர்.**

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803